வெளியீடு: 10-3-2008

Issued: 10-3-2008

1083
27.08.08

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

**செவ்வாய்க்கிழமை, ஜனவரி 29, 2008—தொகுதி 40—எண் 1**

**Tuesday, the 29th January 2008 —Volume 40—No. 1**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

29–1–2008

## உள்ளடக்கம்


பக்கங்கள்

ஆளுநரும் அமைச்சரவையும் . v-x

Governor and Council of Ministers xi-xv

பேரவைத் தலைவர், துணைத் தலைவர் மற்றும் முக்கிய அலுவலர்கள் xvii-xx

பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) xxi-xxxi

**1. வினாக்கள்–விடைகள்—**

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் 1-46

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 7 மற்றும் 8) 46-116

**2. தகவல் கோரல்—**

(அ) விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திரு. தொல். திருமாவளவன், மாநாடு ஒன்றில் உரையாற்றியது 116-130, 132,137-139

*திரு. து. ரவிக்குமார் 117

*திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் 118

திரு. கே.ஏ. செங்கோட்டையன் 119-120, 121, 132

*முனைவர் கு. ஜெயக்குமார் 121-125

திரு. கு. செல்வம் 126

திரு. சி. ஞானசேகரன் 137-139

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி 120,122, 127-130

பக்கங்கள்

2. **தகவல் கோரல்**— தொடர்ச்சி

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் 130-131

(இ) தமிழ்நாட்டில் சில அரசியல் கட்சித் தலைவர்கள் உள்ளிட்ட சிலரின் தொலைபேசிகளைத் தமிழ்நாடு காவல் புலனாய்வுப் பிரிவு ஒட்டுக் கேட்பதாக வந்துள்ள பத்திரிகைச் செய்தி 132-137

திரு. ஜி.கே. மணி 132-135, 136, 137

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி 135,136

3. **அறிக்கைகள் அளித்தல்**—

(அ) பொதுக் கணக்குக் குழு 132

(ஆ) பொது நிறுவனங்கள் குழு 139

4. **அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)**—

(அ) தமிழ்நாடு தமிழ்ப் புத்தாண்டு (விளம்புகை) சட்டமுன்வடிவு, 2008 140

(ஆ) திருப்பூர் மாநகராட்சி சட்டமுன்வடிவு, 2008 141

(இ) ஈரோடு மாநகராட்சி சட்டமுன்வடிவு, 2008 141-142

(ஈ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 142-143

(உ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 143-144

(ஊ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 144-145

(எ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்)சட்டமுன்வடிவு, 2008 145-146

(ஏ) தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 146



பக்கங்கள்

5. **ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்**—தொடர்ச்சி 147-210

திரு. ஆர். சிவானந்தம் 147-152

*திருமதி பதர் சயீத் 152-162

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் 162-171

திரு. கி. ஆறுமுகம் 171-182

*திருமதி ரா. லீமா றோஸ் 182-189

திரு. தி. இராமசாமி 189-194

*திரு. ஆர். ஞானதாஸ் 194-197

*திரு. து. ரவிக்குமார் 201-205

திரு. ல. ராதாகிருஷ்ணன் 205-209

6. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 210-211

## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 1. முதலமைச்சர் | .. | **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:**<br>பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், இலஞ்ச ஒழிப்பு, மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல், தொழில்கள், தகவல் தொழில் நுட்பவியல், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, சிறுபான்மையினர் நலன், தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு, கடவுச் சீட்டுகள் மற்றும் சிறப்பு முயற்சிகள் |
| 2. நிதி அமைச்சர் | .. | **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:**<br>நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை மற்றும் தேர்தல்கள் |
| 3. மின்சாரத் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:**<br>மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம் |

V211,5;208
P08.40.1
D

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
228096.
சென்னை-600 008
நூலகம்

**4. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:**

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்

**5. கூட்டுறவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கோ.சி. மணி:**

கூட்டுறவு, புள்ளியியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்

**6. வேளாண்மைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

**7. பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. துரைமுருகன்:**

பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனம், செயற்திட்டப் பணிகள், சட்டம் மற்றும் நீதிமன்றங்கள்

**8. உயர் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:**

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல், தொழில்நுட்பவியல், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்.



**9. போக்குவரத்துத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.என். நேரு:**

போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்

**10. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

**11. ஊரகத் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:**

குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள்

**12. வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், சிறைச்சாலைகள், எடைகள்–அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள், நிறுவனங்களைப் பதிவு செய்தல், வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு

**13. சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:**

சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், பத்திரப் பதிவு மற்றும் முத்திரைத் தாள் சட்டம்

**14. செய்தித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு, அரசு அச்சகம், நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

**15. உணவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எ.வ. வேலு:**

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு

**16. குடிசை மாற்று மற்றும் இட வசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:**

குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு

**17. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள்

**18. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:**

தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, எஃகுக் கட்டுப்பாடு, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு



**19. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்

**20. கைத்தறித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்

**21. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:**

பள்ளிக் கல்வி மற்றும் தொல் பொருளியல்

**22. வணிக வரித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:**

வணிக வரிகள்

**23. சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு மற்றும் இஸ்லாமிய அறக்கட்டளைகள் (வக்ஃபு)

**24. வனத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:**

வனங்கள் மற்றும் சின்கோனா

**25. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:**

நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்

**26. சமூக நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள்

**27. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:**

கால்நடை பராமரிப்பு

**28. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:**

ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்

**29. மீன்வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:**

மீன்வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்

**30. பால் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

**31. கதர்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:**

கதர் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR – THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

**1. Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi:**

Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, Prevention of Corruption, District Revenue Officers, Home, Police, Industries, Information Technology, Prohibition and Excise, Molasses, Minorities Welfare, Tamil Official Language & Tamil Culture, Passports and Special Initiatives

**2. Minister for Finance** .. **The Hon. Prof. K. Anbazhagan:**

Finance, Planning, Legislative Assembly and Elections

**3. Minister for Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veeraswami:**

Electricity, Non-Conventional Energy Development and Personnel and Administrative Reforms

**4. Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru M.K. Stalin:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply

**5. Minister for Co-operation** .. **The Hon. Thiru Ko.Si. Mani:**

Co-operation, Statistics and welfare of Ex-Servicemen

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Wasteland Development

7. **Minister for Public Works and Law** .. **The Hon. Thiru Duraimurugan:**

Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Law and Courts

8. **Minister for Higher Education** .. **The Hon. Dr. K. Ponmudi:**

Higher Education including Technical Education, Electronics, Science and Technology, Mines and Minerals

9. **Minister for Transport** .. **The Hon. Thiru K.N. Nehru:**

Transport, Nationalised Transport and Motor Vehicles Act

10. **Minister for Health** .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:**

Health, Medical Education and Family Welfare

11. **Minister for Rural Industries** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:**

Rural Industries including Cottage Industries and Small Industries



12. **Minister for Revenue and Housing** .. **The Hon. Thiru I. Periasamy:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Prisons, Weights and Measures, Debt Relief including Legislation on Money Lending, Chits, Registration of Companies, Housing, Rural Housing and Housing Development

13. **Minister for Tourism and Registration** .. **The Hon. Thiru N. Suresh Rajan:**

Tourism, Tourism Development Corporation, Registration and Stamp Act

14. **Minister for Information** .. **The Hon. Thiru Parithi Ellamvazhuthi:**

Information and Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing, Government Press, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

15. **Minister for Food** .. **The Hon. Thiru E.V. Velu:**

Food, Civil Supplies, Consumer Protection and Price Control

16. **Minister for Slum Clearance and Accommodation Control** .. **The Hon. Thiru Suba. Thangavelan:**

Slum Clearance Board and Accommodation Control

17. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru K.K.S.S.R. Ramachandran:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees

18. **Minister for Labour** .. **The Hon. Thiru T.M. Anbarasan:**

Labour, Population, Employment and Training, Steel Control, Newsprint Control, Census and Urban and Rural Employment

19. **Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru K.R. Periakaruppan:**

Hindu Religious and Charitable Endowments

20. **Minister for Handlooms** .. **The Hon. Thiru NKK. P. Raaja:**

Handlooms and Textiles

21. **Minister for School Education** .. **The Hon. Thiru Thangam Thenarasu:**

School Education and Archaeology

22. **Minister for Commercial Taxes** .. **The Hon. Thiru S.N.M. Upayathulla:**

Commercial Taxes

23. **Minister for Environment** .. **The Hon. Thiru T.P.M. Mohideen Khan:**

Sports and Youth Welfare, Environment and Pollution Control and Wakfs

24. **Minister for Forests** .. **The Hon. Thiru N. Selvaraj:**

Forests and Cinchona



25. **Minister for Highways** .. **The Hon. Thiru M.P. Saminathan:**

Highways and Ports

26. **Minister for Social Welfare** .. **The Hon. Dr. (Tmt.) Poongothai:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Homes

27. **Minister for Animal Husbandry** .. **The Hon. Tmt. P. Geetha Jeevan:**

Animal Husbandry

28. **Minister for Adi Dravidar Welfare** .. **The Hon. Tmt. A. Tamilarasi:**

Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour

29. **Minister for Fisheries** .. **The Hon. Thiru K.P.P. Samy:**

Fisheries and Fisheries Development Corporation

30. **Minister for Dairy Development** .. **The Hon. Thiru U. Mathivanan:**

Milk and Dairy Development

31. **Minister for Khadi** .. **The Hon. Thiru K. Ramachandhiran:**

Khadi and Village Industries Board, Bhoodhan and Gramadhan

# பேரவைத் தலைவர், துணைத் தலைவர் மற்றும் முக்கிய அலுவலர்கள்

## பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன்

## பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி

## செயலாளர்

திரு. மா. செல்வராஜ்

| | |
|---|---|
| திரு. வெ.சி. சுப்ரமணியன், எம்.ஏ., பி.எல். | - கூடுதல் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. கோவிந்தராசு, எம்.ஏ., பி.எட்., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. எ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி ப. சரசுவதி, எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. மு. பைரவன், எம்.காம். | - குழு அலுவலர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | - குழு அலுவலர் |



| | |
|---|---|
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., பி.ஜி.எல். | - குழு அலுவலர் |
| திரு. து. சீனிவாசன், பி.ஏ. | - குழு அலுவலர் |
| திரு. க. லட்சுமணன், பி.எஸ்சி., பி.எல். | - பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திருமதி து. இராஜேஸ்வரி, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ம. பன்னீர் செல்வம் | - தலைமை நிருபர் |
| திருமதி இரா. சந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கி. மாதவன், எம்.ஏ., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| திரு. இரா. வெங்கடகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | - தலைமை நிருபர் |
| திருமதி ஓ.வி. கல்யாணி, பி.எஸ்சி., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கே. இராமகிருஷ்ணா, பி.எஸ்சி., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி கோ. காயத்ரி, பி.எஸ்சி. | - சார்புச் செயலாளர் |
| திரு. கே. பாலசுப்ரமணியன், எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி கு. இந்துமதி, பி.எஸ்சி., எம்.எட்., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ம.ச. சந்திரமௌலி, எம்.ஏ., பி.காம்., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |

| | | |
|---|---|---|
| செல்வி எஸ். பிலோமினா, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. பா. அன்பழகன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி வி.வி. ரமா, எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. இரா. பழனிசாமி, பி.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. சு. சந்திரன், பி.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. பா.சி.க. சிங்காரவேலு, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி மு. சுப்புலட்சுமி, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |



## பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அங்கையற்கண்ணி, செல்வி ஆ. | .. | சங்கராபுரம் |
| 2. | அப்துல் பாசித், திரு. எச். | .. | வாணியம்பாடி |
| 3. | அப்பாவு, திரு. மு. | .. | ராதாபுரம் |
| 4. | அமரமூர்த்தி, திரு. து. | .. | அரியலூர் |
| 5. | அரி, திரு. கோ. | .. | திருத்தணி |
| 6. | அருண்மொழிதேவன், திரு. ஆ. | .. | சிதம்பரம் |
| 7. | அருள் அன்பரசு, திரு. | .. | சோளிங்கர் |
| 8. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. | திருச்செந்தூர் |
| 9. | அன்பரசன், திரு. தா.மோ. | .. | ஆலந்தூர் |
| 10. | அன்பழகன், திரு. எம். | .. | பழனி (செ.வ.) |
| 11. | அன்பழகன், திரு. கே.பி. | .. | பாலக்கோடு |
| 12. | அன்பழகன், பேராசிரியர் க. | .. | துறைமுகம் |
| 13. | அன்பில் பெரியசாமி, திரு. | .. | திருச்சிராப்பள்ளி–1 |
| 14. | ஆவுடையப்பன், திரு. இரா. | .. | அம்பாசமுத்திரம் |
| 15. | ஆறுமுகம், திரு. கி. | .. | செங்கல்பட்டு |
| 16. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. | அண்ணா நகர் |
| 17. | இராசசேகரன், திரு. எஸ். | .. | ஆலங்குடி |
| 18. | இராணி, திருமதி இரா. | .. | உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 19. | இராமகிருஷ்ணன், திரு. நா. | .. | கம்பம் |
| 20. | இராமசாமி, திரு. கரி. | .. | திருவாடானை |

21. இராமசாமி, திரு. தி. - ஸ்ரீவில்லிபுத்தூர்
22. இராமசுவாமி, திரு. கே.பி. - ராசிபுரம்
23. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். - சாத்தூர்
24. இராமச்சந்திரன், திரு. டி. - தளி
25. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். - பள்ளிப்பட்டு
26. இராம்பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
27. இராஜா, திரு. எஸ்.ஆர். - தாம்பரம்
28. இராஜேந்திரன், திரு. ஆ. - வீரபாண்டி
29. இராஜேந்திரன், திரு. இரா. - பனமரத்துப்பட்டி
30. இராஜேந்திரன், திரு. க. - ஜெயங்கொண்டம்
31. இராஜேந்திரன், திரு. சபா. - நெல்லிக்குப்பம்
32. இராஜ்குமார், திரு. ம. - பெரம்பலூர் (செ.வ.)
33. இளமதி சுப்பிரமணியன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
34. இளவரசன், திரு. வீர. - திருமங்கலம்
35. இளவழகன், திரு. கே.எல். - ஆற்காடு
36. உதயசூரியன், திரு. தா. - சின்னசேலம்
37. உதயம் சண்முகம், திரு. - அறந்தாங்கி
38. உபயதுல்லா, திரு. சி.நா.மீ. - தஞ்சாவூர்
39. உலகநாதன், திரு. கே. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
40. எதிரொலி மணியன், திரு. கோ. - பெரணமல்லூர்
41. ஐயப்பன், திரு. கோ. - கடலூர்
42. கணபதி, திரு. ந. - வானூர் (செ.வ.)



43. கணேசன், திரு. ஆர்.டி. - தேனி
44. கண்ணப்பன், திரு. மு. - தொண்டாமுத்தூர்
45. கண்ணன், திரு. பெ. - தாரமங்கலம்
46. கண்ணன், திரு. வே. - செஞ்சி
47. கமலாம்பாள், திருமதி பெ. - காஞ்சிபுரம்
48. கருணாநிதி, கலைஞர் மு. - சேப்பாக்கம்
49. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
50. கருப்பசாமி பாண்டியன், திரு. வீ. - தென்காசி
51. கலியவரதன், திரு. வீ.ஏ.டி. - முகையூர்
52. கலீலூர் ரஹ்மான், திரு. ம.அ. - அரவக்குறிச்சி
53. கலைராஜன், திரு. வி.பி. - தியாகராய நகர்
54. காந்தி, திரு. ஆர். - இராணிப்பேட்டை
55. காமராஜ், திரு. பெ. - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
56. காயத்ரி தேவி, டாக்டர் (திருமதி) கே. - மதுராந்தகம்
57. காவேரி, திரு. வை. - எடப்பாடி
58. கிருஷ்ணமூர்த்தி, திரு. அக்ரி எஸ்.எஸ். - கலசப்பாக்கம்
59. கீதா ஜீவன், திருமதி பி. - தூத்துக்குடி
60. குணசேகரன், திரு. சு. - சிவகங்கை
61. குணசேகரன், திரு. ம. - மானாமதுரை (செ.வ.)
62. குத்தாலம் க. அன்பழகன், திரு. - குத்தாலம்
63. குமரகுரு, திரு. இரா. - திருநாவலூர்

64. குருசாமி, திரு. செ. - அந்தியூர் (செ.வ.)
65. கோபாலன், திரு. போ. - உதகமண்டலம்
66. கோபிநாத், திரு. கே. - ஓசூர்
67. கோவிந்தசாமி, திரு. சி. - திருப்பூர்
68. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)
69. சக்கரபாணி, திரு. அர. - ஒட்டன்சத்திரம்
70. சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன், திருமதி - அச்சரப்பாக்கம் (செ.வ.)
71. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்
72. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை
73. சதன் திருமலைக்குமார், டாக்டர் தி. - வாசுதேவநல்லூர் (செ.வ)
74. சந்திரகாசி, திரு. மா. - வரகூர் (செ.வ.)
75. சந்திரா, திருமதி மு. - ராஜபாளையம் (செ.வ.)
76. சாமி, திரு. ஆர். - மேலூர்
77. சாமி, திரு. கே.பி.பி. - திருவொற்றியூர்
78. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
79. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். - ஆண்டிமடம்
80. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
81. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
82. சிவானந்தம், திரு. ஆர். - ஆரணி
83. சிவாஜி, திரு. இ.ஏ.பி. - திருவள்ளூர்
84. சின்னசாமி, திரு. அ. - பேரணாம்பட்டு (செ.வ.)
85. சின்னசாமி, திரு. ஆர். - சிங்காநல்லூர்



86. சின்னச்சாமி, திரு. செ. - மருங்காபுரி
87. சின்னதுரை, திரு. கு. - தலைவாசல் (செ.வ.)
88. சின்னப்பன், திரு. போ. - விளாத்திகுளம்
89. சின்னராஜ், திரு. ஓ.கே. - மேட்டுப்பாளையம்
90. சீனிவாசன், திரு. கு. - பூங்கா நகர்
91. சுதர்சனம், திரு. டி. - பூந்தமல்லி
92. சுந்தரம், திரு. எம்.ஆர். - ஆத்தூர்
93. சுந்தரம், திரு. ந. - காரைக்குடி
94. சுந்தர், திரு. க. - உத்திரமேரூர்
95. சுப்பிரமணியம், திரு. ஓ. - பவானிசாகர்
96. சுப்புராம், திரு. ராம. - திருமயம்
97. சுப்ரமணியன், திரு. ந. - குளத்தூர் (செ.வ.)
98. சுரேஷ் ராஜன், திரு. என். - கன்னியாகுமரி
99. சூரியகுமார், திரு. என்.கே.ஆர். - நாட்ராம்பள்ளி
100. செங்குட்டுவன், திரு. டி. - கிருஷ்ணகிரி
101. செங்கோட்டையன், திரு. கே.ஏ. - கோபிசெட்டிப்பாளையம்
102. செந்தமிழன், திரு. ஞா. - சைதாப்பேட்டை
103. செந்தமிழ்ச்செல்வன், திரு. பா. - மேல்மலையனூர்
104. செந்தில் பாலாஜி, திரு. வே. - கரூர்
105. செல்வம், திரு. கு. - மங்களூர் (செ.வ.)
106. செல்வராஜ், திரு. என். - முசிறி
107. செல்வராஜ், திரு. து. - ஸ்ரீவைகுண்டம்
108. செல்வி ராமஜெயம், திருமதி - புவனகிரி

109. சேகரன், திரு. கூ.ந. - திருவெறும்பூர்
110. சேகர், திரு. எஸ்.வி. - மயிலாப்பூர்
111. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
112. சையது கௌஸ் பாஷா, திரு. சை. - மதுரை மத்தி
113. சௌந்தரபாண்டியன், திரு. அ. - லால்குடி
114. சௌந்திரபாண்டியன், திரு. அ. - குன்னூர் (செ.வ.)
115. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
116. ஞானதாஸ், திரு. ஆர். - சிவகாசி
117. டில்லி பாபு, திரு. ப. - அரூர் (செ.வ.)
118. தங்கமணி, திரு. பி. - திருச்செங்கோடு
119. தங்கம் தென்னரசு, திரு. - அருப்புக்கோட்டை
120. தங்கவேலன், திரு. சுப. - கடலாடி
121. தண்டபாணி, திரு. மா. - வேடசந்தூர்
122. தமிழரசி, திருமதி ஆ. - சமயநல்லூர் (செ.வ.)
123. தமிழரசு, திரு. அ. - ஓமலூர்
124. தமிழ்செல்வன், திரு. சி. - ஏற்காடு (ஆவா.)
125. தம்பிதுரை, முனைவர் மு. - பர்கூர்
126. தர்மலிங்கம், திரு. எல்.பி. - சத்தியமங்கலம்
127. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு
128. தியோடர் ரெஜினால்டு, திரு. த. - பத்மநாபபுரம்
129. திருநாவுக்கரசு, திரு. கே. - உளுந்தூர்பேட்டை (செ.வ.)
130. துரைக்கண்ணு, திரு. இரா. - பாபநாசம்



131. துரை சந்திரசேகரன், திரு. - திருவையாறு
132. துரைசாமி, திரு. வீ.பெ. - சங்கரி (செ.வ.)
133. துரைமுருகன், திரு. - காட்பாடி
134. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி
135. தேன்மொழி, திருமதி எஸ். - நிலக்கோட்டை (செ.வ.)
136. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு
137. நெடுஞ்செழியன், டாக்டர் க. - கபிலர்மலை
138. நெடுஞ்செழியன், திரு. ரெ. - புதுக்கோட்டை
139. நேரு, திரு. கே.என். - திருச்சிராப்பள்ளி–2
140. பதர் சயீத், திருமதி - திருவல்லிக்கேணி
141. பத்மாவதி, திருமதி பி. - நன்னிலம் (செ.வ.)
142. பரஞ்ஜோதி, திரு. மு. - ஸ்ரீரங்கம்
143. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)
144. பலராமன், திரு. பி. - பொன்னேரி (செ.வ.)
145. பழனிசாமி, திரு. ஆர்.எம். - மொடக்குறிச்சி
146. பன்னீர்செல்வம், திரு. எம். - சீர்காழி (செ.வ.)
147. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
148. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்
149. பாண்டுரங்கன், திரு. கு. - அணைக்கட்டு
150. பாபு, திரு. வி.எஸ். - புரசைவாக்கம்
151. பாரதி மோகன், திரு. ஆர்.கே. - திருவிடைமருதூர்
152. பாலபாரதி, செல்வி கே. - திண்டுக்கல்
153. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை

154. பிரபாவதி, திருமதி பெ. .. தாராபுரம் (செ.வ.)
155. பிரேமா, திருமதி ஆர். .. அவினாசி (செ.வ.)
156. பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். .. கடையநல்லூர்
157. புஷ்பராஜ், திரு. செ. .. கண்டமங்கலம் (செ.வ.)
158. பூங்கோதை, டாக்டர் (திருமதி) .. ஆலங்குளம்
159. பெரியகருப்பன், திரு. கே.ஆர். .. திருப்பத்தூர்
160. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
161. பெரியசாமி, திரு. மு.க. .. பூம்புகார்
162. பெரியண்ணன், திரு. பி.என். .. பெண்ணாகரம்
163. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. கோயம்புத்தூர் கிழக்கு
164. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. .. பொள்ளாச்சி
165. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
166. பொன்னுசாமி, திரு. கே. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
167. பொன்னுதுரை, திரு. செ. .. பெருந்துறை
168. போளூர் ம. வரதன், திரு. .. செங்கம் (செ.வ.)
169. போஸ், திரு. ஏ.கே. .. திருப்பரங்குன்றம்
170. மகேந்திரன், திரு. இ. .. உசிலம்பட்டி
171. மகேந்திரன், திரு. கே. .. பெரம்பூர் (செ.வ.)
172. மகேஷ் கிருஷ்ணசாமி, திரு. த. .. திருவோணம்
173. மணி, திரு. எஸ். .. பொங்கலூர்
174. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
175. மணி, திரு. ஜி.கே. .. மேட்டூர்
176. மதிவாணன், திரு. உ. .. திருவாரூர் (செ.வ.)



177. மலரவன், திரு. தா. .. கோயம்புத்தூர் மேற்கு
178. மாணிக்கம், திரு. இரா. .. குளித்தலை
179. மாரிமுத்து, திரு. வே. .. நாகப்பட்டினம்
180. மாலைராஜா, திரு. என். .. திருநெல்வேலி
181. முருகவேல், திரு. கே. .. முதுகுளத்தூர்
182. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
183. மூர்த்தி, திரு. டி. .. திருப்போரூர் (செ.வ.)
184. மூர்த்தி, திரு. பி. .. சோழவந்தான்
185. மேகநாதன், திரு. த.அ. .. காவேரிப்பட்டினம்
186. மோகன், திரு. பெ. .. ஓட்டப்பிடாரம் (செ.வ.)
187. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை
188. யசோதா, திருமதி டி. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
189. ரங்கநாதன், திரு. ப. .. வில்லிவாக்கம்
190. ரங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை
191. ரவிக்குமார், திரு. து. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
192. ரவிச்சந்திரன், திரு. எல். .. சேலம்—I
193. ராணி வெங்கடேசன், திருமதி .. சாத்தான்குளம்
194. ராதாகிருஷ்ணன், திரு. ல. .. கோவில்பட்டி
195. ராமச்சந்திரன், திரு. கா. .. கூடலூர்
196. ராமநாதன், திரு. கே.வீ. .. பவானி
197. ராஜ கண்ணப்பன், திரு. ஆர்.எஸ். .. இளையான்குடி
198. ராஜகுமார், திரு. எஸ். .. மயிலாடுதுறை
199. ராஜசேகரன், திரு. மா. .. தொட்டியம்

200. ராஜன், திரு. அ. - நாகர்கோவில்
201. ராஜா, திரு. என்கேகே.பி. - ஈரோடு
202. ராஜா, திரு. தி.க. - திருப்பத்தூர்
203. ராஜேந்திரன், திரு. க.சி.க. - மதுரை மேற்கு
204. லட்சுமணன், திரு. ச. - போடிநாயக்கனூர்
205. லதா, திருமதி ஜி. - குடியாத்தம்
206. லீமா றோஸ், திருமதி ரா. - திருவட்டாறு
207. வசந்தகுமார், திரு. எச். - நாங்குநேரி
208. வரதராஜன், திரு. ரா. - விருதுநகர்
209. விசுவநாதன், திரு. இரா. - நத்தம்
210. விடியல் எஸ். சேகர், திரு. - காங்கேயம்
211. விஜயகாந்த், திரு. - விருத்தாசலம்
212. விஜயகுமார், திரு. கே.எஸ். - கும்மிடிப்பூண்டி
213. விஜயகுமார், திரு. பெ.சு. - போளூர்
214. விஷ்ணுபிரசாத், டாக்டர் எம்.கே. - செய்யாறு
215. வீரகபிலன், திரு. எம்.வி.ஆர். - பேராவூரணி
216. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. - சேலம்—2
217. வேதரத்தினம், திரு. எஸ்.கே. - வேதாரண்யம்
218. வேலு, திரு. எ.வ. - தண்டராம்பட்டு
219. வேலுசாமி, திரு. இல. - தருமபுரி
220. வேலுசாமி, திரு. செ.ம. - பல்லடம்
221. வேலுமணி, திரு. சு.ப. - பேரூர்
222. வேல்துரை, திரு. பா. - சேரன்மகாதேவி



223. வேல்முருகன், திரு. தி. - பண்ருட்டி
224. வைத்திலிங்கம், திரு. ஆர். - ஒரத்தநாடு
225. ஜாண் ஜேக்கப், திரு. எஸ். - கிள்ளியூர்
226. ஜாண் ஜோசப், திரு. ஞா. - விளவங்கோடு
227. ஜெகன்மூர்த்தி, திரு. மு. - அரக்கோணம் (செ.வ.)
228. ஜெயக்குமார், திரு. டி. - இராயபுரம்
229. ஜெயக்குமார், முனைவர் கு. - நாமக்கல் (செ.வ.)
230. ஜெயபால், திரு. எஸ். - குளச்சல்
231. ஜெயராமன், திரு. எஸ்.பி. - வந்தவாசி (செ.வ.)
232. ஜெயலலிதா, செல்வி ஜெ - ஆண்டிப்பட்டி
233. ஸ்டாலின், திரு. மு.க. - ஆயிரம் விளக்கு
234. ஹசன் அலி, திரு. கு. - இராமநாதபுரம்
235. ஆஸ்கார் சி. நிக்லி, டாக்டர் - நியமனம்

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. ஜி. மாசிலாமணி .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2039, தை 15

## 2008 ஜனவரி 29, செவ்வாய்க்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"ஆற்றின் அளவறிந்து கற்க அவையஞ்சா*
*மாற்றங் கொடுத்தற் பொருட்டு"*

அவையில் பேசும்பொழுது, குறுக்கீடுகளுக்கு அஞ்சாமல், மறுமொழி சொல்வதற்கு ஏற்ற வகையில் இலக்கணமும், தருக்கமெனப்படும் அளவைத் திறமும் கற்றிருக்கவேண்டும்.

### 1. வினாக்கள்—விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்—விடைகள். வினா எண் 21, மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

**21—**

### சிறப்பு உட்கூறு திட்டம்

***700—திரு. து. ரவிக்குமார்:**

*மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*நிதிநிலை அறிக்கை தயாரிக்கும்போது, சிறப்பு உட்கூறு திட்ட நிதி முறைகளாகப் பகிர்ந்தளிக்கப்படுவதற்குச் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், நிதி அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

நிதிநிலை அறிக்கையில் சிறப்பு உட்கூறு திட்டங்களுக்கான நிதியொதுக்கம், சிறு தலைப்பு '789–ஆதி திராவிடருக்கான சிறப்புக் கூறு திட்டம்' என்பதன்கீழ், ஒவ்வோர் ஆண்டும் செய்யப்படுகிறது. 2006–2007 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்டத்திலிருந்து பிரித்தளிக்கப்பட இயலும் இனங்கள் ஒவ்வொன்றிலும் 20 சதவிகித ஒதுக்கீடு, அதனுடைய விவரம், ஆதி திராவிடருக்கான சிறப்புக் கூறு திட்டத்திற்கு 19 விழுக்காடு, பழங்குடியினர் பகுதிகள் துணைத் திட்டத்திற்கு ஒரு விழுக்காடு; அந்த வகையில் 20 விழுக்காடு பிரித்தளிக்கப்பட்டது. இவ்வாறு ஆதி திராவிடருக்கான சிறப்புக் கூறு திட்டத்திற்குப் பிரித்தளிக்கப்படும் நிதியொதுக்கத்தை எளிதில் புரிந்துகொள்ளும் வகையில், நிதிநிலைக் குறிப்பின் இணைப்புகளில் புதிதாக ஓர் இணைப்பும் சேர்க்கப்பட்டுள்ளது.

இதன் பயனாக, 2006–2007 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில், ரூ.546.30 கோடியாக இருந்த இந்நிதி ஒதுக்கீடு, 2006–2007 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.1,019.41 கோடியாகவும், 2007–2008 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.1,525.04 கோடியாகவும் உயர்ந்துள்ளது. அந்த விவரங்கள் ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தரப்பட்ட குறிப்பேட்டில் காணப்படுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார்.

**திரு. து. ரவிக்குமார்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்பு உட்கூறு திட்டத்தைப் பொறுத்தளவிலே, மகாராஷ்டிரா மாநிலத்திற்கு அடுத்தபடியாக, அதைச் சிறப்பான முறையிலே செயல்படுத்துகிற மாநிலமாகத் தமிழகம்தான் விளங்குகிறது. அதிலும் குறிப்பாக, நம்முடைய முத்தமிழறிஞர் தலைமையிலான இந்த அரசுதான் விளங்கிக்கொண்டிருக்கிறது என்பது, பாராட்டி வாழ்த்தக்கூடிய ஒரு விஷயமாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையின்போது நாங்கள் இந்தப் பிரச்சினையை எழுப்பியதற்குப் பின்னாலே, இத்தகைய நிதி ஒதுக்கீடுகள் வேறு செலவினங்களுக்குப் பயன்படுத்தப்படமாட்டாது என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்ததோடு மட்டுமல்லாமல், இந்த நிதி[illegible]ாகத் தெரிந்துகொள்ளும்விதத்திலே, நிதிநிலை [illegible]ம் செய்திருக்கின்றார்கள். இதைச்



செய்ததற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆனால், இத்தகைய நிதியொதுக்கம் சரியான முறையிலே செலவிடப்படுகிறதா என்று பார்ப்பதற்கான Nodal Agency–யாக ஆதி திராவிடர் நலத் துறையை நியமிக்க வேண்டுமென்கின்ற வழிகாட்டுதல், மத்திய திட்டக் கமிஷனாலே அளிக்கப்பட்டிருக்கின்றது; இந்தச் சிறப்பு உட்கூறு திட்டத்திற்கான வழிகாட்டுதலிலும் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அப்படி நம்முடைய ஆதி திராவிடர் நலத் துறையை, இதற்கான Nodal Agency–யாக நியமித்து, அதன்மூலமாக இந்த நிதியைச் செலவு செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9–35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இந்த அரசு சிறப்புக் கூறு திட்டத்தைத் தனிக் கவனம் செலுத்தக்கூடிய முறையில் தனிப் பட்டியலாக வழங்கியிருக்கிறது என்பதைப் பாராட்டி, வரவேற்றுக் குறிப்பிட்டார்கள். ஆதி திராவிடர் நலத் திட்டங்களோ, பழங்குடியின மக்கள் நலத் திட்டங்களோ, ஆதி திராவிடர் நலத் துறையின் மூலமாகத்தான் பெரும்பாலான பணிகள் நடைபெறுகின்றன. சில பணிகள் வேண்டுமானால், பொதுப் பணித் துறையாலேயோ, மற்ற துறைகளாலேயோ செய்யப்படக்கூடியதாக இருக்கும். அந்தப் பகுதியில் அந்தப் பணி அந்த முறையில் நடைபெற்றிருக்கிறதா, அல்லவா என்பதைப் பார்ப்பதற்கு Audit முறை இருக்கிறது. கூட்டுறவுத் துறையாக இருந்தாலும், அரசுத் துறையாக இருந்தாலும் Audit முறைக்கு அவை உட்பட்டாக வேண்டும். அந்த முறையிலே ஏதேனும் குற்றம், குறை காணப்படுமானால், அப்பொழுது அதைத் திருத்தியமைப்பதைப் பற்றி ஆலோசிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார்.

**திரு. து. ரவிக்குமார்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்கு மிகவும் நன்றியுடையவனாக இருக்கின்றேன். இந்த நிதியொதுக்கம் சரியான

[2008 ஜனவரி 29

முறையிலே செலவிடப்படுகிறதா என்பதைக் கண்டறிந்து, அது எந்தவிதத்திலே செலவிடப்பட்டிருக்கிறது என்பதையும் ஓர் அறிக்கையாக உறுப்பினர்களுக்கு அடுத்த நிதிநிலை அறிக்கை அளிக்கும்போது அளித்தார்களேயானால், இது தொடர்பான சந்தேகங்கள் எல்லோருக்கும் தெளிவுபடும். அதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் கேட்டு, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் நிதிநிலை அறிக்கையிலே எந்தெந்தத் துறைக்கு எவ்வளவு நிதி ஒதுக்கினாலும், அந்தத் துறையில் அந்த நிதி, அந்த முறையில் செலவழிக்கப்பட்டிருக்கிறதா, அல்லவா என்பதை Audit Report திட்டவட்டமாகத் தெரிவிக்கிறது. ஆதி திராவிடர் நலத் துறையிலேயும் செய்யப்படவேண்டிய பணிகள் செய்யப்படாமல் இருக்குமானால், Audit Report-லே அதைப் பார்த்துக்கொள்ளலாம். அப்படிப் பார்த்து மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் அந்தப் பிரச்சினையை அரசினுடைய கவனத்திற்கு, ஏதேனும் குறையிருந்து, கொண்டு வருவார்களேயானால், அப்பொழுது அரசு அதைக் கவனிக்க முடியும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். Supplementary question-க்கு வாய்ப்புக் கொடுத்தாகிவிட்டது. (குறுக்கீடு) No, no. Another supplementary கிடையாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிற வேளையில், பட்டியலின மக்களுக்குச் சிறப்பு உட்கூறு திட்டத்திற்கு ஒதுக்கப்படுகிற நிதி, ரூ.546.3 கோடியிலிருந்து ரூ.1,019.4 கோடி; இப்பொழுது நடப்பாண்டில் ரூ.1,525.4 கோடியாக உயர்த்தப்பட்டிருக்கிறது என்றார். இது வரவேற்கக்கூடியது. ஏறக்குறைய மூன்று மடங்கிற்கு மேலே உயர்த்தப்பட்டிருப்பதை நாம் மகிழ்ச்சியாக வரவேற்கிறோம். ஆனால், பொதுவாக, பட்டியலின அந்தச் சமுதாய அமைப்புகள் மத்தியிலே, அலுவலர்கள், மாணவர்கள் மத்தியிலே இருக்கிற கேள்வியெல்லாம், ஒதுக்கப்படக்கூடிய நிதி, ஆதி திராவிடர் மக்களுடைய பயன்பாட்டுக்காகச் சென்றடைவதில்லை என்றும், அதிலும் குறிப்பாக, சிறப்பு உட்கூறு திட்டத்தில் எதெது செலவழிக்கப்பட வேண்டுமென்று சொல்லப்படுகிறதோ, அதை மாற்றி ஆதி திராவிடர் நலத் துறையிலேயே



2008 ஜனவரி 29]

வேறு இனங்களுக்குச் செலவழிக்கப்படுகிறது; முழுமையாக அவர்களின் பயன்பாட்டுக்கு வரவில்லை என்ற குறையும் மேலோங்கியிருக்கிறது. அதற்காகத்தான் நண்பர் ரவிக்குமார் அவர்கள்கூட இங்கு அதைக் குறிப்பிட்டார்கள். ஆகவே, ஒதுக்கப்படக்கூடிய நிதி முழுமையாக அவர்களைச் சென்றடைகிறதா; அது ஆண்டுதோறும் அதற்காகவே செலவழிக்கப்படுகிறதா என்ற நிலையை அறிய விரும்புகிறேன். அதே நேரத்தில், அது செலவழிக்கப்படுவதைக் கண்காணிப்பதற்கு அரசு ஒரு குழு அமைக்குமா; அந்தக் குழுவிலே அந்தச் சமுதாய மக்களெல்லாம் இடம்பெறுவார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட கால உறுப்பினரான நம்முடைய திரு. ஜி.கே. மணி அவர்கள், கேள்வியிலேயே ஒரு குற்றச்சாட்டை இணைத்து, அப்படித் தவறாக நடைபெறுகிறது என்ற கருத்திலே அவர் சொன்னார். அப்படித் தவறாக நடைபெறுவதாக இருக்குமானால், அது மிகக் குறைந்த விழுக்காடு. ஒரு விழுக்காடு அல்லது இரண்டு விழுக்காடு தவறு நடைபெறலாம். எந்தத் தவறு நடைபெற்றாலும், சட்டமன்றமேதான் அதைக் கண்காணிக்கும். மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள், அப்படி ஒரு குற்றச்சாட்டு இருந்தால், இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால், தகுந்த நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும். அது தவிர சட்டமன்றம் சார்பான குழுக்கள் இருக்கின்றன. அந்தக் குழுக்களும்—Estimate Committee போன்ற குழுக்கள்—இதை ஆய்வு செய்யலாம். பொதுக் கணக்குக் குழு இருக்கிறது; அந்தக் குழு இதனை ஆய்வு செய்யலாம். எனவே, அந்த ஆய்வுகள் மூலமாக எந்தக் குற்றமான உண்மை வெளிப்பட்டாலும், அப்பொழுது உரிய நடவடிக்கையை அரசு எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு கு. ஜெயக்குமார்.

**முனைவர் கு. ஜெயக்குமார்**: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, கடந்த அரசை விட, இப்பொழுது இருக்கின்ற அரசானது பல மடங்கு இந்தச் சிறப்பு உட்கூறு திட்டத்தின் நிதியை உயர்த்தியிருக்கின்றது என்பதை நன்றாக நாம அறிவோம். ஆனால், மொத்தத்தில் பார்க்கின்றபொழுது, கடந்த அரசானது 546 கோடி ரூபாய் ஒதுக்கிய காலத்திலேகூட, அந்த 546 கோடி ரூபாய் செலவிடப்படாமல்

இருந்திருக்கின்றது என்பது உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி இருக்க, இன்றைக்கு நாம் அதை மும்மடங்காக உயர்த்தி இருக்கின்ற இந்த நேரத்திலேயும் அதுபோன்ற ஒரு நிலை ஏற்பட்டுவிடுமா என்பதை நாம் பார்த்துக் காத்துக்கொள்ள வேண்டும். மேலும் ஒரு வினாவை நான் இங்கே சேர்க்க விரும்புகின்றேன். அண்மையிலே ஆதி திராவிட நலத் துறை அமைச்சர் அவர்களுடைய தலைமையிலே குழு ஒன்று பல மாநிலங்களுக்குச் சென்று எவ்வாறு இந்தச் சிறப்பு உட்கூறு திட்டம் செயல்படுத்தப்படுகின்றது என்பதை ஆராய்ந்து வந்தது. அதில் நானும் உறுப்பினராக இருக்கிறேன். குறிப்பாக மராட்டிய மாநிலம், கர்நாடகா மாநிலம் போன்ற இடங்களிலே எல்லாம் எந்த ஒரு துறைக்கும் இந்தச் சிறப்பு உட்கூறு திட்டத்திற்கென்று தனியாக நிதி ஒதுக்கவில்லை. அப்படி ஒதுக்குகின்ற காலத்திலே அவர்கள் சரியாகச் செய்யவில்லை என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாக நாம் அறிந்த உண்மை. அங்கே என்ன செய்கின்றார்கள் என்றால், திட்டக் குழுவே வேண்டிய பணத்தை மக்களுடைய விகிதாச்சாரப்படி ஒதுக்கி, அதாவது முழுத் தொகையையும் ஒதுக்கி, அதை ஆதி திராவிடர் நலத் துறையின் கண்காணிப்பிலே வைக்கின்றது. ஒவ்வொரு துறையும் எந்தெந்தத் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டுமோ, அதற்கு ஏற்றாற்போல் ஆதி திராவிடர் நலத் துறையிடமிருந்து அந்த நிதியைப் பெற்றுச் செயல்படுத்தலாம்.

முற்பகல் 9–40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** அதுபோன்ற ஒரு சிறப்பான முறையை, உண்மையிலேயே இந்தப் பணம் அந்த மக்களுக்குச் சென்று அடைகின்ற நிலையை, இந்த அரசும் பின்பற்றுமா என்பதை நான் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயக்குமார் அவர்களுக்கு, ஆதி திராவிடர் நலனுக்கு ஒதுக்கப்படுகின்ற நிதி அவ்வளவும், ஆதி திராவிட மக்களுக்குப் போய்ச் சேர வேண்டும் என்பதிலே இருக்கிற அக்கறை எனக்குத் தெரியும். இன்னும் சொல்லப்போனால், அரசியல் கண்ணோட்டத்திலேகூட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மிகப் பெரிய அளவுக்கு நன்மை செய்கிற



ஒரு முயற்சி தொடர்ந்து, அரசியல் கட்சிகளுடைய கண்ணோட்டத்திலே இடம்பெற்றிருக்கிறது. ஆனால் திட்டக் குழுவின்மூலமாக இதை ஒதுக்க வேண்டும் என்ற அவசியம் தமிழ்நாட்டிலே ஏற்படவில்லை. திட்டக் குழுவே நிதி அமைச்சருக்கு உட்பட்டதாகத்தான் இருக்குமே தவிர, நிதி அமைச்சரை, முதலமைச்சரை மீறி ஒரு திட்டக் குழு தமிழ்நாட்டிலேயோ அல்லது வேறு மாநிலத்திலேயோகூட இருக்காது. அதைவிட இன்னும் சொல்லப்போனால், நிதிநிலை அறிக்கைதான் சரியான வரம்பு. அந்த வரம்பின்படி செயல்படுவதைக் கண்காணிக்கத்தான் அரசிலேயும் பல துறை அதிகாரிகள் அதற்காகவே இருக்கிறார்கள். அதையும் மீறி அப்படி ஏதேனும் ஒரு பகுதியிலே நிதி ஒதுக்கப்பட்டது செலவிடப்படவில்லையென்றால், சில துறைகளிலே இந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதி, இந்த ஆண்டுக்குள் அதைச் செலவழிக்க முடியாத நிலைமை இருப்பின், அது தொடர்ந்து அடுத்த ஆண்டில் செலவழிக்கப்படும். கட்டத் தொடங்கிய பாலம் கட்டி முடிக்கப்படாத காரணத்தால் தொடர்ந்து அடுத்த ஆண்டும் அதற்கான நிதி செலவிடப்பட வேண்டும் அல்லவா? வீடுகள் கட்டித் தருகிற திட்டம் இரண்டு ஆண்டுகளிலே முடியாவிட்டால் மூன்றாவது ஆண்டும் அந்த நிதி தொடர்ந்து செலவிடப்படும். எனவே, ஒரே ஆண்டிலே முடிக்க முடியாமல் அடுத்த ஆண்டிலே முடிப்பதாக இருந்தாலும் சட்டமன்றமும், அமைச்சரவையும் அதற்குப் பொறுப்பு. அந்த முறையிலே நாம் செயல்படுகிறோம். நாம் செயல்படுவதைவிடச் சிறப்பாக, வேறு மாநிலத்திலே செயல்படுவதாக நாங்கள் அறியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 22, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**22—**

## துணை மின் நிலையம்

***7921—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், பரமசாத்துப் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

[2008 ஜனவரி 29

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, பரமசாத்துப் பகுதியில் நிலவி வரும் குறைந்த மின்னழுத்தத்தினைப் போக்கிட, ஒரு 33/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைப்பதற்காகத் திட்டமிடப்பட்டுள்ளது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்பாடி வட்டம், பரமசாத்துப் பகுதியில் தங்கால் என்கிற இடத்தில் மயிலை குருஜியினுடைய ஒரு பெரிய ஆசிரமம் இருக்கிறது. அதற்குப் பக்கத்திலே கீரைசாத்து, பொன்னை, வள்ளிமலை, மேல்பாடி, ஒட்டநேரி போன்ற கிராமங்களில் ஒரு நாளைக்குக் கிட்டத்தட்ட 15 முறை மின் வெட்டு ஏற்பட்டுவிடுகிறது. காரணம் கேட்டால், அங்கே இருக்கக்கூடிய sub-station நெடுந்தொலைவில் இருக்கின்றது; Sub-station இல்லாத காரணத்தாலே அவர்களால் ஒரு சரியான மின் பகிர்மானத்தை அந்த இடத்தில் தர இயலவில்லை என்ற கருத்தை மின்சாரத் துறை அலுவலர்கள் தெரிவிக்கின்றார்கள். ஆகவே, அந்த இடத்தில் தடையில்லா மின்சாரத்தை முழுமையாக—மக்கள், குறிப்பாக விவசாய மக்கள் நிறைய இருக்கிறார்கள். ஆகவே அப்பகுதி மக்களுக்கு வசதி செய்யக்கூடிய வகையில்—தொடர்ந்து மின்சாரம் பெறக்கூடிய வகையில் அங்கே துணை மின் நிலையம் அமைப்பதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒப்புதலைத் தந்ததற்காக நான் அவருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டுவிட்டதா; எவ்வளவு இடம் இப்போது தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது; வருவாய்த் துறை அந்த நிலத்தை மின்சாரத் துறைக்கு ஒப்படைத்துவிட்டதா; அதனுடைய திட்டச் செலவு எவ்வளவு; எப்போது செயல்படுத்தப்படும் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே ஒரு துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்று ஏற்கெனவே நான் தெரிவித்தேன். மாண்புமிகு உறுப்பினர், நிலம் ஒப்படை செய்யப்பட்டுவிட்டதா என்று கேட்கிறார், இதற்காக நிலத்தைத் தருவதற்கு ஒருவர் முன்வந்தார். அவர் விலையையும் நிர்ணயித்துவிட்டார். அந்த நிலத்தை மின்சார



2008 ஜனவரி 29]

வாரியத்திற்கு ஒப்படைக்கின்ற சூழ்நிலையில், அவர் இயற்கை எய்திவிட்டார். அதற்குப் பிறகு அவருடைய வாரிசுகள், அவர்களுடைய தகப்பனார் எந்த அளவிற்கு விலையை நிர்ணயித்தாரோ, அதைவிட மூன்று மடங்கு விலை கேட்கின்ற காரணத்தினாலே, மின்சார வாரியம் அந்தத் துணை மின் நிலையத்தை, இவ்வளவு செலவிலே அமைக்க முடியாது என்று சொல்லி, வேறு ஒரு இடத்தைத் தேர்வு செய்துகொண்டிருக்கிறது. இந்தத் திட்டத்திற்காக மின்சார வாரியம் 7.5 கோடி ரூபாய் செலவிட இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் முயற்சித்தால், அவரே ஒரு 5 ஏக்கர் நிலத்தை வாங்கித் தந்தால், நாளைக்கேகூட அந்தத் திட்டத்தைத் தொடங்குவதற்கு மின் வாரியம் தயாராக இருக்கிறது.

முற்பகல் 9–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் நிறைய புறம்போக்கு நிலம் இருக்கிறது. நாம் தனிப்பட்ட முறையில், தனியாரிடம் நிலத்தைப் பெறுவதற்குப் பதிலாக, அந்தப் பகுதியிலே புறம்போக்கு நிலம் நிறைய இருக்கின்ற இடத்தைத் தேர்ந்தெடுத்து, அந்த இடத்தில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தலாம். அது நம்முடைய அருமை அண்ணன் துரைமுருகன் அவர்களுடைய தொகுதி. நிச்சயமாக அவரே அதிலே தலையிட்டு, அங்கே புறம்போக்கு நிலத்தைக் கண்டுபிடித்து, உடனடியாக அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் வேலூரிலேதான் இருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரும் அங்கேதான் இருக்கிறார். எந்த சர்வே நம்பரிலே புறம்போக்கு நிலம் இருக்கிறது என்று அவரிடத்திலே எழுதிக் கொடுத்தால், மின் வாரிய அதிகாரிகள் அவரோடு தொடர்பு கொண்டு, உடனடியாக அந்த நிலத்திற்கு enter upon certificate வாங்கிக் கொடுத்தபின் வேலைகளைத் தொடங்குவதற்கு மின் வாரியம் தயாராக இருக்கிறது.

[2008 ஜனவரி 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு, ஏற்கெனவே நம்முடைய திருப்பூருக்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்களால், அரசின் சார்பில் 8 துணை மின் நிலையங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது, திருப்பூர், பல்லடம் பகுதியிலே. அதற்கான இடங்களெல்லாம்கூட, ஓரளவு அடையாளம் காணப்பட்டு, அடிக்கல் நாட்டப்பட்ட நிலையில், அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, அரசு நிலம், கோயிலுக்குச் சொந்தமான நிலம், இவையெல்லாம் அடையாளம் காட்டப்பட்டு, விலை தீர்மானிக்கப்பட்டு, சில இடங்களில் பெயர் மாற்றம் செய்வதிலே தொடர்ந்து காலதாமதம் ஏற்பட்டு, அடிக்கல் நாட்டிய பிறகும், அந்தப் பணிகள் இன்னும் தொடங்கப்படாமல் இருந்து வருகின்றன. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொஞ்சம் நேரடியாக அதிலே தலையிட்டு, அந்தப் பணிகளைத் தொடங்குவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரிலே நடைபெற்ற நிகழ்ச்சியிலே, அந்த அடிக்கல் நாட்டு விழாவிலே நானும் கலந்து கொண்டேன். நம்முடைய மின் வாரியத் தலைவரிடமும், Member (Distribution) அவர்களிடமும் சொல்லி, அந்த வேலைகளையெல்லாம் தொடங்கச் சொல்லியிருக்கிறேன். ஜூன் மாதத்திற்குள்ளாக அந்த வேலைகளை முடித்துத் தருவதாக அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள். தேவைப்பட்டால், அந்த விழாவிற்கு வருவதற்கும் நான் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. சண்முகம்.

**திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, அனல் மின் நிலையங்கள் அமைப்பதற்கு, நிலங்களைக் கையகப்படுத்துவதற்குத் திட்டங்களை அறிவித்திருக்கிறது. குறிப்பாக, மரக்காணம், செய்யூர் பகுதிகளிலே,



2008 ஜனவரி 29]

இந்தத் திட்டத்தைக் கைவிட்டுவிட்டதாகச் சொல்லி, மரக்காணம் பகுதியிலே புதிய அனல் மின் நிலையம் அமைப்பதற்கு, கந்தாடு பகுதியிலே நிலம் கையகப்படுத்தப்படும் என்று சொல்லப்பட்டது. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துணை மின் நிலையம் அமைப்பது தொடர்பானதுதான் மூலக் கேள்வி. நீங்கள் அனல் மின் நிலையம் அமைப்பதைப் பற்றிச் சொல்கிறீர்கள்.

**திரு. சி.வி. சண்முகம்:** அனல் மின் நிலையம்தான். ஆனால், குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. அந்தத் திட்டத்திற்காக, இப்போது பக்கத்திலே 15 கிலோ மீட்டர் தூரம் தாண்டி, ஏந்தூர், வடநெற்குணம் பகுதியிலே புதிதாக அனல் மின் நிலையம் அமைப்பதற்கு நிலம் கையகப்படுத்தப்படும் என்று வருவாய்த் துறை அதிகாரிகளால் சொல்லப்பட்டு, நிலத்தைக் கொடுப்பவர்களுக்கு மாதந்தோறும் ஓய்வூதியம் அளிக்கப்படும் என்றும் தவறாகச் சொல்லப்படுகிறது. இந்த அரசு அப்படி ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தியிருக்கிறதா; அல்லது வருவாய்த் துறை அதிகாரிகள் தவறாக அப்படிச் சொல்லி, விவசாயிகளை ஏமாற்றுகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யூர் பகுதியிலே ஒரு ஏக்கர் நிலம் 30 இலட்சம் ரூபாய், 3.5 இலட்சம் ரூபாய் என்று சொன்ன காரணத்தினாலே, அந்தத் பகுதியிலே இந்தத் திட்டத்தைக் கைவிட்டுவிட்டோம். மரக்காணம் பகுதியிலே அரசாங்கத்திற்குச் சொந்தமான சுமார் 1,000 ஏக்கர் நிலம் இருக்கிறது என்று விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர், தலைமைச் செயலாளர் மற்றும் நிதித் துறைச் செயலாளர், எல்லோரும் கலந்து பேசியபோது, அந்த ஆயிரம் ஏக்கர் நிலத்தை, அங்கே மின் நிலையம் அமைப்பதற்காகக் கொடுக்கலாம் என்று தெரிவித்தார்கள். எனவே, அந்த இடத்திலேதான் இப்போது அந்தத் திட்டத்தைத் தொடங்க இருக்கின்றோம். அதற்கிடையில், அப்போலோ நிறுவனம் ஆயிரம் மெகா வாட் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கும், அங்கே ஒரு சிறிய துறைமுகம் கட்டுவதற்கும் அரசாங்கத்திடம் அனுமதி கேட்டிருக்கிறது. அந்தத் துறைமுகம் அங்கே அமையுமானால், இப்படிப்பட்ட மின் நிலையங்கள் வருவதற்கும் வசதியாக இருக்கும். அதுபற்றி அரசாங்கம்

[2008 ஜனவரி 29

இன்னும் ஓரிரு நாட்களிலே கலந்து பேசி, அந்தத் துறைமுகத்திற்கும் ஒப்புதல் தந்து, ஏற்கெனவே ஒப்புதல் தரப்பட்டுள்ள மின் நிலையத்தையும் தொடங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறோம்.

முற்பகல் 9–50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 23, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**23—**

## குடிநீர்த் திட்டம்

***678—திரு. கி. ஆறுமுகம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் சிறப்பு நிலை ஊராட்சியில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க புதிய குடிநீர்த் திட்டத்தினை அரசு அறிவிக்குமா?

(ஆ) ஆம் எனில், திட்ட மதிப்பீடு எவ்வளவு?

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்திய விடை: (அ) மற்றும் (ஆ) செங்கற்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் பேரூராட்சியில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, புதிய குடிநீர்த் திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இந்தக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தின் மதிப்பீடு ரூ.1,05,00,000 ஆகும். திட்டப் பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.



2008 ஜனவரி 29]

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கடந்த கூட்டத் தொடரிலே இதை அறிவித்தார்கள். அப்பொழுது அந்தப் பகுதி மக்களெல்லாம் நன்றியைத் தெரிவித்தார்கள். அதற்கான ஆய்வுப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால், இப்பொழுது திருக்கழுக்குன்றம் பேரூராட்சியிலே வாரத்திற்கு இரண்டு நாட்கள் மட்டுமே தண்ணீர் கிடைக்கிற ஒரு வாய்ப்பு இருக்கிறது. அதுவும் குறிப்பாக, அந்தப் பகுதி மக்கள் பாலாற்றுக்கு அருகில் இருக்கிறார்கள். பாலாற்றுக் குடிநீர்தான் சுவையாக இருக்கிறது; பாலாற்றுக் குடிநீர்தான் வேண்டுமென்று தொடர்ந்து வற்புறுத்தி வருகிறார்கள். ஒட்டுமொத்தமாக அனைத்து மக்களுக்கும் பாலாற்றுக் குடிநீர் தினந்தோறும் கிடைப்பதற்கான வாய்ப்பை நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தருவார்களா எனத் தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கழுக்குன்றம் பேரூராட்சியினுடைய தற்போதைய மக்கள் தொகை 2001 ஆம் ஆண்டினுடைய கணக்கின்படி 23,715 ஆகும். இப்பேரூராட்சிக்குப் பாலாற்றை நீராதாரமாகக் கொண்டு 1,05,00,000 ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் அபிவிருத்தித் திட்டம் தீட்டப்பட்டு சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உள கட்டமைப்பு வளர்ச்சித் திட்டத்தின்கீழ், (UIDSSMT) TUFIDCO–வினால் 11–6–2007 அன்று நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினுடைய ஆண்டுப் பராமரிப்புச் செலவு ரூ.9,48,000 ஆகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே நிலத்தடி நீர், அதிகமாகக் கிணற்று நீர் வழங்கப்பட்டு வருகிறது. அது கடினத் தன்மை உடையதாக இருக்கிறதென்று சொல்கிறார்கள். அதனை மாற்றுவதற்காக நம்முடைய அரசு ஏதேனும் சிறப்புத் திட்டத்தை அறிவிக்குமா என்று தங்கள்மூலம் கேட்டு, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல, பாலாற்றில் மூன்று நீர் உறிஞ்சு கிணறுகள் மற்றும் இரண்டு திறந்தவெளிக் கிணறுகள் அமைக்கப்படவுள்ளன. இக்கிணறுகளிலிருந்து பெறப்படும் குடிநீர், ஒரு கிலோ மீட்டர் நீளமுள்ள நீருந்துக் குழாய்கள் மூலமாகத் திருக்கழுக்குன்றத்திற்குக் கொண்டு செல்லப்படும். இத்திட்டத்தின்கீழ் புதியதாகக் கட்டப்படவுள்ள 60,000 லிட்டர் கொள்ளளவு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியோடு, ஏற்கெனவே இருக்கக்கூடிய நான்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மற்றும் ஒரு தரைமட்டத் தொட்டியில் இக்குடிநீர் நிரப்பப்பட்டு, பகிர்மானக் குழாய்கள்மூலம் வழங்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டப் பணிகளுக்கான ஆணை 4–1–2008–ல் வழங்கப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இத்திட்டம், அக்டோபர் 2008–க்குள் முடிக்கப்பட்டு, பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படவிருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 24, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. லட்சுமணன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**24—**

### உழவர் சந்தை

***34632—திரு. ச. லட்சுமணன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போடிநாயக்கனூர் தொகுதி, தேவாரத்தில் உழவர் சந்தை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் தொகுதி, தேவாரத்தில் புதிய உழவர் சந்தை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தேனி மாவட்டம், தேவாரத்தில் பேரூராட்சி வாரச் சந்தை, புல எண்



943/1–ல் உழவர் சந்தை அமைக்க, தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் கருத்துரு அனுப்பப்பட்டு, 16 கடைகளுடன் கட்டுமானப் பணிகளை வேளாண்மைப் பொறியியல் துறைமூலம் மேற்கொள்ள ரூ.21.41 இலட்சத்திற்கான நிருவாக அனுமதி, 9–1–2008 அன்று வழங்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. லட்சுமணன்.

**திரு. ச. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போடிநாயக்கனூர் தொகுதி தேவாரத்தில் உழவர் சந்தை அமைக்கப்படும் என அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 9–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**25—**

### அணையைச் செப்பனிடுதல்

***8363—திரு. தி. வேல்முருகன்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பண்ருட்டி தொகுதி, காமாட்சிப்பேட்டை கிராமத்தில் ஆற்று ஓரமுள்ள உடைந்த அணையைச் செப்பனிட்டுத் தர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள அணை என்பது, கெடிலம் ஆற்றின் கரையாகும். இது ஒரு வடிகால் ஆறாகும். பராமரிப்பு நிதியிலிருந்து இந்தச் சீரமைப்புப் பணிகள் செய்யப்பட வேண்டியிருப்பதால், வரும் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

[2008 ஜனவரி 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ருட்டி தொகுதி, காமாட்சிப்பேட்டையில் வாழுகின்ற ஆயிரக்கணக்கான கிராம மக்களுக்குப் பாதிப்பு ஏற்படுகின்றவகையில், முக்கியமாக அந்த அணை அடித்துச் செல்லப்பட்டிருக்கிறது. உடனடியாக போர்க்கால அடிப்படையில் அந்த அணையை நிறுவித் தந்தால்தான், அந்தப் பகுதி மக்களைக் காக்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்ற காரணத்தினால், வரும் நிதியாண்டிலேயே முன்னுரிமை அடிப்படையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, அந்த அணையைச் செப்பனிட்டுத் தருவதற்குக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, பண்ருட்டி தொகுதியிலே, பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டில் மொத்தம் 22 ஏரிகள் இருக்கின்றன. இந்த 22 ஏரிகளுள் பெரும்பான்மை ஏரிகள், ஆழப்படுத்தப்படாமலும், கரைகள் பலப்படுத்தப்படாமலும், இதுபோன்று மழை, வெள்ளக் காலங்களில் பாதிப்புக்குள்ளாகி, அந்தப் பகுதி மக்களுடைய வயல்வெளிகள் மிகப் பெரிய பாதிப்பிற்குள்ளாகின்ற ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதையும் முன்னுரிமை அடிப்படையில் செப்பனிட்டுத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டதுபோல, அங்கு அணை எதுவும் கிடையாது. சௌத் மலட்டாறு வருகிறது. கெடிலம் ஆறு வருகிறது. காமாட்சிப்பேட்டையில் ஒன்றாகக் கலந்து போகிறது. ஆக, வலதுபுறக் கரை, இடதுபுறக் கரை பழுதுபட்டு இருக்கிறது. கரைதான்; அணை அல்ல. அந்தக் கரை பழுதுபட்டிருப்பதால்—அதிலே பாசனம் கிடையாது—பெருவெள்ளம் வந்தால் கரையில் புரண்டு, பக்கத்திலேயிருக்கிற வயல்களுக்குப் போய் அது பாழ்படுத்துகிறது என்று, கடலூரில், நீர்ப்பாசனக் கருத்தரங்கின்போதுகூட தெரிவித்திருக்கிறார்கள். அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்தான் தெரிவித்தார்கள். ஆகையினால்தான் சொன்னேன், அடுத்த



2008 ஜனவரி 29]

நிதியாண்டில் முன்னுரிமை தந்து இந்தப் பணி எடுத்துக்கொள்ளப்படும் என்று.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டில் தமிழகத்தில் மொத்தம் எத்தனை ஏரிகள் உள்ளன? அவற்றிலே நம்முடைய தமிழக அரசு அறிவித்ததுபோல ஆக்கிரமிப்புக்கு உட்படுத்திய ஏரிகளையும் மீட்டு, இப்போது இந்த நீர் ஆதாரத்தைப் பாதுகாக்கின்றவகையில் நம்முடைய அரசில் பெருந்திட்டங்கள் ஏதாவது உருவாக்கப்பட்டிருக்கின்றனவா? அதற்கு ஏதாவது சிறப்பு நிதி, மத்திய, மாநில அரசுகளிடத்திலோ அல்லது நபார்டு திட்டத்திலேயோ பெற்று இந்த ஆண்டு அறிவிப்பில் ஏதாவது இடம்பெற இருக்கிறதா என்பதையும் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறையின்கீழ் இருக்கிற ஏரிகள் எல்லாம் நீர்வளம் நிலவளம்—IAMWARM—திட்டத்தின் அடிப்படையில் சீரமைக்கப்படுகின்றன. அரசினுடைய பொது நிதியிலிருந்தும், அவ்வப்போது அதற்கான பணிகளைச் செய்துகொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு, ஒவ்வொரு தொகுதிக்கும் இரண்டு ஏரிகளைக் கொடுத்திருக்கிறோமே, அதன் அடிப்படையிலேயும், (குறுக்கீடுகள்) டேபிளிலே வைத்திருக்கிறோம், பாருங்கள். (குறுக்கீடுகள்) உங்களுக்கு டேபிளிலே வைத்திருக்கிறோம், பாருங்கள். டேபிளிலே, யார் யாருக்கு, எந்தெந்த எம்.எல்.ஏ.வுக்கு எந்தெந்த ஏரியை எடுத்திருக்கிறோம் என்பது குறித்து டேபிளில் வைத்திருக்கிறோம்; அதைப் பாருங்கள். அதை வாங்கி, தூக்கி அப்படியே போட்டுவிட்டீர்கள் என்றால் எப்படி? டேபிளில் வைத்திருக்கிறோம். (குறுக்கீடுகள்) நேற்றையதினமே டேபிளில் வைத்தாகிவிட்டது. (குறுக்கீடுகள்) பாருங்கள், திரு. ஆறுமுகம் கையிலே வைத்திருக்கிறார் பாருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோருடைய டேபிளிலும் இருக்கிறது, பாருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** நேற்றே வைத்தாகிவிட்டது, நீங்கள் பாருங்கள் சார், வைத்தாகிவிட்டது. (குறுக்கீடுகள்) இன்றைக்கும் வைத்திருக்கிறதா? (குறுக்கீடுகள்) ஆம், வைத்தாகிவிட்டது, பாருங்கள். திரு. பன்னீர், பாருங்கள், வைத்தாகிவிட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், இரண்டு ஏரிகள் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் 10 இலட்சம் ரூபாய் வீதம் தரப்படும் என்று அறிவித்தார்கள். எங்களிடமிருந்து கடிதமும் பெற்றுச் சென்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது போல அல்லாமல், அது இன்னமும் ஏட்டளவில்தான் இருக்கிறதேதவிர, இன்னும் செயலுக்கு வரவில்லையென்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தவர். முதலில் கொடுக்கப்பட்ட ஏரிகளை எடுத்து, அவற்றிற்கு எல்லாம் ஒரு எஸ்டிமேட் போட்டு, பிளான் போட்டு வர வேண்டாமா? இன்னும் சொல்லப்போனால், நபார்டிலிருந்து பணம் வர வேண்டும். இருந்தாலும், முதலமைச்சர் அவர்கள், நபார்டு பணம் வருவது ஒருபுறம் இருக்கட்டும்; அரசினுடைய நிதியிலிருந்து செய்யுங்கள் என்றதால், தனியாக 35 கோடி ரூபாய்க்கு மேலே ஒதுக்கப்பட்டு, எந்தெந்த ஏரியை எடுத்திருக்கிறோம் என்று பட்டியலைப் போட்டு, டேபிளின் மேலே வைத்திருக்கிறோம். ஆகையினால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, ஜமீன் ஏரிகள் எடுக்கப்படவிருக்கினறன. எத்தனை ஏரிகள் என்ற கணக்கை நான் தனியாகத் தருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. ஹசன் அலி.



**திரு. கு. ஹசன் அலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்கவிருந்த ஒரு கேள்விக்கு ஏற்கெனவே விடை கிடைத்துவிட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படியானால் உட்காருங்கள்.

(குறுக்கீடு)

**திரு. கு. ஹசன் அலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை, இல்லை; இன்னும் ஒரு கேள்வி இருக்கிறது. எங்களுடைய இராமநாதபுரம் தொகுதியிலே மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் 8 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்வதாக அறிவித்திருந்தார்கள். அது இன்றுவரை செய்யப்படவில்லையென்று நினைக்கிறேன். மராமத்துப் பணிகளுக்கான அது, உடனடியாக நிறைவேற்றப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்பொழுது சொன்னோம், எதற்குச் சொன்னோம் என்று தெரியாமல், மொட்டையாக 8 கோடி ரூபாய் ஆனது, என்ன ஆனது என்று கேட்டால் என்ன செய்வது என்று தெரியவில்லை. பராமரிப்பு நிதி என்று கேட்கிறார். வேண்டுமானால் நான் அந்த விவரத்தை அறிந்து சொல்கிறேன். திடீர் என்று கேட்டால் எப்படி? 8 கோடி ரூபாய் என்று உறுப்பினர் கேட்கிறார். அதிலே பல திட்டங்கள் இருக்கின்றன. எதிலே என்று தெரியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. தண்டபாணி.

**திரு. மா. தண்டபாணி:** மாண்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, எனது வேடசந்தூர் தொகுதியில் குடகனாறு அணை என்பது ஒரு சிறப்பு மிக்க அணை. ஏனென்று சொன்னால், நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான் 4–5–1957–லே முதன்முதலாக, குடகனாறு அணையை, அதுவும் அழகாபுரியில் கட்ட வேண்டும் என்ற கோரிக்கையை வைத்தார். அது 1973–ல் ஆரம்பித்துக் கட்டப்பட்டு, 1977–லே ஒரு முறை உடைந்துவிட்டது. இப்பொழுது

[2008 ஜனவரி 29

எங்களுடைய பகுதி என்பது மிகுந்த வறண்ட பகுதி. வறண்ட பகுதியிலே மழை இல்லை என்றாலும், அந்த அணைக்கு வருகின்ற நீர்ப்பிடிப்புப் பகுதியிலே அதிக மழை பெய்த காரணத்தால் நிறைய நீர் வந்து, 27 அடி கொள்ளளவு கொண்டு இருக்கிற அந்த அணை நிரம்பி இருந்தபொழுதிலும்கூட shutter உடைந்த காரணத்தால், இன்றைக்கு ஒரு சொட்டுத் தண்ணீர்கூட இல்லாத அவல நிலைக்கு ஆளாகி இருக்கிறது. ஆகவே, அந்த அணையை உடனடியாகச் செப்பனிட்டு—ஏற்கெனவே அது உடைந்திருக்கிறது. மீண்டும், இதுபோன்ற நிலை ஏற்படுகிறது என்று சொன்னால், அதனை அதிகாரிகளுடைய மெத்தனப் போக்காகக் கருதுகிறோம். ஆகவே அந்த நிலை ஏற்படாதவண்ணம் பார்த்து—உடனடியாக அந்த அணையைக் கட்டித் தர முடியுமா என்று தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணையில் ஒன்றும் பிரச்சினை இல்லை. மதகிலே இருக்கிற கதவு ஒன்று உடைந்துபோய் விட்டது. அதுவும் 24 மணி நேரத்திற்குள் சரி செய்யப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே அறிவார்கள். ஆகையினால், எதிர்பாராதவிதமாக, சில நேரங்களில் அணை உடையாது; அப்படிப்பட்ட கதவுகள் உடைந்துவிடும். அது செப்பனிடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போன்று அணைக்கு எந்த விதமான பிரச்சினையும் இல்லை. ஆனால், அந்த மதகிலிருந்த கதவைத் தற்பொழுதுதான் சமீபத்தில், அதாவது போன ஆட்சியில் சரி செய்தார்கள். அதற்காக ஒரு நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டது. சரி செய்யப்பட்ட அந்தக் கதவு எப்படி உடைந்தது என்பதுதான் எங்களுடைய கேள்வி. ஆகவே, அதைப்பற்றி விசாரணை செய்ய வேண்டும். உரிய முறையில் அந்த நிதியைக் கடந்த காலத்தில் பயன்படுத்தவில்லை. அதன் காரணமாகத்தான் கதவு உடைந்திருக்கிறது. ஆகவே, மீண்டும் சரி செய்கிறபொழுது, அது நல்ல முறையில் சரி செய்யப்படுமா என்பதுதான் எங்களுடைய கேள்வி.



2008 ஜனவரி 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், கேள்வி நேரத்திலே குற்றச்சாட்டு கூடாது என்பதற்காகத்தான் நான் பொதுப்படையாகச் சொன்னேன். கடந்த கால ஆட்சியிலே அந்தக் கதவு போடப்பட்டது, இந்த ஆட்சியிலே இப்பொழுது உடைந்து போய் இருக்கிறது என்பதெல்லாம் அல்ல. அணையினுடைய கதவு உடைந்திருக்கிறது. உடைந்த கதவைச் செப்பனிட்டிருக்கிறோம். மீண்டும் உடையாத அளவிற்கு அது பலப்படுத்தப்பட்டிருக்கிறது. வேண்டுமானால், அது குறித்து தனியாக உங்களுக்கு விவரத்தை நான் அளிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழைக் காலங்களில் வீணாகக் கடலிலே சென்று கலக்கின்ற தண்ணீரைச் சேகரிக்க, பாலாற்றின் குறுக்கே ஆங்காங்கே தடுப்பணைகள் கட்டப்படும் என்று கடந்த பட்ஜெட்டிலே முந்தைய காலத்திலும் சொல்லப்பட்டது. அது இப்பொழுது எந்த நிலையில் உள்ளது? அந்த அணை கட்டப்படுமா; அல்லது, வரக்கூடிய நிதியாண்டில் கட்டப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலாற்றில் ஆங்காங்கு check dam கட்டப்படும் என்று நிதியாண்டில் சொன்னோம் என்கிறார். எந்த நிதியாண்டிலே சொல்லியிருக்கிறோம்? (சிரிப்பு) அல்ல, அல்ல. சும்மா கேட்டுவிட்டுப் போகலாமா என்று கேட்கிறார். (சிரிப்பு) ஆகையினாலே அப்படிச் சொல்லிவிடலாம் என்ற காரணத்தினாலே சொல்கிறார். பொதுவாக, மழைக் காலங்களில் பெருக்கெடுத்து வருகின்ற தண்ணீரை ஆங்காங்கு ஒரு check dam கட்டி நிறுத்த வேண்டும் என்பதை அரசு கொள்கை அளவிலே ஏற்றுக்கொண்டுதான் இந்த கவர்னர் உரையிலே அதைத் தெரிவித்திருக்கிறோம். அது குறித்த விரிவான விவரத்தை, திட்டத்தை, நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிதி அமைச்சர்மூலமாகத் தெரிவிப்பார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் வடவாறு தலைப்பு உள்ளது. அந்த வடவாறு தலைப்பில், Highways Road பக்கத்தில் கரை உடைந்துள்ளது. அந்தக் கரை உடைந்த பக்கத்தில் ஒரு தண்ணீர் tank உள்ளது. அந்தத் தண்ணீர் tank ஓரமாக அரிப்பு உள்ளது. அதைப்போல், National Highways bungalow உள்ளது. அந்தப் பக்கத்தில் கரை உடைந்துள்ளது. அந்தக் கரையைச் சரிப்படுத்த வேண்டும். அதேபோல, கல்லடைக்குட்டை வாய்க்கால் வடவாறு தலைப்பில் பிரிகிறது. அதில் 13 உடைப்புகள் உள்ளன. அந்த உடைப்புகளின் வழியாகத் தண்ணீர் வடிகால் வழியாக ஏறி, அந்தத் தண்ணீர் விளைச்சலில் புகுந்துள்ளது. 13 உடைப்புகளையும், அந்தக் கரையையும் சரிப்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

முற்பகல் 10–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, வடவாறு ஆற்றில் 22 கிலோ மீட்டர் தூரத்தை, கீழே தளம் அமைத்து, அதன் கரைகளையும் கான்கிரீட்டிலே செய்து, கொள்ளிடத்திலேயிருந்து தண்ணீரை நேராக வீராணம் ஏரிக்குக் கொண்டு வரும் ஒரு மகத்தான காரியத்தை சென்ற முறை ஆட்சியிலே இருந்தபோது நம்முடைய முதல்வர் அவர்கள் செய்து முடித்தார்கள். அந்த விழாவிற்கு வருகிறபோதுகூட, அந்த ஆற்றின் கரையிலேயே காரை ஓட்டி வருகிற அளவுக்கு அதை அற்புதமாகச் செய்து இருக்கிறோம். அது ஒரு பெரிய திட்டம். அதிலே பராமரிப்பினைத் தொடர்ந்து செய்துகொண்டிருக்க வேண்டும். கடந்த முறை பெய்த மழை, பெரும் பகுதியில் அங்கு தாக்கத்தை உருவாக்கி இருக்கிறது என்பதை நான் அறிவேன். எனவே, அந்த உடைப்புகள் ஏற்பட்டிருப்பது அரசினுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. அதைச் சரி செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 26, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.



**26—**

## தொழிற்பேட்டை

***8249—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கம் பகுதியில் புதிய தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கம் பகுதியில் புதிய தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதி மிகவும் பின்தங்கிய பகுதியாகும். அங்கே வாழ்கின்ற மக்களில் 80 சதவிகித மக்கள் விவசாயத்தையே நம்பி வாழ்கின்ற மக்களாக இருக்கிறார்கள். கலசப்பாக்கம் தொகுதியில் எந்தவொரு தொழிற்சாலையும் இல்லை. தமிழக அரசினுடைய புதிய தொழில் கொள்கையின் அடிப்படையில் புதிய தொழிற்சாலைகளைக் கொண்டு வருவதில் இந்த அரசு அதிக கவனம் செலுத்துகிறது என்பதைச் சுட்டிக்காட்டி, புதிய தொழிற்சாலைகளை அமைக்கின்றபோது, வளர்ந்து வருகின்ற நகரங்களுக்கு அருகிலே அமைக்கின்ற தொழிற்பேட்டைகளை, கிராமப் பகுதிகள் முன்னேற வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில், கிராமங்கள் அதிகம் உள்ள கலசப்பாக்கம் தொகுதியில் இந்த அரசு புதிய தொழிற்பேட்டை அமைக்க முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே திருவண்ணாமலை மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள அரசுத் தொழிற்பேட்டையில் தொழிற்கூடங்களும், மனைகளும் உருவாக்கப்பட்டு, அவை அனைத்துத் தொழில் முனைவோர்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. எனவே, தொழில் தொடங்க ஆர்வமாக உள்ள 20 தொழில் முனைவோர்கள், தகுந்த தொழில்நுட்பம், திட்டங்கள் மற்றும் போதுமான நிதி ஆதாரங்கள் ஆகியவற்றுடன், திருப்பித் தரப்படாத ஒப்பளிப்புத் தொகையினை—Draft—கட்ட முன்வந்தால், புதிதாகத் தொழிற்பேட்டை அமைப்பதற்கான நிலம், தொழில் முனைவோர் தேவை ஆகியவற்றைக் கணக்கில்கொண்டு, மாவட்ட ஆட்சியர், மாவட்டத் தொழில் மையத்தினுடைய பொது மேலாளர் மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தினுடைய அதிகாரிகள் ஆகியோருடன் கலந்து, தொழிற்பேட்டை அமைப்பது பற்றி அரசு ஆலோசனை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்த தொழிற்பேட்டை, கலசப்பாக்கம் தொகுதியிலே இருந்து 100 கிலோ மீட்டருக்கு அப்பால் இருக்கிற செய்யாறிலே இருப்பதைப்பற்றிக் குறிப்பிடுகிறார்; நான் கேட்பது, கலசப்பாக்கம் தொகுதியில். புதிய தொழிற்பேட்டைகள், தொழிற்சாலைகள் அமைக்க விவசாய நிலங்களை அரசு கையகப்படுத்துகின்றபோது பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இதைத் தவிர்க்கின்றவண்ணமாக, கலசப்பாக்கம் தொகுதியிலே இருக்கின்ற, விவசாயத்திற்குப் பயன்படாத, அதிகமான அளவிலே இருக்கிற தரிசு நிலங்களைப் பயன்படுத்தி அங்கே தொழிற்பேட்டை அமைத்தால், வறட்சியான காலங்களில் கலசப்பாக்கம் தொகுதியில் இருக்கின்ற மக்கள் பிழைப்பிற்காக வெளி மாநிலங்களுக்குச் செல்வதைத் தடுக்கின்ற வகை ஏற்படும் என்பதாலும், எனது தொகுதி மக்களுடைய பொருளாதாரத்தை முன்னேற்றம் அடையச் செய்வதற்காகவும் இந்த அரசு, கலசப்பாக்கம் தொகுதியிலே தொழிற்பேட்டை அமைக்க முன்வருமா என்பதை மீண்டும் வலியுறுத்தி, தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.



முற்பகல் 10–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் கூறியபடி, 20 தொழில் முனைவோர்கள் தகுந்த முன்பணத்துடன் மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகி, அதைப்போல மாவட்டத் தொழில் மையப் பொது மேலாளரையும் அணுகி, அவர்களுடைய proposal–களை அனுப்பினால், அரசு தக்க முடிவுகளை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியிலே ஆலூர் கிராமத்திலே கோரைப் பாயும், பிளாஸ்டிக் பாயும் நெய்யும் தொழில் முஸ்லீம் பெருமக்களால் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றது. அவர்கள் அதற்குரிய machine–ஐ வைப்பதற்கு இடம் இல்லாமல் கஷ்டப்படுகின்ற காரணத்தால், அவர்களுக்குத் தேவையான நிலத்தைக் கையகப்படுத்தி, தொழிற்பேட்டை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரின்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. பிச்சாண்டி அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, திருவண்ணாமலையில் புதிய தொழிற்பேட்டை அமைப்பதற்குத் தேவையான நிலம் கண்டறியப்பட்டு, அதைத் தொழிற்பேட்டையாக மாற்றும் பணி இப்பொழுது அரசின் சார்பில் நடந்து வருகின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 27, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பதர் சயீத், மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

?7— [2008 ஜனவரி 29

## வட்டாட்சியர் அலுவலகம்

***5054—திருமதி பதர் சயீத்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போது கிரீன்வேஸ் சாலையில் இயங்கி வரும் திருவல்லிக்கேணி வட்டாட்சியர் அலுவலகத்தைத் திருவல்லிக்கேணியில் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பதர் சயீத்.

**திருமதி பதர் சயீத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்கு முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நீங்கள் இந்த question-ஐ one and a half years-க்கு அப்புறம் இன்றைக்குப் போட்டிருக்கிறீர்கள். அதற்காக thank you.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, முதலில் நீங்கள் கேள்வியைக் கேளுங்கள்.

**திருமதி பதர் சயீத்:** கேட்கிறேன் சார், கேட்கிறேன். But, உங்களுக்கு நான் நன்றி சொல்ல வேண்டுமே! இன்றைக்கு Tahsildar Office, Chepauk, Triplicane, Mylapore and Egmore எல்லாம் ஒரே இடத்தில் Greenways road-ல் தற்சமயம் செயல்பட்டு வருகிறது. நான் சொல்வது என்னவென்றால், Triplicane-லிருந்து மக்கள் direct ஆக அங்கே போவதற்கு bus வசதி இல்லை. அவர்கள் ஓரிடத்தில் இறங்கி, நடந்துதான் போகவேண்டும். அதனால் நிறைய timeதான் waste ஆகின்றது. Secondly, வேறு, வேறு Constituency-யிலேயிருந்து வந்து மக்கள் வெளியே உட்கார்ந்துகொண்டிருக்கின்றார்கள். நான் personal ஆகப்



2008 ஜனவரி 29]

போய்ப் பார்த்திருக்கிறேன். கேட்டால், அங்கே staff இல்லை. இங்கே 3 Constituencies-ஐயும் சேர்த்து நாங்கள் பார்க்கிறோம், எப்படி உங்கள் Triplicane-க்கே பதில் கொடுக்க முடியும் என்று அங்கே சொல்கின்றார்கள். நான் கேட்பது, Tahsildar Office-ஐ Triplicane-க்கே shift செய்வதற்கு இந்த Government முன்வருமா என்று கேட்க விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலை—திருவல்லிக்கேணி வட்டாட்சியர் அலுவலகம் தற்சமயம் Greenways road-ல் அமைந்திருக்கிறது. அந்த அலுவலகம், ஏறத்தாழ மயிலை, திருவல்லிக்கேணிக்கு உட்பட்ட பகுதியில்தான் அமைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் போக்குவரத்து வசதி இல்லையென்று சொன்னார்கள். அந்த அலுவலகம் கிரீன்வேஸ் பிரதான சாலையில் அமைந்திருப்பதால், போக்குவரத்து வசதி மிக மிக அருகிலேயே இருக்கின்ற காரணத்தால், மயிலை, திருவல்லிக்கேணி மக்களுக்குப் போதுமான போக்குவரத்து வசதி இருக்கின்றது. அதேபோல, இரயில் நிலையமும் அந்த வட்ட அலுவலகத்தை ஒட்டியே இருக்கின்றது. மயிலை, திருவல்லிக்கேணி பகுதியிலே இருக்கின்றவர்கள், எங்கே ஏறினாலும், இரயில் பாதையிலே வந்து அந்த இரயில் நிலையத்தில் இறங்குகின்ற இடத்தில் வட்ட அலுவலகம் அமைந்திருக்கின்றது. போதுமான இட வசதி இல்லையென்று அவர்கள் சொன்னார்கள். கிட்டத்தட்ட 22 கிரவுண்ட் நிலத்திலே, அதுவும் அரசு நிலத்திலே தரைத் தளம் மற்றும் மூன்றாவது தளத்திலே நமது வட்டாட்சியர் அலுவலகம் அமைந்திருக்கின்றது. ஏறத்தாழ 14 ஆயிரம் சதுர அடி பரப்பளவிலே அந்த வட்ட அலுவலகம் அமைந்திருக்கின்றது. போதுமான வசதி இருக்கின்றது. இரண்டு தளங்கள்தான் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றன. மீதி இடத்தில் வணிக வரித் துறை அலுவலகம்கூட அங்கே இருக்கின்றது. ஆக, மயிலை—திருவல்லிக்கேணி வட்டாட்சியர் அலுவலகம், சென்னையைப் பொறுத்தவரையில், ஏறத்தாழ சென்னை மாநகரத்திலே, சென்னை மாவட்டத்திலே, பல்வேறு பகுதிகளை, ஐந்து வட்டங்களாக ஒருங்கிணைந்து மிகச் சரியாகச் செயல்படுகிறது.

இங்கே மாண்புமிகு உறுப்பினரவர்கள், அலுவலகத்தைத் திருவல்லிக்கேணிக்கு மாற்றவேண்டுமென்று சொன்னார்கள். திருவல்லிக்கேணிக்கு மாற்றுவதென்றால், இந்த அளவுக்குப் போதுமான இடம், 20 கிரவுண்ட் அளவுக்கு நிலம் அங்கே திருவல்லிக்கேணியில் கிடைப்பதற்கு வாய்ப்பே இல்லை. அதே சமயத்தில், அரசுக் கட்டடத்தில் புதிய வட்டாட்சியர் அலுவலகம் தோற்றுவிப்பதற்கு வாய்ப்புகள் இல்லாமல் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பதர் சயீத்.

**திருமதி பதர் சயீத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவல்லிக்கேணிக்கு நீங்கள் shift செய்வதால் அவ்ளவு இடம் தேவையில்லை. It will be only for Triplicane. அங்கே Mylapore, Triplicane என்று எல்லா Constituency–களுக்கும் இருக்கின்றது. இங்கே அவ்வளவு இடம் தேவையில்லையென்று நான் கருதுகின்றேன். எனவே, இந்த Government அதற்குப் பரிசீலனை செய்யுமா என்று உங்களிடம் மீண்டும் request செய்கின்றேன்.

*முற்பகல் 10–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தேர்தல் ஆணையத்தினுடைய வரையறைப் பணிகள் முடிவுற்றிருக்கின்ற இந்த நிலையிலே, கடந்த முறைகூட சென்னை மாவட்டத்தில் இருக்கின்ற பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே புதிய வட்டங்களைத் தோற்றுவிக்கவேண்டுமென்று இந்த அவையிலே வினா எழுப்பியிருக்கின்றார்கள். அதற்கு ஏற்றாற்போல, அவசியம் ஏற்படின், எதிர்காலத்திலே வாய்ப்பு இருந்தால், நிச்சயமாக அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.



**28—**

### கோயிலைப் பழுதுபார்த்தல்

***23777—திரு. என். நன்மாறன்:**

*மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் சில இடங்களில் ஏற்பட்ட விரிசலைத் தடுக்கும் பணியின் தற்போதைய நிலை என்ன?*

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் ஏற்பட்ட விரிசல்களைத் தடுக்கும் பணி குறித்து புதிய வல்லுநர் குழு அமைக்கப்பட்டு, ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதன்படி, முதற்கட்டமாக மீனாட்சி நாயக்கர் நுழைவு வாயில் மண்டபத்தில் உள்ள விரிசல் ஏற்பட்டுள்ள உத்தரத்தினை அகற்றிவிட்டு, புதிய கல் உத்தரம் நிர்மாணம் செய்யவும், விரிசல் ஏற்பட்டுள்ள தூண்களுக்குப் பதிலாகத் தற்போது கலை வண்ணம் சிறிதும் மாறாமல் புதிய தூண்கள் அமைத்திடவும் முடிவு செய்யப்பட்டது. இதன் அடிப்படையில், பெங்களூருலிருந்து புதிய உத்தரக் கல் கொள்முதல் செய்யப்பட்டு, விரிசலைச் சீர் செய்யும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், இந்தப் பணி நிறைவேறுகின்றபோது மக்கள் மத்தியிலும் வரக்கூடிய கருத்தை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மீனாட்சி அம்மன் கோயிலில் இருக்கக்கூடிய பொற்றாமரைக் குளம், அங்கு இருக்கக்கூடிய நீர் என்பது, இதற்கு முன்னால் தரைக்கு உள்ளே போகும்; அதனால் அந்தக் கோபுரங்களையும் பாதுகாப்பதற்கு உதவியாக இருந்தது என்று சொன்னார்கள். இப்போது தரைக்குள் தண்ணீர் போகாத மாதிரி

ஒரு நிலை இருப்பதாகவும், அதனால் நீர் ஆதாரம் இல்லாமல் கட்டடங்களில் விரிசல்கள் இருப்பதாகவும் ஒரு கருத்து இருக்கிறது. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் தலையிட்டு, பொற்றாமரைக் குளத்திலும், மதுரை மாரியம்மன் தெப்பக்குளத்திலும் தண்ணீர் நிரப்புவதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். இது குறித்து அறநிலையத் துறையிலிருந்து இன்னும் செயல் முறைத்திட்டமோ, திட்ட மதிப்பீடோ தயார் செய்து அனுப்பப்படவில்லை என்று அறிகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதுணையாக இருந்து, அறநிலையத் துறை அந்த மதிப்பீட்டினைத் தயாரித்து, இரண்டு குளங்களிலும் தண்ணீர் நிரப்புவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விரிசல்கள் என்பவை இன்று நேற்றல்ல; 1991 ஆம் ஆண்டு முதல் இந்த விரிசல்கள் ஏற்படுவது கண்டறியப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, பொற்றாமரைக் குளத்தில் நீர் தேங்காத காரணத்தால், சுற்றுப் பகுதிகளில் எல்லாம் இப்போது குடியிருப்புகளும், வணிக வளாகங்களும் ஏராளமாக தோன்றியுள்ளதன் காரணமாகவும், அந்தப் பகுதியில் ஆழ்துளைக் கிணறுகள் அதிகமாக அமைக்கப்பட்டதன் காரணமாகவும், என்னதான் குளத்திலே நீர் நிரப்பினாலும்கூட, ஆழமான ஆழ்துளைக் குழாய்கள் அதனை உறிஞ்சிவிடுகின்றன. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதைப் போல, பொதுப் பணித் துறையைச் சார்ந்த 9 பொறியாளர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டு, அந்தப் பணிகளை மேற்கொள்வதற்கான உத்தேசங்கள், அறிவுரைகள் கேட்கப்பட்டிருக்கின்றன. தொடர்ந்து அவை நடைபெறும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சி.க. ராஜேந்திரன்.

**திரு. க.சி.க. ராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய சிரம் தாழ்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர்





திருக்கோயிலிலே, மழைக் காலங்களிலே அதன் உட்பிரகாரமான ஆடி வீதிகளிலே தண்ணீர் தேங்கி, பக்தர்கள் தரிசனம் செய்வதற்கு மிகவும் சிரமப்படுகின்றார்கள். அந்தத் தண்ணீரை விரைவாக வெளியேற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது, பிரகாரத்தின் உள்ளேயா அல்லது வீதியிலா என்பதைத் தெளிவுபடுத்தக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க.சி.க. ராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரகாரத்தின் உட்புறத்திலும், வெளியிலும் அதிகமாகத் தண்ணீர் தேங்குகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1995 ஆம் ஆண்டு அந்தத் திருக்கோயிலுக்குக் குடமுழுக்கு நடைபெற்று இருக்கிறது. அதனை உறுப்பினர் அவர்களும் நன்கு அறிவார்கள். இந்த விரிசல்கள் ஏற்பட்ட பகுதிகளில் மட்டும் அந்தக் கோயிலிலே பராமரிப்புப் பணி நடைபெறவில்லை. அவற்றை எல்லாம் அகற்றிவிட்டுப் புதிய தூண்கள், விரிசல்கள் ஏற்பட்ட பகுதிகளைச் சரி செய்துகொண்டு இருப்பது ஒருபுறம் இருக்க, அனைத்து கோபுரங்களும் அங்கே புதுப்பிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அதேபோல, அங்கே மின் இணைப்புகள் அமைக்கப்பட்டு நீண்ட காலமாகிவிட்டபடியால், அவற்றிலே மின் கசிவுகள் ஏற்படுவதும் கவனத்திற்கு வந்து, அந்தப் பணிகளும் நடைபெறுகின்றன. உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற இந்தப் பணியும், பிரகாரத்தின் உட்பகுதிகளில் இருக்கக்கூடிய பகுதிகளில் நீர் தேங்குமேயானால், அவையும் பொறியாளர்கள்மூலமாகக் கண்டறியப்பட்டு, நிச்சயமாகச் சரி செய்யப்படும். இன்னும் ஒரு 6 மாத காலத்திற்குள் அந்தக் கோயிலினுடைய திருப்பணிகள் முழுமையாக முடிவுபெற்று, குடமுழுக்கு நடைபெற இருக்கிறது. அதற்குள் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய அந்தக் குறைபாடுகள் களைந்தெறியப்படும். அவை வெளியிலே இருப்பின், மாநகராட்சியின் உதவியுடன் அந்த நீர்த்தேக்கங்கள் சரி செய்யப்படும்.

[2008 ஜனவரி 29

*முற்பகல் 10–20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த உட்பிரகாரத்திலும், ஆடி வீதியிலும் இருக்கக்கூடிய தண்ணீரைப் பொற்றாமரைக் குளத்திற்கே அனுப்பிவிட்டாலும்கூட பொருத்தமாக இருக்கும், வெளியேற்றுவதைவிட. அதேபோன்று, மழைக் காலத்திலே விளக்குத் தூண் பகுதியிலும், பெரியார் பஸ் ஸ்டாண்ட் பகுதியிலும் தேங்கக்கூடிய தண்ணீரை மாரியம்மன் கோயில் தெப்பக்குளத்திலும், டவுன் ஹால் ரோடு தெப்பக்குளத்திலும் நிரப்புவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதையும் நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுடைய கோரிக்கையை ஏற்று, அந்தத் தெப்பக்குளங்கள் அனைத்திலும் நீர் நிரப்புவதற்கு, மழை நீரைப் பயன்படுத்தி வெகு விரைவிலே நிரப்புவதற்கான ஆலோசனையைக் கூட்டத்தின் மூலமாகப் பெற்று, அவற்றை நிறைவேற்றுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சை. சையது கௌஸ் பாஷா.

**திரு. சை. சையது கௌஸ் பாஷா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருள்மிகு அன்னை மீனாட்சியம்மனுடைய திருக்கோயில் அமைந்திருப்பது என்னுடைய மதுரை மத்திய தொகுதிக்குட்பட்ட பகுதி. ஏறத்தாழ கடந்த ஓராண்டிற்கு முன்பாக, நான் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன், மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் ஏற்பட்டிருக்கக்கூடிய விரிசல் பற்றியும், அதனுடைய பணிகள் எப்பொழுது நடைபெறும் என்பது பற்றியும், அதைப்போலவே, அங்கு வரக்கூடிய பக்தர்கள் பயனடையக்கூடிய வகையிலே பொற்றாமரைக் குளத்தில் ஆண்டுதோறும் நீர் நிரப்பப்பட வேண்டும் என்கின்ற என்னுடைய கோரிக்கையைப் பற்றியும் வினாவாக ஓராண்டிற்கு முன்பாகவே நான் எழுதிக் கொடுத்திருந்தேன். ஆனால் இதுவரை



2008 ஜனவரி 29]

அந்த வினா எடுக்கப்படவில்லை. இருந்தாலும், பணி நடைபெறுவதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ** *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கௌஸ் பாஷா, கேள்வியைக் கேளுங்கள். *(குறுக்கீடுகள்)*

**திரு. சை. சையது கௌஸ் பாஷா:** பேசிக்கொண்டிருக்கிறேன். நான் சொன்னதற்குப் பிறகு அவர்கள் பேசட்டும்.

*(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று கோஷமிட்டனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* சரி, சரி, உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* செங்கோட்டையன், உட்காருங்கள்.

**திரு. சை. சையது கௌஸ் பாஷா:** ** என்பதை அறிய விரும்புகிறேன். அத்துடன் அந்தக் கோயில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கௌஸ் பாஷா, கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. சை. சையது கௌஸ் பாஷா:** அந்தக் கோயிலிலே நடைபெறக்கூடிய பணி மிக விரைவாக முடிக்கப்பட வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கௌஸ் பாஷா, குற்றச்சாட்டு இல்லாமல் நீங்கள் கேள்வியைக் கேட்க வேண்டும். குற்றச்சாட்டு சொல்லக் கூடாது. மாண்புமிகு அமைச்சர், பதில் சொல்லுங்கள். *(குறுக்கீடுகள்)* சொல்லியாகிவிட்டது, உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்ற விவாதம் இப்பொழுது நமக்குத் தேவையில்லை. ஏற்பட்டிருக்கக்கூடிய அந்த விரிசலை நீக்கி அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்தக் கேள்வி. ஆகவே, விரிசலுக்குத் தீர்வுகள் காணப்பட்டு வருகின்றன. ஆகவே புதிய பிரச்சினைகள் இங்கே தேவையில்லை. திருப்பணிகள்,

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2008 ஜனவரி 29

முழுமையான பணிகள். சிறிய மற்றும் பெரிய பணிகள், அங்கே ஏறத்தாழ 5 கோடிக்கு மேற்பட்ட பொருள் செலவிலே திருப்பணிகள் நடைபெறுகின்றன. ஆகவே, ஏற்பட்டிருக்கக்கூடிய குறைபாடுகள் அத்தனையும் களைந்தெறியப்பட்டு, புதுப் பொலிவோடு இன்னும் 6 மாத காலத்திற்குள் அங்கே குடமுழுக்கு நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

*முற்பகல் 10–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன?

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அவர் குற்றச்சாட்டாகத்தான் சொல்லி இருக்கிறார். நிகழ்ச்சியாகச் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிகழ்ச்சியைத்தான் சொல்லி இருக்கிறார். குற்றச்சாட்டு சொல்லவில்லை அவர். (குறுக்கீடுகள்) அவர் ஒரு காரணத்தைச் சொல்லி நிகழ்ச்சியைச் சொல்லி இருக்கிறாரே தவிர... (கூச்சல்–குழப்பம்) உட்காருங்கள், எல்லோரும் உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு இருக்கக்கூடாது என்று நீங்களே சொல்லி இருக்கிறீர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்கார்ந்துகொண்டு பேசக்கூடாது.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** குற்றச்சாட்டாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதை அவைக் குறிப்பில் இருந்து நீக்க வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் அளிக்கின்ற நேரத்தில் 1991–ல்தான் அந்த விரிசல் ஏற்பட்டதாகச் சொன்னார்.** மாறுபாடாகச் சொல்லியிருக்கின்றார். ஆகவே இதை ஒரு நிகழ்ச்சியாக எடுத்துக்கொள்ள முடியாது. குற்றச்சாட்டாகத்தான் இதை மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கின்றார். ஆகவே, இதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் பொறுங்கள். நான் ஒரு கிளாரிபிகேஷன் சொல்கிறேன். அதாவது, (குறுக்கீடு) மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2008 ஜனவரி 29]

தேன்கனிக்கோட்டை தடிக்கல், பஞ்சப்பள்ளி, மாரண்டஅள்ளி தடத்தில் 6 பேருந்துகள்மூலம் நாளொன்றுக்கு 28 நடைகளும் மற்றும் மாரண்டஅள்ளி, கோட்டூர் வரை நகர் பேருந்து மற்றும் தனியார் சிற்றுந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன.

தேன்கனிக்கோட்டை–பெங்களூர் (வழி) தளி, ஆனேக்கல் ஏற்கெனவே கர்நாடக மாநில போக்குவரத்துக் கழகத்தின் 2 பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்துகள்மூலம் பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது. இத்தடம் புற மாநிலத் தடம் என்பதால், இத்தடத்தில் கூடுதல் பேருந்து இயக்குவது சம்மந்தமாக தமிழ்நாடு மற்றும் கர்நாடக புற மாநிலத் தட உடன்படிக்கை ஒப்பந்தத்தின்போது பேருந்து இயக்குவதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

பெட்டமுகலாளம்–ஓசூர் (வழி) தேன்கனிக்கோட்டை நகர் பேருந்து தடம் எண் இ30–ன்மூலம் தேன்கனிக்கோட்டை–பெட்டமுகலாளம் தடத்தில் நாளொன்றுக்கு 8 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மற்றும் தேன்கனிக்கோட்டை–ஓசூர் தடத்தில் 11 அரசுப் பேருந்துகள் 74 நடைகளிலும், 12 தனியார் பேருந்துகள் 68 நடைகளிலும் இயக்கப்படுகின்றன. இவ்வாறு கோரியுள்ள வழித்தடம் முழுவதும் பகுதி வாரியாக நகரப் பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது.

**32—**

## பேருந்து இயக்கம்

**வினா எண் 13337—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் கொக்கம்பாளையம், கரையாம்பாளையம், அம்மாபாளையம் ஆகிய கிராமங்களுக்கு பேருந்து எண் P2/15A இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து தடம் எண் P2 பல்லடம் – கொடுவாய் என

[2008 ஜனவரி 29

8 நடைகளும், பல்லடம்–திருப்பூர் (வழி) நல்லூர் என 6 நடைகளும், பல்லடம்–அக்ராணம் என 6 நடைகளும் ஆக மொத்தம் தினசரி 20 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், தடம் எண் 15A திருப்பூர்–எல்லப்பாளையம்புதூர் என 8 நடைகளும், திருப்பூர்–பங்கம்பாளையம் என 6 நடைகளும், திருப்பூர்–கொடுவாய் என 2 நடைகளும் ஆக மொத்தம் தினசரி 16 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

2. மேற்கூறிய பேருந்துகள் மிகக் குறுகியகால இடைவெளியில், பலமுனை வழித்தடங்களாகப் பல்வேறு குக்கிராமங்கள் வழியாக இயக்கப்பட்டு வரும் நிலையில், வழித்தட மாறுதல் செய்து இயக்கிட சாத்தியக்கூறுகள் எவையுமில்லை.

**33—**

## புதிய வழித்தடம்

**வினா எண் 15856—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, வாலதாசம்பட்டி ஊரிலிருந்து சேலம் பழைய பேருந்து நிலையம் வரை புதிய வழித்தடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் மண்டல நகரப் பேருந்துகள் தடம் எண் 98, 98ஏ ஆகியவற்றை சேலத்திலிருந்து ஓமலூர் வழியாக தொளசம்பட்டி வரை தினசரி 26 நடைகள் இயக்கி வருகின்றது. இவ்வழித்தடத்தில் உள்தொளசம்பட்டி ரயில்வே கேட், பேருந்து நிறுத்தத்திலிருந்து வாலதாசம்பட்டி 0.5 கி.மீ. தொலைவிலேயே உள்ளது. மற்றும் நகரப் பேருந்துகள் தடம் எண் ஓ4, ஓ8, 79, 97 மற்றும் 64/79 ஆகியவை, ஓமலூரிலிருந்து காமனேரி வழியாக மேச்சேரி, மரக்கோட்டை, சாமிநாயக்கன்பட்டி, கீரைக்காரனூர் மற்றும் ஒண்டிவீரனூர் பகுதிகளுக்கு தினசரி 50 நடைகள் இயங்கி வருகின்றன. இவ்வழித்தடத்தில் உள்ள சிந்தாமணியூர் பிரிவு சாலை மற்றும்



2008 ஜனவரி 29]

காமனேரி ஆகிய இரு பேருந்து நிலைகளுக்கு இடையே உள்ள 5–வது மைல் பேருந்து நிறுத்தத்திலிருந்து 1 கி.மீ. தொலைவில் வாலதாசம்பட்டி உள்ளது. எனவே, அரசு வழிகாட்டுதலின்படி மேற்கண்ட பேருந்து வசதியே இப்பகுதி மக்களுக்குப் போதுமானதாகும்.

**34—**

## பேருந்தில் இலவச அனுமதிச் சீட்டு

**வினா எண் 16451—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதி திராவிட கல்லூரி மாணவ, மாணவிகளுக்குப் பேருந்தில் இலவசமாகச் செல்ல அனுமதிச் சீட்டு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சட்டப் பேரவையில் 2007–2008 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அறிவித்தபடி 2007–2008 ஆம் ஆண்டு முதல் அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் அரசுப் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் இலவச பயண அனுமதிச் சீட்டு வழங்க அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. ஏனைய தனியார் கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவியருக்கான அனுமதிச் சீட்டு 50% கட்டண சலுகை அடிப்படையில் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் வழங்கப்பட்டு வருவது நடைமுறையில் உள்ளது. எனவே, தனியார் கல்லூரியில் பயிலும் ஆதி திராவிட கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு இலவச பயண அனுமதிச் சீட்டு வழங்கும் திட்டம் தற்போது இல்லை. மேலும், இப்பொருள் அரசின் கொள்கை முடிவாகும்.

**35—**

## பேருந்து இயக்குதல்

**வினா எண் 26075—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2008 ஜனவரி 29

ஓமலூர் தொகுதி, அரசுப் பேருந்து 64/79 மரக்கோட்டை வருவதை சின்னதிருப்பதி வரையும், சேலம்–மாரக்கவுண்டன்புதூர் செல்லும் பேருந்தை பெருமாள்கோவில்திட்டு வழி சின்னேரி காடு வரை நீட்டித்து இயக்கவும் அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து கழகம், சேலம் மண்டலம் மூலமாக

| | | |
|---|---|---|
| 1. தடம் எண் 64–79 | சேலம்–மரக்கோட்டை (வழி) ஓமலூர், காமனேரி | 6 நடைகளும் |
| 2. தடம் எண் 24 | மேட்டூர்–சின்ன திருப்பதி (வழி) மரக்கோட்டை | 6 நடைகளும் |

பகுதி வாரியாக பேருந்துகள் இயக்கப்படுகின்றன. தடம் எண் 64–79 பள்ளி மாணவர்கள் பயன் அடையும் வகையில் இயங்கி வருவதால், அப்பேருந்தினை சின்ன திருப்பதி வரை நீட்டிக்கும்போது இயக்க கால நேரம் மாறுபட்டு பள்ளி மாணவர்கள் பாதிப்படைவர். எனினும் நீட்டிக்கக் கோரும் மரக்கோட்டை–சின்ன திருப்பதி வழித்தடத்தில் தடம் எண் 24 மூலமாக தினசரி 6 நடைகள் இயக்கப்படுகின்றன. மேலும், 2-6-2007 முதல் கூடுதலாக அத்தடத்தில் 2 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. அதுவே போதுமானதாகும்.

2. சேலம்–மாரக்கவுண்டன்புதூர் மற்றும் சின்னேரிக்காடு பகுதிகளுக்கு

| | | |
|---|---|---|
| 1. தடம் எண் ஓ1, ஓ17 மற்றும் 13–80 | சேலம்–தின்னப்பட்டி(வழி) ஓமலூர் மாரக்கவுண்டன் புதூர் | 3 நடைகளும் |
| | ஓமலூர்–மாரக்கவுண்டன்புதூர் | 3 நடைகளும் |
| 2. தடம் எண் ஓ 10 | சேலம்–நாச்சினம்பட்டி (வழி) மாட்டுக்காரன்புதூர், சின்னேரிகாடு | 6 நடைகளுமாக |

இயக்கப்பட்டு வருகின்றன. தடம் எண் ஓ10 பேருந்து வழித்தடத்தில் உள்ள மாட்டுக்காரன்புதூரை அடுத்துள்ள புளியமரம் பெருமாள்



2008 ஜனவரி 29]

கோவில் பிரிவு பேருந்து நிறுத்தத்தில் இருந்து பெருமாள் கோவில் திட்டு, 1.0 கி.மீ. தொலைவில் உள்ளது. அரசு வழிகாட்டுதலின்படி பேருந்து இயக்கப் பகுதியிலிருந்து 1.0 கி.மீ. தொலைவில் உள்ள அனைத்துப் பகுதிகளும் பேருந்து வசதி பெற்றதாகக் கருதப்படுகிறது. எனவே, பெருமாள் கோவில் திட்டு கிராமத்திற்குத் தற்போதுள்ள பேருந்து வசதியே போதுமானதாகும்.

**36—**

## பேருந்து வசதி

**வினா எண் 29273—திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, தருமபுரி–கிருஷ்ணகிரி வழித்தடத்தில் சப்பாணிப்பட்டியில் அரசு, தனியார் பேருந்துகள் நின்று செல்ல அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், தருமபுரி மண்டலத்தைச் சார்ந்த தொலைதூர பேருந்துகளைத் தவிர்த்து மற்ற அனைத்து பேருந்துகளும் சப்பாணிப்பட்டியில் நிறுத்தி பயணிகளை ஏற்றியும், இறக்கியும் செல்ல சம்பந்தப்பட்ட ஓட்டுனர், நடத்துனர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மேலும், வழித்தடப் பரிசோதகர் ஒருவரைச் சப்பாணிப்பட்டியில் தற்காலிகமாக 15 நாட்களுக்கு நியமித்து, கழகப் பேருந்துகளை நிறுத்தி, பயணிகளை ஏற்றியும், இறக்கியும் செல்ல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**37—**

## கூடுதல் அரசுப் பேருந்து

**வினா எண் 33381—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2008 ஜனவரி 29

உடுமலைப்பேட்டையிலிருந்து திருப்பூர் வரை கூடுதல் அரசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

உடுமலைப்பேட்டையிலிருந்து திருப்பூர் வரை கோயம்புத்தூர், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் 33 பேருந்துகளின்மூலம் தினசரி 164 நடைகளும், தனியார் துறை 8 பேருந்துகள் தினசரி 50 நடைகளும் ஆக மொத்தம் 41 பேருந்துகள் தினசரி 214 நடைகள் எனப் போதுமான அளவு இயங்கி வருகின்றன. எனவே, தற்போது கூடுதலாக இயக்கிட அவசியம் எழாது.

**38—**

## பொறையார் அரசுப் பொது மருத்துவமனை

**வினா எண் 33134—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, பொறையார் அரசுப் பொது மருத்துவமனையில் பழுதடைந்த கட்டடங்களை அப்புறப்படுத்தி பள்ளமான பகுதிகளைப் பண்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், பொறையார் அரசுப் பொது மருத்துவமனையில் தமிழ்நாடு சுகாதார திட்டத்தின்கீழ் ரூ.50.80 இலட்சம் மதிப்பில் புதிய வெளிநோயாளிகள் பிரிவுக் கட்டடம் கட்டுதல், மருத்துவக் கழிவு சேமிக்கும் அறை கட்டுதல், தற்போதுள்ள கட்டடங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்கு அரசு ஆணை (நிலை) எண் 279, சுகாதாரம், நாள்: 7-8-2007–இல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. பொதுப் பணித் துறையினரால் புதிய கட்டடப் பணிகள் மேற்கொள்ளப்படும்போது



2008 ஜனவரி 29]

பள்ளமான பகுதிகளை மண் நிரப்பிப் பண்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**39—**

## காச நோய்க்குச் சிகிச்சை

**வினா எண் 37948—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகர அரசுப் பொது மருத்துவமனையில் காச நோய்க்குச் சிகிச்சை அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி அரசு மருத்துவமனையில் ஒப்பளிக்கப்பட்ட நுண்ணோக்கி மையம் செயல்பட்டு வருகிறது. அதன்மூலம் அங்கு காச நோய் சிகிச்சை வசதியும் செய்யப்பட்டுள்ளது. இந்த மருத்துவமனையிலேயே காச நோய்களைக் கண்டுபிடிக்கவும், கண்டுபிடிக்கப்பட்டுள்ள நோய்களுக்கு நேரடிப் பார்வையின்மூலம் குறுகியகால சிகிச்சையில் சிகிச்சை பெறவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**40—**

## விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

**வினா எண் 23442—திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நுகர்வோர்களுக்குள்ள உரிமைகள் மற்றும் ஏனைய தகவல்கள் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 ஜனவரி 29

**விடை—**

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* நுகர்வோர்களுக்குள்ள உரிமைகள் மற்றும் ஏனைய தகவல்கள் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்த அரசு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றது. ஒவ்வொரு நிதியாண்டிலும் நுகர்வோர் கல்வி மற்றும் விழிப்புணர்விற்காக அரசு நிதி ஒதுக்கீடு செய்கின்றது. ரூ.69.90 இலட்சம் செலவில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நுகர்வோர் உரிமைகள் மற்றும் விழிப்புணர்வு குறித்து நகராட்சி, வட்டார மற்றும் கிராமப் பஞ்சாயத்து அளவில் பயிற்சி வகுப்புகள் நடத்தவும், ரூ.50 இலட்சம் செலவில் பள்ளி மற்றும் கல்லூரிகளில் நுகர்வோர் மையங்கள் ஏற்படுத்தவும் அவற்றின்மூலம் நுகர்வோர் உரிமை பிரச்சாரங்கள் மேற்கொள்ளவும் அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. நுகர்வோர் கல்வி மற்றும் விழிப்புணர்வைப் பொது மக்களிடையே பரப்புவதற்கு ரூ.32.00 இலட்சம் செலவில் நுகர்வோர் உரிமைகள் மற்றும் விழிப்புணர்வுகள் குறித்த குறும்படங்கள் தயாரித்து, தொலைக்காட்சியில் ஒளிபரப்பு செய்திட அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

**41—**

## நுகர்வோர் நீதிமன்றம் இடமாற்றம்

**வினா எண் 29141—திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* செங்கல்பட்டில் இயங்கிவரும் நுகர்வோர் நீதிமன்றத்தைக் காஞ்சிபுரத்திற்கு மாற்றிட அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* ஒவ்வொரு மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றத்திற்கும் சொந்த கட்டடம் கட்டுவதற்கு அந்தந்த மாவட்ட ஆட்சியரால் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு அரசால் நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டு வருகிறது. காஞ்சிபுரம் மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றத்திற்கு மாவட்ட ஆட்சியரால் செங்கல்பட்டில் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அரசாலும் நிதி வழங்கப்பட்டு, கட்டடம் கட்டப்பட்டு அதில் மேற்படி மன்றம் தற்போது இயங்கி வருகிறது. மேற்படி மன்றம் காஞ்சிபுரம் மாவட்ட எல்லைக்குள்ளேயே இயங்கி வருகிறது.



2008 ஜனவரி 29]

**42—**

## சாலையைச் சீரமைத்தல்

**வினா எண் 25123—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதி, வால்பாறையில் ஈட்டியர் சாலை செங்குத்தாக உள்ளதைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதியில் உள்ள ஈட்டியர் சாலையானது தனியார் எஸ்டேட் நிர்வாகத்திற்குட்பட்டதாகும். எனவே, இதனை நெடுஞ்சாலைத் துறைமூலம் சீரமைக்க இயலாது.

**43—**

## சாலையை விரிவுபடுத்துதல்

**வினா எண் 30883—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* உடுமலைப்பேட்டை வட்டம், காரத்தொழுவு–ஒளியூர் மடத்துக்குளம், வழி கொமரலிங்கம் சாலையை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம்.

[2008 ஜனவரி 29

(ஆ) உடுமலைப்பேட்டை வட்டம், காரத்தொழுவு–ஒளியூர் மடத்துக்குளம் வழி கொமரலிங்கம் சாலையின் சரியான பெயர் 'காரத்தொழுவு–கொமரலிங்கம் சாலை கி.மீ. 0/0–15/6' ஆகும். இச்சாலையானது பொள்ளாச்சி (நெ) கோட்டம்மூலம் பராமரிக்கப்பட்டு வரும் ஒரு மாவட்ட முக்கிய சாலையாகும். இச்சாலையில் 1.80 கி.மீ. வரையுள்ள பகுதி இடைவழிச் சாலையாகவும், 0.80 கி.மீ. வரையுள்ள பகுதி இருவழிச் சாலையாகவும் உள்ளது. மேலும், இச்சாலையில் 3.20 கி.மீ. நீளமுள்ள ஒருவழிச் சாலையை இருவழிச் சாலையாக மேம்பாடு செய்வதற்கு ரூ.60.00 இலட்சத்திற்கு 2007–2008 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இப்பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும். மேற்படி சாலையின் மீதமுள்ள 9.80 கி.மீ. நீளமுள்ள ஒருவழிச் சாலையின் ஓடுதளம் கடந்த ஆண்டுகளில் புதுப்பிக்கப்பட்டு நல்ல நிலையில் உள்ளன. இப்பகுதி வரும் நிதியாண்டுகளில் படிப்படியாக இருவழிச் சாலையாக மேம்பாடு செய்வதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

**44—**

## நவீனப்படுத்துதல்

**வினா எண் 24303—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு கால்நடைத் துறை உதவி இயக்குநர் அலுவலகத்தை நவீனப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் அலுவலகத்தை நபார்டு திட்டத்தின்கீழ் நவீனப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**45—**

## மீனவர் இலவச வீட்டு வசதித் திட்டம்

**வினா எண் 11369—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2008 ஜனவரி 29]

(அ) உடுமலைப்பேட்டை வட்டம், கொழுமத்தில் உள்ள மீனவர் சங்கத்திற்கு மீனவர் நலத் திட்டங்கள் மற்றும் மீனவர் இலவச வீட்டு வசதித் திட்டத்தின்மூலம் வீடுகள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்ட உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்கம் சார்ந்த கொழுமம் மீனவ கிராம உறுப்பினர்களுக்கு அரசு செயல்படுத்தும் மீனவர் இலவச வீடு கட்டும் திட்டத்தின்கீழ் உடுமலைப்பேட்டை வட்ட உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் 19 நபர்கள் வீடுகள் வேண்டி விண்ணப்பித்தனர். அவ்விண்ணப்பங்கள் ஆய்வு செய்யப்பட்டு 15 நபர்களுக்கு 2005–2006 ஆம் ஆண்டு மத்திய–மாநில அரசுத் திட்டத்தின்கீழ் மாதிரி மீனவ கிராமம் அமைக்கும் திட்டத்தில் வீடுகள் வழங்கப்படும்.

**46—**

## தொகுப்பு வீடுகள்

**வினா எண் 18503—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, திண்ணப்பட்டி ஊராட்சி, சேத்துக்குழி, புதுவேலமங்கலம், வெள்ளகரட்டூர், தானமூர்த்திக்காடு பகுதி மீனவர்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2006–2007 ஆம் ஆண்டு மீனவர் இலவச வீடு கட்டும் திட்டத்தின்கீழ், சேலம் மாவட்டத்திற்கு 273 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் திண்ணப்பட்டி ஊராட்சிக்குட்பட்ட சேத்துக்குழி

[2008 ஜனவரி 29

வெள்ளகரட்டூர், பண்ணவாடி பகுதி மீனவர்களுக்கு 14 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி 14 வீடுகளுக்குரிய பயனாளிகளின் விவரம் நில ஆவணத்துடன் சேலம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலருக்கு ஒப்படைத்து, வீடுகளின் கட்டுமானப் பணியினைத் துவக்கிட துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

**47—**

**மீன் வளர்ப்பு**

**வினா எண் 23590—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, பார்த்திபனூர் மதகு அணையில் மீன் வளர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) தற்சமயம் மானாமதுரை பார்த்திபனூர் தொகுதி மதகு அணையில் மீன் வளர்ப்புப் பணிகள் அரசால் மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) மானாமதுரை தொகுதி, பார்த்திபனூர் மதகு அணையில், ஆண்டில் ஒரு சில மாதங்கள் மட்டுமே தண்ணீர் தேங்குகிறது. அவ்வாறு மீன் வளர்ப்பிற்கு உகந்த அளவு நீர்வரத்து பெறப்பட்டு, அருகில் உள்ள உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்கம் மீன்பாசி குத்தகை பெற முன்வந்தால், நடப்பில் உள்ள விதிகளின்படி வருவாய்த் துறையின்மூலம் மீன்பாசி குத்தகை விடப்பட்டு மீன் வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**48—**

**கடன் உதவி**

**வினா எண் 33610—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:-



2008 ஜனவரி 29]

(அ) இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம், மண்டபம், திருப்புல்லாணி, கீழக்கரை பகுதி மீனவப் பெண்களுக்கு மீனவர் கூட்டுறவு சங்கங்களின்மூலமாகச் சிறப்புக் கடனுதவி வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மீனவப் பெண்களுக்கு மீனவக் கூட்டுறவு சங்கம்மூலமாகச் சிறப்புக் கடனுதவி வழங்கும் திட்டம் தற்போது இல்லை.

**49—**

**வட்டியில்லாக் கடன்**

**வினா எண் 36032—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பால் உற்பத்தியாளர்களுக்குக் கறவை மாடுகள் வாங்க வட்டியில்லாக் கடன் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பால் உற்பத்தியாளர்களுக்குக் கறவை மாடுகள் வாங்க வட்டியில்லாக் கடன் வழங்கும் திட்டம் ஏதுமில்லை.

**50—**

**மிட்டாய் தயாரித்தல்**

**வினா எண் 34764—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் மிட்டாய் தயாரிக்கும் கிராமத் தொழில் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:**

(அ) இந்தத் தொழில் துவங்குவதற்குத் தற்போது வாரியத்தில் திட்டம் ஏதுமில்லை. இருப்பினும் கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் பொருட்டு, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் தற்போது மும்பை, கதர் கிராமத் தொழில் ஆணைக் குழு மூலம் கிராமிய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் விளிம்புத் தொகை, மானியம் வழங்கும் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்மூலம் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின்மூலம் (116 குடிசைத் தொழில்களுக்கு) கடனுதவி வழங்கப்பட்டு 25% முதல் 30% வரை மானியமாக வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

எனவே, எந்தத் தனி நபரும் மிட்டாய் தயாரிக்கும் தொழில் செய்ய விரும்பினால், சம்பந்தப்பட்ட மாவட்ட உதவி இயக்குநர் (கதர் கிராமத் தொழில்கள்), விருதுநகர் அலுவலகத்தில் நேரில் தொடர்பு கொண்டு ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

(ஆ) வினா எழவில்லை.

## பட்டியல் 8

1—

### கழிவுநீர்க் கால்வாய்

**வினா எண் 8163—திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, காக்கனாபாளையம் ஊராட்சி, இராஜபாளையம் கிராமம், திருப்பத்தூர் கிராமம், திருமால் நகர், வள்ளுவர் காலனி ஆகிய பகுதிகளில் கழிவுநீர்க் கால்வாய் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, காக்கனாபாளையம் ஊராட்சி, இராஜபாளையம் கிராமம், திருப்பத்தூர் கிராமம், திருமால்



நகர், வள்ளுவர் காலனி ஆகிய பகுதிகளில் கழிவுநீர்க் கால்வாய் கட்ட 2007–2008 ஆம் ஆண்டு எஸ்.ஜி.ஆர்.ஒய். 50% திட்டத்தில் இப்பணிகள் மேற்கொள்ள முன்னுரிமை அளிக்கப்படும்.

2—

### கழிவுநீர்க் கால்வாய்

**வினா எண் 23050—திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, குர்சிலாபட்டு உள்ளாட்சி, பனந்தோப்பு கிராமம், மாடப்பள்ளி ஊராட்சி, அம்பேத்கர் கிராமம், திருப்பூர் கிராம ஊராட்சி வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு பகுதி–1 ஆகிய பகுதிகளில் கழிவுநீர்க் கால்வாய் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, குர்சிலாப்பட்டு, பனந்தோப்பில் 50 மீ. நீளம் கழிவுநீர்க் கால்வாய் கட்டும் பணி வரும் நிதியாண்டில் எஸ்.ஜி.ஆர்.ஒய். 50% திட்டத்தில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

2. மாடப்பள்ளி ஊராட்சி, அம்பேத்கர் நகரில் ஏற்கெனவே ரூ.84,600/– மதிப்பீட்டில் 50%, 2006–2007–ல் கழிவுநீர்க் கால்வாய் கட்டப்பட்டுள்ளது.

3. திருப்பத்தூர் கிராம ஊராட்சி வீட்டுவசதி வாரியக் குடியிருப்பு பகுதி 1–ல் ஊராட்சி ஒன்றிய பொது நிதியின்மூலம் 2007–2008 ஆம் ஆண்டில் ரூ.7.50 இலட்சம் மதிப்பீட்டில் கழிவுநீர்க் கால்வாய் முடிக்கப்பட்டது.

3—

### புதிய கட்டடம்

**வினா எண் 5738—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2008 ஜனவரி 29

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதிக்குட்பட்ட பாகசாலை ஊராட்சியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குப் புதிய கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்குப் புதிய கட்டடம் கட்டித் தருவதற்குத் திட்டம் ஏதுமில்லை. இருப்பினும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் துவங்கப்பட்டவுடன் மேற்படி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குப் புதிய கட்டடம் கட்டுவது குறித்துப் பரிசீலிக்க வாய்ப்புள்ளது.

**4—**

## சொந்த கட்டடம் கட்டுதல்

**வினா எண் 12858—திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரூர் தொகுதி, மின்னாம்பள்ளி, பாஞ்சமாதேவி ஊராட்சி, அரசுக் காலனியில் நியாய விலைக் கடைக்குச் சொந்த கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நியாய விலைக் கடைகளுக்கான கட்டடங்கள் கட்டும் பணியினைச் சிறப்பினமாக எடுத்துச் செய்ய அனுமதியளித்து அரசால் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இது தொடர்பாக அனைத்து மண்டல இணைப் பதிவாளர்களுக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. அதனடிப்படையில் கரூர் தொகுதி, மின்னாம்பள்ளி, பாஞ்சமாதேவி ஊராட்சி, அரசுக் காலனியில் நியாய விலைக் கடைக்குச் சொந்த கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



2008 ஜனவரி 29]

**5—**

## கடன் உதவி

**வினா எண் 17754—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் படித்த பட்டதாரி இளைஞர்களுக்குச் சுயதொழில் தொடங்க கூட்டுறவு வங்கிகள் முன்னுரிமை அடிப்படையில் கடன் உதவி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) படித்த பட்டதாரி இளைஞர்கள் சுயதொழிலினை ஏற்படுத்திக்கொள்ளவும், அதன்மூலம் அவர்களின் பொருளாதார நிலையை உயர்த்திக்கொள்ளவும், கூட்டுறவு வங்கிகள் பண்ணைசாராக் கடன்கள் மற்றும் போக்குவரத்து வாகனக் கடன்கள் அளித்து வருகின்றன. மேலும், இவ்வங்கிகள் மருத்துவர் மற்றும் பொறியாளர்களுக்குச் சுயதொழில் தொடங்கவும், கடன்கள் வழங்கி வருகின்றன. கூட்டுறவு வங்கிகளின் வழிகாட்டுதல்களின்படி, உரிய தகுதிகளை, படித்த பட்டதாரி இளைஞர்கள் பெற்றிருந்து, கடன் கோரி கூட்டுறவு வங்கிகளை அணுகும்போது, கடன்கள் வழங்கப்படும். இத்திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றது.

**6—**

## தனி பொது விநியோகக் கடை

**வினா எண் 18531—திரு. வை. காவேரி:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொங்கணாபுரம் ஒன்றியம், தங்காயூர் கிராமம், கோழிப்பண்ணை, கோமாளிக்காடு, நெட்டபெருமாங்காடு, செட்டியார்காடு, கருப்பாளிக்காடு, பூலோகத்தக்காடு, கரட்டுக்காடு ஆகிய பகுதிகளுக்குத் தனியாகப் பொது விநியோகக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 ஜனவரி 29

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கொங்கணாபுரம் ஒன்றியம், தங்காயூர் கிராமம், கோழிப்பண்ணை, கோமாளிக்காடு, நெட்டபெருமாங்காடு, செட்டியார்காடு, கருப்பாளிக்காடு, பூலோகத்தக்காடு, கரட்டுக்காடு ஆகிய பகுதிகளில் மொத்தம் 73 குடும்ப அட்டைகள் உள்ளன. தற்போது இக்குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ள தங்காயூர் நியாய விலைக் கடைக்கும் இந்த இடங்களுக்கும் இடையே உள்ள தூரம் சுமார் 1 கி.மீ. உள்ளது. எனவே, நடைமுறையிலுள்ள அரசாணையில் வகுக்கப்பட்டுள்ள விதிகளின்படி, இப்பகுதிகளில் பகுதிநேர நியாய விலைக் கடை திறக்க வாய்ப்பு இல்லை.

**7—**

## இரும்புக் கிடங்கு அமைத்தல்

**வினா எண் 23509—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முகையூர் ஒன்றியம், அரகண்டநல்லூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் இரும்புக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அரகண்டநல்லூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குப் புதிய கிடங்கு ஒன்று ஏற்கெனவே கட்டி முடிக்கப்பட்டு, 15-12-1995 முதல் செயல்பட்டு வருகிறது.

**8—**

## கொப்பரை கொள்முதல்

**வினா எண் 7091—திரு. ஞா. ஜான் ஜோசப்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2008 ஜனவரி 29]

கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசே கொப்பரை கொள்முதல் செய்து ஒரு கிலோ கொப்பரை ரூ.40/- என ஆதரவு விலை நிர்ணயிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

ஒவ்வோர் ஆண்டும் கொப்பரைத் தேங்காய்க்குக் குறைந்தபட்ச ஆதரவு விலையை, வேளாண் செலவுகள் மற்றும் விலை நிர்ணய ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் மாநில அரசுகளின் கருத்தினைப் பெற்று, மைய அரசு விலை நிர்ணயம் செய்து வருகிறது. 2007 ஆம் ஆண்டில் அரைவை கொப்பரை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.3,620/- என வேளாண் செலவுகள் மற்றும் விலை நிர்ணய ஆணையம் பரிந்துரை செய்துள்ளது.

2. நாளது தேதியில் கொப்பரைக் கொள்முதல் ஐந்து மையங்களில் நடைபெற்று வருகின்றது. இந்தக் கொள்முதல் மத்திய அரசின் ஆதார விலைத் திட்டத்தின்கீழ் (price support scheme) கொப்பரை கிலோ ஒன்றுக்கு ரூ.36.20 வீதம் தென்னை விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றது.

3. 2005-2006 புள்ளி விவரப்படி கன்னியாகுமரி மாவட்டத்தில் 15,264 எக்டேர் பரப்பில் தென்னை சாகுபடி செய்யப்படுகிறது. 1,581 இலட்சம் தேங்காய் உற்பத்தி செய்யப்படுகிறது. இம்மாவட்டத்தின் தென்னை உற்பத்தி திறன் 10,356 தேங்காய்கள்/எக்டேர் ஒரு மரத்தின் சராசரி ஆண்டுக் காய்ப்புத் திறன் 71 காய்களாகும்.

4. கன்னியாகுமரி மாவட்டத்தின் சராசரி இயல்பு மழையளவு 1,143 மி.மீ. ஆக இருந்தபோதிலும் 2006 ஆம் ஆண்டில் பெய்த மழையின் அளவு 1,654.68 மி.மீ. ஆகும். இது இயல்பை விட 211.68 மி.மீ. அதிகம்.

5. அதிக மழை பெய்யும் மாவட்டமாக இருப்பதால் கொப்பரை உற்பத்தி செய்து, பூசனத்தின் பாதிப்பில் இருந்து பாதுகாக்க இயலாத சூழ்நிலை உள்ளதால், கொப்பரை கொள்முதல் நிலையம் அமைக்கும் பணி தேவையில்லாமல் இருந்தது. தற்போது தென்னை வளர்ச்சி வாரியத்தின் 25 சதவீதம் நிதி உதவியுடன் 6 கொப்பரை உலர்கருவிகள், குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளதால், அவர்கள்மூலம் உற்பத்தி

[2008 ஜனவரி 29

செய்யப்படும் கொப்பரையைக் கொள்முதல் செய்ய நாகர்கோவிலில் ஒரு கொள்முதல் நிலையத்தை முன்மாதிரியாக ஏற்படுத்த வேளாண்மை இயக்குநரால், கோரிக்கை பெறப்பட்டுள்ளது.

6. தமிழக அரசின் ஆணை எண் 114, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள்: 12.4.2007-ன்படி கொப்பரைக் கொள்முதல் நிலையம் அமைக்க மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து உரிய முன்மொழிவுகள் பெறப்படும்பட்சத்தில் நாகர்கோவிலில் கொப்பரைக் கொள்முதல் நிலையம் அமைக்க தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் தயாராக உள்ளது.

**9—**

## அரசு மானியம்

**வினா எண் 23070—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாயிகள் நிலம் உழும் கருவிகள் வாங்குவதற்கு அரசு ஏதேனும் மானியம் அறிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

விவசாயிகளுக்கு வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்குவதற்கு மானியம் வழங்கும் திட்டம் மத்திய அரசின் நிதியுதவியுடன் வேளாண்மைப் பொறியியல் துறைமூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் இயந்திரங்கள், கருவிகள் வாங்கிட அவற்றின் விலையில் 25 விழுக்காடு அல்லது மத்திய அரசு நிர்ணயித்துள்ள உயர்மட்ட மானியம் இதில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

2006–2007 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் டிராக்டர், பவர் டில்லர் மற்றும் வேளாண் கருவிகள் வாங்குவதற்கு விவசாயிகளுக்கு ரூ.4.50 கோடி மானியமாக வழங்கப்பட்டு, திட்டம் செயல்படுத்தப்பட்டது. நடப்பாண்டில் இத்திட்டத்திற்கு ரூ.8.99 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தொடர்ந்து திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



2008 ஜனவரி 29]

**10—**

## குறும்படம்

**வினா எண் 33524—திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசின் திட்டங்கள், வேளாண்மைத் துறையின் மானியங்கள் குறித்து குறும்படம் வெளியிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசின் திட்டங்கள், வேளாண்மைத் துறை மானியங்கள் குறித்து குறும்படம் வெளியிடும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

இருப்பினும் வேளாண்மை விற்பனைத் துறையின் செயல்பாடுகள் மற்றும் பல்வேறு திட்டங்கள் குறித்து தமிழ்நாடு வேளாண்மை விற்பனை வாரிய விளம்பரம் மற்றும் பிரச்சாரப் பிரிவின்மூலம் கீழ்க்காணும் தலைப்புகளில் விளக்கப்படம் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

**(அ) தமிழ்நாடு திரைப்படப் பிரிவின்மூலம் தயாரிக்கப்பட்டவை:**

1. தமிழ்நாட்டில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம் குறித்து அரசு அளிக்கும் நலத் திட்டங்கள்;

2. விவசாயிகள் உற்பத்தி செய்யும் விளைபொருட்களை மதிப்பூட்டப்பட்ட பொருட்களாக அதிக விலைக்கு விற்பனை செய்வதற்கு ஏற்ற வகையில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் செயல்பாடுகள் மற்றும் பயன்கள் குறித்து;

3. விளைபொருட்களை அறுவடைக்குப்பின் செய்நேர்த்தி செய்வதன்மூலம் விவசாயிகளுக்கு அதிக பலன்கள் கிடைக்கச் செய்யும் வழிமுறைகள்;

4. விவசாயிகள் மற்றும் வியாபாரிகளுக்கு வழங்கப்படும் பொருளீட்டுக் கடன், தமிழ்நாடு உழவர் நலத் திட்டம் மற்றும் சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பு குறித்து; மற்றும்

5. உணவு பதப்படுத்துதல், வாழை மற்றும் முந்திரிக்கென வேளாண் ஏற்றுமதி மண்டலங்கள் ஏற்படுத்துதல் மற்றும் குளிர்பதனக் கிடங்குகள் அமைத்தல் குறித்து.

**(ஆ) தேசிய திரைப்பட வளர்ச்சி கழகத்தின் (NFDC) மூலம் தயாரிக்கப்பட்ட விளக்கப்படங்கள்:**

(1) வேளாண் ஏற்றுமதி மண்டலப் பயன்கள்; மற்றும்

(2) உணவு பதனிடுதல் மற்றும் குளிர்பதன வசதி அமைப்பு

தோட்டக்கலைத் துறையின்மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து துறை களப் பணியாளர்கள்மூலம் விவசாயிகளுக்குத் தெரிவிக்கப்படுகிறது. இத்துறைமூலம் நடத்தப்படும் "ஆடிப்பட்டம்" மற்றும் "தைப்பட்டம் முகாம்கள்" மூலம் விவசாயிகளிடத்தில் இத்துறை திட்டங்கள் குறித்து தெரிவிக்கப்படுகிறது. மேலும் இத்துறைமூலம் செயல்படுத்தப்படும் தேசிய தோட்டக்கலை இயக்கம் குறித்த விவரங்கள் ஒரு கடிதம்மூலம், நான் 14 மாவட்டங்களில் உள்ள அனைத்து பஞ்சாயத்துத் தலைவர்கள், மக்கள் பிரதிநிதிகள் ஆகியோருக்குத் தெரிவித்துள்ளேன். இது தவிர மாவட்டங்களில் விவசாயிகள் கூட்டங்கள் நடத்தப்பட்டு விவரங்கள் எடுத்துரைக்கப்படுகின்றன.

**11—**

## கொப்பரை தயார் செய்யும் இயந்திரம்

**வினா எண் 34637—திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை தென்னை வணிக வளாகத்தில் கொப்பரை தயார் செய்யும் இயந்திரம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

பட்டுக்கோட்டையில் தேங்காய் கொப்பரை தயார் செய்யும் பிரிவு, தேங்காய் நார் பிரித்தெடுக்கும் அமைப்பு, தேங்காய் நார் கட்டிகளாக செய்யும் அமைப்பு மற்றும் எண்ணெய் பிரித்தெடுக்கும் அமைப்பு மற்றும் பல வசதிகள் கொண்ட தேங்காய் விற்பனை வளாகம் அமைக்கும் திட்டம், தனியார் துறையுடன் சேர்ந்து அரசின் பங்கேற்புடன் நிறைவேற்றப்படவுள்ளது.

**12—**

## நவீன கழிப்பிடங்கள் கட்டுதல்

**வினா எண் 14847—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்ட நீதிமன்றத்திற்கு வரும் மகளிருக்குத் தனியாக நவீன கழிப்பிடங்கள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தினந்தோறும் நீதிமன்றங்களுக்கு வருகைதரும் பொதுமக்களுக்காக, கோயம்புத்தூர் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் ஆண், பெண் இருபாலருக்கும் தனித்தனியே கட்டணக் கழிப்பறைகள் இரண்டு பிரிவுகளாக கோயம்புத்தூர் வழக்கறிஞர்கள் சங்கத்தினரால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

**13—**

## தூர் வாருதல்

**வினா எண் 22675—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2008 ஜனவரி 29

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், கீழடி, சொட்டதட்டி, அல்லிநகரம், சொக்கனாதிருப்பு, கொத்தங்குளம், கட்டிக்குளம் கண்மாய்களின் கால்வாயைத் தூர் வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், சொட்டதட்டி கண்மாயின் வரத்துக் கால்வாய் நீளம் 3.00 கி.மீ ஆகும். சொக்கனாதிருப்பு கண்மாயின் வரத்துக் கால்வாய் நீளம் 2.00 கி.மீ ஆகும். கொத்தங்குளம் கண்மாயின் வரத்துக் கால்வாய் நீளம் 1.50 கி.மீ. ஆகும். கீழடி மற்றும் கட்டிக்குளம் ஆகியவை திருப்புவனம் ஒன்றியத்திற்குட்பட்ட பஞ்சாயத்து யூனியன் கண்மாய்கள் ஆகும். சொக்கனாதிருப்பு கண்மாயின் வரத்துக் கால்வாய்ப் பகுதி, 2 திட்டத்தின்கீழ் சீரமைக்கப்பட்டு வருகிறது. ஏனைய கண்மாய்களின் வரத்துக் கால்வாய்களை, வரும் நிதி ஆண்டுகளில் பெறப்படும் பராமரிப்பு நிதியிலிருந்து முன்னுரிமை அடிப்படையில் சீரமைத்துத் தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**14—**

## தூர் வாருதல்

**வினா எண் 22681—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், வாகுடி, ஏனாதிக்கோட்டை, கீழ்மேல்குடி, வெள்ளிக்குறிச்சி, மிளகனூர், குவளைவேலி கண்மாய்களின் கால்வாயைத் தூர் வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2008 ஜனவரி 29]

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை ஒன்றியம், வாகுடி கண்மாய், கீழ்மேல்குடி, மிளகனூர், குவளைவேலி கண்மாய்கள், முறையே 181.10, 118.27, 569.13, 201.70 எக்டேர் பாசனப் பரப்புடையவையாகும். மேலும் இக்கண்மாய்கள், பூர்வீக வைகை ஆற்றுப் பாசனப் பகுதியாகும். வாகுடி, குவளைவேலி, மிளகனூர் மற்றும் கீழ்மேல்குடி கண்மாய்க் கால்வாய்கள், 2006–2007ஆம் நிதியாண்டில் தேசிய வேலைவாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டத்தின்கீழ் தூர்வாரப்பட்டுள்ளன. வெள்ளிக்குறிச்சி மற்றும் ஏனாதிக்கோட்டை கால்வாயை, வரும் நிதியாண்டுகளில் பெறப்படும் பராமரிப்பு நிதியின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் தூர்வார நடவடிக்கை எடுக்கப்படும்.

**15—**

## தூர் வாருதல்

**வினா எண் 22693—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், மழவராயனேந்தல், மடப்புரம், லாடனேந்தல், கொத்தங்குளம், கீழச்சொரிக்குளம், கருங்குளம் கண்மாய்களைத் தூர் வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், மடப்புரம் கண்மாய், 2003–2004 ஆம் ஆண்டு தூர்வாரி சீரமைக்கப்பட்டுள்ளது. மழவராயனேந்தல், லாடனேந்தல்,

[2008 ஜனவரி 29

கொத்தங்குளம், கீழச்சொரிக்குளம் கண்மாய்களை, வரும் நிதி ஆண்டுகளில் பெறப்படும் பராமரிப்பு நிதியிலிருந்து முன்னுரிமை அடிப்படையில், தூர் வாரி சீரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**16—**

## தூர் வாருதல்

**வினா எண் 22712—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், பூவந்தி, பிச்சைப்பிள்ளையேந்தல், பிரமனூர், வில்லியநேந்தல், திருப்பாச்சேத்தி, டி. வேலாங்குளம் கண்மாய்களைத் தூர் வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், பூவந்தி, பிச்சைப்பிள்ளையேந்தல், பிரமனூர், வில்லியநேந்தல், திருப்பாச்சேத்தி, டி. வேலாங்குளம் கண்மாய்களை, வரும் நிதி ஆண்டுகளில் பெறப்படும் பராமரிப்பு நிதியிலிருந்து முன்னுரிமை அடிப்படையில் தூர் வாரி சீரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**17—**

## தூர் வாருதல்

**வினா எண் 22724—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், தவளைக்குளம், பாப்பான்குளம், பாப்பாகுடி, பளையனேந்தல், தவத்தாரேந்தல், சோமாச்சேந்தல், செங்குளம் கண்மாய்களைத் தூர் வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2008 ஜனவரி 29]

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், தவளைக்குளம், பாப்பான்குளம், பாப்பாகுடி, பளையனேந்தல், தவத்தாரேந்தல், சோமாச்சேந்தல், செங்குளம் கண்மாய்களை, வரும் ஆண்டுகளில் பெறப்படும் பராமரிப்பு நிதியிலிருந்து முன்னுரிமை அடிப்படையில் தூர் வாரி சீரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**18—**

## பேருந்து இயக்கம்

**வினா எண் 3874—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், பொட்டியபுரம் வழியாக சட்டூர், கொண்டையனூர், பம்பரபட்டியானூர், தும்பிப்பாடி, நாகலூர், சரக்கபிள்ளையூர், தின்னப்பட்டி வரை பேருந்து எண் 63, 63ஏ, 63பி, 63சி ஆகிய பேருந்துகள் இயக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பேருந்து வழித்தடம் எண் 63 சேலத்திலிருந்து ஓமலூர், பொட்டியபுரம் வழியாக நாலூக்கால் பாலம் வரை தினசரி 14 நடைகள் இயங்கி வருகின்றது. மற்றும் சேலம்–தின்னப்பட்டி (வழி) ஓமலூர், பொட்டியபுரம், நாலூக்கால் பாலம் வழித்தடத்தில் கீழ்க்கண்ட பேருந்துகள்மூலம் தினசரி 52 நடைகள் இயக்கப்படுகின்றன:

| தடம் எண் | தடம் | நடைகள் |
|---|---|---|
| 63ஏ | சேலம்–தின்னப்பட்டி | 12 |
| 63பி | சேலம்–தின்னப்பட்டி | 12 |
| 63சி | சேலம்–தின்னப்பட்டி | 14 |
| 63டி | சேலம்–தின்னப்பட்டி | 12 |
| 106 | சேலம்–தின்னப்பட்டி | 2 |
| | மொத்தம் | 52 நடைகள் |

[2008 ஜனவரி 29

இப்பேருந்துகளைப் பொட்டியபுரத்திலிருந்து கொண்டையனூர், பம்பரப்பட்டியனூர், சட்டூர், தும்பிபாடி, நாகலூர், சரக்கப்பிள்ளையூர் வழியாக தின்னப்பட்டிக்கு இயக்கிடும்போது, தற்போதுள்ள வழித்தடத்தில் பயனடைந்து வரும் 8.8 கி.மீ. சாலை, பேருந்து வசதி அற்றதாகிவிடும். இதனால் இவ்வழித்தடத்தில் உள்ள ஆசாரிப்பட்டறை, நாலூக்கால் பாலம், ரெட்டியூர்பாலம் மற்றும் முள்ளிசெட்டிப்பட்டி ஆகிய கிராமங்கள் பேருந்து வசதியினை இழக்க நேரிடும் எனினும், கோரிக்கை வழித்தடத்தில் கீழ்க்கண்ட பேருந்து வசதி உள்ளது.

(1) தடம் எண் ஓ10 நகரப் பேருந்து, ஓமலூரிலிருந்து பொட்டியபுரம், ஆசாரிப்பட்டறை, தும்பிப்பாடி, நாகலூர், சரக்கப்பிள்ளையூர் வழியாக மாட்டுக்காரன் புதூர்/நாச்சினம்பட்டி வரை தினசரி 10 நடைகள் இயக்கப்படுகின்றது.

(2) தடம் எண் 80 நகரப் பேருந்து, சேலத்திலிருந்து ஓமலூர், காமலாபுரம் பிரிவு, பல்லப்பட்டி, சரக்கப்பிள்ளையூர் வழியாக தின்னப்பட்டி வரை தினசரி 64 நடைகள் இயக்கப்படுகின்றது. இவ்வழித்தடத்தில் உள்ள சரக்கப்பிள்ளையூரிலிருந்து நாகலூர் 1.0 கி.மீ. தூரமே ஆகும்.

(3) நகரப் பேருந்து தடம் எண் 106, ஓமலூரிலிருந்து பொட்டியபுரம், கொண்டையனூர், பம்பரப்பட்டியனூர், சட்டூர் மற்றும் நாலூக்கால் பாலம் வழியாக ரெட்டியூர் பாலம் வரை தினசரி 4 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றது.

(4) மேலும் ஓமலூர் சட்டமன்ற உறுப்பினரின் கோரிக்கையினை ஏற்று சேலம்–தின்னப்பட்டி (வழி) ஓமலூர், பொட்டியபுரம், கொண்டையனூர், பம்பரப்பட்டியனூர், சட்டூர் மற்றும் கருத்தானூர் வழியாக 2–6–2007 முதல் 5 நடைகளும், தின்னப்பட்டி – ஓமலூர் தடத்தில் 1 நடையும் என தினசரி 6 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றது. இதுவே, இப்பகுதிப் போக்குவரத்து தேவைக்குப் போதுமானதாகும்.

**19—**

## நகரப் பேருந்து இயக்கம்

**வினா எண் 8232—திரு. வை. காவேரி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2008 ஜனவரி 29]

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சபையில் குற்றச்சாட்டு என்பது ஒன்று. ஒரு தகவலை நிகழ்ச்சியாகக் கொண்டு வருவது என்பது ஒன்று. அப்படி மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைத் தகவலாகத்தான் எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர குற்றச்சாட்டாக எடுத்துக்கொள்ளத் தேவையில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் அமைதியாக இருங்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் துரைமுருகன் சொன்னதைப்போல தகவலைக்கூட தந்திரமாக ஒரு குற்றச்சாட்டாக ஆக்கிவிடலாம். அப்படி அது ஆக்கப்படக்கூடாது என்பது என்னுடைய கருத்து. எப்படியோ மதுரை கோயிலிலே ஏற்பட்ட விரிசல் நம்முடைய அவையிலே ஏற்பட வேண்டாம் (சிரிப்பு) என்று நான் கேட்டுக்கொண்டு, தாங்கள் அந்த விரிசலை சட்டமன்ற நடவடிக்கைப் புத்தகத்தில் இருந்து அகற்றிவிட ஆணையிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சையது கௌஸ் பாஷா பேசிய ** (குறுக்கீடுகள்)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அந்த வார்த்தையை என்று சொல்ல வேண்டியதுதானே!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, அந்த வார்த்தை அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்பட்டது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** அவைத் தலைவர் திரும்பச் சொன்னதும் அவைக் குறிப்பிலே ஏறாது என்று நான் நம்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 29, மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2008 ஜனவரி 29

29—

## தரம் உயர்த்துதல்

***18603—திரு. விடியல் எஸ். சேகர்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் வட்டம், காங்கேயம்பாளையம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் வட்டம், காங்கேயம்பாளையம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கேயத்தில் இருக்கிற, காங்கேயம்பாளையத்தில் இருக்கிற நடுநிலைப் பள்ளியிலே இன்றைக்கு 116 குழந்தைகள் படித்துக்கொண்டிருக்கிறார்கள். முன்பு 400 குழந்தைகள் அங்கே படித்தார்கள். பிறகு உயர்நிலைப் பள்ளி அங்கே இல்லாத காரணத்தினாலே காங்கேயத்திலிருந்து வருவதற்கு 15 கி.மீ. தூரம் நடந்து வர வேண்டியது இருக்கிறது. அந்தக் கிராமத்தைச் சுற்றி 3 ஆரம்பப் பள்ளிகள் இருக்கின்றன. வீரனம்பாளையத்தில் ஓர் ஆரம்பப் பள்ளி, புங்காயூர்பாளையத்தில் ஓர் ஆரம்பப் பள்ளி, அதற்குப் பக்கத்திலேயிருக்கிற பொன்னங்காளிவலசிலே ஓர் ஆரம்பப் பள்ளி. மூன்று ஆரம்பப் பள்ளி மாணவர்களும் காங்கேயத்திற்குச் செல்வது என்றால் 15 கி.மீ. தூரம் செல்ல வேண்டியது இருக்கிறது. அவை கிராமப் பகுதிகளாக உள்ளதால் போக்குவரத்து வசதி இல்லை. எனவே, அதைக் கருத்தில்கொண்டு, அந்தப் பள்ளியைத் தரம் உயர்த்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என் தொகுதியிலே, கடந்த ஆண்டு கோரிக்கை கொடுத்து இருக்கிற ஈங்கூர் அரசு உயர்நிலைப் பள்ளியையும் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டும் என்றும், சென்னிமலை, காமராஜர் நகர் நடுநிலைப் பள்ளியையும் தரம் உயர்த்தித் தர வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். காங்கேயம் நகரத்தில் இருக்கிற காமராஜர் வீதியிலே இருக்கிற தொடக்கப் பள்ளி, வாடகைக் கட்டடத்திலே இயங்கி வந்தது. வாடகைக் கட்டத்தில் இயங்கி வந்த அந்தக் கட்டடம் பழுதடைந்ததால் அந்தப் பள்ளியை மூடிவிட்டார்கள். எனவே, மூடிய அந்தப் பள்ளியைத் திறக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனவே, பக்கத்திலே இருக்கிற அந்த 4 பள்ளிகளைக் கணக்கில் கொண்டு, இந்த ஆண்டு இந்தப் பள்ளியைத் தரம் உயர்த்துகிற பட்டியலில் இணைப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2008 ஜனவரி 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கேயம்பாளையம் பள்ளியிலே மொத்தம் 107 குழந்தைகள் படித்துக்கொண்டிருந்தாலும், 8 ஆம் வகுப்பிலிருந்து 9 ஆம் வகுப்பு வரை செல்லக்கூடிய குழந்தைகளுடைய எண்ணிக்கை 29 ஆக இருக்கிறது.

*முற்பகல் 10–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** பொதுவாக, 50 மாணவர்கள் படித்தால் அந்தப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்து அரசு பரிசீலிக்க முடியும். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அங்கே 15 கி.மீ. சென்றால்தான் காங்கேயத்திலோ அல்லது பக்கத்திலோ இருக்கக்கூடிய —9 கிலோ மீட்டரிலே காங்கேயம், 15 கிலோ மீட்டரிலே குண்டடம் இருக்கிறது என்று கருதுகிறேன். ஆகவே, அவ்வளவு தூரம் சென்றால்தான் உயர்நிலைப் பள்ளிக்குச் செல்லக்கூடிய ஒரு சூழ்நிலையும் அங்கே நிலவுவதை அரசு அறிந்து இருக்கிறது. எனவே, natural barriers இருக்கக்கூடிய இடங்களில், இப்படி இயற்கையாகத் தடைகள் இருக்கக்கூடிய இடங்களிலே, அரசு சிறப்பு இனமாகக் கருதக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிறது. எனவே, நிச்சயமாக, வரக்கூடிய ஆண்டுகளில் தரம் உயர்த்தும் பள்ளிகளிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பள்ளியை ஏற்றுக்கொள்ள முடியும் என்று

[2008 ஜனவரி 29

கருதுகிறேன். தொடர்ந்து அவர் மற்ற பள்ளிகளைக் குறித்தும் சொல்லியிருக்கிறார். அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்க வேண்டுமென்ற கோரிக்கை; அதுவும் முறையான முன்மொழிவுகள் அரசினால் பெறப்படும் என்றால், அரசு அதைப் பரிசீலனை செய்து, கருத்தில்கொள்ளும். மூடப்பட்டிருக்கின்ற பள்ளியைத் திறப்பது குறித்தும் சொல்லியிருக்கிறார். இந்த ஆட்சியிலே எந்தப் பள்ளியும் நிச்சயமாக மூடப்படக்கூடாது என்று நாங்கள் தெளிவாக அதிகாரிகளுக்குத் தெரிவித்திருக்கிறோம். அப்படி அந்தப் பள்ளியினுடைய விவரங்களை உறுப்பினர் என்னுடைய கவனத்திற்குத் தெரிவிப்பார் என்றால், உடனடியாக அந்தப் பள்ளியைத் திறப்பதற்கு அரசு நிச்சயமாக ஆவன செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய நல்ல அறிவிப்புக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த ஓராண்டுக் காலமாகப் பேசப்பட்டு வருகிற முத்துக்குமரன் குழு அளித்த அறிக்கையின் அடிப்படையிலே இருக்கிற சமச் சீர்க் கல்வி முறை இந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்படுமா? அதோடு, மாணவர்களுடைய புத்தகச் சுமையைக் குறைக்கின்ற திட்டம், சிறப்புத் திட்டம் அரசினுடைய. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் எஸ். சேகர், மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாமல் நீங்கள் நேற்றும் கேட்டீர்கள்; இன்றும் கேட்கிறீர்கள். (குறுக்கீடு) No, No. உட்காருங்கள்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** அமைச்சருடைய முன்னனுமதியைப் பெற்றுக்கொண்டு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.கே. பாரதி மோகன்.

**திரு. ஆர்.கே. பாரதி மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவிடைமருதூர் தொகுதியில், ஆடுதுறையில் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2008 ஜனவரி 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குரிய முன்மொழிவுகள் அந்த மாவட்டத்தினுடைய முதன்மைக் கல்வி அலுவலரிடமிருந்து இந்த ஆண்டு பெறப்படும் என்று சொன்னால், வரக்கூடிய இந்த நிதிநிலை அறிக்கையையொட்டித் தரம் உயர்த்தப்படக்கூடிய பள்ளிகளின் பட்டியலில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடக்கூடிய பள்ளியை நிச்சயமாகச் சேர்த்துக்கொள்வதற்கு அரசு பரிசீலனை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகவும், உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும், ஆண்டுக்கு சுமார் எத்தனைப் பள்ளிகளை அப்படி நீங்கள் உயர்நிலைப் பள்ளிகளாக ஆக்கிக் கொடுக்கிறீர்கள் என்ற அந்த எண்ணிக்கையை அறிவிக்க இயலுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தந்த ஆண்டினுடைய நிதிநிலை அறிக்கையிலே அரசினுடைய நிதிநிலையைப் பொறுத்து நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்த அறிவிப்பினை வெளியிடுகிறார்கள். கடந்த ஆண்டிலே பார்த்தீர்கள் என்று சொன்னால், 110 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 100 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. தமிழ்நாடு எங்கிலும் இருக்கிற பல்வேறு மாவட்டங்களில் இருக்கக்கூடிய கருத்துருக்களைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு, அந்தப் பள்ளிகளின் தரத்தை நாங்கள் உயர்த்திக்கொண்டிருக்கிறோம். இந்த ஆண்டும் நிச்சயமாக மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திலே அது இருக்குமென்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா.

[2008 ஜனவரி 29

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் ஜீவா நகரிலிருந்து செதுக்கரை பகுதிக்கு ஏறத்தாழ 150–க்கும் அதிகமான குழந்தைகள் 4 கி.மீ. தாண்டி, நெடுஞ்சாலையைத் தாண்டி பள்ளிக்குச் செல்லவிருப்பதால், இந்தச் சிரமத்தைத் தவிர்த்து, ஜீவா நகர்ப் பகுதியிலேயே ஒரு தொடக்கப் பள்ளியை ஆரம்பிப்பதற்கும், அதேபோல முனாப் டிப்போ பகுதியில் உருதுப் பள்ளி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது; அந்தப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கும் அரசு முன்வருமா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடக்கப் பள்ளிகளைப் பொறுத்தமட்டிலே எங்கெங்கே தேவைகள் இருக்கின்றனவோ, நிச்சயமாக அங்கே பள்ளிகளைத் துவக்குவதற்கு அரசு தயாராக இருக்கிறது. இன்னுமொன்று சொல்லவேண்டுமென்று சொன்னால், Educational Guarantee Scheme என்று சொல்லக்கூடிய E.G.S திட்டத்தினுடைய அடிப்படையில் முதலிலே அந்தப் பள்ளிகளை முதல் கட்டமாகத் துவக்கி, பின்னாலே அவற்றைத் தொடக்கப் பள்ளிகளாக மாற்றக்கூடிய ஒரு முறையும் மத்திய அரசாங்கத்தினுடைய சார்பிலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. எனவே, உறுப்பினர் தெரிவித்த அத்தகைய சிரமமான சூழ்நிலைகள் அங்கே இருக்குமென்ற நிலை இருக்குமானால், நிச்சயமாக அங்கே ஒரு தொடக்கப் பள்ளியைத் துவக்குவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளும். அவர் கேட்டிருக்கக்கூடிய, உருதுப் பள்ளியை, நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தக்கூடிய அந்த முயற்சிக்கு உரிய முன்மொழிவுகள் அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டு இருக்குமென்று சொன்னால், அதை அரசு நிச்சயமாகப் பரிசீலனை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் அரசுப் பள்ளிகள், ஆரம்பப் பள்ளி நடுநிலைப் பள்ளியாகவும், நடுநிலைப் பள்ளி உயர்நிலைப் பள்ளியாகவும், உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாகவும் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. ஆனால், அரசு நிதியுதவி பெறும் சிறுபான்மை தனியார் நடத்துகின்ற பள்ளிகள், 1991 ஆம் ஆண்டுக்குப் பிறகு தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகளுக்கு அங்கே இலவசமாகப் பாடப் புத்தகங்கள், இலவசமாக மதிய உணவு, இலவசமாக ஆசிரியர்களும் பணியாற்றி வருகிறார்கள். நீண்ட காலமாக இருக்கும் இந்தக் கோரிக்கையை வேறு எந்த அரசாலும் நிறைவேற்றித் தர முடியாது. முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் அரசு, கருணையோடு, 1991 ஆம் ஆண்டுக்குப் பிறகு தரம் உயர்த்தப்பட்ட அரசு நிதியுதவி பெறும் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு உரிய ஊதியம் வழங்க முன்வருமா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்வதோடு, ஒட்டுமொத்தமாகக் கொடுக்கவில்லை என்றாலும், 1991–க்குப் பிறகு ஆரம்பிக்கப்பட்ட பள்ளிகளுக்கு, இரண்டு ஆண்டு ஆரம்பித்தது ஓர் ஆண்டும் என்று வரிசையாக, நிதிச் சுமைக்கு ஏற்ப பரிசீலனை செய்து, அவர்களுக்கு உரிய ஊதியம் வழங்குவார்களா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.





முற்பகல் 10–35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு அவர்கள் குறிப்பிட்ட இந்தக் கேள்விக்கு இதே அவையிலே நான் பதில் சொல்லியிருக்கிறேன். 1991 ஆம் ஆண்டுக்குப் பிறகு இத்தகைய பள்ளிகளுக்கு அரசாங்கத்தினுடைய நிதியுதவி அளிக்கப்படாததற்குக் காரணம், அரசாங்கத்தினுடைய நிதிச் சுமை. அவர் குறிப்பிடுவதைப்போல ஆசிரியர்களுக்கு, புதிய ஆசிரியர் பணியிடங்களுக்கு அரசு முழுமையாக 1991 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை வழங்க வேண்டுமென்று சொன்னால், தோராயமான மதிப்பின்படி ஏறத்தாழ 400 கோடி ரூபாய்க்கு மேலாக உடனடியாக அரசுக்கு நிதிச் சுமை ஏற்படும்; நிதி இழப்பு ஏற்படும். அதை முதலிலே நாம் கருத்திலே கொள்ள வேண்டியிருக்கிறது. எனவேதான், படிப்படியாக அதைச் செய்யமுடியுமா என்று நம்முடைய மாண்புமிகு முதல்வர்கூட எங்களை எல்லாம் அழைத்து ஒரு முறை அதற்கான அறிவுரைகளை வழங்கியிருக்கிறார்கள். எனவே, உடனடியாக அதைச் செய்துவிட முடியாது. முழுமையான நிதிச் சூழ்நிலை. மாண்புமிகு முதல்வருடைய கவனத்திற்கு மீண்டும் எடுத்துச் சென்று, அரசாங்கத்தினுடைய நிதி இருப்பைக் கணக்கிலே கொண்டுதான் அரசு

[2008 ஜனவரி 29

ஒரு முடிவினை மேற்கொள்ள இயலும். இந்த நேரத்தில் இன்னொன்றையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள், தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகுதான், அவர் குறிப்பிடுவதுபோல, இத்தகைய அரசு உதவி பெறக்கூடிய பள்ளிகளிலே ஆசிரியர் அல்லாத பணியிடங்கள், Non-teaching staff என்று சொல்லக்கூடிய ஆசிரியர் அல்லாத பணியிடங்களை நிரப்புவதற்கு முதல் முறையாக இப்போது ஆணையிட்டிருக்கக்கூடிய அரசு, தலைவர் கலைஞருடைய அரசு என்பதையும் இந்த மாமன்றத்தினுடைய கவனத்திற்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 30, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம.அ. கலீலுர் ரஹ்மான், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**30—**

### மேம்பாலம்

***1006—திரு. ம.அ. கலீலுர் ரஹ்மான்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரவக்குறிச்சி–புங்கம்பாடி சாலையில் நங்காஞ்சி ஆற்றின்மேல் மேம்பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி தொகுதியில் அரவக்குறிச்சியிலிருந்து புங்கம்பாடி செல்லக்கூடிய மாவட்ட இதர சாலையின் துவக்கத்தில், அதாவது அரவக்குறிச்சிக்கும், தேசிய நெடுஞ்சாலை எண் 7–க்கும் இடையில் ஓடுகின்ற நங்காஞ்சி ஆற்றின் குறுக்கே ஓர் உயர்மட்ட பாலம் கட்டுவது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அதற்கு நபார்டு வங்கியின் கடனுதவி பெறுவதற்கான பிரேரணை அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு ஒப்புதல் கிடைத்தவுடன் அந்தப் பாலம், தரைமட்டப் பாலம் உயர்மட்டப் பாலமாக உருவாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2008 ஜனவரி 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம.அ. கலீலுர் ரஹ்மான்.

**திரு. ம.அ. கலீலுர் ரஹ்மான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அரவக்குறிச்சி தொகுதியில், புங்கம்பாடி சாலையில், நங்காஞ்சி ஆற்றின்மேல் மேம்பாலம் கட்ட வேண்டுமென்பது அப்பகுதி மக்களுடைய 60 ஆண்டுக் காலக் கோரிக்கையாக இருக்கிறது. இந்தப் பாலத்தைக் கட்டுவதன்மூலம், அரவக்குறிச்சி பேரூராட்சி மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் வாழக்கூடிய ஈசநத்தம், புங்கம்பாடி மேல்பாகம், புங்கம்பாடி கீழ்ப்பாகம் பகுதிகளிலே வாழக்கூடிய சுமார் 50, 60 கிராம மக்களுக்குப் பயன்படுவதோடு, அரவக்குறிச்சியிலிருந்து திருச்சி செல்லும் சாலையில், பாளையம், தோகைமலை வழியாகச் செல்லக்கூடிய பேருந்துகளில் செல்லும் பயனாளிகளுக்கு அந்தப் பாலம் கட்டுவதன்மூலமாக மிக நன்மை அளிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. பாலம் இல்லாத இந்தக் காலக்கட்டத்திலே, ஆற்றில் வெள்ளம் ஏற்படும்போது, 17 கிலோ மீட்டர் சுற்றித்தான் பொதுமக்கள் செல்லவேண்டிய சூழல் இருக்கின்ற காரணத்தால், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், நமது மரியாதைக்குரிய மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களும், கூடிய விரைவில் அந்தப் பாலத்தைக் கட்டித் தந்து, எங்கள் பகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றித் தர ஆவன செய்யுமாறு நான் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரவக்குறிச்சி தொகுதியில் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு, இரண்டு பாலங்களைக் கட்டுவதற்காக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒப்புதல் வழங்கியிருக்கிறார்கள். ஒன்று, அரவக்குறிச்சியிலிருந்து கரூர் செல்வதற்காக தேசிய நெடுஞ்சாலை 7–ஐ அடையக்கூடிய பகுதியில் இதே நங்காஞ்சி ஆற்றின் குறுக்கே தடாகோயில் அருகிலே சுமார் 200 இலட்சம் ரூபாய் மதிப்பிலே உயர்மட்டப் பாலம் கட்டுவதற்காக அனுமதி தந்திருக்கிறார்கள். அதற்கான மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளியும் கோரப்பட்டுவிட்டது. குறிப்பாக, இன்னும் சொல்லப்போனால், அடுத்த வாரம், சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிவடைந்தவுடன் அதற்கான கால்கோள் விழா நடக்கவிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல இன்னொரு பாலம்; தாராபுரத்திலிருந்து கரூர் வரக்கூடிய மாநில நெடுஞ்சாலை எண் 21-ன் குறுக்கே அமராவதி ஆற்றின் குறுக்கே ஓர் உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆக, இந்த இரண்டு பாலங்களுக்கும் ஒன்றாக அந்த நிகழ்ச்சி நடக்க இருக்கின்றது. எனவே, மூன்றாவது பாலமாக இந்தப் பாலம்—நானும் இந்தப் பகுதிப் பாலம் வழியாகச் சென்றிருக்கிறேன். காரணம், என்னுடைய தொகுதியிலேயிருந்து திண்டுக்கல், மதுரை போன்ற தென் பகுதிகளுக்கு, தென் மாவட்டங்களுக்குச் செல்கின்ற நேரத்தில், இந்தப் பாலத்தின் வழியாகத்தான் செல்ல வேண்டும். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், அரவக்குறிச்சி தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம்கூட அந்த இடத்திலே இருக்கிறது. இந்தப் பாலம் கடந்த 1½ ஆண்டுகளுக்கு முன்பு பராமரிக்கப்படாமல், அந்தப் பாலத்தின் ஓரத்தில் இருக்கக்கூடிய வழிகாட்டிக் கற்கள்கூட அழிந்து உடைந்து கிடந்ததைக் கண்டு, அவற்றையெல்லாம் பராமரிப்பதற்காக உத்தரவிடப்பட்டிருக்கிறது. மேலும், அந்த ஆற்றில் மழைக் காலங்களிலே செல்லக்கூடிய நீரினுடைய அளவைக் குறிப்பிடக்கூடிய வெள்ள அளவைகள்கூட இப்போது பொருத்தப்பட்டு, பாலம் முறையாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. எனவே, நபார்டு வங்கியினுடைய ஒப்புதல் கிடைக்கப்பெற்றவுடன் விரைவில் அந்த இடத்திலே பாலம் அமைக்க நிச்சயம் ஆவன செய்யப்படும்.

*முற்பகல் 10-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம.அ. கலீலுர் ரஹ்மான்.

**திரு. ம.அ. கலீலுர் ரஹ்மான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே அடுத்த வாரத்திலே இரண்டு பாலங்கள் கட்டுவதற்குரிய அடிக்கல் நாட்டு விழா நடக்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டதற்காக மாண்புமிகு முத்தமிழ் அறிஞர் டாக்டர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், நமது நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதி மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி (குறுக்கீடுகள்) எல்லோரும் கையைக் கீழே போடுங்கள்.





**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தருமபுரி சட்டமன்றத் தொகுதியில், தருமபுரிக்கும், அன்னசாகரம் பகுதிக்கும் இடையே செல்கின்ற சனத்குமார் ஆற்றின் குறுக்கே நமது நெடுஞ்சாலைத் துறையின் சார்பாக (மணியடிக்கப்பெற்றது) ஒரு மேம்பாலம் கட்ட . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாமல் நீங்கள் கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், நம்முடைய கும்பகோணம்-சென்னையை இணைக்கின்ற அந்தச் சாலை, நம்முடைய முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் பிறந்த தஞ்சை மாவட்டம், அணைக்கரை, கொள்ளிடம் இரண்டு இடங்களிலும் 5 கிலோ மீட்டர், 10 கிலோ மீட்டருக்கு மேலாக கரும்பு லோடுகளை ஏற்றிக்கொண்டு வாகனங்கள் நின்றுகொண்டிருக்கின்றன. ஒரு அவசரத்திற்கு, உயிர்ப் பாதுகாப்பிற்குக்கூட மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லமுடியாத நிலை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்கும், மூலக் கேள்விக்கும் தொடர்பில்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தொடர்பில்லாமல் கேள்வி கேட்டுக்கொண்டு, 'முடித்துவிடுகிறேன், முடித்து விடுகிறேன்' என்று சொன்னால் என்ன அர்த்தம்? (குறுக்கீடு)

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை நபார்டு திட்டத்தில் ஏற்கெனவே சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அறிகிறேன். ஆதலால் அந்தக் கொள்ளிடம்-அணைக்கரைப் பாலங்களை, உடனடியாக நபார்டு நிதியைப் பெற்று, அதைக் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா? எதிர்காலத்தில் திட்டம் இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இதைத் தனிக் கேள்வியாகப் போட்டுக் கேட்கலாம். (குறுக்கீடு) மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த

[2008 ஜனவரி 29

அணைக்கரைப் பாலம், இன்னும் சொல்லப்போனால், அது பாலம் இல்லை. பொதுப் பணித் துறையினுடைய ஷட்டரின் மேலேதான் அந்த வழியாக லாரிகளும், வாகனங்களும் சென்றுகொண்டிருக்கின்றன. அந்தச் சாலையைக்கூட தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் எடுக்கப்பட்டு, சாலைகள் பராமரிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, போக்குவரத்து நெரிசல் உள்ளதை நானே நேரடியாக அறிந்திருக்கிறேன். அந்தப் பகுதிக்குச் சென்றவுடன், அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய பொதுமக்களும், ஊராட்சி மன்றத் தலைவர் போன்றவர்களெல்லாம் எங்களுடைய காரை வழிமறித்து நிறுத்தி, இந்தப் பகுதியில் பாலம் தேவை என்று சொல்லியிருக்கிறார்கள். அது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுவதற்காக அரசின் பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒப்புதல் அளித்து நிச்சயமாக அனுமதி தர இருக்கிறார் என்பதையும் இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

## (பட்டியல்கள் 7 மற்றும் 8)@

## பட்டியல் 7

**1—**

### இலவச மின்சார வசதி

**வினா எண் 12202—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) மானாமதுரை தொகுதி, கலியாந்தூர் கிராமத்தில் ஆதி திராவிடர் தொகுப்பு வீடுகளுக்கு இலவச மின்சார வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

---

@ இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.



2008 ஜனவரி 29]

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, கலியாந்தூர் கிராமத்தில் 30 எண்ணிக்கை ஆதி திராவிடர் தொகுப்பு வீடுகள் உள்ளன. இவற்றில் 28 எண்ணிக்கை வீடுகளுக்கு ஏற்கெனவே இலவச மின் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 2 வீடுகளுக்கு இலவச மின் வசதி கோரி விண்ணப்பம் பெறப்படும்பட்சத்தில் உடனடியாக மின் இணைப்பு வழங்கப்படும்.*

**2—**

### மின் அலுவலகங்களைக் கணினிமயமாக்குதல்

**வினா எண் 15244—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வால்பாறை தொகுதியில் உள்ள ஊராட்சிகளில் மின்தடை பற்றிய புகார்கள்மீது நடவடிக்கை எடுக்க மின் அலுவலகங்களைக் கணினிமயமாக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தற்போது மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கணினி உதவி கொண்டு மின் தடை நீக்கும் மையம் அமைக்கப்பட்டு மின் நுகர்வோர்களின் மின் தடைகள் பற்றிய புகார்களின்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், பேரூராட்சிகளில் கணினி துணை கொண்டு மின் தடை நீக்க மையங்கள் அமைக்க தற்சமயம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஊராட்சிப் பகுதிகளில் உள்ள மின் அலுவலகங்களுக்குக் கணினிமய வசதிகளை நீட்டிப்பு செய்வது பற்றிய செயற்குறிப்பு தற்போது பரிசீலனையில் இல்லை.*

**3—**

### மின் மாற்றிகள்

**வினா எண் 15283—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2008 ஜனவரி 29

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதியில் மின் பரிமாற்று இயந்திரத் தட்டுப்பாட்டினைப் போக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதியில் மின் பரிமாற்று இயந்திரத் (மின்மாற்றி) தட்டுப்பாடு, மேல் பகுதியான வால்பாறை பகுதியில் ஏதும் இல்லை. எனினும், வால்பாறை மலைப் பகுதியில் புதிதாக மின்மாற்றிகள் நிறுவ உரிய இடங்களைத் தேர்வு செய்து, கெஜமுடி மற்றும் முடீஸ் ஆகிய இரு பகுதிகளில் புதிய மின்மாற்றிகள் நிறுவ முடிவு செய்யப்பட்டுள்ளது. இவற்றிற்காக ஒவ்வொன்றும் சுமார் ரூ.5 இலட்சம் செலவில் இரண்டு திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. மதிப்பீடு அனுமதிக்கப்பட்டு, 31-3-2007-க்குள் மின்மாற்றி விரைந்து அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**4—**

## தெரு விளக்குகள்

**வினா எண் 18600—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் வட்டம், வடசின்னார்பாளையம், குங்காடு கிராமம், கலைஞர் நகர் ஆதி திராவிடர் காலனியில் வீட்டுக்கு ஒரு மின் விளக்கு திட்டத்தின்மூலம் மின் விளக்கும், தெரு விளக்குகளும் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் வட்டம், வடசின்னார்பாளையம், குங்காடு கிராமம், கலைஞர் நகர் ஆதி திராவிடர் காலனியில் மொத்தம் 28 வீடுகள் உள்ளன. மேற்கூறிய அனைத்து வீடுகளுக்கும் மின்னூட்டம் செய்யப்பட்டுள்ளன. இப்பகுதியில் ஏற்கெனவே நான்கு தெரு விளக்குகள் (1x40W குழல் விளக்குகள்) அமைக்கப்பட்டுள்ளன. மேலும், இப்பகுதியில் 'ஒரு வீட்டுக்கு ஒரு மின் விளக்கு' மற்றும் தெரு விளக்கு வேண்டி விண்ணப்பங்கள் ஏதும் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டால், குடிசை மின் விளக்கு மற்றும் தெரு விளக்குகள் அமைக்க உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.





**5—**

## சீரான மின்சாரம்

**வினா எண் 19913—திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 14—இல் ஓய்.எம்.சி.ஏ. குப்பம் 1, 2, 3, 4, 5—வது தெருக்கள், புதுமனைக்குப்பம் 1, 2, 3, 4, 5, 6, 7—வது தெருக்களில் சீரான மின்சாரம் பெற புதிய கம்பிவடம் பதிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 14-ல் உள்ள ஓய்.எம்.சி.ஏ. குப்பம்-1 முதல் 5—வது தெருக்கள் மற்றும் புதுமனைகுப்பத்தில் 1—வது தெரு முதல் 7—வது தெருக்கள் வரை புதைவடம் அமைக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய பகுதிகளுக்குச் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, புதியதாக புதைவடம் அமைக்கும் கருத்துரு ஏதும் இல்லை.

**6—**

## சீரான மின்சாரம்

**வினா எண் 20001—திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2008 ஜனவரி 29

(அ) இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 16–ல் உள்ள மணியக்காரர் சத்திரம் சாலை, பழைய அமராஞ்சிபுரத்தில் சீரான மின்சாரம் பெற புதிய கம்பிவடம் பதிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை**—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 16–ல் மணியக்கார சத்திர சாலையில் தேவையான அளவு புதைவடம் அமைக்கப்பட்டுள்ளது. ஆயினும் அப்பகுதியில் சுரங்கப் பாதை அமையும்போது மேலும் 240 சதுர மி.மீ. அளவுள்ள புதைவடம் 50 மீட்டர் தூரத்திற்கு அமைக்கப்பட உள்ளது. பழைய அமராஞ்சிபுரத்தில் புதைவடம் அமைக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய பகுதிகளுக்குச் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

7—

## சீரான மின்சாரம்

**வினா எண் 20007—திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 17–இல் உள்ள ஷேக்மேஸ்திரி தெரு, காசிமேடு குப்பம் 1, 2, 3, 4–வது தெருக்களில் சீரான மின்சாரம் பெற புதிய கம்பிவடம் பதிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை**—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 17–இல் ஷேக்மேஸ்திரி தெரு மற்றும் காசிமேடு குப்பம் 1, 2, 3, 4–வது (புதுமனைகுப்பம்) தெருக்களுக்குப் புதைவடம் மற்றும் Pillar-உம் நிறுவப்பட்டுள்ளது. மேற்கூறிய பகுதிகளுக்குச் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. ஆகையால், இப்பகுதிகளுக்குப் புதியதாக புதைவடம் அமைக்கும் கருத்துரு இல்லை.



2008 ஜனவரி 29]

8—

## சீரான மின்சாரம்

**வினா எண் 20051—திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 18–இல் அம்மன் கோவில் தெருவில் சீரான மின்சாரம் பெற புதிய கம்பிவடம் பதிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை**—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 18–இல் அம்மன் கோவில் தெருவில் புதைவடம் அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட தெருவிற்குச் சீரான மின்சாரம் வழங்கப்படுகிறது. ஆகையால், புதிய புதைவடம் பதிக்க தற்போது கருத்துரு ஏதும் இல்லை.

9—

## புதிதாக மின் கம்பங்கள்

**வினா எண் 23957—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், மேலவெள்ளூர், மேலராங்கியம், ஏனாதி, தூதை, லாடனேந்தல், கொந்தகை, பாட்டம், அல்லிநகரம், அம்பலத்தாடி, தட்டாங்குளம், கீழடி, மணலூர், மேலச்சொரிக்குளம், மடப்புரம், பூவந்தி, கலியாந்தூர், முதுவந்திடல், பொட்டப்பாளையம், கழுகர்கடை, சம்பராய்னேந்தல், செல்லப்பனேந்தல், வில்லியநேந்தல், கானூர், பிரமனூர், பழையனூர், டி. வேலாங்குளம், மாரநாட்டு ஆகிய கிராமங்களில் பழுதாகியுள்ள மின் கம்பங்களைப் புதிதாக மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை.—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், மேலவெள்ளூர், மேலராங்கியம், ஏனாதி, தூதை, லாடனேந்தல், கொந்தகை, பாட்டம், அல்லிநகரம், அம்பலத்தாடி, தட்டாங்குளம், கீழடி, மணலூர், மேலச்சொரிக்குளம், மடப்புரம், பூவந்தி, கலியாந்தூர், முதுவந்திடல், பொட்டப்பாளையம், கழுகர்கடை, சம்பராய்னேந்தல், செல்லப்பனேந்தல், வில்லியநேந்தல், கானூர், பிரமனூர், பழையனூர், டி. வேலாங்குளம், மாரநாடு ஆகிய 27 கிராமங்களில் இதுவரை பழுதான 82 எண்ணிக்கை மின் கம்பங்கள் மாற்றப்பட்டுவிட்டன.

**10—**

## தெரு விளக்கு மற்றும் மின் கம்பங்கள் அமைப்பு

**வினா எண் 27863—திரு. பெ. காமராஜ்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, மகாதானபுரம் ஊராட்சியில் தெரு விளக்கு வசதி ஏற்படுத்தவும், மின் கம்பிகள் அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை.—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணயராயபுரம் தொகுதி, மகாதானபுரம் ஊராட்சிப் பகுதிகளில் ஏழு தெரு விளக்குகள் மற்றும் மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இதில் 1x60 வாட்ஸ் குமிழ்விளக்குகள் 10 எண்ணிக்கையும், 1x40 வாட்ஸ் குழல் விளக்குகள் 226 எண்ணிக்கையும், சோடியம் விளக்குகள் 250 வாட்ஸ் 7 எண்ணிக்கையும், மெர்குரி விளக்குகள் 300 வாட்ஸ் 6 எண்ணிக்கையும் கொண்ட தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. தற்பொழுது மேற்கண்ட ஊராட்சியில் கூடுதல் தெரு விளக்கு வேண்டி விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை. தெரு விளக்கு வேண்டி விண்ணப்பம் பெறப்பட்டால் அதற்குத் தேவையான மின்பாதைகள் அமைத்து மின் இணைப்பு வழங்கப்படும்.



**11—**

## மின் பகிர்மான நிலையம்

**வினா எண் 36092—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் மின் பகிர்மான நிலையத்தை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை.—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

ஆம். திருக்கழுக்குன்றம் 110/33–11 கி.வோ. துணை மின் நிலையத்தில் கூடுதலாக 16 எம்விஏ, 110/33 கி.வோ. திறன் கொண்ட மின்மாற்றி அமைப்பதற்கான பணிகள் விரைவில் துவங்கப்படும்.

**12—**

## துணை மாவட்ட மின் துறை அலுவலகம்

**வினா எண் 38471—டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்யாறு தொகுதி, செய்யாறில் மாவட்டத் தலைநகரிலுள்ள மின் துறை அலுவலகத்திற்குச் சமமான அனைத்து வசதிகளைக் கொண்ட துணை மாவட்ட மின் துறை அலுவலகம் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை.—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மின் பகிர்மான வட்டத்தை இரண்டாகப் பிரித்து, ஆரணியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மின் பகிர்மான வட்டம் ஏற்படுத்த தலைமைப் பொறியாளர். (பகிர்மானம்), விழுப்புரம் அவர்களால் செயற்குறிப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, செய்யாறில் புதியதாக மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம் ஏற்படுத்த சாத்தியக்கூறுகள் இல்லை.

13—

## மயான வசதி

**வினா எண் 6424—திரு. வை. காவேரி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொங்கணாபுரம் ஒன்றியம், வெள்ளாளபுரம் ஊராட்சி, முனியம்பட்டி காலனிக்கு மயான வசதி செய்து கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம், வெள்ளாளபுரம் கிராமம், முனியம்பட்டி காலனியில் வசிக்கும் மக்களுக்கு முனியம்பட்டி அருகிலுள்ள ஊராட்சிப் பழத்தோட்டத்தின் அருகில் மயான வசதி ஏற்கெனவே உள்ளது.

14—

## கழிவுநீர்க் கால்வாய் அமைத்தல்

**வினா எண் 14037—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், காருவள்ளி ஊராட்சி, காடையாம்பட்டி ஒன்றியம்–மாக்கோட்டை கிராமம், ஒண்டிவீரனூர் பாரதிபுரம் பகுதியில் கழிவுநீர்க் கால்வாய் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஊராட்சி, காருவள்ளி ஊராட்சி, மாக்கோட்டை கிராமம், ஒண்டிவீரனூர் பாரதிபுரம் பகுதியில் கழிவுநீர் வாய்க்கால் அமைக்க ரூ.5.00 இலட்சம் தேவைப்படும். இவ்வளவு தொகை ஊராட்சி ஒன்றியப் பொதுநிதி/ஊராட்சி நிதியில் இருப்பு இல்லை. எனவே, 2007–2008 ஆம் ஆண்டு காருவள்ளி ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும்போது, இப்பணியினை எடுத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

15—

## சாக்கடை நீரை வெளியேற்றுதல்

**வினா எண் 16378—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், புளியம்பட்டி மைதானத்தில் தேங்கும் மழை நீர் மற்றும் சாக்கடை நீரை வெளியேற்ற அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, புளியம்பட்டி மைதானத்தில் தேங்கி நிற்கும் மழைநீர் மற்றும் சாக்கடை நீரை வெளியேற்றும் வேலையை, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2006–2007–ன்கீழ் வேலைகள் செய்ய நிருவாக அனுமதி மற்றும் டெண்டர் வழங்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

16—

## சாக்கடை வசதி

**வினா எண் 16517—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையம்பட்டி ஒன்றியம், கொல்லத் தெரு பகுதியில் சாக்கடை வசதி ஏற்படுத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், கொல்லத் தெருப் பகுதியில் 2006–07 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ஒதுக்கீட்டில் மதிப்பீட்டுத் தொகை ரூ.1.00 இலட்சத்தில் சாக்கடை வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

17—

## மயான வசதி

**வினா எண் 25244—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பள்ளிப்பட்டு தொகுதி, பொதட்டூர்பேட்டை கிராமத்திற்கு மயான வசதியும், தகன குளிக்கும் அறைக்குத் தண்ணீர் வசதியும், எரி மேடை வசதியும் செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு தொகுதி, பொதட்டூர்பேட்டை பேரூராட்சி, நகரி செல்லும் சாலை அருகில் மயான வசதி, தகன குளிக்கும் அறைக்குத் தண்ணீர் வசதி மற்றும் எரி



மேடை அமைக்க, 2007-08 ஆம் ஆண்டு அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது.

18—

## கழிவுநீர்க் கால்வாய்

**வினா எண் 32139—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்கொளத்தூர் ஒன்றியம், அம்பேத்கர் விரிவு பகுதி, பழவேலி ஊராட்சி ஆகிய பகுதிகளில் கழிவுநீர்க் கால்வாய் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், பழவேலி ஊராட்சி, டாக்டர் அம்பேத்கர் நகர் விரிவு பகுதிக்குக் கழிவுநீர்க் கால்வாய் அமைக்க, வரும் 2007–2008 ஆம் ஆண்டு திட்ட நிதியில் பணிகள் மேற்கொள்ள பரிசீலிக்கப்படும்.

19—

## புதிய கடன்

**வினா எண் 8019—திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதியில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் புதிய கடன் பெற அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டத்திலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் 2006–2007 ஆம் ஆண்டில் ரூ.10.00 கோடிக்கு, குறுகியகாலப் பயிர்க் கடன் வழங்க வேண்டுமெனக் குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டு, நெல், கரும்பு, மரவள்ளிக் கிழங்கு மற்றும் மா ப்ராமரிப்பு ஆகிய பயிர்களுக்குக் குறுகியகாலப் பயிர்க் கடன்கள் வழங்கப்பட்டு, குறியீடு ரூ.10.00 கோடி எய்தப்பட்டுள்ளது. மேலும், இம்மாவட்டத்தில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் 2007–2008 ஆம் ஆண்டில் ரூ.30 கோடிக்குப் பயிர்க் கடன் வழங்க வேண்டுமெனக் குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டு, 3-10-2007 நாள்வரை ரூ.4.60 கோடிக்குப் பயிர்க் கடனும், (பொது) விவசாயக் காரணத்திற்காக ரூ.2.13 கோடி நகைக் கடனும் மொத்தமாக ரூ.6.73 கோடி பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது.

**20—**

## கட்டடம் கட்டுதல்

**வினா எண் 8031—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், முகையூர் ஒன்றியம், ஜம்பை கிராமத்தில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக் கட்டடம் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள ஜம்பை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குச் சொந்த நிதி ஆதாரம் ஏதும் இல்லாததாலும், இவ்வங்கிக்குச் சொந்தக் கட்டடம் கட்டத் தேவையான நிதி உதவிகளை, நிதி உதவி அளிக்கும் நிறுவனங்களிடமிருந்து பெற முடியாத நிலை உள்ளதாலும், மேற்படி வங்கிக்குப் புதிய வங்கிக் கட்டடம் கட்ட வாய்ப்பில்லை.



**21—**

## சம்பளம் வழங்கல்

**வினா எண் 3444—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதி, அங்கலக்குறிச்சி கூட்டுறவு வங்கியில் பணிபுரிகின்றவர்களுக்குச் சம்பளம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள அங்கலக்குறிச்சி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் பணிபுரியும், 8 பணியாளர்களுக்கும் செப்டம்பர் 2007 மாதம் முடிய சம்பளம் வழங்கப்பட்டு உள்ளது. ஒவ்வொரு மாதமும் நிலுவை ஏதுமின்றி சம்பளம் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

**22—**

## தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி

**வினா எண் 22033—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், எட்டிகுட்டபட்டி ஊராட்சி, அடக்கியனூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி மீண்டும் செயல்பட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

அடக்கியனூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் புத்துயிரூட்டும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, உறுப்பினர்களுக்குக் கடன் வழங்கிட ஏதுவாக, பயிர்க் காசுக் கடன் ரூ.5.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டு, அவ்வங்கியின் உறுப்பினர்களுக்கு 11-4-2007-ல் ரூ.81,600/– பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும், வங்கிக்கு ரூ.5.00 இலட்சத்திற்குப் பயிர்க் காசுக் கடன் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

23—

## புதிய கட்டடம்

**வினா எண் 27997—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, முத்தநாயக்கன்பட்டி ஊராட்சி, வெங்கடாசலபதி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் சரகத்தில் செயல்பட்டுவரும் வெங்கடாசலபதி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குச் சொந்தக் கட்டடம் 1967–ல் கட்டப்பட்டு, 1992 ஆம் ஆண்டு வரை மேற்படி கட்டடம் இயங்கி வந்தது. தற்போது வங்கிக் கட்டடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உறுப்பினர்களுக்கு வசதியாக ஊருக்கு மத்தியில் உள்ள தனியார் வாடகைக் கட்டடத்தில் 1992 முதல் இயங்கி வருகிறது. வெங்கடாசலபதி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் கட்டட நிதி இல்லாத நிலையிலும், வங்கி தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வருவதாலும், பழுதுபார்த்துச் சீரமைக்கவும், புதிய கட்டடம் கட்டவும் நிதி வசதி இல்லை. சேலம் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும்போது, வெங்கடாசலபதி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் காலி நிலத்தில் புதிய கட்டடம் கட்டவும், பழுதடைந்த கட்டடத்தைச் சீரமைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

24—

## கதிர் அடிக்கும் களம் அமைத்தல்

**வினா எண் 38305—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, வேம்பத்தூரில் கதிர் அடிக்கும் களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேளாண்மை விற்பனைத் துறையால் ஒவ்வோராண்டும் விவசாயிகள் பயன்பெறும் வகையில் தமிழகம் முழுவதும் களம் அமைக்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டு, இடம் தேர்வு செய்யப்பட்டு விற்பனைக் குழு செயலாளர்கள்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2007–2008 ஆம் நிதியாண்டு முடிய ஒதுக்கப்பட்ட குறியீட்டின்படி நிலம் தேர்வு செய்யப்பட்டுவிட்டது. எனவே, வரும் 2008–2009 ஆம் ஆண்டில் மேற்கண்ட இடத்தில் களம் கட்ட முன்னுரிமை அளிக்கப்படும்.

25—

## பாலம் கட்டுதல்

**வினா எண் 20697—திரு. கே.வி. ராமநாதன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி தொகுதி, கேசரிமங்கலம் கிராமம், ஏமம்பாளையம் சிட்டாங்காடு போக்குவரத்துக்கு மேட்டூர் வலதுகரை வாய்க்கால் குறுக்கே பாலம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பவானி சட்டமன்றத் தொகுதி, கேசரிமங்கலம், ஏமம்பாளையம், சிட்டாங்காடு போக்குவரத்திற்கு வசதியாக மேட்டூர் வலதுகரை வாய்க்கால், மைல் 25/1 பிரிவு வாய்க்காலில் 1/0–1/1–க்கு இடையில் புதிய பாலம் நபார்டு வங்கி நிதி உதவியுடன் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

[2008 ஜனவரி 29

**26—**

## தூர் வாருதல்

**வினா எண் 22688—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், வில்லியநேந்தல், முதவந்திடல், மாரநாடு, மஞ்சள்குடி, மணலூர் கண்மாய்களைத் தூர்வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், மாரநாடு கண்மாயை, நபார்டு வங்கி நிதி உதவி பெற்றுச் சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மணலூர் கண்மாய் 2004–2005 ஆம் ஆண்டு தூர்வாரி சீரமைக்கப்பட்டுள்ளது. ஏனைய கண்மாய்கள், வரும் நிதி ஆண்டுகளில் பெறப்படும் பராமரிப்பு நிதியிலிருந்து முன்னுரிமை அடிப்படையில் தூர்வாரி சீரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**27—**

## மாணவர் விடுதி

**வினா எண் 36083—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு சட்டக் கல்லூரிக்கு மாணவர் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு அரசு சட்டக் கல்லூரிக்கு மாணவர் விடுதி கட்டும் கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.



2008 ஜனவரி 29]

**28—**

## ஜல்லி, உடைகல் அனுமதி

**வினா எண் 10930—திரு. மா. தண்டபாணி:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிரானைட் எடுக்கும்போது கிடைக்கும் உதிரி கற்களை, ஜல்லி, உடைகல் போன்றவற்றிற்குப் பயன்படுத்த அரசு அனுமதி வழங்குமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:**

கிரானைட் எடுக்கும்போது கிடைக்கும் உதிரி கற்களைப் பொது உபயோகத்திற்கு மட்டும் பயன்படுத்தும் பொருட்டு அரசு ஆணை (2டி) எண் 44, தொழில் (எம்.எம்.பி.2) துறை, நாள் 1–7–1998–ல் வழங்கப்பட்டது. அந்த ஆணையின்படி கறுப்புக் கல் (**Black Granite**) கழிவுகளை, துறைமுகங்களில் தடுப்புச் சுவர் கட்டவும், கடலோரப் பகுதிகளில் கடல்நீர் சீற்றத்தைத் தவிர்க்கும் பொருட்டு தடுப்புச் சுவர்கள் அமைக்கவும், சாலைகள் அமைத்தல் பணிகளுக்கும் பயன்படுத்தலாம்.

அவ்வாறு வழங்கப்படும் இனங்களில் பின்வரும் நிபந்தனைகள் பின்பற்றப்படவேண்டும்:–

(அ) கழிவு கிரானைட் கற்கள் எடுத்துச் செல்லும்பொழுது நிதி இழப்பு ஏற்படாமல் இருக்க, உபயோகப்படுத்தும் துறையின் விண்ணப்பத்தின்மீதுதான் வழங்கப்பட வேண்டும்.

(ஆ) கழிவு கிரானைட் கற்களுக்கு விண்ணப்பிக்கும்போது அவை உண்மையான பொது உபயோகத்திற்குத்தான் தேவைப்படுகிறது என்பதற்கான சான்றினை, சம்பந்தப்பட்ட துறையினர் அளிக்க வேண்டும். உபயோகப்படுத்திய பின்னர் அவை முழுமையாக உபயோகப்படுத்தப்பட்டமைக்குப் பயன்பாட்டுச் சான்றிதழ் அளிக்கப்பட வேண்டும்.

(இ) 0.25 கன அடி அளவுக்கு (10 டன்) குறைவான கறுப்பு கிரானைட் கழிவிற்கு ரூ.150/– சீனியரேஜ் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

(ஈ) பல வண்ண கிரானைட் கழிவுகளுக்கான சீனியரேஜ் கட்டணம் பின்வருமாறு:—

| | | | |
|---|---|---|---|
| (i) | 1 கன மீட்டருக்கு மேல் | : | ரூ. 1,000 கன மீட்டர் |
| | தற்போது | : | ரூ. 1,575 கன மீட்டர் |
| (ii) | 0.25 கன மீட்டருக்கு மேல் | : | ரூ. 550 கன மீட்டர் 1 கன மீட்டருக்குள் |
| (iii) | பிற கழிவுகள்—ஜல்லி மற்றும் சக்கைகள் (Chissled stone) | : | தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதி, 1959 அட்டவணை II-ல் கண்டுள்ளவாறு |

(உ) ஜல்லி, சக்கைகள் (Chissled stone) ஆகியவை குத்தகை இடத்திலேயேதான் அளவு குறைக்கப்பட வேண்டும்.

(ஊ) ஆணையர் மற்றும் இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத் துறையினரிடம் விண்ணப்பம் அளித்து அதற்கான அனுமதி பெறவேண்டும்.

**29—**

## பேருந்து வசதி

**வினா எண் 6996—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, வடசின்னாரிபாளையம் ஒன்றியம், குங்காருபாளையம் கிராமத்தில் துண்டுக்காடு என்ற கிராமத்தில் காங்கேயம்–பழனி செல்லும் பேருந்துகள் நின்று செல்ல அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) துண்டுக்காடு வழியே இயங்கும் பழனி வழித்தடப் பேருந்துகள் துண்டுக்காடு நிறுத்தத்திற்கு மிக அருகேயுள்ள வட்டமலை என்ற இடத்தில் நின்று செல்வதால் குறுகிய கால இடைவெளியில் இயங்கும் புறநகர் பேருந்துகள் துண்டுக்காடு நிறுத்தத்தில் நின்று செல்ல இயலாத நிலை உள்ளது.





**30—**

## பேருந்து இயக்கம்

**வினா எண் 10707—திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதி, கெலமங்கலம் ஒன்றியம், தாசனபுரம், சௌடள்ளி ஊராட்சி, குட்டிலேடிச்சம்பட்டி, கும்மனூர், கரடிஅள்ளி ஊராட்சி, தேவர்முக்குளம் ஆகிய கிராமங்களுக்குப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், தருமபுரி மண்டலம்மூலமாக நகரப் பேருந்து தடம் எண் எச்4–ன்மூலம் ஓசூரிலிருந்து பேருந்து வசதி பெற்ற நெருப்புக்குட்டை கிராமத்திலிருந்து 0.7 கி.மீ. தூரத்தில் கிருஷ்ணகிரி மாவட்டம், கெலமங்கலம் ஒன்றியம், தாசனபுரம் கிராமம் உள்ளது. மேற்படி சாலை பேருந்து போக்குவரத்திற்கு ஏற்றதாக இல்லாத காரணத்தினால் தாசனபுரம் கிராமத்திற்குத் தற்சமயம் பேருந்து வசதி செய்திட இயலாத நிலையுள்ளது.

சௌடஅள்ளி ஊராட்சி, கிருஷ்ணகிரி–குட்டிலேடிச்சம்பட்டி (வழி) காவேரிப்பட்டினம் தடத்தின் நீளம் 19.1 கி.மீ. ஆகும். இத்தடத்தில் ஏற்கெனவே, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், தருமபுரி மண்டலம்மூலமாக நகர் பேருந்துகள் மற்றும் புறநகர் பேருந்து காவேரிப்பட்டினம் முதல் புதூர் பிரிவு சாலை வழியாக போச்சம்பள்ளி, பாரூர், அரசம்பட்டி, சின்னகரடியூர் ஆகிய கிராமங்களுக்குத் தடம் எண் 517இ, கே27, கே47, கே50, கே54–ன்மூலம் 30 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இதில் கோரியுள்ள வழித்தடத்தில் புதூர் பிரிவு சாலை முதல் குட்டிலேடிச்சம்பட்டி கிராமம் வரை 2.1 கி.மீ. வரை பேருந்து வசதி செய்யப்படவில்லை.

எனவே, கோரிக்கைப்படி மேற்படி பேருந்துகளைப் புதூர் பிரிவு சாலையிலிருந்து குட்டிலேடிச்சம்பட்டி வரை 2.1 கி.மீ. தூரத்திற்குச் சென்று வருமாறு இயக்கினால், புதூர் பிரிவு சாலைக்குப் பிறகு வரும் கிராம மக்களுக்குப் பயணக் கட்டணம் 4.2 கி.மீ. தூரத்திற்கு அதிகமாகும். காவேரிப்பட்டினம் முதல் குட்டிலேடிச்சம்பட்டி வரை தனியார் சிற்றுந்துமூலம் நாளொன்றுக்கு 18 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

கும்மனூர் கரடிஅள்ளி ஊராட்சி, தேவர்முக்குளம் கிராமம் ஏற்கெனவே நகரப் பேருந்து தடம் எண் கே 27–ன்மூலம் கிருஷ்ணகிரியிலிருந்து தேவர்முக்குளம் கிராமம் வழியாக எர்ரசீகலஅள்ளி வரை நாளொன்றுக்கு 10 நடைகள் இயக்கப்படுகின்றன. இத்தடத்தில் பயணிகளின் அடர்வு 52 விழுக்காடுதான் உள்ளது. பயணிகளின் அடர்வுக்கு ஏற்றவாறு கூடுதல் நடைகள் இயக்கப்படும்.

**31—**

## புறநகர் பேருந்து இயக்குதல்

**வினா எண் 12758—திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், தளி தொகுதி, தளி தேன்கனிக்கோட்டை, தடிக்கல், பஞ்சப்பள்ளி மார்க்கத்தில் குட்டூரூர், தேன்கனிக்கோட்டை–தளி–ஆனேகல் மார்க்கத்தில் பெங்களூர் மற்றும் பெட்டமுகிலாளம்–தேன்கனிக்கோட்டை–ஓசூருக்குப் புறநகர் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், தளி–கோட்டூர் (வழி) தேன்கனிக்கோட்டை, தடிக்கல், பஞ்சப்பள்ளி தடத்தில் தளி முதல் தேன்கனிக்கோட்டை வரை தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், தருமபுரி மண்டலத்தைச் சார்ந்த 10 பேருந்துகள் மூலம் நாளொன்றுக்கு 64 நடைகளும் தனியார் பேருந்துகள்மூலம் நாளொன்றுக்கு 62 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும்,





(அ) வெள்ளாளபுரம் சின்னப்பம்பட்டியிலிருந்து எளம்பிள்ளை வழியாக சேலம் நகரத்திற்கு எடப்பாடி—கொங்கணாபுரம், புதுக்காடு, அய்யன்பாளையம், கச்சப்பள்ளி, வடுகப்பட்டி—எளம்பிள்ளை செல்ல, சேலம்—எளம்பிள்ளை, கச்சப்பள்ளி, மூலப்பாதை, குண்டுரசம்பாளையம், தளவாய்ப்பட்டு, குரும்பப்பட்டு வழியாக எடப்பாடிக்கு நகரப் பேருந்து புதியதாக இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வெள்ளாளபுரம் சின்னப்பம்பட்டியிலிருந்து எளம்பிள்ளை வழியாக சேலம் நகரத்திற்குச் செல்ல நகரப் பேருந்து தடம் எண் 81 மற்றும் 68 மூலமாக தினசரி 13 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. எடப்பாடியிலிருந்து கொங்கணாபுரம், மூலப்பாதை, கச்சுப்பள்ளி, வடுகப்பட்டி வழியாக எளம்பிள்ளை வரை நகரப் பேருந்து வசதி உள்ளது. புதுக்காடு பகுதி, பேருந்து வசதி பெற்றுள்ள கொங்கணாபுரத்தினை அடுத்து பிரதான சாலையில் இருந்து 1.0 கி.மீ. தொலைவிலும், அய்யம்பாளையம் பகுதி, கச்சப்பள்ளியில் இருந்து 1.0 கி.மீ. தூரத்திலும் உள்ளது. அவ்வழித்தடச் சாலை கப்பிச் சாலையாக, எதிரே வாகனங்கள் வந்தால் ஒதுங்கிட இயலாத நிலையில் குறுகலாகவும் உள்ளது. தற்போது எடப்பாடியில் இருந்து நாச்சிபூர், குருமப்பட்டு பிரிவு, தளவாய்பட்டி, குண்டுரசம்பாளையம் மற்றும் மூலப்பாதை வழியாக நகரப் பேருந்து தடம் எண் 2D இயக்கப்பட்டு வருகின்றது. குருமப்பட்டு பிரிவிலிருந்து குருமப்பட்டு 1.0 கி.மீ. தூரம் வரை மண்சாலையாக உள்ளது. எனவே, கோரிக்கை தடத்தில் பேருந்துகள் இயக்கிட வழிவகை இல்லை.

**20—**

## பேருந்து இயக்குதல்

**வினா எண் 9410—திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சித்தேரியிலிருந்து சேலூர் அம்மாபாளையம் வழியாக சேலத்திற்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

[2008 ஜனவரி 29

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சித்தேரியிலிருந்து சேலூர் அம்மாபாளையம் செல்ல சாலைகள் எதுவும் இல்லாத காரணத்தினால் கோரிக்கைப்படி சித்தேரியிலிருந்து சேலூர் அம்மாபாளையம் வழியாக சேலம் வரை நேரிடையாகப் பேருந்து வசதி செய்திட இயலாத நிலையுள்ளது. இருப்பினும் சித்தேரி முதல் சேலூர் அம்மாபாளையம் வரை புதிய சாலைகள் பேருந்து போக்குவரத்திற்கு ஏற்றதாக அமைக்கப்பட்டால், கோரியுள்ள வழித்தடத்தில் தருமபுரி மண்டல தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின்மூலம் பேருந்து வசதி செய்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**21—**

## சிற்றுந்து இயக்குதல்

**வினா எண் 11145—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஒன்றியம், அன்னவாசல் ஊராட்சி அகர அன்னவாசல், கழனிவாசல் கிராமங்களுக்குச் சிற்றுந்து இயக்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஒன்றியம், அன்னவாசல் ஊராட்சி, அகர அன்னவாசல், கழனிவாசல் கிராமங்களுக்குத் தற்சமயம் நான்கு சிற்றுந்துகள் இயங்கி வருகின்றன.

**22—**

## சிற்றுந்து இயக்குதல்

**வினா எண் 13971—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2008 ஜனவரி 29]

(அ) விழுப்புரம் மாவட்டம், முகையூர் ஒன்றியம், வையூர் கிராமம், திருவெண்ணெய்நல்லூரிலிருந்து வையூர் கிராமத்திற்குச் சிற்றுந்து விட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், முகையூர் ஒன்றியம், வையூர் கிராமம் திருவெண்ணெய்நல்லூரிலிருந்து வையூர் கிராமத்திற்குத் தற்சமயம் இரண்டு சிற்றுந்துகள் இயங்கி வருகின்றன.

**23—**

## பேருந்து வசதி

**வினா எண் 24038—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஓமலூர் முதல் தருமபுரி வழியாக பெங்களூருக்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

ஓமலூர்–பெங்களூர் (வழி) தருமபுரி வழித்தடமானது பிற மாநில வழித்தடமாகும். இப்பிற மாநில வழித்தடத்தில் புதிதாகப் பேருந்துகள் இயக்கிட சம்பந்தப்பட்ட பிற மாநிலமான கர்நாடகத்தினரின் இசைவினைப் பெறவேண்டும். தற்பொழுது சேலம்–பெங்களூர் (வழி) ஓமலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் ஓசூர் வழித்தடத்தில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்) மூலமாக மட்டும் 53 பேருந்துகளின்மூலம் தினசரி 172 நடைகள் இயக்கப்படுகின்றன. மேற்படி நடைகளின் சராசரியாக சேலம்–பெங்களூர், பெங்களூர்–சேலம் செல்லும் நேரடிப் பயணிகள் எண்ணிக்கை, 10–50 வரை மட்டுமே உள்ளதால், ஓமலூரிலிருந்து பயணிக்கும் பயணிகளுக்குப் போதிய இட வசதி கிடைக்கின்றது. எனவே, கோரப்பட்ட வழித்தடத்தில் புதிதாகப் பேருந்து வசதி ஏற்படுத்திடும் அவசியம் எழவில்லை.

[2008 ஜனவரி 29

**24—**

## பேருந்து இயக்குதல்

**வினா எண் 24040—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் பேருந்து நிலையத்தில் இருந்து சேலம் இரயில்வே சந்திப்பு வரை இரவு நேரங்களில் 8 மணி முதல் 10 மணி வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

ஓமலூர் பேருந்து நிலையத்திலிருந்து சேலம் இரயில்வே சந்திப்பு வழியாக சேலம் நகரப் பேருந்து நிலையம் வரை அரசு மற்றும் தனியார் நகரப் பேருந்துகள்மூலமாக மொத்தம் 5 நடைகள் கோரிக்கையில் குறிப்பிட்டுள்ள இரவு நேரங்களில் 8 மணி முதல் 10 மணி வரை இயக்கம் செய்யப்படுகிறது. அதன் விவரம்,

| வரிசை எண் | ஓமலூர் சேலம் புறப்படும் நேரம் | ரயில்வே சந்திப்பு சேரும் நேரம் | பேருந்து |
|---|---|---|---|
| 1. | 19.35 | 20.15 | தனியார் |
| 2. | 20.20 | 21.20 | அரசு |
| 3. | 20.33 | 21.15 | தனியார் |
| 4. | 21.00 | 21.40 | தனியார் |
| 5. | 21.40 | 22.20 | தனியார் |

மேற்படி 5 நடைகளே இப்பகுதி மக்களின் போக்குவரத்துத் தேவைக்குப் போதுமானதாக இருப்பதால் கூடுதல் பேருந்து வசதி தேவை எழவில்லை.



2008 ஜனவரி 29]

**25—**

## கூடுதல் பேருந்து

**வினா எண் 29491—திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி ஒன்றியம், மூக்கனூர் ஊராட்சி, தின்னப்பட்டிக்கு நகரப் பேருந்து இயக்கவும், பூதன அள்ளி ஊராட்சி, பூதன அள்ளிக்குக் கூடுதல் பேருந்து இயக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி ஒன்றியம், மூக்கனூர் ஊராட்சி, தின்னப்பட்டிக்கு, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், தருமபுரி—மண்டலம் மூலமாக நகரப் பேருந்து தடம் எண் டி45, தருமபுரி-தின்னப்பட்டி தடத்தில் நாளொன்றுக்கு 2 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. இத்தடத்தின் நீளம் 18 கி.மீ. இதில் பயணிகளின் அடர்வு சுமார் 38 விழுக்காடுகளே வருகிறது. எனவே, கூடுதல் நகரப் பேருந்து வசதியினைச் செய்திட இயலாத நிலையுள்ளது.

பூதன அள்ளி கிராமம், ஏற்கெனவே நகரப் பேருந்துகள்மூலம் பேருந்து நிறுத்தம் செய்து வரும் பூதன அள்ளி பிரிவு சாலையிலிருந்து 1.1 கி.மீ. தூரத்தில் உள்ளது. இதில், பூதன அள்ளி கிராமத்திற்குள் சென்று பேருந்தைத் திருப்பிட போதுமான சாலை வசதியில்லாததால் நகரப் பேருந்து வசதி செய்திட இயலாத நிலையுள்ளது.

**26—**

## பேருந்து இயக்குதல்

**வினா எண் 32811—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, அமராவதி நகர்—சத்தி வரை (திருப்பூர், தாராபுரம், உடுமலைப்பேட்டை) அணைக்கட்டிலிருந்து உடுமலைப்பேட்டை அமராவதி நகர் வரை புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 ஜனவரி 29

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, அமராவதி நகர்–சத்தியமங்கலம் (வழி) உடுமலைப்பேட்டை, தாராபுரம், திருப்பூர் ஒரு சுற்று வழித்தடமாகும். எனவே இச்சுற்று வழித்தடத்தில் வழித்தட தூரம் அதிகம் காரணமாக நேரடிப் பயணிகள் பயணிக்கமாட்டார்கள்.

அமராவதி நகர்–உடுமலைப்பேட்டை சத்தி நேர்வழியில் பகுதி வாரியாக இயங்கும் பேருந்துகளின் விவரம்:

அமராவதி நகர்–உடுமலைப்பேட்டை–கழகம் மற்றும் தனியார் பேருந்துகள் 8 – தினசரி 90 நடைகள்.

உடுமலைப்பேட்டை–திருப்பூர் –கழகம் மற்றும் தனியார் பேருந்துகள் 44– தினசரி 214 நடைகள்.

திருப்பூர்–சத்தியமங்கலம்–கழகம் மற்றும் தனியார் பேருந்துகள் 40– தினசரி 140 நடைகள்.

கோயம்புத்தூர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் லிமிடெட், பழனியிலிருந்து ஆனைகட்டிக்கு உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி, கோவை வழியாக ஒரு பேருந்து, தினசரி 2 நடைகள் இயங்கி வருகிறது. இது தவிர,

அமராவதி நகர்–உடுமலைப்பேட்டை – கழகம் மற்றும் தனியார் பேருந்துகள் 8 – தினசரி 90 நடைகள்.

உடுமலைப்பேட்டை–பொள்ளாச்சி – கழகம் மற்றும் தனியார் பேருந்துகள் 135 – தினசரி 576 நடைகள்.

பொள்ளாச்சி—கோயம்புத்தூர்-கழகம் மற்றும் தனியார் பேருந்துகள் 145-தினசரி 852 நடைகள்.

கோயம்புத்தூர்–ஆனைகட்டி – கழகம் மற்றும் தனியார் பேருந்துகள் 9 – தினசரி 88 நடைகள்–ஆக.

பகுதிவாரியாக போதுமான அளவு பேருந்துகள் இயங்கிவருவதால் உடுமலைப்பேட்டை, அமராவதி நகரிலிருந்து ஆனைகட்டிக்குப் புதிய பேருந்து இயக்கிட சாத்தியக்கூறுகள் இல்லை.



2008 ஜனவரி 29]

**27—**

**நிலக் குத்தகை**

**வினா எண் 11401—திரு. போ. கோபாலன்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதி துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உதகமண்டலம் நகரின் நடுவில், குதிரை பந்தய சங்கத்தால் குத்தகைக்கு எடுக்கப்பட்ட நிலத்தின் குத்தகையை ரத்து செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

நீலகிரி மாவட்டம், உதகை வட்டம் மற்றும் நகரப் புல எண்கள் 1993,1994,1996 மற்றும் 2000/3 ஆகிய காலைகளில் மெட்ராஸ் ரேஸ் கிளப்பிற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள 52.34.4/16 ஏக்கர் நிலத்தின் குத்தகையினை ரத்து செய்வது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

D
V 21.3.08
408.40.1

**28—**

**உணவுப் பொருட்களின் விலை**

**வினா எண்—4455—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டத்தில் மளிகைக் கடைகளில் உணவுப் பொருட்களின் விலை ஏறாமல் தடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:**

கோவை மாவட்டத்தில் முக்கிய உணவுப் பொருட்களின் விலை நிலவரங்கள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. உள்ளூர் மக்களின் நுகர்வுக்குத் தேவையான உணவுப் பொருட்களை இருப்பில் வைத்திருக்கவும், உள்ளூரில் பயிர் இழப்பு [illegible] காரணமாகவும் உற்பத்தி குறைவு ஏற்பட்டு வரத்து குறை[illegible]

228096.
[illegible]-600 009

[2008 ஜனவரி 29

உற்பத்தி அதிகமுள்ள இடங்களிலிருந்து உணவுப் பொருட்களை பெற்று மக்களுக்குப் போதிய அளவு கிடைக்க உத்தரவாதப்படுத்தி, பற்றாக்குறையினால் ஏற்படும் விலை உயர்வினைத் தவிர்க்கவும், அவசிய பொருட்களின் விலையினைக் கட்டுக்குள் வைத்திருக்கவும் பல்வேறு வர்த்தக சங்கப் பிரதிநிதிகளை நேரில் அழைத்து தக்க அறிவுரைகள் மாவட்ட ஆட்சித் தலைவரால் வழங்கப்பட்டுள்ளன.

**29—**

## உதவித் தொழிலாளர் ஆய்வாளர் அலுவலகம்

**வினா எண் 38397—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் வட்டத்திற்கெனத் தனியாக உதவித் தொழிலாளர் ஆய்வாளர் அலுவலகம் ஓமலூரில் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:**

மேட்டூர் தாலுகா மற்றும் ஓமலூர் தாலுகா ஆகிய இரண்டு தாலுகாக்களையும் சேர்த்து தற்போது மேட்டூர் தொழிலாளர் உதவி ஆய்வாளரால் அமலாக்கப் பணி மேற்கொள்ளப்படுகிறது. இரண்டு தாலுகாக்களிலும் சேர்த்து மொத்த நிறுவனங்கள் விவரம் பின்வருமாறு:

| தாலுகா | கடைகள் நிறுவனங்கள் | உணவு நிறுவனங்கள் | எடையளவு உபயோகிப்பாளர் நிறுவனங்கள் |
|---|---|---|---|
| மேட்டூர் | 181 | 29 | 1000 |
| ஓமலூர் | 80 | 20 | 1568 |
| மொத்தம் | 261 | 49 | 2568 |

மேற்கண்டவாறு குறைவான நிறுவனங்களை ஆட்சி எல்லையாகக் கொண்ட மேட்டூர் தொழிலாளர் உதவி ஆய்வாளரிடமிருந்து, ஓமலூர் தாலுகாவை மட்டும் தனியாகப் பிரித்தால் மேட்டூர், தொழிலாளர் உதவி ஆய்வருக்கான ஆட்சி எல்லை மேலும் வெகுவாகச் சுருங்கிவிடும். அதன் காரணமாக சம்பந்தப்பட்ட தொழிலாளர் உதவி ஆய்வருக்குப் போதிய அளவிற்கான வேலையும் இருக்காது. ஓமலூருக்குத் தனியாக



2008 ஜனவரி 29]

தொழிலாளர் உதவி ஆய்வர் ஏற்படுத்தும் அளவில் அங்கு நிறுவனங்களின் எண்ணிக்கையும் இல்லை. ஆனால் அரசின் நிருவாகச் செலவினம் கூடும். எனவே, ஓமலூரில் தனியாக தொழிலாளர் உதவி ஆய்வர் அலுவலகம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் எவையுமில்லை.

**30—**

## குடிநீர் வசதி

**வினா எண் 14142—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, மேல்மலையனூர் அங்காள பரமேஸ்வரி ஆலயத்திற்குக் குடிநீர் வசதி செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

திருக்கோயில் சார்பாக ஆழ்குழாய்க் கிணறு தோண்டப்பட்டு அதன்மூலம் தண்ணீர் வெளியே கொண்டு வந்து, சுத்தம் செய்யப்பட்டு பக்தர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மேலும் மேல்மலையனூர் பஞ்சாயத்து மூலமாக, மலையனூர் கிராமத்திற்கு ஒரு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டு, திருக்கோயிலின் மூன்று இடங்களில் பக்தர்களுக்குக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**31—**

## குத்தகை

**வினா எண் 19541—திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி தொகுதி, குறிச்சி கிராமம், குறிச்சியைச் சுற்றியுள்ள கோவில் நிலங்களை மீட்டு, மறு குத்தகைக்கு விட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 ஜனவரி 29

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, குறிச்சி அருள்மிகு மாதேஸ்வரர் வரதராஜப் பெருமாள் திருக்கோயிலுக்கு 74.17 ஏக்கர் புன்செய் நிலம் உள்ளது. இதில் 83 நபர்கள் நீண்டகாலக் குத்தகைதாரர்களாக இருந்து வருகின்றனர். வருட கேட்பு ரூ.1,00,355/- பசலி 1416 முடிய ரூ.3,63,510/- பாக்கி உள்ளது. மேற்படி கூடுதல் நிலத்தில் 1.32 சென்ட் நிலம் பொது ஏலத்தில் விடப்பட்டு வருகிறது. 10.32 ஏக்கர் நிலம் தொடர்பாக வருவாய் நீதிமன்றத்தில் 8 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

2. ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், குறிச்சி கிராமம் அருள்மிகு சொக்கலாச்சியம்மன் திருக்கோயிலுக்கு 23.26 ஏக்கர் நிலம் உள்ளது. இந்த நிலங்கள் நீண்டகாலமாக குத்தகைக்கு விடப்பட்டு தொகை முழுவதும் வசூலிக்கப்பட்டு வருகிறது. ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், குறிச்சி அருள்மிகு ஏரிக்கரை முனியப்பன் திருக்கோயிலுக்குச் சொந்தமான 28.77 ஏக்கர் நிலங்கள் பொது ஏலம் மூலம் குத்தகைக்கு விடப்பட்டு, தொகை வசூலிக்கப்பட்டு வருகிறது. ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, குறிச்சி கிராமத்தைச் சுற்றியுள்ள இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள, பட்டியலில் சேராத திருக்கோயில்களுக்குச் சொந்தமாக நிலங்கள் ஏதுமில்லை. மேலே குறிப்பிட்ட நிலையில், மேற்குறிப்பிட்ட திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களை மறு குத்தகைக்கு விடும் கேள்வி எழாது.

32—

## நடைபாதை சீரமைத்தல்

**வினா எண் 24997—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மீனாட்சியம்மன் கோயிலுக்குச் செல்லும் நடைபாதையைச் சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2008 ஜனவரி 29]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) மதுரை அருள்மிகு மீனாட்சியம்மன் கோயிலுக்குச் செல்லும் நடைபாதை, மதுரை மாநகராட்சியின் பொறுப்பில் உள்ளது. நடைபாதை சீரமைக்கும் பணி, சுற்றுலாத் துறை நிதியின்மூலம் மதுரை மாநகராட்சி நிருவாகத்தால் செய்யப்பட்டு வருகிறது.

33—

## நிதியுதவி

**வினா எண் 26643—திரு. அ. தமிழரசு :** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதியிலுள்ள கிராமக் கோயில்களில் ஒருகால பூஜையை தினசரி செய்ய அரசு நிதியுதவி வழங்க முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் :**

சேலம் மாவட்டத்தில் இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் மொத்தம் 285 திருக்கோயில்கள் உள்ளன. இவற்றில், ஓமலூர் தொகுதியில் மட்டும் 24 திருக்கோயில்கள் ஒருகால பூஜை திட்டத்தின்மூலம் பயன்பெறுகின்றன. எனவே, ஓமலூர் தொகுதியில் நிதி வசதியில்லாமல், ஒருகால பூஜைகூட நடத்த இயலாத, இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் உள்ள கிராமக் கோயில்கள் இருப்பது துறையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு, அதற்குப் பொதுமக்கள் நன்கொடையாக திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.2,500/- வீதம் வழங்கினால், ஒருகால பூஜை, நிதியுதவித் திட்டத்தின்கீழ் பரிசீலிக்கப்படும்.

34—

## மராமத்துப் பணிக்கு நிதி

**வினா எண்—29411—திரு. சி. கோவிந்தசாமி :** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2008 ஜனவரி 29

திருப்பூர் வட்டம், முருகப்பாளையம் ஊராட்சி, பட்டத்தரசியம்மன் கோயில் மராமத்துப் பணிக்கு நிதி ஒதுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

கோவை மாவட்டம், திருப்பூர் வட்டம், முருகப்பாளையம், அருள்மிகு பட்டத்தரசியம்மன் திருக்கோயில், இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் மராமத்துப் பணிக்கு, நிதி ஒதுக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசிடம் தற்போது இல்லை.

**35—**

## சமையல் அறை கட்டுதல்

**வினா எண் 31011—திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கொடுமுடி, அருள்மிகு ஸ்ரீமகுடேஸ்வரன், வீரநாராயண பெருமாள் திருக்கோயில் முன் கட்டப்பட்டுள்ள திருமண மண்டபத்திற்குச் சமையல் அறை கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

ஈரோடு மாவட்டம், கொடுமுடி அருள்மிகு மகுடேஸ்வரர் திருக்கோயில் பக்தர்கள் தங்குவதற்காக திருமண மண்டப அமைப்பில் பக்தர்கள் தங்கும் விடுதி கட்டப்பட்டுள்ளது. இந்த பக்தர்கள் தங்கும் விடுதியில், சமையல் அறை கட்ட வேண்டிய அவசியம் எழாது.

**36—**

## புதுப்பித்தல்

**வினா எண் 32346—திரு. கு.ப. வேலுமணி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2008 ஜனவரி 29]

(அ) பேரூர் தொகுதி, குனியமுத்தூர் நகராட்சி 5-வது வார்டில் மதுரை வீரன் கோயிலைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம் மற்றும் வட்டம், குனியமுத்தூர் அருள்மிகு மதுரை வீரன் திருக்கோயில், இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் இல்லாத ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள திருக்கோயிலாகும். எதிர்வரும் காலங்களில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களுக்குத் திருப்பணி நிதியுதவித் திட்டத்தின்கீழ் முன்னுரிமை அளித்து திருப்பணி செய்திட நடவடிக்கை எடுக்கப்படும்.

**37—**

## வசதிகள்

**வினா எண் 34576—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், மடப்புரம் கோயிலுக்குக் கழிப்பறை, குளியலறை வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், மடப்புரம் அருள்மிகு அடைக்கலம் காத்த அய்யனார் திருக்கோயிலின் கிழக்குப் புறம் பக்தர்களுக்கென ஆண்கள் மற்றும் பெண்களுக்குத்

[2008 ஜனவரி 29

தனித்தனியே 6 கழிப்பறைகள் மராமத்து செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மேலும், திருக்கோயிலுக்கு எதிர்ப்புறம் ஆண்கள் மற்றும் பெண்கள் குளிப்பதற்குத் தனித்தனியே குளியலறைகள் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மேற்படி திருக்கோயிலுக்குப் போதுமான கழிப்பறை மற்றும் குளியலறை வசதி உள்ளது.

**38—**

## ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

**வினா எண் 35764—திரு. பெ. கண்ணன் :** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம், இளமேஸ்வரர் திருக்கோயிலின் நிலத்திலுள்ள தனியார் ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் அருள்மிகு இளமேஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் ஏதும் இல்லை. அதனால் தனியார் ஆக்கிரமிப்புகள் என்ற கேள்வி எழ வாய்ப்பில்லை.

**39—**

## மராமத்துப் பணிகள்

**வினா எண் 37775—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இளையான்குடி வட்டம், தாயமங்கலம் அருள்மிகு முத்துமாரியம்மன் கோயிலைச் சுற்றி, சிமெண்ட் தளம் அமைக்கவும், ஆடு பலியிட இடவசதி செய்யவும், கோயில் மராமத்து செய்யவும், கோவில் தெப்பக் குளத்தில் தூர் வாரவும், அங்கு வணிக வளாகம் கட்டவும் அரசு முன்வருமா?



2008 ஜனவரி 29]

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இளையான்குடி வட்டம், தாயமங்கலம் அருள்மிகு முத்துமாரியம்மன் கோயிலைச் சுற்றி மெட்டல் சாலை அமைக்கப்பட்டுள்ளது. மேலும், அதில் சிமெண்ட் சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆடு பலியிட இடவசதி செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. திருக்கோயிலில் மராமத்துப் பணி ரூ.1.06 இலட்சத்தில் செய்து முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி திருக்கோயிலின் திருக்குளத்தைச் சுற்றிலும் படித் துறையுடன்கூடிய சுற்றுச்சுவர் ரூ.3.5 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேலும், திருக்குளத்தைத் தூர் வார நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வணிக வளாகம் கட்டுவதற்கு முதற்கட்டமாக ஆறு கடைகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**40—**

## கடன் வழங்குதல்

**வினா எண் 17758—திரு. ஜி.கே. மணி :** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, வனவாசி, நங்கவள்ளி, ஜலகண்டபுரம் பகுதியிலுள்ள நெசவாளர்களுக்குக் கூட்டுறவு வங்கியின்மூலம் அதிக அளவில் கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மேட்டூர் தொகுதி, வனவாசி வட்டம், நங்கவள்ளி மற்றும் ஜலகண்டபுரம் பகுதியில் மொத்தம் 13,729 நெசவாளர்கள் உள்ளனர். அவர்களில் 3,870 கைத்தறி நெசவாளர்களும், 9,869 விசைத்தறி நெசவாளர்களும் ஆவர். அவர்களில் 1,045 நெசவாளர்கள் கூட்டுறவு நெசவாளர் சங்கங்களிலும்; எஞ்சிய 12,684 நெசவாளர்கள் கூட்டுறவு அமைப்பு அல்லாத தனியார் Master Weaver-களிடமும் உள்ளனர்.

[2008 ஜனவரி 29

கூட்டுறவு அமைப்பின்கீழ் உள்ள நெசவாளர்களுக்கு அவர்கள் சார்ந்துள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் காசுக் கடனில் கடன் தொகையினைப் பெற்று, தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்கி வருகிறது. கூட்டுறவு அமைப்பு அல்லாத நெசவாளர்களுக்குக் கூட்டுறவு வங்கியின்மூலம் கடன் பெற்று வழங்க வழிவகையில்லை. எனினும், மேற்படி நெசவாளர்களுக்குக் கடன் பெற்று வழங்கக் கோரி பெறப்படும் விண்ணப்பங்கள், தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின்மூலம் பரிசீலிக்கப்பட்டு, ஆவன செய்யப்பட்டு வருகிறது.

மேலும், கைத்தறி நெசவாளர்கள் "ஸ்வரோஜ்கார் கடன் அட்டை" வழங்கும் திட்டத்தின்கீழும் (Swarojgar Credit Card) தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் ரூ.25,000/-க்கு மிகாமல் கடன் பெறுவதற்கும் வழிவகையுள்ளது.

**41—**

**பின்னலாடை தொழிற்சாலை**

**வினா எண் 33794—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், பூவந்தியில் பின்னலாடை தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகேபி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், பூவந்தியில் பின்னலாடை தொழிற்சாலை அமைக்கும் செயற்திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**42—**

**பாலம் கட்டுதல்**

**வினா எண் 5909—திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2008 ஜனவரி 29]

(அ) தருமபுரி தொகுதி, கோடு அள்ளி ஊராட்சி, தொப்பூர் முதல் பொம்மிடி செல்லும் சாலையிலுள்ள ஆலமரத்து நகரில் புதியதாக பாலம் கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி தொகுதி, கோடு அள்ளி ஊராட்சி, தொப்பூர் முதல் பொம்மிடி செல்லும் சாலையில் பாலம் அமைக்கக் கோரப்பட்டுள்ள இடமானது வி.முத்தம்பட்டி முதல் தொப்பையாறு (வழி) வேப்பமரத்தூர் சாலை கி.மீ 0/0–9/6 தருமபுரி (நெ) கோட்டப் பராமரிப்பில் உள்ள மாவட்ட இதர சாலை ஆகும். இச்சாலையில், கிமீ 4/10–ல் 5 மீ. கண் வழி கொண்ட 3 கண்களுடன் ஒரு உயர்மட்டப் பாலம் உள்ளது. இப்பாலம் வலுவாகவும் நல்ல நிலையிலும் உள்ளது. மேற்படி பாலத்தின் அணுகு சாலை மற்றும் பாலத்தின் ஓடுதளப் பகுதி அனைத்தும் தார்க் கலவையில் தளமிட்டு, சீரமைத்து தற்போது நல்ல நிலையில் உள்ளது. எனவே, புதிய பாலம் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**43—**

**சாலையைச் செப்பனிடல்**

**வினா எண் 14947—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம் கூடன்குளம்–வைராவி கிணறு சாலையைச் செப்பனிட்டுக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம் கூடன்குளம்–வைராவி கிணறு சாலை என்பது, திருநெல்வேலி (நெடுஞ்சாலை) கோட்டப் பராமரிப்பில் உள்ள, விஜயாபதி–வைராவி கிணறு என்னும்

[2008 ஜனவரி 29

மாவட்ட இதர சாலையாகும். இச்சாலையின் மொத்த நீளம் 4.62 கி.மீ. ஆகும். இச்சாலையில் பணிகள் காலமுறை புதுப்பித்தல் திட்டத்தின்கீழ் ரூ.17.80 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, 14-8-2006-ல் முடிக்கப்பட்டுள்ளது. தற்போது இச்சாலை நல்ல நிலையில் உள்ளது.

**44—**

**தார்ச் சாலை**

**வினா எண் 20661—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, குண்டடம் ஒன்றியம், இராசிபாளையம் முதல் ஓரம்புதூர் சாலையைத் தார்ச் சாலையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் தொகுதி, இராசிபாளையம் முதல் ஓரம்புதூர் வரை உள்ள சாலை, இச்சிப்பட்டியிலிருந்து கொலுமங்குளி சாலையில் கி.மீ. 3/0–7/0–ல் அமைந்துள்ளது. இச்சாலை குண்டடம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த ஊராட்சி ஒன்றியச் சாலையாகும். நபார்டு ஆர்.இ.டி.எப். திட்டம்–12–ல் (இச்சிப்பட்டிலிருந்து கொலுமங்குளி செல்லும் சாலையில் கி.மீ 0/0–2/6 மற்றும் 3/0–7/0 வரை) ரூ.87.00 இலட்சம் மதிப்பில் மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன; பணிகளை விரைவில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**45—**

**தார்ச் சாலை**

**வினா எண் 25989—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2008 ஜனவரி 29]

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி சாலை—பனிக்கனேந்தல் அரசனேந்தல் கப்பிச் சாலையைத் தார்ச் சாலையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி சாலையிலிருந்து பனிக்கனேந்தல் அரசனேந்தல் சாலையின் மொத்த நீளம் 1.40 கி.மீ. ஆகும். இச்சாலை மானாமதுரை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சாலையாகும். இச்சாலை மேற்பரப்பு கிராவல் சாலையாகும். 1.60 கி.மீ. நீளத்திற்குக் குறைவாக உள்ள சாலைகளை மேம்படுத்துவதற்கு வழி வகைகள் இல்லை என்பதால், மேற்சொன்ன சாலையைத் தார்ச் சாலையாக மேம்பாடு செய்ய சாத்தியக்கூறு இல்லை; ஊரக வளர்ச்சித் துறைமூலம் நடவடிக்கை எடுக்கலாம்.

(ஆ) வினா எழவில்லை.

**46—**

**சாலையைச் செப்பனிடுதல்**

**வினா எண் 27545—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, பச்சமலை சாலையைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை தொகுதியில் உள்ள பச்சமலை சாலையானது, தனியார் எஸ்டேட்டின் நிருவாகத்திற்குட்பட்டது என்பதால், இச்சாலையினை அரசினால் பராமரிக்க இயலாது.

(ஆ) வினா எழவில்லை.

47— [2008 ஜனவரி 29

## மரங்கள் நடுதல்

**வினா எண் 27669—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, சிறுகுன்றசாலை, அயர்பாடி சாலை, ஸ்டான்மோர் சாலை, நெல்லித்துறைமன்னன் சாலை, ஆனைமலையனூர் ஆகிய சாலைகளின் இருபுறமும் மரங்கள் நட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, சிறுகுன்றசாலை, அயர்பாடி சாலை, ஸ்டான்மோர் சாலை, நெல்லித்துறைமன்னன் சாலை, ஆனைமலையனூர் ஆகிய சாலைகளின் ஓரங்களில் போதுமான அளவில் மரங்கள் உள்ளன. மேலும், இச்சாலைகள் அனைத்தும் எஸ்டேட் பகுதிக்குள் செல்வதால், மரங்கள் நடுவதற்கு ஏதுவான அரசு நிலம் எதுவும் அங்கு இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

48—

## இரு வழிப் பாதை

**வினா எண் 28367—திரு அ. தமிழரசு:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு முதல் பவானி லட்சுமி நகர் வரை இரு வழிப் பாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?



2008 ஜனவரி 29]

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

ஈரோடு முதல் பவானி லட்சுமி நகர் வரையுள்ள சாலையானது ஈரோடு நெடுஞ்சாலை கோட்டப் பராமரிப்பில் உள்ள மாநில நெடுஞ்சாலையான "தொப்பூர்–மேட்டூர் பவானி ஈரோடு சாலை கி.மீ 82/6–93/984 (SH-20) வரை 11.384 கி.மீ நீளமுள்ளதாகும். இச்சாலை ஏற்கெனவே இருவழித் தடத்தைவிட அகலமாக (சராசரி 9.0m அகலத்துடன்) நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

49—

## தார்ச் சாலை

**வினா எண் 30356—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் தொகுதி, போளூர்–செங்கம் சாலை–மேலாரணி, சேங்கடித்தேரி வரையுள்ள சாலையைப் பழுதுபார்த்து புதிய தார்ச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கலசப்பாக்கம் தொகுதி "போளூர்–செங்கம்" சாலையானது திருவண்ணாமலை கோட்டப் பராமரிப்பில் உள்ள மாநில நெடுஞ்சாலையாகும். இச்சாலையில், தற்போது தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்மூலம் அகலப்படுத்தி, மேம்பாடு செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கலசப்பாக்கம்–மேலாரணி சாலை கி.மீ 0/0–6/8 வரையிலான சாலை நடப்பாண்டில் சிறப்புப் பழுதுபார்த்தல் திட்டத்தின்கீழ் பணி மேற்கொள்ளப்பட்டு, சாலை நல்ல நிலையில் உள்ளது. போளூர்–செங்கம் சாலையிலிருந்து என்.சி. வீரளூர் சாலை (வழி) செங்கப்பத்தேரி கி.மீ 0/0–4/0 திருவண்ணாமலை கோட்டப் பராமரிப்பில் உள்ள ஒரு மாவட்ட இதர சாலையாகும். இச்சாலையில், கி.மீ 0/0–2/0 வரை சிறப்புப் பழுது பார்த்தல் மூலம் பணி மேற்கொள்ளப்பட உள்ளது. எஞ்சியுள்ள கி.மீ 2/0–4/0 வரையுள்ள சாலைப் பகுதி தற்போது நல்ல நிலையில் உள்ளது.

[2008 ஜனவரி 29

**50—**

**மீன் விற்பனை நிலையம்**

**வினா எண் 34515—திரு. பெ. காமராஜ்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, மாயனூரில் மீன் விற்பனை மையம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குளித்தலை வட்ட உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கத்திற்கெனச் சொந்தமான நில வசதி ஏதுமில்லை. பிடிக்கப்படும் மீன்கள் உடனுக்குடன் ஆற்றங்கரையில் பொது மக்களால் வாங்கிச் செல்லப்படுவதாலும், ஆற்றில் தண்ணீர் இருப்பதற்கு ஏற்ப மீன் கிடைப்பது மாறுபடுவதாலும் கிருஷ்ணராயபுரம் தொகுதி மாயனூரில் மீன் விற்பனை மையம் ஏற்படுத்த வாய்ப்பில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

**(அ) விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திரு. தொல். திருமாவளவன், மாநாடு ஒன்றில் உரையாற்றியது.**

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு தலைவர் அவர்களே...



2008 ஜனவரி 29]

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. டி. ஜெயக்குமார்:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். திரு. ரவிக்குமார், என்ன? (குறுக்கீடுகள்) மற்றவர்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. து. ரவிக்குமார், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். கொஞ்சம் பொறுங்கள், கேட்டுக்கொண்டிருக்கிறேன் இல்லையா? (குறுக்கீடுகள்)

***திரு. து. ரவிக்குமார்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கத்தை இந்த அவையின் முன்வைக்க நான் விரும்புகின்றேன். என்னை அனுமதிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன். நேற்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் ஒரு சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை உங்களிடத்திலே கொண்டு வந்தார்கள். அதுபற்றிச் சொன்ன தகவல்களை நான் கவனித்தேன். அந்த விவரங்களை எங்களுடைய தலைவர் திருமாவளவன் அவர்களிடத்திலே நான் கேட்டபோது, அவர் பொதுக் கூட்டத்திலே பேசுகின்ற நேரத்திலே சில தலைவர்களைப் பற்றிப் பேசிய விஷயங்கள் தவறான முறையிலே பத்திரிகையிலே திரித்து வெளியிடப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அந்த விளக்கத்தை ஏற்றுக்கொண்டு தாங்கள் இந்தப் பிரச்சினையை அணுகி... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் அவர் சொல்லட்டும். அதற்கப்புறம் பார்க்கலாம். உட்காருங்கள்.

**திரு. து. ரவிக்குமார்:** அந்தத் தீர்மானத்தை அவர்கள் வலியுறுத்த வேண்டாம் என்று உங்கள் முன்னிலையிலே நான் ஒரு வேண்டுகோளாக முன்வைக்கின்றேன். நன்றி.

**திரு. சி. ஞானசேகரன்:** தலைவர் அவர்களே...

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. வி.பி. கலைராஜன்:** தலைவர் அவர்களே...

[2008 ஜனவரி 29

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ்.

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் எங்களது சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரும் ஒரு முக்கியமான பிரச்சினை குறித்து, தங்கள் மூலமாக இந்த அவையின் கவனத்தைக் கோருவதற்காக அனுமதி கேட்டோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேற்று அவையில் இல்லாத காரணத்தினால் மறுநாள் எடுத்துக்கொள்ளலாம் என்று நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் ரவிக்குமார் அவர்கள் அதற்கான ஒரு விளக்கத்தை முன்னெடுத்து வைத்திருக்கிறார். இருந்தாலும்கூட, எங்கள் தரப்பு நியாயங்களை இந்த அவையிலே பதிவு செய்யவேண்டியது அவசியம் என்று எண்ணுகிறோம். ஆகவே, இந்த முக்கியமான பிரச்சினை குறித்து—அதற்குப் பல்வேறு பரிமாணங்கள் இருக்கின்றன. நண்பர் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரவிக்குமார் அவர்கள் சொன்னது ஒரு பரிமாணம். அந்தப் பிரச்சினையினுடைய மற்றைய பரிமாணங்களையும் இந்த அவையிலே நாங்கள் பதிவு செய்ய விரும்புகிறோம். எனவே, இந்த முக்கியமான பிரச்சினை குறித்து—இந்த அவையின் கவனத்தினைக் கோர காங்கிரஸ் கட்சியின் சார்பிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயக்குமார் அவர்களுக்கு அனுமதி தர வேண்டுமென்று உங்களை வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, நான் முதலிலே இதை எடுத்துக்கொள்கிறேன். 25–1–2008 அன்று சென்னையில் நடந்த கருத்துரிமை மாநாட்டில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திரு. தொல். திருமாவளவன் அவர்கள், தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசியது குறித்தும், மேலும் அவர் தெரிவித்த சில கருத்துகளைக் குறித்தும் அ.இ.அ.தி.மு.க. கட்சியின் சார்பில் திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. டி. ஜெயக்குமார், திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் திரு. சி. ஞானசேகரன் மற்றும் சில காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்கள் ஆகியோர் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்கள். இதனைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் உறுப்பினர்கள்



2008 ஜனவரி 29] [பேரவைத் தலைவர்]

தங்களது கருத்துகளைத் தெரிவிக்கலாம். மாண்புமிகு உறுப்பினர், யார் பேசுகிறீர்கள்? (குறுக்கீடு) சரி, பேசுங்கள். திரு. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, 25–1–2008 ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் அதையெல்லாம் விளக்கமாகச் சொல்லிவிட்டார். அதற்குப் பிறகும் அதைப் பேச வேண்டுமா?

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** நாங்கள் எங்கள் கருத்தைச் சொல்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பத்திரிகையில் தவறுதலாகப் பிரசுரம் செய்து இருக்கிறார்கள் என்றும், அவர் அப்படி நடக்கவில்லை என்றும் அவர் சொல்லியிருக்கிறார். அதற்குப் பிறகும் அவையினுடைய நேரத்தை ஏன் வீணாக்க வேண்டும்?

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் தருகிறபோது, அவையின் மரபிற்கு மாறாக, ஒரு தன்னிலை விளக்கத்தை அளிப்பதற்கு அனுமதித்து, "நீங்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்ததற்கு அவர் பதிலளித்திருக்கிறார்" என்று சொல்வது இந்த சபையில் எந்த முறையாக இருக்கிறது என்பதை நான் முதலில் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். நாங்கள் கொடுத்து இருப்பது நேற்றையதினம். ஓர் ஒத்திவைப்பு தீர்மானத்தை நாங்கள் இங்கே கொடுத்து, நடைபெற்று இருக்கிற நிகழ்ச்சிகள் தீவிரவாதத்தைத் தூண்டுகின்ற வகையில் இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டுகின்ற வகையிலும், தீவிரவாதத்தை, விடுதலைப் புலிகளைத் தமிழ்நாட்டில் வேரோடும், வேரடி மண்ணோடும் ஒழித்துக்கட்டிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைக் கொச்சைப்படுத்திப் பேசி இருப்பதும் பத்திரிக்கையில் வந்த செய்தி மட்டுமல்ல; இதற்கு முன்னால் அவர் பத்திரிகையாளர்களைச் சந்திக்கும்போது, விடுதலைப் புலிகளை ஆதரிப்பதில் என்ன தவறு என்றும் பேசியிருக்கிறார். அதற்குப் பிறகு, கருத்துரிமை மாநாடு என்றும் ஒரு மாநாடு நடைபெறுவதற்கு இந்த அரசு அனுமதியும் தந்து, அவர் அதிலே இதுபோன்ற கருத்துகளை வெளியிட்டிருப்பது, இந்த நாட்டின் இறையாண்மைக்கு எதிரானது மட்டுமல்ல; தடை செய்யப்பட்ட இயக்கம் தமிழகத்திலே மீண்டும் ஊடுருவல் செய்கின்ற அளவிற்கு

இதுபோன்ற கட்சிகள் பல்வேறு இயக்கங்கள் நடத்தி வருவதை இந்த அரசு பார்த்துக்கொண்டு இருக்கிறதா என்பதை நான் முதலில் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அது மட்டுமல்ல; நாளுக்கு நாள் விடுதலைப் புலிகளுக்கு உதவி செய்வதற்கு ஆயுதங்களையும், மருந்துகளையும், பால்ரஸ் குண்டுகளையும் எடுத்துச் செல்கின்றவர்களைக் கைது செய்வதும், நீதிமன்றத்திலே அவர்கள் உடனுக்குடன் விடுதலை செய்யப்படுவதும், இந்த அரசினுடைய மெத்தனப் போக்கின் அடிப்படையில் அவர்கள் வெளியே வருகிறார்கள். இந்த அரசு அதற்கு வாதாடி, அவர்கள் தொடர்ந்து வெளிவரமுடியாத சூழ்நிலையை உருவாக்க முடியாத நிலை இருக்கின்ற இந்த நேரத்தில், இதுபோன்ற கட்சியைச் சார்ந்தவர்கள் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு அளித்து, இதுபோன்ற கொச்சை வார்த்தைகளை மட்டுமல்ல; கேவலமான முறையில் அவர் பேசி இருப்பதைக் கண்டிக்கின்ற வகையில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு செங்கோட்டையன் அவர்கள், கட்சியிலே உள்ள சிலர் அல்லது கட்சிக்காரர்கள் சிலர் அல்லது வேறு கட்சியைச் சேர்ந்தவர்கள் விடுதலைப் புலிகளை ஆதரிக்கிறார்கள்; சரியா என்று கேட்பது அவரைப் பொறுத்தவரையில் நியாயமாய் இருக்கிறது. ஆனால், அரசைத் தேவையில்லாமல் வம்புக்கு இழுக்கத் தேவையில்லை. ஏனென்றால், கைது செய்யப்பட்ட எந்த விடுதலைப் புலியையும், 'நீங்கள் விடுதலை செய்யலாம்' என்று நீதிமன்றத்திலே இந்த அரசின் சார்பில், அவர்களுக்காக வக்காலத்து வாங்கியோ, பரிந்துரை கூறியோ, அவர்கள் யாரும் விடுதலை செய்யப்படவில்லை. நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு அவ்வாறு வந்தால் அதற்கு நாங்கள் பொறுப்பல்ல. எனவே, நீதிமன்றத் தீர்ப்பிற்கும், அரசுக்கும் சம்பந்தம் இருப்பதாக அவர்கள் கூறுவது, நீதியையே இந்த அவையிலே நாம் அவமதித்ததாக ஆகிவிடும். ஆகவே, அதை அவர்கள் வலியுறுத்தக் கூடாது என்று கேட்டுக்கொள்கின்றேன். (குறுக்கீடுகள்)

*முற்பகல் 10–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். செங்கோட்டையன், சுருக்கமாக உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்)





**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** ஒரே நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். அவர்கள்தான் சொல்லிவிட்டார்களே! ஆகவே, 25–1–2008 அன்று சென்னை அமைந்தகரையில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினுடைய தலைவராக இருக்கிற திருமாவளவன் பேசிய கருத்து—இந்த நாட்டின் இறையாண்மைக்கு எதிராகவும், இந்த நாட்டில் விடுதலைப் புலிகளை ஊடுருவச் செய்வதற்கும், இந்த நாட்டிலே சட்டம்-ஒழுங்கைச் சீர்குலைப்பதற்கும், இதுபோன்ற கட்சிகள் முனைந்திருக்கின்றன. இதுபோன்ற இயக்கங்களை உடனடியாகத் தடை செய்வதற்கு மத்திய அரசிற்கு இந்த மாநில சர்க்கார் பரிந்துரை செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தி, நான் அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன்: (குறுக்கீடுகள்) சரி, முனைவர் கு. ஜெயக்குமார்.

***முனைவர் கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே விடுதலைப் புலிகளினுடைய நடமாட்டம், அதற்கு ஆதரவாகச் சில இயக்கங்கள் ஏற்பட்டிருப்பதைக் குறித்தும், இந்த அரசினுடைய கவனத்திற்கு இங்கே கருத்தொலிப்பதைக் குறித்தும் இங்கே எழுந்திருக்கின்றேன். ஒரு சில கருத்துகளை எடுத்து வைக்க நான் இங்கே எழுந்திருக்கின்றேன். L.T.T.E. என்பது உலகத்தால் நிராகரிக்கப்பட்ட ஓர் இயக்கம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** மிகச சுருக்கமாகச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிரம்பச் சுருக்கமாகச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அதெல்லாம் சரிதான். (குறுக்கீடுகள்)

**முனைவர் கு. ஜெயக்குமார்:** இந்தியாவில் மட்டும் தடை செய்யப்பட்ட இயக்கம் அல்ல இது. ஈரோப்பியன் யூனியன் இதைத் தடை செய்திருக்கின்றது. இதை மலேசியா தடை செய்திருக்கின்றது. அமெரிக்கா மற்றும் கனடா இங்கிலாந்து தடை செய்திருக்கின்றது. இந்தியா தடை செய்திருக்கின்றது. இப்படித் தடை செய்யப்பட்ட ஓர் இயக்கத்திற்கு ஆதரவாகத் தமிழகத்தில் குரல் கொடுக்கிறார்கள் என்றால், இதை எப்படி நாம் பார்த்துக்கொண்டிருக்க முடியும்?

[முனைவர் கு. ஜெயக்குமார்] [2008 ஜனவரி 29

மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, கடந்த 32 ஆண்டுகளாக இந்த L.T.T.E. இயக்கம் இயங்கி வருகின்றது. அவர்கள் இந்தத் தமிழ் மக்களுக்குச் செய்த ஒரே புண்ணியம், ஒரு இலட்சம் மக்களுக்கும் மேலாகக் கொன்று குவித்திருக்கின்றார்கள். அதிலே பட்டியலிட்டுப் பார்த்தால், தமிழ் மாணிக்கங்கள் என்று சொல்லக்கூடிய தமிழர் தந்தை அமிர்தலிங்கம் அவர்களும், பொன்னம்பலம் போன்றவர்களும், இன்னும் 60 பெரும் தலைவர்களும், இலங்கையிலே கொன்று குவிக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பதை நாடு அறியும். இவர்கள் இந்தக் காலக்கட்டத்திலே, இரண்டு உலகத் தலைவர்களைக் கொன்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, வரலாற்றைத் தவறாகச் சொல்லக் கூடாது. பொன்னம்பலம் அந்தப் பட்டியலில் இல்லை.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு அவைத் தலைவர் மூலமாக, மதிப்பிற்கும், மரியாதைக்கும், போற்றுதலுக்கும், புகழ்தலுக்கும் உரிய மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுக்கு மிகப் பணிவன்போடு நான் தெரிவித்துக்கொள்வது, இது நான் எங்கோ பத்திரிகைகளைப் பார்த்தோ, புத்தகங்களைப் பார்த்தோ கொண்டு வந்த செய்தி அல்ல. 'website'-லே பார்த்தேன். அதில் பொன்னம்பலம் பெயரும் இடம் பெற்றிருக்கின்றது என்பதை மிகப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் 'website'-லே பார்த்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** நான் மறுபடியும் நண்பரைத் திருத்த விரும்புகிறேன். அமிர்தலிங்கம் கொல்லப்பட்டார், ஒப்புக்கொள்கிறேன். ஆனால், ஜி. பொன்னம்பலம் ஒரு பெரிய வழக்கறிஞர். அவர் இந்தப் போராட்டத்திலே வெளியிலிருந்து ஆதரவு தந்தாரே தவிர, போராட்டத்தில் ஈடுபட்டவர் அல்லர். சமரசத் தூதுவராகச் சென்றவரும் அல்லர். அவர் இயற்கையாக இறந்தார். அவர் பலியானார் என்று சொல்வதும், போராளிகள் அவரைக் கொன்றார்கள் என்று சொல்வதும் சரியான சரித்திரம் ஆகாது.



2008 ஜனவரி 29]

**முனைவர் கு. ஜெயக்குமார்:** இந்த 60 தலைவர்களிலே பொன்னம்பலம் ஒருவர் இல்லை என்றால், மீதி 59 தலைவர்களையாவது அவர்கள் கொன்றார்கள் என்பதை நாம் இந்த அவையிலே ஏற்றுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஏதோ இந்த விடுதலைப் புலிகளுக்காக ஒரு சிலர் இங்கு ஆதரவு கொடுக்கின்றார்கள் என்பதன்மூலம், அவர்கள் தமிழர்களை எல்லாம் ஆதரிக்கின்றார்கள் என்று பொருள் அல்ல. தமிழர்கள் இலங்கையிலே நன்றாக இருக்க வேண்டும்; சிறப்பாக வாழ வேண்டும்; அமைதியாக இருக்க வேண்டும் என்பதிலே காங்கிரஸ் கட்சியும், காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர்களும், யாருக்கும் இரண்டாமானவர்கள் அல்லர். குறிப்பாக, அன்றைக்குத் தமிழர்கள் எல்லாம் இலங்கையிலே தாக்கப்பட்டபொழுது இந்திய அரசானது இலங்கையின் இறையாண்மையை மீறி அங்கே இருக்கின்ற தமிழர்களுக்கு உணவுப் பொட்டணங்களைக் கொண்டுபோய் விமானத்தின்மூலம் விநியோகித்தது என்பதை எல்லோரும் நன்றாக அறிவோம்.

*முற்பகல் 10–55*

அது மட்டுமல்ல; நேற்றையதினம் நம்முடைய பாரதப் பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள் இலங்கைக்குச் செல்லக்கூடாது என்று நாம் ஒரு வேண்டுகோளை வைத்த மாத்திரத்திலே, 'நான் அங்கே செல்லவில்லை' என்று தமிழக மக்களுடைய உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுத்து அந்தப் பயணத்தையே இரத்துச் செய்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் ஒருபடி அதிகமாக எடுத்துச் சொல்லவேண்டும் என்றால், அன்றையதினம் இளைஞர்கள் இதயத்திலே நீங்கள் இடம் பெற்றிருக்கின்ற எங்களுடைய ஒப்பற்ற தலைவர் ராஜீவ் காந்தி அவர்கள் ஜெயவர்த்தனேயுடன் ஒப்பந்தம் செய்துகொண்ட காலக்கட்டத்திலே சொல்லுகின்றார்: "எந்த அளவுக்குத் தமிழ்நாட்டிலே இருக்கின்ற தமிழக முதல்வருக்கு அதிகாரம் இருக்கின்றதோ, அந்த அளவு அதிகாரத்தை அங்கே இலங்கையிலே இருக்கின்ற தமிழ்த் தலைவர்களுக்கு நான் வாங்கிக் கொடுப்பேன்" என்று உத்தரவாதம் தந்தவர் அருமைத் தலைவர் ராஜீவ் காந்தி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மனித நேயத்தை எடுத்துச் சொல்லவேண்டுமென்றால், இந்திய அரசியலிலே மகா சக்தியாக, ஒப்பற்ற தலைவியாக இன்றைக்கு வாழ்ந்துகொண்டிருக்கின்ற அன்னை சோனியா காந்தி அம்மையார் அவர்களிடத்தில் காங்கிரசில் உள்ள எல்லோரும் அன்று சொன்னார்கள்; காங்கிரஸ் தலைவர்கள் சொன்னார்கள்; ராஜீவ் காந்தியைக் கொன்றவர்களை விடக்கூடாது;

தூக்குத் தண்டனை கொடுக்கப்பட்டிருக்கின்றது; தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட வேண்டும் என்று சொன்ன காலக்கட்டத்திலே, நானும் அந்த இடத்திலே இருந்தவன். அம்மையார் அவர்கள் சொல்லுகின்றார்கள்; மனித நேயத்தின் தனிப்பெரும் தலைவி சொல்லுகின்றார்கள்: 'யார் வேண்டுமானாலும் தண்டிக்கப்படலாம்; ஆனால், ஒரு குழந்தை, தண்டனைமூலம் அங்கே அனாதையாகிவிடக்கூடாது; எனவே அந்த நளினி என்ற பெண்மணிக்குத் தூக்குத் தண்டனை கொடுக்க வேண்டாம்' என்று சொல்லுகின்ற ஓர் ஒப்பற்ற தலைவியாக அன்னை சோனியா காந்தி அம்மையார் அவர்கள் இருந்திருக்கின்றார்கள் என்பதை, (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே கோழைத்தனமாக ஆதரித்துக்கொண்டிருக்கின்ற ஒரு சில இயக்கங்களுக்கு நான் தெள்ளத்தெளிவாக எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஏதோ காங்கிரஸ் கட்சி என்பது ஏளனமான கட்சி என்றும், எப்படியும் நகைத்துப் பேசிவிடலாம் என்றும் நினைத்துக்கொண்டால், அது பொய்யாக்கப்படும். 17 வருடம் ஆகின்றது ராஜீவ் காந்தி இறந்த பிறகு. இதை ஏன் இப்பொழுது பெரிதுபடுத்துகின்றார்கள் என்றால், 17 ஆயிரம் ஆண்டுகளானாலும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் தொண்டர்களுடைய மனதிலே ஏற்பட்டு இருக்கின்ற வடு மறையாது; நீங்காது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏன், நம்முடைய மதிப்பிற்குரிய முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள்கூட, ராஜீவ் காந்தி அவர்கள் அன்று கொல்லப்பட்டபோது, எழுதுகின்றார்: "சகாப்தம் படைக்க வேண்டிய ஒரு வாழ்க்கை முடிந்து விட்டது; ஒரு இளைஞருடைய வாழ்க்கை முடிந்துவிட்டது; இது சகாப்தம் படைக்க வேண்டிய ஒரு வாழ்க்கையாக இருந்திருக்கவேண்டும்" என்று மனம் வருந்தி எழுதியதை இன்றைக்கு இந்தச் சபையிலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தலைவர் அவர்களே, L.T.T.E.–யை ஆதரித்து இங்கே பேசுகின்றவர்கள் சொல்லுகின்றார்கள்: "இந்த L.T.T.E.–ஐத் தடை செய்ய வேண்டும் என்று கூறுவதற்கு யாருக்காவது உரிமை இருக்கிறது என்றால், அதைத் தடை செய்யக்கூடாது என்று கூறுவதற்கும் எங்களுக்கு உரிமை இருக்கின்றது" என்று ஆணவத்தோடு பேசுகின்றார்கள். இந்த L.T.T.E. இயக்கத்தை காங்கிரஸ் இயக்கம் தடை செய்யவில்லை; இந்திய அரசு தடை செய்திருக்கின்றது. இந்திய அரசு தடை செய்த ஓர் இயக்கத்தை ஆதரித்ததற்காகத்தான், ஒருவர் 3½ ஆண்டு சிறையிலே வைக்கப்பட்டார். இங்கே ஒரு கருத்தை நான் சொல்லவேண்டும்.





அன்றைக்குப் 'பொடா'விலே வைகோ அவர்கள் கைது செய்யப்பட்டபொழுது, என்னிடம் வந்து, 'கையெழுத்துப் போடுங்கள், அவரை விடுதலை செய்ய வேண்டும்' என்று ஒரு கோடி கையெழுத்துகளில் எனதும் ஒன்றாக இருக்கவேண்டும் என்று கேட்ட காலக்கட்டத்திலே, "அவர் உள்ளே இருக்க வேண்டியவர்; நான் கையெழுத்துப் போட முடியாது; சட்டத்தை மீறியவர்; பாராளுமன்ற உறுப்பினர், நாட்டிலே தடை செய்யப்பட்ட ஓர் இயக்கத்திற்குத் துணைபோகின்றார் என்றால், அவரை எப்படி வெளியே விடுவது; கைது செய்தது சரிதானே!" என்று கையெழுத்துப் போடாமல் திருப்பி அனுப்பிய காங்கிரஸ்காரன் நான் என்பதை இந்த நேரத்திலே பதிவு செய்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். எனவே, மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழகத்திலே இந்த இயக்கத்தை ஆதரித்துப் பேசுகின்றவர்கள் சட்டத்தை மீறுபவர்கள்; தாங்கள் சட்டத்திற்கும் மேலானவர்கள் என்ற நினைப்பு உடையவர்கள். அத்தகைய நினைப்பு உடையவர்கள் இத்தகைய கூட்டத்தை ஏற்பாடு செய்திருக்கின்றார்கள் என்று கடந்த 24 ஆம் தேதி என்னுடைய இளவல் மாண்புமிகு ஞானசேகரன் அவர்கள் இந்த அவையிலே குரல் கொடுக்கின்றார். அந்தக் கூட்டம் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்று சொல்லுகின்றார். "இங்கே விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக யாரும் பேசக் கூடாது; இது இந்திய அரசுக்கே எதிரானது; இந்திய இறையாண்மைக்கே சவால் விடுகின்ற ஒரு பேச்சு" என்று அன்று திரு. ஞானசேகரன் அவர்கள் இந்தச் சபையிலே குறிப்பிட்ட பிறகும். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார், என்ன சொல்ல வேண்டுமோ அந்தக் கருத்தைச் சுருக்கமாகச் சொல்லி முடியுங்கள்.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** திரு. ஞானசேகரன் அவர்கள் இந்தச் சபையிலே அத்தகைய கருத்தை எடுத்து வைத்து, அப்படி ஒரு கூட்டம் நடக்க இருக்கின்றது, அதைத் தடை செய்ய வேண்டும் என்று சொன்ன பிறகும், எப்படி இந்தக் கூட்டத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டது என்பதை நான் அறிய விரும்புகின்றேன் என்று கூறி, அமர்கின்றேன். (குறுக்கீடு)

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள்.

*முற்பகல் 11–00*

**திரு. கு. செல்வம்:** நான் ஒரே நிமிடத்திலே கருத்தைச் சொல்லிவிடுகிறேன். *(குறுக்கீடு)* எங்கள் கட்சியின் சார்பாக நான் ஒரு கருத்தைச் சொல்லிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய இறையாண்மைமீது எங்களுக்கு மிகப் பெரிய நம்பிக்கை இருக்கிறது. அதேபோன்று காங்கிரஸ் பேரியக்கத்தை மதிக்கின்ற கட்சி எங்களுடைய கட்சி; எங்கள் தலைவரும் அதை மதிக்கக்கூடிய தலைவர். ஆனால் ராஜீவ் காந்தி அவர்கள் படுகொலையை நாங்கள் ஆதரிப்பது போலவும், இந்திய இறையாண்மையைச் சீர்குலைப்பது போலவும் உள்ள வாதம் தேவையில்லாத வாதம். நாங்கள் என்ன சொல்கிறோம் என்றால், இந்திய நாட்டிலே ஒரு கருத்துரிமை மறுக்கப்படுகிறது என்றால், அந்தக் கருத்துரிமைக்கு ஆதரவாகக் குரல் கொடுப்பது ஒவ்வொரு இந்தியனின் கடமையாகும். நாங்கள் என்ன சொல்கிறோம்? மாண்புமிகு உறுப்பினர் இங்கே பேசினார். விடுதலைச் சிறுத்தைகள் என்பது *(குறுக்கீடுகள்)* நான் சொல்லிவிடுகிறேன். *(குறுக்கீடுகள்)* நான் பேசிய பிறகு பேசுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செல்வம், முதல்வர் பதில் சொல்லட்டும். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)*

**திரு. கு. செல்வம்:** உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பிலே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செல்வம், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* எல்லோரும் உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சர் பதில் சொல்லப் போகிறார்கள். *(குறுக்கீடுகள்)* எல்லோரும் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* No, எல்லோரும் உட்காருங்கள். பீட்டர், ஞானசேகரன், எல்லோரும் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* செல்வம், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* எல்லோரும் உட்காருங்கள். முதல்வர் பதில் சொல்கிறார், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* என்ன கேட்கப் போகிறீர்கள்? *(குறுக்கீடுகள்)* என்ன வேண்டும்? *(குறுக்கீடுகள்)* பேரவை முன்னவர். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு அமைச்சர். *(குறுக்கீடுகள்)*

*(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் எழுந்து நின்று கோஷமிட்டனர்.)*





பீட்டர், எல்லோரையும் உட்காரச் சொல்லுங்கள். *(குறுக்கீடுகள்)* முதல்வர் பதில் சொல்லட்டும். முதல்வர் என்ன பதில் சொல்லப் போகிறார் என்பது தெரியாமல் நீங்கள் கோஷமிட்டுக்கொண்டிருந்தால் எப்படி? *(குறுக்கீடுகள்)* உட்காரச் சொல்லுங்கள் முதலில்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுடைய உணர்வை நான் அறியாதவன் அல்ல. அவர்கள் ஏறத்தாழ ஒரு வார காலமாகவே சென்னையிலும், மற்ற இடங்களிலும் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளைப் பற்றி, அவற்றையெல்லாம் ஏதோ இந்த அரசு அனுமதிப்பதுபோல கருதிக்கொண்டு, இங்கே அந்தக் கருத்துகளை எதிர்க்கும்பொழுதும் அரசின்மீது தங்களுக்கு உள்ள வருத்தத்தை வெளியிட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் நான் அவர்களுக்கு ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அருமை நண்பர் திருமாவளவனும் மற்றும் விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசுகின்ற இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் யாராக இருந்தாலும், அவைகளைச் சட்ட ரீதியாகத்தான் சந்திக்க வேண்டியிருக்கின்றது; வேறு வழி இல்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். 'பொடா' சட்டம் பயன்படுத்தியும்கூட, அந்தப் 'பொடா' சட்டத்தைப் பயன்படுத்தியது சரியா, அல்லவா என்ற வினா எழுந்தபோது, உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு அதுபற்றி என்ன வெளிவந்தது என்றால், 'தடை செய்யப்பட்ட எந்த ஓர் இயக்கத்திற்கும் ஆதரவாகப் பேசப்படும் பேச்சு குற்றம் ஆகாது' என்று உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பிலே ஒரு வரி வெளிவந்திருக்கிறது. குற்றம் ஆகாது என்பதற்காக, இப்பொழுது இங்கே ஞானசேகரன் அவர்கள் எடுத்துக்காட்டிய அந்த வார்த்தைகள், அந்த வாசகங்கள், முன்னாள் முதலமைச்சரைப் பற்றி அல்லது இப்பொழுது விடுதலைப் புலிகளை ஆதரித்துக்கொண்டிருப்பவர்களைப் பற்றிச் சொல்லப்பட்ட இந்த வாசகங்களை எல்லாம் பேசலாம் என்று பொருள் அல்ல. அது எங்கே கொண்டு போய்விடும் என்பதையும் நாம் அறியாதது அல்ல. அதை நான் ஆதரிப்பவனும் அல்ல.

*முற்பகல் 11–05*

இப்பொழுதுள்ள பிரச்சினை, காங்கிரஸ் கட்சி நண்பர்களும், எங்களுடைய தோழமைக் கட்சி நண்பர்களாக இருக்கின்ற சிலரும்— காங்கிரஸ் தோழமைக் கட்சி அல்ல என்று பிரித்துச் சொல்லவில்லை—இப்போது இந்த அணியில் விடுதலைப் புலிகளை ஓரளவு ஆதரித்திருக்கின்ற அணியில் காங்கிரஸ் கட்சி வேறாக, திராவிட

முன்னேற்றக் கழகத்தினுடைய தோழமைக் கட்சிகள் வேறாகக் கருத்துகளைச் சொல்கின்ற கட்சிகளாக இருப்பதை நாங்கள் மிக நன்றாக அறிகிறோம். இதில், அரசு நடத்துகின்ற எங்களுக்கு இருக்கின்ற தர்மசங்கடத்தை நான் வெளியிடாமல் இருக்க முடியாது. நடவடிக்கை எடு என்கின்றீர்கள்; நடவடிக்கை எடுக்காத காரணத்தால், விடுதலைப் புலிகளுடைய, அவர்களுடைய செயல்பாடுகளை நாங்கள் ஆதரிக்கிறோம்; அதை ஆதரிப்பவர்களை ஆதரிக்கிறோம் என்று கருத்துச் சொல்கிறீர்கள்; கருத்து வெளிப்படுத்துகிறீர்கள். அல்ல.

இதே அவையில் கடந்த முறை ம.தி.மு.க. நண்பர்களைப்பற்றி இங்கே பிரச்சினை எழுந்தபோது, நான் மிக விரிவாக, விவரமாக என்னுடைய நிலைமையை, இந்த அரசினுடைய நிலைமையை, திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலைமையை வெளியிட்டிருக்கிறேன். அதிலிருந்து எந்த மாற்றமும் எப்போதும் கிடையாது; இருக்கப் போவதும் இல்லை. இந்தப் பிரச்சினையை இரண்டு பிரிவாகப் பார்க்க வேண்டும்; பகுத்துப் பார்க்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். ராஜீவ் காந்தியினுடைய மரணத்திற்குப் பின், கொலைக்குப் பின், ராஜீவ் காந்தி உயிரோடு இருந்த காலம் என்ற இரண்டு காலமாகப் பிரித்துப் பார்க்க வேண்டும் என்று சொல்லி, இரண்டு காலத்தையும் ஒப்பிட்டு, நாம் எந்த முறையிலே இந்தப் பிரச்சினையை அணுக வேண்டும் என்றும் குறிப்பிட்டிருக்கிறேன். அதிலிருந்து நான் என்னுடைய கருத்து எதையும் மாற்றிக்கொள்ளவில்லை; மாற்றிக்கொள்ளப் போவதும் இல்லை. அதை நான் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுக்கு உறுதியாக, தெளிவாகச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதே நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தோழமைக் கட்சிகளாக இருக்கின்ற கட்சிகளில் சிலர், குறிப்பாக நம்முடைய நண்பர் திருமாவளவனுடைய தலைமையிலே இருக்கின்ற விடுதலைச் சிறுத்தைகளானாலும் சரி அல்லது வேறு அப்படிப்பட்ட இயக்கங்களானாலும் சரி, அவர்களும் இதுபோன்ற செய்திகள்--அவர்கள் இப்படிப் பேசினார்கள் என்ற இத்தகைய செய்திகள்--வராமல் தங்களுடைய கூட்டங்களை நடத்துவது, பார்த்துக்கொள்வது அவர்களுக்கு நல்லது, எங்களுக்கும் நல்லது. எங்களுக்கும் நல்லது என்று சொன்னால், ஏதோ அரசை எப்படியாவது காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்ற சூழ்நிலையிலே நான் சொல்வதாக யாரும் கருதக் கூடாது. பொதுவாகத் தமிழகத்திலே எல்லோரும் சேர்ந்து ஓர் அமைதியைக் கட்டிக் காத்திட வேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சொல்கின்றேன். அதிலே எந்தவிதமான ஊனமும் வந்துவிடாமல் நாம் அனைவரும் சேர்ந்து பார்த்துக்கொள்ள வேண்டும்.





ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டுவிட்டார்; மறைந்துவிட்டார்; இன்று இல்லை. அவரை நினைவுகூர்கிறோம்; அவரை நாம் என்றைக்கும் மதிக்கிறோம்; அன்றைக்கும் மதித்தோம். எனக்கும், அவருக்கும் தேர்தல் நேரத்திலே மேடைக்கு மேடை சொற்போர் நடைபெற்றாலும்கூட, நான் அவரை என்றைக்கும் மதிக்கத் தவறியவன் அல்ல. அதைப்போல அவரும் மனிதாபிமானத்தை இழந்தவர் அல்ல. அதற்கு மதிப்புக் கொடுத்தவர்தான். அப்படிப்பட்ட ஓர் இளம் தலைவர், பெரிய தலைவர்--இளம் தலைவர் என்றாலும் பெரிய தலைவர். அவருடைய மறைவை நாம் அலட்சியப்படுத்த முடியாது. அந்தச் சம்பவத்தை யாரும் அவ்வளவு சுலபத்திலே மறந்துவிட முடியாது. ஆகவே, ஒரு சரித்திரம் ஆகிவிட்ட சகாப்தம் அவர். ஆகவே, அவருக்காக நாம் இன்றைக்குத் தொடர்ந்து கண்ணீர் விட்டுக்கொண்டிருக்க வேண்டுமா என்று கேட்பது, விடுதலைப் புலிகளுடைய கொள்கையை ஆதரிக்கின்ற அளவிற்குத் தீவிரத்தைக் காட்டுவதாக இன்றைக்கு அமைந்திருக்கிறது. இன்னமும் ஞானசேகரன் அழுதுகொண்டே இருப்பாரா; பல் விளக்க மாட்டாரா என்றெல்லாம் கேட்கவில்லை என்று சொல்கிறார்கள். கேட்டிருந்தால் அது தவறுதான். அதைப்போல, முன்னாள் முதலமைச்சர் இந்த 17 ஆண்டுகளுக்குப் பிறகு உடல் இளைத்துவிட்டாரா என்று கேட்டிருப்பதாகப் பத்திரிகையிலே வந்த செய்தியானாலும் அல்லது இங்கே எடுத்துக் கூறிய செய்தியானாலும் வருந்தத்தக்கவைதான். நான் அவற்றை எல்லாம் ஏற்றுக்கொள்பவன் அல்ல. ஆனால், நாம் தொடர்ந்து ஒருவருக்கொருவர் வார்த்தைகளை மாறி, மாறிப் பயன்படுத்தி, நிலைமையை வக்கிரமாக ஆக்கிவிடக் கூடாது என்பதுதான் என்னுடைய கருத்து.

என்ன செய்ய வேண்டும்? இதைத் தடுக்க வேண்டும். இப்போது ஞானசேகரன் இங்கிருந்து குரல் கொடுத்தார். 'கைது செய், கைது செய்' என்று சொன்னார். அவரும் வழக்கறிஞர்தான். விடுதலைப் புலிகளை ஆதரித்தோ அல்லது சில சம்பவங்களை ஆதரித்தோ பேசிவிடுவதால் கைது செய்வதற்குச் சட்டத்திலே இடம் இருக்கிறதா என்றும் பார்க்கவேண்டும். நான் கை கழுவிவிடவில்லை; சட்டத்திலே இடமில்லையென்று சொல்லித் தப்பித்துக்கொள்ள விரும்பவில்லை. யாராக இருந்தாலும் சரி, சட்டத்தை மீறி நடந்துகொண்டால், சட்டப்படி எடுக்கவேண்டிய நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும் என்பதை நான் உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு--தடை

[2008 ஜனவரி 29

## 3. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் திரு. கரி. இராமசாமி, சொல்லுங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *2007–2008* ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் எழுபத்து நான்கு முதல் எழுபத்தொன்பது வரையிலான ஆறு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன். (குறுக்கீடுகள்)

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (அ) விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திரு. தொல். திருமாவளவன், மாநாடு ஒன்றில் உரையாற்றியது—தொடர்ச்சி

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பொடா' சட்டத்தில் கைது செய்யப்பட்டவர்கள் குறித்து உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு இருக்கிறதே தவிர. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.ஏ. செங்கோட்டையன், நீங்கள் உட்காருங்கள். உங்களை நான் கூப்பிடவில்லை, உட்காருங்கள்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் அவையிலிருந்து வெளியேறினர்.)

### (இ) தமிழ்நாட்டில் சில அரசியல் கட்சித் தலைவர்கள் உள்ளிட்ட சிலரின் தொலைபேசிகளைத் தமிழ்நாடு காவல் புலனாய்வுப் பிரிவு ஒட்டுக் கேட்பதாக வந்துள்ள பத்திரிகைச் செய்தி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்சினை; அது குறித்துப் பேசுகிறேன்; வேறொன்றுமில்லை.



2008 ஜனவரி 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கையைப்பற்றி மட்டும் சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று ஓர் ஆங்கிலச் செய்தித்தாளிலே முக்கியமான செய்தி வந்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கையைப்பற்றிச் சொல்லுங்கள். நீங்கள் அறிக்கையைக் கொடுக்கிறீர்களா?

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னுடைய அறைக்கு வாருங்கள், பேசிக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்) அறிவிப்புக் கொடுக்காமல் எடுத்துக்கொள்ள முடியாது. பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கை அளித்தல், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, முக்கியமான பிரச்சினையைப்பற்றிச் சொல்கிறோம். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரச்சினை குறித்து . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லாமே முக்கியம்தான், உட்காருங்கள். நான் சொல்வதை மட்டும் நீங்கள் கேளுங்கள். திரு. ஜி.கே. மணி, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர், பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கையைப் பேரவைக்கு அளியுங்கள். (குறுக்கீடுகள்) அறிக்கையைக் கொடுங்கள், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) வேறு subject-க்குப் போய் ஆகிவிட்டது; இனிமேல் எடுக்கமுடியாது, உட்காருங்கள்.

*முற்பகல் 11–15*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆங்கிலச் செய்தித்தாளிலே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் குழு அறிக்கையைப் படிக்காவிட்டால் நான் அதை ஒத்திவைத்துவிடுவேன். அடுத்ததை எடுத்துவிடுவேன். (கூச்சல்—குழப்பம்) பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, நீங்கள் பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கையை அளிக்கிறீர்களா?

செய்யப்பட்ட எந்தவொரு இயக்கத்திற்கும் ஆதரவாகப் பேசப்படும் பேச்சு என்பது குற்றமாகாது' என்று உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பில், இந்த 'பொடா' சட்டத்தைப்பற்றிய விசாரணையின்போது வெளியிடப்பட்டிருக்கிற காரணத்நால், அதையெல்லாம் பார்த்து நாம் நடவடிக்கை எடுக்கவேண்டும். இப்போதும் ஒன்றும் ஆகிவிடவில்லை. இதற்குப் பிறகு இப்போது தமிழகத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற இத்தகைய செயல்கள்பற்றி, தக்க, திறமையான, கற்றறிந்த வழக்கறிஞர்களுடைய குழுவிலே ஆராய்ந்து, அதைத் தடுப்பதற்கு ஒரு சட்டம் செய்ய வேண்டுமேயானால், அதற்கும் இந்த அரசு தயாராக இருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் தெரிவித்துக்கொண்டு, அதுபற்றி உங்களுடைய கருத்துகளையெல்லாம் தெரிவியுங்கள் என்று உங்களையெல்லாம் கேட்டுக்கொண்டு, இந்தளவில் இன்றைய பிரச்சினையை சுமுகமாக முடிப்பது நமக்கும் நல்லது, நாட்டிற்கும் நல்லது என்று உங்களையெல்லாம் கேட்டுக்கொள்கின்றேன், நன்றி, வணக்கம். (குறுக்கீடுகள்)

*முற்பகல் 11-10*

## (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடிந்தது. அது சம்பந்தமாக இனி எந்தப் பேச்சும் கிடையாது. (குறுக்கீடுகள்) மற்றவையெல்லாம் பிறகு எடுத்துக்கொள்ளப்படும். (குறுக்கீடுகள்) குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். (குறுக்கீடுகள்) பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். (குறுக்கீடுகள்) இல்லை. மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதில் அளித்ததற்குப் பிறகு, அந்த subject–லே யாரும் பேச முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மற்ற விஷயங்களையெல்லாம் நாளைக்குப் பார்க்கலாம். (குறுக்கீடுகள்) பிறகு பார்ப்போம். குழுக்களின் அறிக்கை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல், மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, பொதுக் கணக்குக் குழுவின் தலைவர். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேறு subject எதுவும் இப்போது இல்லை, பிறகு எடுத்துக்கொள்ளப்படும். (குறுக்கீடுகள்)



**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பின்னர் பார்ப்போம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கரி. இராமசாமி, நீங்கள் எழுந்து குழுக்களின் அறிக்கையைக் கொடுக்கிறீர்களா, இல்லையா? (குறுக்கீடுகள்) மற்ற subjects–ஐ எல்லாம் பிறகு பார்ப்போம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) Mr. K.R. Ramasamy, என்ன சொல்கிறீர்கள்?

**திரு. கரி. இராமசாமி:** வரிசையாக நிற்கிறார்கள். அதனால்தான்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) Notice வேண்டும். Notice இருந்தால்தான் முடியும். (குறுக்கீடுகள்) Notice இல்லாமல் முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) Mr. K.R. Ramasamy, நீங்கள் பேசுங்கள். உங்களுக்குத்தான் mike கொடுக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) திரு. ஜி.கே. மணி, நீங்கள் ஒரு senior member, உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்றுக்கொள்ளமுடியாது. முதலில் உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முறையான அறிவிப்பு இல்லாமல் மற்ற எவற்றையும் எடுத்துக்கொள்ளமுடியாது. மற்றவை தொடர்பாகப் பேச என்னுடைய அறைக்கு வாருங்கள், அப்புறம் பேசிக்கொள்ளலாம். திரு. சி. ஞானசேகரன், முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**திரு. தி. வேல்முருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி**: பேரவைத் தலைவர் அவர்களே, முக்கியமான அரசியல் கட்சித் தலைவர்கள். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. பீட்டர் அல்போன்ஸ், உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பத்திரிகையாளர்கள், வழக்கறிஞர்கள் போன்றவர்களின் தொலைபேசிப் பேச்சுக்களை ஒட்டுக் கேட்பதாகச் செய்திகள் வந்திருக்கின்றன. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அறிக்கை கொடுப்பதாக இருந்தால் சொல்லுங்கள். இல்லாவிட்டால் நான் அடுத்த subject-க்குப் போகிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. ஜி.கே. மணி, பேசுங்கள். திரு. ஞானசேகரன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சரி, நீங்கள் உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே இருக்கிற அரசியல் கட்சித் தலைவர்கள், பத்திரிகையாளர்கள், வழக்கறிஞர்கள், பல்வேறு அமைப்புகளைச் சார்ந்தவர்களின் தொலைபேசிகளையெல்லாம் நம்முடைய தமிழ்நாடு காவல் புலனாய்வுப் பிரிவு ஒட்டுக் கேட்பதாக மிகப் பெரிய ஒரு செய்தி வந்திருக்கிறது. இந்தச் செய்தித்தாளிலே, யாருடைய தொலைபேசி இணைப்புகள் ஒட்டுக் கேட்கப்படுகின்றன என்று பட்டியலிட்டு, தொலைபேசி எண்களெல்லாம்கூட வந்திருக்கின்றன. எங்களுடைய நிறுவனர் மருத்துவர் அய்யா அவர்களுடையது, என்னுடைய தொலைபேசி, எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் வேல்முருகன், அரசியல் கட்சிகளைச் சார்ந்த தலைவர்கள், வழக்கறிஞர்கள், இன்னும் பல அமைப்புகளைச் சார்ந்த தலைவர்களின் எண்களையெல்லாம் வெளியிட்டு, ஒட்டுக் கேட்பதாகச் செய்தி வந்திருக்கிறது.

கடந்த ஆட்சிக் காலத்தில், தி.மு.க. வரிசையிலேகூட நாங்களெல்லாம் சேர்ந்து சொன்னோம். இப்படி ஒட்டுக் கேட்பது முறையா என்று சொன்னோம். மத்தியிலே இருக்கிற ஆட்சிகூட சொல்லியிருக்கிறது. தொலைபேசி ஒட்டுக் கேட்பது தடை செய்யப்படவேண்டும்; எங்கும்





ஒட்டுக் கேட்கக்கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதனால், எதற்காக இதைச் செய்கிறார்கள்? காவல் துறைப் புலனாய்வுப் பிரிவுக்கு இதுதான் வேலையா? நாட்டில் கொலை, கொள்ளை, ஆள் கடத்தல், எவ்வளவு நடந்துகொண்டிருக்கிறது? அந்த வேலையைப் பார்க்கலாம். இன்றைக்குக் கூலிப் படை பெருகியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி**: முதலில் அந்தச் செய்தி உண்மையானதா என்பதைத் தெரிந்துகொண்டு அப்புறம் நீங்கள் ஒரு மணி நேரம்கூட பேசலாம். நான் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன். (குறுக்கீடு) முதலில் அந்தச் செய்தி உண்மையா? அல்லவா? பொய்ச் செய்தியைப் பரப்புவதற்குப் போட்டி போட்டுக்கொண்டு, சில பத்திரிகைகள் விளம்பரத்திற்காக, வியாபாரத்திற்காக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அவற்றிலே ஒரு பத்திரிகை, நீங்கள் குறிப்பிடுகிற அந்த ஆங்கிலப் பத்திரிகை. அது எனக்கு நன்றாகத் தெரியும். அந்த ஆங்கிலப் பத்திரிகை எப்படிச் சென்னைக்கு வந்தது, ஏன் வந்தது, யாரால் வந்தது என்றெல்லாம் எனக்கு நன்றாகத் தெரியும். அந்தப் பத்திரிகையிலே வந்திருக்கின்ற இந்தச் செய்தியை வைத்துக்கொண்டு—எத்தனையோ பொய்ச் செய்திகளைக் கொடுக்கிறார்கள், அந்தப் பத்திரிகையிலே. பத்திரிகையில் வருகின்ற செய்திகள் எல்லாம் உண்மையா? உங்கள் பத்திரிகை, பா.ம.க. பத்திரிகையிலே, 'தமிழ் ஓசை' பத்திரிகையிலேகூட முந்தாநாள் 'கனிமொழி மந்திரி ஆகிறார்' என்று போட்டிருக்கிறது. உண்மையா அது? அதே மாதிரிதான் இந்தச் செய்தி.

**திரு. ஜி.கே. மணி**: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உணர்ச்சிவசப்பட்டுச் சொல்கிறார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, நீங்கள் பத்திரிகையில் வந்திருக்கிற செய்தி உண்மையா என்று மட்டும் கேட்டுவிட்டு, உட்காருங்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி**: நான் உணர்ச்சிவசப்படவில்லை. உணர்ச்சி இருப்பதால் சொல்லுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, வந்த செய்தியைச் சொல்லுகிறேன். தவறானதா, இல்லையா என்று. . .

[2008 ஜனவரி 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அது உண்மையா, இல்லையா என்று மட்டும் கேட்டுவிட்டு, நீங்கள் உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, இல்லை. அரசுத் தரப்பிலே சொல்லவேண்டும். அதற்காகத்தான் கேட்கிறேன். காவல் துறைப் புலனாய்வுப் பிரிவு இப்படிச் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறதா? அனுமதிக்கப்படவில்லையா? அவர்களே.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி**: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சட்டசபைத் தலைவர் திரு. மணி அவர்கள் எழுப்பியுள்ள இந்தப் பிரச்சினை அடிப்படையற்ற ஒன்று. ஆனால், அவருக்கு அடிப்படையாக இருப்பது பத்திரிகையிலே வந்த செய்தி. பத்திரிகையிலே வந்த செய்தி அடிப்படையற்ற ஒன்று. இந்தச் செய்தியைப்பற்றி நான் உடனடியாக விசாரித்து அறியுமாறு அதிகாரிகளிடத்திலே கேட்டிருக்கின்றேன். எனக்கு வந்த குறிப்பைப் படித்துக் காட்டுகிறேன்:

ஆங்கில நாளிதழ் ஒன்றில் 29-1-2008 அன்று, மாநில உளவுப் பிரிவு, அரசியல்வாதிகள் மற்றும் சிலருடைய தொலைபேசிகள் கண்காணிக்கப்படுவதாகச் செய்தி வந்துள்ளது. இது ஒரு விஷமத்தனமான செய்தியாகும். இந்திய நாட்டின் இறையாண்மைக்கும், பாதுகாப்புக்கும், தேச நலனுக்கும் எதிராகச் செயல்படுபவர்கள் என்று சந்தேகப்படும் பயங்கரவாதிகள், தீவிரவாதிகள், அடிப்படைவாதிகள் மற்றும் அவர்களோடு தொடர்புடையவர்கள் ஆகியோரின் செயல்கள் மாத்திரமே கண்காணிக்கப்பட்டு, தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேற்சொன்ன நாளிதழில், சில அரசியல்வாதிகள் மற்றும் சிலருடைய தொலைபேசிகள் கண்காணிக்கப்படுவதாக வந்துள்ள செய்தி யூகத்தின் அடிப்படையிலே வெளியிடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. அரசுக்குக் களங்கம் கற்பிக்கும் நோக்கத்தோடு, வேண்டுமென்றே, திட்டமிட்டு விஷமத்தனமான இச்செய்தியை வெளியிட்டிருக்கிறார்கள்.

இதுதான் எனக்கு வந்த செய்தி. இதுதான் மறுப்பு. (குறுக்கீடுகள்)

*முற்பகல் 11-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, உங்களுக்குப் பதில் சொல்லியாகிவிட்டது. (குறுக்கீடுகள்) திரு. ஞானசேகரன், உங்களுக்கு என்ன? பேசுங்கள்.



2008 ஜனவரி 29]

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி.

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே....

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, தெளிவான விளக்கம் சொன்ன பிறகும் நீங்கள் எழுந்திருந்து நின்றுகொண்டிருக்கிறீர்கள். நன்றி சொல்லியாகிவிட்டது அல்லவா? உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) நான் பேசிய பிறகு வேண்டுமானால் அவர் பேசலாம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, வேறு Subject ஏதாவது இருக்கிறதா இதிலே? உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடு) மற்ற subject எதுவும் இப்போது இல்லை, உட்காருங்கள்.

### (அ) விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திரு. தொல். திருமாவளவன், மாநாடு ஒன்றில் உரையாற்றியது—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு நீண்ட விளக்கத்தை அவைக்குத் தந்தார்கள். அதிலே, ஏற்கெனவே உச்ச நீதிமன்றம் POTA வழக்கில் தீர்ப்புச் சொல்லுகிறபொழுது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், அந்தப் பொருள்பற்றிப் பேசி முடிக்கப்பட்டது. முதல்வர் அவர்கள் பதிலும் சொல்லியாகிவிட்டது. (குறுக்கீடுகள்) திரும்பத் திரும்ப எழுப்பினால் என்ன அர்த்தம்? உச்ச நீதிமன்றத் தீர்ப்பினை நீங்கள் மாற்றி எழுதப் போகிறீர்களா? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்களுக்குத் தெரியும். நீங்கள் ஒரு Advocate தானே? சுப்ரீம் கோர்ட் தீர்ப்பிலே என்ன வந்தது? (குறுக்கீடுகள்) உட்காருங்கள் முதலிலே. (குறுக்கீடுகள்) சரி, திரு. ஞானசேகரன், சீக்கிரம் சொல்லி முடியுங்கள்.

[2008 ஜனவரி 29

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அளித்திருக்கிற விளக்கத்தை நான் நிச்சயமாக ஏற்றுக்கொள்கிறேன். அந்த POTA வழக்கில் சொல்லப்பட்ட தீர்ப்பு, தடை செய்யப்பட்ட இயக்கத்திற்கு யாராவது வாய் வழியாக வெறும் ஆதரவு என்று சொன்னால் கைது செய்ய முடியாது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால், இங்கே விடுதலைப் புலிகளை வெளிப்படையாக ஆதரித்து, நான் இந்த அவையிலே ஏற்கெனவே சொல்லியும்கூட, 24 ஆம் தேதி மற்றும் 25 ஆம் தேதி கருத்துரிமை மாநாடு என்று நடத்துவதற்கு எப்படிக் காவல் துறை அனுமதி கொடுத்தது? அங்கே பிரபாகரன் போட்டோவை, banner-ஐப் பெரிதாக வைத்துக்கொண்டு மாநாடு நடத்துவதற்கு எப்படி அனுமதித்தார்கள்? தொடர்ந்து அவர்கள் இப்படிச் செய்துகொண்டு, ஒவ்வொரு நிகழ்ச்சியிலும், விடுதலைப் புலிகள்மீது இருக்கக்கூடிய தடையை நீக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஒரேயொரு எடுத்துக்காட்டுக்காகச் சொல்லுகிறேன். இங்கே திருமாவளவன் அவர்கள் இப்போது சிவப்பு விளக்கு போட்ட காரிலே எப்போதுமே பவனி வந்துகொண்டிருக்கிறார். அவர் என்ன இலாகா இல்லாத மந்திரியாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறாரா? எந்த விதியின்கீழே அவர் காரிலே பல்பு வைத்துக்கொண்டிருக்கிறார்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், உட்காருங்கள். இது சம்பந்தம் இல்லாதது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஞானசேகரன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** வன்னிஅரசு என்பவர் ஏற்கெனவே ஆயுதம் கடத்தியிருக்கிறார். (குறுக்கீடுகள்) பால்ரஸ் குண்டுகளை.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Mike கொடுக்கச் சொல்ல வேண்டியது என் கடமை. உங்கள் வேலையல்ல. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்களுக்கு mike கொடுக்கச் சொல்லுகிறார்கள், பேசுங்கள். என்ன சொல்ல வேண்டுமோ, சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பணிவன்போடு மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், காவல் துறை இப்பொழுது அவருக்கு கருத்துரிமை மாநாடு நடத்துவதற்கு அனுமதி கொடுத்திருக்கக்கூடாது. பிரபாகரன் படம் போட்ட banner-ஐ அந்த இடத்திலே வைப்பதற்கு



2008 ஜனவரி 29] [திரு. சி. ஞானசேகரன்]

அனுமதி கொடுத்திருக்கக்கூடாது. அப்படி மீறி அவர்கள் செய்திருந்தால் அப்பொழுதே அவர் கைது செய்யப்பட்டு Criminal Law Amendment Act-லே நிறைய sections இருக்கின்றன. நாம் POTA Act-ல் போடலாம். Actually POTA Act has been repealed. அது இப்போது கிடையாது. அது existence-ல் இல்லை. ஆகவே, POTA Act-ல் சொல்லிக் காட்டியிருக்கிற உச்ச நீதிமன்றத்தின் கருத்து வேறு, ஆனால் இங்கே அன்றாடம் நடைபெற்றுக்கொண்டிருக்கிற, அவர்கள் நடைமுறையில் செய்துகொண்டிருக்கக்கூடிய தவறுகளுக்கே, அரசாங்கம் பல section-களிலே அவரைக் கைது செய்து அவற்றை முழுமையாகத் தடை செய்திருக்கலாம் என்பதுதான் என் கோரிக்கை. (குறுக்கீடுகள்) தடை செய்யப்பட்ட ஓர் இயக்கத்திற்குத் தொடர்ந்து ஒரு மாநாடு. அவர் போடுகிற தலைப்பு என்ன தெரியுமா? கண்டனமும், இரங்கலும்.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். முதல்வர் பதில் அளித்த பிறகும் பெரிய விவாதம் பண்ணிக்கொண்டிருக்கிறீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

முற்பகல் 11-25

## 3. அறிக்கைகள் அளித்தல்—தொடர்ச்சி

### (ஆ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் மாண்புமிகு திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடுகள்) அந்த subject முடிந்துவிட்டது, உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007-2008 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் அறுபத்தெட்டு முதல் எழுபத்து மூன்று வரையிலான ஆறு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன். (குறுக்கீடுகள்)

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

[2008 ஜனவரி 29

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு தமிழ்ப் புத்தாண்டு (விளம்புகை) சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ்ப் புத்தாண்டு (விளம்புகை) சட்டமுன்வடிவு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான சட்டமுன்வடிவை, வரலாற்றுப் புகழ்மிக்க சட்டமுன்வடிவை இந்த அவையிலே நான் அறிமுகம் செய்யத் தங்களுடைய, அவையினுடைய அனுமதியைக் கோருகிறேன். இந்த நேரத்திலே தமிழ்ப் பற்றாளர்கள் வெளிநடப்புச் செய்திருப்பதுதான் இந்த அறிவிப்பிற்கு, அறிமுகத்திற்குத் தருகின்ற மரியாதையா என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

*"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ்ப் புத்தாண்டு (விளம்புகை) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"*

எனக் கோருகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

*மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



2008 ஜனவரி 29]

### (ஆ) திருப்பூர் மாநகராட்சி சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2008 ஆம் ஆண்டு திருப்பூர் மாநகராட்சி சட்டமுன்வடிவு. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2008 ஆம் ஆண்டு திருப்பூர் மாநகராட்சி சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

*மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (இ) ஈரோடு மாநகராட்சி சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2008 ஆம் ஆண்டு ஈரோடு மாநகராட்சி சட்டமுன்வடிவு. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[திரு. மு.க. ஸ்டாலின்] [2008 ஜனவரி 29

"2008 ஆம் ஆண்டு ஈரோடு மாநகராட்சி சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஈ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



2008 ஜனவரி 29] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (உ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

முற்பகல் 11-30

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## (ஊ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே நாங்கள் எதிர்க்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)





ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## (எ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (ஏ) தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.



## 5. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது மேலும் விவாதம். மொத்தம் 12 உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். குறிப்பிட்ட நேரத்தில் அவர்கள் பேச்சை முடிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சிவானந்தம்.

**திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் திரு. வி.பி. துரைசாமி அவர்கள் முன்மொழிந்த, மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின்மீது பேசுகின்ற வாய்ப்பை அளித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், தளபதி அவர்களுக்கும், பேரவைக்கும் முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தேர்தல் காலத்தில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றி, அனைத்துத் தரப்பு மக்களின் பாராட்டைப் பெற்றுள்ள தமிழக முதல்வர் அவர்களை வணங்குகிறேன்.

ஆளுநர் உரை, இந்த அரசினுடைய கொள்கைத் திட்டங்களைச் சிறப்பாக விளக்கி இருக்கிறது. மாநிலத்தில் நீர்ப் பற்றாக்குறைப் பகுதிகளில் உள்ள ஆறுகள், சிற்றாறுகள், ஓடைகளில் வீணாகும் நீரை, தடுப்பணைகள் அமைத்து வேளாண்மைக்கும், குடிநீர் வசதிக்கும் பயன்பெறும் திட்டத்தை இந்த நிதியாண்டில் செயல்படுத்துவதை மக்கள் பெரிதும் வரவேற்கின்றனர். இதன் அடிப்படையில், எங்கள் தொகுதியில் ஆரணியில், கமண்டல நாக நதியின் குறுக்கே குன்னத்தூர் அருகேயும், இரும்பேடு, பையூர் அருகேயும் இரண்டு தடுப்பணைகளைக் கட்டி, சுமார் 50 ஏரிகளை நிரப்புகின்ற வகையில் நிறைவேற்றித் தர வேண்டுமென்று எங்கள் மாவட்ட மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களும், நானும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரிடம் கோரிக்கை வைத்திருக்கிறோம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த நிதியாண்டிலேயே அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக நதிகள் இணைப்பு என்ற தமிழக அரசின் திட்டத்தை மக்கள் பெரிதும் வரவேற்கின்றனர்.

[திரு. ஆர். சிவானந்தம்] [2008 ஜனவரி 29

முற்பகல் *11–35*

உலகத் தொடர்புகள் ஏற்படவும், வணிகத் தொடர்புகள் பெருகவும், தொழில் வளம் வளரவும், மிகவும் அத்தியாவசியத் திட்டமான சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றிட அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு நன்றி தெரிவித்துக்கொள்வதோடு, அந்தத் திட்டத்தைத் தடுத்து நிறுத்த உச்ச நீதிமன்றம் சென்றாலும், உச்ச நீதிமன்றம் அந்த வழக்கைத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள் என்பதோடு மட்டுமல்லாமல், காழ்ப்புணர்ச்சியின் காரணமாக அந்தத் திட்டத்தைத் தடை செய்ய முனைந்திருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்று உச்ச நீதிமன்றமே சுட்டிக்காட்டி இருப்பது இந்த நாட்டு மக்களுக்கு நன்றாகத் தெரியும்.

மேலும் கடலூரிலும், எண்ணூரிலும் கப்பல் கட்டும் தளம் அமைக்க இருப்பதை வரவேற்கிறேன். வளர்ந்து வரும் மக்கள் தொகை, போக்குவரத்து நெரிசல்கள் ஆகியவற்றிற்குத் தீர்வு காண சென்னை மாநகராட்சி மெட்ரோ இரயில் திட்டம், மதுரவாயலிலிருந்து துறைமுகம் வரை வேக வழித்தடம், வேலூர், சேலம் ஆகிய நகரங்களில் புதிய விமான நிலையங்கள் ஏற்படுத்துதல், தென் பகுதி மக்களின் நலனுக்காக விழுப்புரம்–திண்டுக்கல் இரு வழி இரயில் பாதைத் திட்டம், சென்னை மாநகராட்சியைச் சுற்றியுள்ள பகுதிகளில் வீடு கட்டுகிற வீட்டு வசதித் திட்டங்கள், கூடுதலான FSI வழங்குவது போன்ற திட்டங்களைப் பாராட்டுகிறேன்.

மக்களின் தேவைகளை நிறைவேற்றவும், வளர்ச்சிப் பணிகளை விரைவாகச் செயல்படுத்தவும், உள்ளாட்சியில் நல்லாட்சியை வழங்குகின்ற உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்மூலமாக உள்ளாட்சிகளுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கும் திட்டத்தையும், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்மூலம் அனைத்து கிராமங்களுக்கும் *20* இலட்சம் ரூபாயும், பேரூராட்சிகளுக்கு *50* இலட்சம் ரூபாயும் வழங்கும் திட்டங்களை மக்கள் பெரிதும் வரவேற்றுப் போற்றுகின்றனர். (மேசையைத் தட்டும் ஒலி)

கலைஞர் அரசின் இடைவிடாத முயற்சியின் காரணமாகத் தமிழைச் செம்மொழியாக்கியதையும், செம்மொழியின் தமிழ் ஆய்வு மையம் சென்னையில் அமைப்பதையும் திருவள்ளுவர் ஆண்டு பிறக்கும் தை மாதம் முதல் நாளைத் தமிழர்களின் புத்தாண்டுத் தொடக்க நாள் என்று அறிவித்ததையும் தமிழ் இன மக்களும், அறிஞர்களும்,



2008 ஜனவரி 29] [திரு. ஆர். சிவானந்தம்]

ஆன்றோர்களும், சான்றோர்களும் வரவேற்று, தமிழக முதல்வர் அவர்களைப் பாராட்டுகின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தியத் திருநாட்டில், தமிழகத்தைத் தொழில் துறையில் முதலிடத்திற்குக் கொண்டு வர, வேலைவாய்ப்பை உருவாக்கிட, வெளிநாட்டு முதலீட்டாளர்களைத் தமிழகத்திற்கு அழைத்து அவர்களுக்குத் தேவையான தொழில் தொடங்க அனைத்து வசதிகளையும் வழங்கி, மோட்டரோலா, டெல் கம்ப்யூட்டர்ஸ், சாம்சங், ரெனோ–நிஸ்ஸான், ஹூண்டாய் கார் கம்பெனி, ஃபோர்டு கார் கம்பெனி போன்ற கம்பெனிகளைத் தொடங்கி, பல இலட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தந்ததை இந்த நாட்டு மக்களே பாராட்டுகிறார்கள்.

மேலும்; கோவையில் ஐ.ஐ.எம்., மதுரையில் ஐ.ஐ.ட்டி., திருச்சியில் ஐ.ஐ.எஸ்.இ.ஆர்., திருவாரூரில் பல்கலைக்கழகம் போன்ற கல்விக் கொள்கையைப் பெரிதும் போற்றுகின்றார்கள். ஏழையெளிய மாணவர்களுக்குக் கணினிக் கல்வி கிடைக்கின்ற வகையில் அரசுப் பள்ளிகளில், மேல்நிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, நடுநிலைப் பள்ளி வரை கணினிப் பாடத் திட்டத்தை, ஏழை மாணவர்களின் கனவுகளை நனவாக்கும் திட்டமென்று மக்கள் பாராட்டுகின்றார்கள். இவ்வளவு சாதனைகளைப் படைக்கின்ற தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்; ஆரணி தொகுதியில் ஒரு பொறியியல் கல்லூரியை ஏற்படுத்தி, ஏழை மாணவர்கள் படிக்கின்ற வாய்ப்பை உருவாக்கித் தர வேண்டுமென்று நான் வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்.

விவசாயிகளின் துயர் துடைக்க இலவச மின்சாரம், *7,000* கோடி ரூபாய் விவசாயக் கூட்டுறவுக் கடன்கள் தள்ளுபடி, புதிய பயிர்க் கடன் வழங்க வழிவகை, மத்திய, மாநில அரசுகளால் குவிண்டால் நெல்லுக்கு ரூ.*150* ஊக்கத் தொகை, சன்ன ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ.*825* விலை கிடைக்க ஆணை, வேளாண்மைப் பயிருக்குத் தேவையான நீர்ப்பாசன ஆதாரங்கள் உருவாக்குதல் போன்ற திட்டங்களை விவசாயப் பெருமக்கள் பெரிதும் பாராட்டுகின்றார்கள்.

நாங்குனேரியில் பல்தொழில் சிறப்புப் பொருளாதார மண்டலம், மதுரையில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா, கங்கைகொண்டானில், தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலம் போன்ற தொழில் வளம் பெருகுவதைப் பாராட்டுகின்றேன். இதேபோன்று,

பின்தங்கிய மாவட்டமான எங்கள் திருவண்ணாமலை மாவட்டத்திலும் தகவல் தொழில்நுட்பப் பொருளாதார மண்டலத்தை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்ச் சமுதாய, ஏழையெளிய மாணவ, மாணவிகள் மூளை வளர்ச்சி பெற்று, விஞ்ஞானிகளாக, டாக்டர்களாக, இன்ஜினியர்களாக வரவேண்டும் என்று எண்ணிய தாய் உள்ளம் கொண்ட தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், மூளை வளர்ச்சிக்குத் தேவையான புரதச் சத்துள்ள முட்டைகளை 2 வயது முதல் 15 வயது வரை உள்ள மாணவ, மாணவிகள் சுமார் 70 இலட்சம் பேர்களுக்கு, வாரம் 3 முட்டைகள் வழங்குவதைத் தமிழ்ச் சமுதாயமே வாழ்த்துகிறது. இதனால் வருங்காலத் தமிழ் இனம் உலகிலேயே சிறந்த அறிவுள்ள இனமாக மாறக்கூடும் என்று வல்லுனர்கள் கூறுகின்றார்கள். இந்தச் சமுதாயம் அறிவு வளர்ச்சி பெறுவதைத் தடுக்க, ஆரிய வம்ச ஆட்சி நடத்தியவர்கள் குழந்தைகளுக்குச் சத்துணவில் கொடுத்த முட்டையைக்கூட நிறுத்தினார்கள் என்று பேசுகின்றார்கள்.

கருவுற்ற தாய்மார்களுக்கு மாதம் ரூ.1,000/- வீதம் 6 மாதங்களுக்கு ரூ.6,000/–வழங்குவதும், ஏழையெளிய பெண்களுக்குத் திருமண உதவித் திட்டம் ரூ.15,000/–வழங்குவதும், தாய் வீட்டுச் சொத்தில் ஆண்களைப் போன்று சம உரிமை என்ற சட்டம் கொண்டு வந்ததும், தமிழகத்தில் வேலைவாய்ப்பில் 33 சதவிகிதமும், உள்ளாட்சி நிர்வாகத்தில் 33 சதவிகிதமும் பெண்களுக்காக வழங்குவதும், பெண்கள் சுயமாகச் சம்பாதிக்க, மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைத்து, கடன், மானியக் கடன் ஆகியவற்றை வழங்குவதுமாகிய பெண்கள் மேன்மை அடையும் திட்டத்தைத் தாய்க்குலமே வரவேற்றுப் பாராட்டுகிறது.

முதியோர்களுக்கு மாதம் ரூ.400/– உதவித் தொகை வழங்குவது, ஏழைகளுக்கு இலவச வேட்டி, சேலை வழங்குவது, மன நலம் குன்றியவர்களுக்கு மாதம் ரூ.500/– வழங்குவது ஆகிய திட்டங்கள் வறுமையில் உள்ள ஏழையெளிய மக்களைக் காப்பாற்றும் திட்டமாகும்.

முற்பகல் 11–40

நெசவாளர்களின் துயர் துடைக்க நெசவுத் தொழிலுக்கு மானியக் கடன், இலவச மின்சாரம், இலவசத் தறிச் சாமான்கள் வழங்குவது, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் சலுகைகள், வீடுகள் கட்ட, தறிக் கூடங்கள் அமைக்க மானியக் கடன்கள், நெசவுத் தொழில் பாதுகாப்பு உறுதி போன்ற திட்டங்களால் நெசவாளப் பெருமக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்கின்றனர்.





எங்கள் பகுதியான ஆரணி பகுதியில் தனியார் பட்டுச் சேலை, கைத்தறி நெசவாளப் பெருமக்களின் வேலைப் பாதுகாப்பு உறுதியளிக்க அவர்கள் உற்பத்தி செய்கின்ற சேலைகளை அரசே கோ–ஆப்டெக்ஸ் மூலம் கொள்முதல் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். இந்த ஆண்டு, தைப் பொங்கலை முன்னிட்டு, 3¼ கோடி மக்களுக்குத் தரமான இலவச வேட்டி, சேலை வழங்கியுள்ளதைப் பாராட்டி, மக்கள் நன்றியுடன் தமிழக முதல்வர் அவர்களை வாழ்த்துகின்றனர். அதை உற்பத்தி செய்த நெசவாளர்களுக்குத் தொழில் கிடைத்ததற்காகவும் பாராட்டுகின்றனர். நாட்டில் சிமென்ட் விலையேற்றத்தைத் தடுக்க, அரசு மூலம் சிமென்ட் விற்பனை, மூட்டை ஒன்று 200 ரூபாய்க்குக் கிடைக்க ஏற்பாடு செய்ததை மக்கள் மிகவும் பாராட்டி, வரவேற்கின்றனர். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆட்சியில் சட்டம்–ஒழுங்கு கெட்டுவிட்டது என்று சொல்லி, ஆளுநர் உரையின்போது, வெளிநடப்புச் செய்தவர்கள்தான் இந்த நாட்டில் தேவையில்லாமல் ஆர்ப்பாட்டம், மறியல் என்று சட்டம்–ஒழுங்கைக் கெடுத்து வருகின்றார்கள் என்று மக்கள் அவர்களைத்தான் கூறுகின்றனர். மேலும், மக்களைப்பற்றிக் கவலைப்படாதவர்கள் குளிக்கச் சென்ற மகா மகம் திருவிழாவின்போதும், பள்ளியிலே தீப்பிடித்து நூற்றுக்கணக்கான குழந்தைகள் இறந்தபோதும், ** ஆட்சியில் இருந்தவர்கள் இராஜிநாமா செய்யாமல், இராமேஸ்வரம் ஆலயத்தில் 15 கன்றுக் குட்டிகள் இறந்துவிட்டதாகக் கூறி, தமிழக முதல்வர் அவர்களை இராஜிநாமா செய்ய வேண்டுமென்று கேட்பது மிகவும் விந்தையாக இருக்கிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் என்ன பேசுகிறார் என்று கேளுங்கள், உட்காருங்கள்.

**திரு. ஆர். சிவானந்தம்:** சட்டம்–ஒழுங்கைப் பொறுத்தவரை, இந்தியாவில் மற்ற மாநிலங்களைவிட தமிழகம்தான் அமைதிப் பூங்காவாக உள்ளது என்று பிற மாநிலத்தவர்கள் பாராட்டுகின்றனர். (குறுக்கீடுகள்) இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் அனைத்து வீடுகளிலும் கலர் டிவி. என்ற திட்டம். இந்த டிவி. வழங்கும் திட்டத்தை மக்கள் பாராட்டி, வரவேற்கின்றனர். இதைத் தாங்கிக்கொள்ள முடியாதவர்கள், மகாபாரதக் கதையில் வரும் காந்தாரி போல வயிற்றில் அடித்துக்கொள்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2008 ஜனவரி 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** சம்பந்தமாக அவர் பேசிய வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெறுகிறது. மற்றவர்கள் எல்லாம் உட்காருங்கள்.

**திரு. ஆர். சிவானந்தம்:** கலர் டி.வி. கொடுப்பதை நிறுத்திவிட்டு, வெள்ள நிவாரணம் தரலாம் என்று நீலிக் கண்ணீர் வடிப்பதை இந்த நாட்டு மக்கள் மன்னிக்கமாட்டார்கள். வெள்ள நிவாரணப் பணிகளை மாண்புமிகு அமைச்சர்கள் மூலமாகத் துரிதப்படுத்தி, நிதி ஒதுக்கி, நிவாரணம் வழங்கியது மக்களுக்கு நன்றாகத் தெரியும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் சார், சொல்லியாகிவிட்டது.

**திரு. ஆர். சிவானந்தம்:** 2 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி என்கின்ற திட்டம், பசியை ஒழிக்கும் மகத்தான திட்டம் என்று மக்கள் பெரிதும் போற்றுகின்றனர். இந்தத் திட்டத்தில் குறை காண முடியாதவர்கள், அரிசி கடத்தப்படுகிறது என்று இந்தத் திட்டத்தைக் கொச்சைப்படுத்துகின்றனர். அரிசி கடத்துபவர்கள் கடந்தகால ஆட்சியில் பழக்கப்பட்டவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அரசின் திட்டங்களான 2 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, 7,000 கோடி ரூபாய்க்கு விவசாயக் கடன் தள்ளுபடி, அனைத்துக் குடும்பங்களுக்கும் கலர் டி.வி., Gas இணைப்புடன் இலவச எரிவாயு அடுப்பு, திருமண உதவித் திட்டம், மகப்பேறு உதவித் திட்டம் போன்ற திட்டங்கள் அனைத்தும் இந்த நாட்டு மக்களுக்குத் தரப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால், மக்கள் கேட்கின்றார்கள்; இவை அனைத்தும் இந்த ஆட்சியிலே வழங்கப்படுகின்றதே, கடந்தகால ஆட்சியிலே இந்தப் பணமெல்லாம் எங்கே போனது, யார் வீட்டுக்குப் போனது என்று மக்கள் கேட்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள்தான் இந்த நாட்டில் மீண்டும் ஆட்சிக்கு வரத் துடிக்கின்றார்கள். அவர்களை மக்கள் பார்த்துக்கொள்வார்கள் என்று கூறி, என் உரையை முடிக்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பதர் சயீத். உங்களுக்கு 15 நிமிடங்கள் ஒதுக்கப்படுகின்றன.

***திருமதி பதர் சயீத்:** இறைவன் பெயரில் ஆரம்பிக்கின்றேன். மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்கும், பேரவையில் உள்ள அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துகளைத்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





தெரிவித்துக்கொள்கின்றேன். மேன்மை தங்கிய மாநில ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதத்தில் கலந்துகொள்ள எனக்கு அனுமதி அளித்த மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் நன்றியை முதலில் பணிந்து தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஆளுநர் அவர்கள் உரையில் இந்த அரசின் திட்டங்களைச் செயல்படுத்துவது தொடர்பான உறுதியான அறிவிப்புகள் எதுவும் இல்லை. அம்மாவின் திட்டங்களைத் தவிர புதிய திட்டங்கள் எதுவும் உங்களிடம் இல்லை. பெண்களுக்கு 33 சதவிகித இட ஒதுக்கீடு பற்றி நீங்கள் பேசுகின்றீர்கள். மத்திய அரசில் மிக முக்கியப் பங்குபெற்று நீங்கள் அதைப் பாராளுமன்றத்தில் கொண்டுவந்து, சட்டமாக நிறைவேற்றும் அளவுக்கு முடியாமல், சக்தியில்லாமல் உள்ளீர்கள். நிலம் இல்லாத—நேற்று நிறைய நீங்கள் debate பண்ணினீர்கள், about the land. How much land is there? யாருக்குக் கொடுத்திருக்கிறீர்கள்? அம்மா அவர்கள் சொன்னதைத்தான் இறுதியாக நீங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள், இவ்வளவு நிலம்தான் இருக்கிறது என்று. அதற்கு நிரம்ப சந்தோஷம். But what I want to tell this august body is that there are many people who come out from the villages, the men folk, who come here and search for jobs. கிராமங்களிலிருந்தெல்லாம் நகருக்கு வந்துவிடுகிறார்கள். What is happening is, those women—பெண்கள் அங்கே landless labourers ஆகப் பணியாற்றிக் தனியாகவே கொண்டிருக்கிறார்கள். They continue the agriculture. May I request this Government to tell us as to how much land has been given to those women? பெண்களுக்கு நீங்கள் எவ்வளவு கொடுக்கிறீர்கள்? இவ்வளவு பேசுகிறீர்கள். அந்தப் பெண்களுக்கு எவ்வளவு கொடுத்தீர்கள்? கண்டிப்பாகப் பெண்களுக்குக் கொடுங்கள். (குறுக்கீடுகள்)

முற்பகல் 11–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மற்றவர்கள் அமைதியாக இருங்கள். பேசும்போது குறுக்கீடு செய்யாதீர்கள்.

**திருமதி பதர் சயீத் :** Even the N.G.O.s have come forward and they are requesting to give the land to the women and to give pattas to the women-headed households. These S.H.G.s —இந்த சுய உதவிக் குழுக்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அரசில் வீட்டுமனைப் பட்டா என்றாலும், நிலமற்ற ஏழைகளுக்கு நிலம் வழங்கும் திட்டத்திலே இலவசமாக பட்டா வழங்குகின்ற திட்டமாக இருந்தாலும் பெண்கள் பெயரால்தான் பட்டா வழங்கப்படுகிறது, முழுமையாக. (மேசையைத் தட்டும் ஒலி)

**திருமதி பதர் சயீத்:** This has to be verified Sir. However, இதைச் சரியான முறையில் S.H.G.-Self Help Group நடத்தவில்லை என்று அம்மாதான் அதற்கு முன்னேற்றம் கொண்டு வந்தார்கள். இன்றைக்கு நீங்கள் நிறைய functions நடத்துகிறீர்கள். நிறைய கடன்கள்கூடக் கொடுக்கிறீர்கள். ஆனால், when they produce these products, where have they been marketed? You have no Central Marketing Federation. You have no place where these women can go and sell their products. I request the Hon'ble Minister here to please see that he is able to help these women to market these products.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அ.தி.மு.க.வைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பெண்கள் சுய உதவிக் குழுக்களுக்கு அடிப்படையான பணிகளை நிறைவேற்றுவதற்குத் துணை நிற்கவில்லை என்று ஒரு குறையைக் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். சுழல் நிதி தொடர்ந்து வழங்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. உங்களுடைய ஆட்சிக் காலத்திலே பயிற்சிக்கான தொகை 45 ரூபாயிலிருந்து ஏழு ரூபாய் ஐம்பது காசு என்று ஆக்கியதைக்கூட, தி.மு.க. ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு மீண்டும் 45 ரூபாய் என்று வழங்கப்பட்டிருக்கிறது. ஆக, அவர்களின் முன்னேற்றத்திற்காகத் தொடர்ந்து இந்தச் சுய உதவிக் குழுக்கள் பணியாற்றிக்கொண்டிருக்கின்றன. அந்த வகையிலேதான் இந்த அரசு அதற்கான முயற்சியிலே முழு அளவிற்கு ஈடுபட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**திருமதி பதர் சயீத்:** நான் சொன்னது, நான் உங்களிடம் கேட்டது, marketing—products marketing. என் தமிழ் புரியவில்லையோ, என்னவோ தெரியவில்லை. But marketing தான் நான் சொன்னேன். I am sure, the Hon'ble Minister will look into it.





**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் குறிப்பிட்டதைப்போல, marketing-லும் கடந்த கால ஆட்சியைவிட அதிகமான அளவிற்கு இப்போது இருக்கக்கூடிய தி.மு.க. ஆட்சியிலே அதற்கான சிறப்பானப் பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திருமதி பதர் சயீத்:** தொட்டில் குழந்தைத் திட்டம்—Cradle Baby Scheme என்று மாண்புமிகு அம்மா அவர்கள்தான் கொண்டு வந்தார்கள். She has started that. It appears that today all over India, they are praising this scheme. They also want to replicate this scheme in other States. May I please ask this Hon'ble Government, what is that you have done? Has it been upgraded? Is it existing or have you thrown the baby along with the bathwater outside?

As far as small industries, you have said that you are giving jobs to 10 lakh peoples. அவர்கள் பட்டதாரிகளா அல்லது உயர் கல்வி பெற்றவர்களா? யாருக்கு நீங்கள் இந்த 10 lakh jobs கொடுக்கப் போகிறீர்கள்? Programme of action, plan of action இருக்கிறதா? It is just an announcement. I call it an eye-wash and nothing else. This is what you have been stating; but nothing has been done so far.

I want to request the Hon'ble Minister for Electricity, one thing. He has agreed that there is power cut. What I want to tell him is that this deficit, this power cut is affecting the students very badly during study hours. Today schools have started the exams; some are going to start the exams very soon. May I request the Hon'ble Minister, just as our Hon'ble Puratchi Thalaivi Amma has said, that this unannounced power cut should be removed at the earliest?

The Hon'ble Governor's Address once again reiterated that special attention is being paid to minorities by creating a Directorate for minorities. This subject is being treated in such an important fashion that there is not even a full-time person heading it and the Department has been given away as an appendage to the Backward Classes Department. This is the importance that this Government pays to minorities. For instance, the claim that minority unemployed youth can avail of a loan to start a small enterprise is nothing but a farce. If a person approaches the Tamil Nadu Minorities Corporation for a loan, the requirement is that two Government sureties have to be given. At a time when the Government, your own Government is talking tall about

abolishing debts of farmers to the tune of crores of rupees, you are asking unemployed youth of the minority community to produce two Government functionaries to sign. May I request, may I suggest that the Hon'ble Chief Minister create a cell in his own office so that these youth can come there and obtain signatures from his very staff? If not, I don't see any Government officer who is going to vouch for these poor youth.

முற்பகல் 11-50

Amma during her regime had started the Annadhanam scheme, not only in temples but also in Dargahs and Churches. Are you aware, today the Annadhanam in Dargahs had disappeared totally? Is it that there are no more poor people who come to these Dargahs and want to partake of these food? I wish the Hon'ble Minister, for WAKFS would enlighten me on this subject. This Government has announced 3.5% reservation each. for Muslim and Christian minorities. May I ask the Government where did this magical figure come from and on what basis did you say 3.5% each for Muslim and Christian Minorities? Is it on the basis of population or is it on the basis of educationally backward Muslims and Christians? May I remind you that the Muslims are 95% backward in education and our brothers and sisters of the Christian community are 65%. Therefore, the only label I can apply to this is we are neither fish nor flesh and also I would like to refer to the Hon'ble Chief Minister here. He always said . . . (Interruption)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ்.

**THIRU S. PETER ALPHONSE:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, the Hon'ble Member was speaking on reservation for minorities and I would like to know whether the AIADMK Party stands for the reservation for minorities or they oppose the reservation for minorities and then, (Interruption) the next question will be, even in the announcement for the reservation for Minorities, the Tamil Nadu Government has categorically made it clear that as per the census available in 2001 and as per the official records available, this is the initial reservation the Government has provided and further changes or alterations will be made when the Government gets the substantial and accepted figures and surveys. So, it is a very good beginning and the whole minority community, both the Muslim





community and the Christian community thank the Government of Tamil Nadu for this reservation and this is a pioneer step taken for the welfare of the minorities and we don't question the logic behind the 7% reservation. What we request the Government is to provide this reservation as early as possible. So, the Hon'ble Member should explicitly make it clear whether she wants the 7% reservation to happen immediately or she wants to question it and postpone the reservation to a later date.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, the Government itself appointed a Committee under the leadership of Justice Janardhanam and on the basis of the population they suggested this per centage of reservation to the minorities and on that basis alone the Government has implemented it.

**HON. SPEAKER:** You ask for early implementation.

**TMT. BADER SAYEED:** Thank you Sir. Our Hon'ble Chief Minister talks about Samathuvapuram, Samathuva Pongal-the little Tamil that I know. I am wondering how did he make the same 3.5% when we are more educationally backward. If he wants that samathuvam, he will have to upgrade the Muslim minorities. Therefore, I appeal to him to also apply that samathuvam whatever he talks about also to the Muslims and Christians so that we come on par with the main stream of Tamil Nadu society. I want to tell one more thing and that is, procuring a minority status certificate from the State Government. For Minority Institutions, an insurmountable hazard is still present in Tamil Nadu. They are either denied such a certificate or a decision is inordinately delayed. This is the interest you show in minority affairs. I am quoting this from 'Deccan Chronicle' of yesterday in which the heading says, 'States give minority groups tough time' and in that, the Tamil Nadu figures find a mention.

Thanks to Amma, after 50 years, the Tamil Nadu Wakf Board has a decent office building of its own. But even 18 months after this Government has assumed power, it remains unoccupied. Why? Is it because Amma had performed this Herculean task of putting up this beautiful building that it remains unattended and unoccupied?

முற்பகல் 11–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் என்ன சொன்னாலும் அதைத் தமிழிலே சொல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன். வஃக்ப் போர்டு ஆபீஸ் பற்றி என்ன சொல்கிறீர்கள்?

**திருமதி பதர் சயீத்:** சட்டமன்றத்தில் தமிழிலும் பேசலாம், ஆங்கிலத்திலும் பேசலாம்.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** என்ன சொல்கிறீர்கள் என்பது புரியாமல்தான் கேட்கிறேன்.

**திருமதி பதர் சயீத்:** நான் உங்களிடத்தில் என்ன கேட்கிறேன் என்றால், what happened ? அந்த building–ஐ ஏன் occupy செய்யவில்லை? வெறுமனே ஒழிக்கிறீர்கள்—நான் உள்ளே போய்ப் பார்த்தேன். இருக்கின்ற building–ஐ நீங்கள் demolition செய்கிறீர்கள்.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வஃக்ப் வாரியத் தலைவராக இருந்த காலத்தில் அதற்கு நிதி ஒதுக்கப்பட்டு, அந்தப் பணி முடியாமல் இருந்தது. பணி முடிவதற்கு மேலும் நிதி தேவை என்ற காரணத்தால், இந்த அரசு நிதியை ஒதுக்கி, அதற்கான ஃபர்னிச்சர்கள் மற்றும் எலெக்ட்ரிக்கல் அமைப்புகளை ஏற்பாடு செய்து, இன்னும் சில தினங்களிலே அதைத் திறந்து வைக்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**TMT. BADER SAYEED:** During Amma's regime, with all the encouragement and support of her Government, Wakf lands were retrieved with immense difficulty and restored to the respective Wakfs. Today, there is a very opposite situation existing where Wakf lands are taken over and distributed to various persons. This is being done with impunity by your party men and with the consent of Government officials at organized functions in spite of repeated objections from your own constituted Wakf Board is another example of the great concern this Government has for minorities. These poor wakf institutions were living on those income. Those lands were taken away. Yesterday there was a suggestion on a white paper for these lands that are being given away.



I would suggest, please add in that, that the lands are also taken away from the Wakf institutions and that is where may be you are finding the lands to give away.

I also want to refer to yesterday's discussion here which was on women. But I want to know how many people have ever thought about the violence that is perpetrated on women. The Domestic Violence Act has come into force in 2006. To our Hon. Minister, may I ask, are there any funds allocated for its implementation? Another thing, the Protection Officers are supposed to be appointed. Let me tell you, as per information the Protection Officers are those who are already the Dowry Prohibition Officers. They are already those who are in the Social Welfare Board and sometimes these Protection Officers are also to take charge for three districts. Do you think that the Domestic Violence Act can ever be implemented with this sort of attitude? But yesterday, we spoke so much on the women's dress, on women's attire. It was most unfortunate. I wish our Hon. Speaker had suo motu expunged those remarks instead of waiting for a woman to come forward and request him to expunge and I wish all the women here would have cut across party lines and stood up and said that we should not have this kind of discussion. Please do discuss about the violence that is taking place. எவ்வளவு கொடுமை பண்ணுகிறார்கள் women–க்கு? அந்த Act–ஐ implement பண்ணுங்கள் சார். I am requesting you only this.

**HON. SPEAKER :** Your time is over.

**TMT. BADER SAYEED:** My time is not over Sir, because you gave me. Let me come to my தொகுதி Sir. Two minutes. I want to talk about my Triplicane Constituency. தி.மு.க. used to say that is our கோட்டை. Today Hon'ble Amma has captured that கோட்டை. *(மேசையைத் தட்டும் ஒலி)* அதற்காகத்தான் நீங்கள் என் Constituency M.L.A. Funds–ஐகூட use பண்ணக் கொடுக்கவில்லை. திருவல்லிக்கேணி மக்களை நீங்கள் பழி வாங்குகிறீர்கள். வேறு ஒன்றும் இல்லை. *(மேசையைத் தட்டும் ஒலி)* ஒரு step-motherly treatment is being given to Triplicane. அதை என்ன சொல்கிறார்கள் தமிழில்?—'மாற்றாந்தாய்!' *(சிரிப்பு)* நீங்கள் சிரிக்க முடியாது, என் தமிழ்பற்றி. ஏனென்றால், நேற்று தமிழ்ப் பண்பாடு, தமிழ்க் கலாசாரம்பற்றி நிறைய பேசினீர்கள். So, நீங்கள் சிரித்தால் இதுதான் தமிழ்ப் பண்பாடா என்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். *(சிரிப்பு)* (Interruption) Two minutes. Just two more minutes, Sir. (Interruption) You can't interrupt Sir. (Interruption) No. No. (Interruption)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**TMT. BADER SAYEED:** Even Ration Cards, even முதியோர் Pension applications, whenever we give, they say, 'தெரியவில்லை; it is lost'. Is this the way our Government is functioning? How many ration cards have we applied for? I must share this with you that my own family member, my daughter, for 8 months she has run around and there is no ration card given by this Government. When it is my கதி இந்த மாதிரி என்றால், மக்கள் கதி என்ன? மக்கள் என்ன பண்ணப் போகிறார்கள் என்று தெரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

*நண்பகல் 12–00*

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30–12–2007 வரை, டிசம்பர் வரை கொடுக்கப்பட்ட அனைத்து மனுக்களுக்கும் கார்டுகள் தமிழக அரசின் சார்பாக வழங்கப்பட்டு விட்டன. (குறுக்கீடுகள்) இருங்கள். மேலும், ரேஷன் கார்டுகள் வழங்கப்படாத மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டிருந்தால் அதற்கு என்ன காரணம் என்பதற்கும் கடிதம் அனுப்பியிருக்கிறோம். (குறுக்கீடுகள்) இருங்கள். இது இரண்டு. மூன்றாவது, மனுக்கள் அவர்கள் கொடுத்து, அதற்கு வேண்டிய documents—ஒரு ரேஷன் கார்டு கொடுக்க வேண்டும் என்றால்--அதற்கு வேண்டிய சில certificates எல்லாம் வேண்டும். அதைக் கொடுக்காமல் இருந்தால் மீண்டும் அவர்கள் மனு செய்யலாம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதில் மொத்தம் மூன்று வகைகள். ஒன்று, கார்டுகள் வழங்கப்பட்டுவிட்டன. இரண்டாவது, கார்டுகள் வழங்காததற்கு என்ன காரணங்கள் என்பதற்காகக் கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது. மனுக்கள் கொடுக்கும்போதே சில documents–கள் கொடுக்காததாலே, புதியதாக நீங்கள் மனு கொடுக்கலாம் என்று மூன்று வகையாகச் செய்யப்பட்டிருக்கிறது. இது மூன்றாவது. இஃதன்னியில், ஏற்கெனவே நீங்கள் எல்லாம் மனு கொடுத்திருக்கிறபோதே, ஆங்காங்கே பரிந்துரை செய்யப்பட்டு, இங்கே கமிஷனர் அலுவலகத்தில் மட்டும்தான், ஆணையாளர் அலுவலகத்தில் மட்டும்தான் முன்பு கார்டுகள் வழங்கப்பட்டிருந்தன. இப்பொழுது மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலேயே, அங்கேயே மனுக்களைக் கொடுத்து, அங்கேயே DATA entry செய்து, அங்கேயே verification செய்து, அதற்குப் பின்னர் உடனே கார்டுகள்



வழங்கப்படுகின்றன. இப்போது கார்டுகள் வழங்குவதை மிகவும் easy–ஆக ஆக்கியிருக்கிறோம். ஏதாவது சிறிய பிரச்சினையாக இருந்தாலும் சரி, சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் அங்கேயிருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் சொல்ல முடியும். ஏற்கெனவே இருந்ததுபோல கமிஷனர் அலுவலகத்திற்கு வந்துதான் கார்டு போட வேண்டுமென்பது கிடையாது. ஆங்காங்கே இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்திலே சொன்னாலே அதற்குரிய பலன்கள், கார்டுகள் உடனே வரும். அதில் ஏதாவது தவறு இருந்தால், சட்டமன்ற உறுப்பினர்கள், தற்போது சட்டமன்றம் கூடியிருக்கிறது. நேரடியாக அது மாதிரி உங்கள் தொகுதியிலே எங்கேயாவது சின்ன பிரச்சினை எதுவாக இருந்தாலும் சரி, அதை நேரடியாக என்னிடத்தில் கொடுத்தால் உடனே இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிவதற்கு முன்னாலே உங்களுக்கு, உறுப்பினர்களுக்கு எல்லாம் கார்டுகள் வழங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர். (குறுக்கீடு) அந்த அம்மா clarification கேட்டார்கள். மந்திரி சொல்லிவிட்டார். உறுப்பினர் பேசுங்கள்.

**TMT. BADER SAYEED:** On 24th January, our learned and respected Member Balabarathi Ammaiyar said that the price rise (Interruption) Selvi Balabarathi said that the prices are going very high. It is sky-rocketing. But very beautifully she put forward saying that if you do not control it, tsunami will come. I think you understand what tsunami will do when it comes. I just want to remind you all. This is what Amma has been saying always i.e. to control the price rise. If there is anything important for this Government to do today, it is this. The common man needs relief from these sky-rocketing prices. (The Gong was sounded) Another important highlight... I want to finish.

**HON. SPEAKER:** No, you have taken 19 minutes. (Interruption) No.

**TMT. BADER SAYEED:** He took 25 minutes. I am finishing Sir. I am saying thank you to you. Another important highlight is, the Congress Member Mr. Gnanasekaran said that the Home Department is not working; அதனை முடுக்கிவிட வேண்டும் என்றார். What does it mean? It is sleeping. It needs to be activated. I must thank the Congress for that and also Madam Balabarathi for telling all these. If we tell கோபித்துக் கொள்கிறீர்கள்; கோபப்படுகிறீர்கள்; அம்மா சொன்னால், நாம் சொன்னால். ஆனால், உங்கள் கூட்டணிக் கட்சியே சொல்கிறது: "The Department is sleeping;

[Tmt. Bader Sayeed] [2008 ஜனவரி 29

The Government is not functioning; சுனாமி வந்துவிடும்" என்று சொல்கிறார்கள். Anyway, as Amma said, on all these counts, this Government needs to be dismissed. And I say the same thing. Thank you. நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். உங்கள் தமிழ் நிரம்ப அழகாக இருந்தது. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனவரித் திங்கள் 23 ஆம் நாளன்று சட்டப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாக இருப்பார்கள் என்ற தீர்மானத்தின்மீதான விவாதத்தில் பங்கேற்றுப் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நாளில் பேசுவதற்கு வாய்ப்புக் கிடைத்ததற்கு முதலிலே நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். ஏனென்று சொன்னால், தமிழ்ப் புத்தாண்டை, தை முதல் நாள் அன்று கொண்டாடுவதற்கான சட்டமுன்வடிவினை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தாக்கல் செய்து இருக்கின்ற இந்த நல்ல நாளிலே பேசுகின்ற வாய்ப்புக்கு என்னுடைய மகிழ்ச்சியை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

1921 ஆம் ஆண்டு தமிழ்ப் பேரறிஞர்களெல்லாம் கூடி தமிழ்ப் புத்தாண்டைக் கொண்டாட வேண்டும்; தமிழ்ப் புத்தாண்டை உருவாக்க வேண்டுமென்று முடிவெடுத்து, ஆங்கில ஆண்டுக்குப் பதிலாக திருவள்ளுவர் பிறந்த ஆண்டினை நம்முடைய ஆண்டாகக் கடைப்பிடிப்பது என்று முடிவு எடுத்தார்கள். அதன்படியாக, 1971 ஆம் ஆண்டு நம்முடைய தமிழ்நாடு அரசு திருவள்ளுவர் ஆண்டை அறிமுகப்படுத்தியது. அதன் முகத்தான் இன்றையதினத்திலே தமிழ்ப் புத்தாண்டு என்பது தை முதல் நாள் என்பதனைச் சட்டமுன்வடிவாக நம்முடைய வணக்கத்திற்குரிய தமிழக முதலமைச்சர் அவர்கள் சட்டப் பேரவைக்கு அறிமுகப்படுத்தியிருக்கின்றார்கள். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 12–05

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர்கள் அமைதியாக இருக்க வேண்டும்.



2008 ஜனவரி 29]

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** தைத் திருநாளைப்பற்றிப் பாடுகின்றபோதுகூட கவியரசர் கண்ணதாசன் அவர்கள் சொன்ன கருத்தினை நான் இங்கே வழிமொழிய விரும்புகிறேன்:

"மார்கழிக்குப் பெண்ணாக, மாசிக்குத் தாயாக, பேர் கொழிக்க வந்த பெட்டகமே, தைப் பாவாய்" என்று அவர்கள் வாயார தை மாதத்தைப் பாராட்டி, "தைப் பாவாய்" என்ற நூலிலே பாடியிருக்கின்றார்கள். அதற்கு மேலாக, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள், பாவேந்தர் என்று நாமெல்லாம் போற்றுகின்ற அவர்கள், "மார்கழி உச்சியில் மலர்ந்தது பொங்கல்" என்று மார்கழி என்பது ஒரு கொடிபோலவும், அதிலே ஒரு செடிபோலவும், அதன் உச்சியிலே மலர்ந்தது பொங்கல் என்று புரட்சிக் கவிஞர் அவர்கள் உருவகப்படுத்திப் பாடியிருக்கின்றார்கள். அத்தகைய தைத் திருநாளைத் தமிழ்ப் புத்தாண்டாக அறிவித்த அறிவிப்பினை காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக நான் மனதார வரவேற்கிறேன்.

1971 ஆம் ஆண்டு என் நினைவுக்கு வருகின்றபோது, நான் சில நிகழ்வுகளை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். 'பிரபவ' என்று தொடங்குகின்ற 60 ஆண்டு காலமுறையினை, இதுவரை நாம் கடைப்பிடித்து வந்திருக்கிறோம். பேரறிஞர் அண்ணா அவர்கள்கூட 1909–லே பிறந்தவர்கள்; 'சௌமிய' ஆண்டிலே பிறந்ததனால் அவர்கள் 'சௌமி' என்ற பெயரிலே பல கட்டுரைகளை, கவிதைகளை எழுதியிருக்கின்றார்கள். நம்முடைய வணக்கத்திற்குரிய முதலமைச்சர் அவர்கள்கூட, ஒரு கவியரங்கத்திலே பாடுகின்றபோது, 'சௌமியனுக்குப் பிறகு நான் சாதாரணன் பேசுகிறேன்' என்று பேசி, அது பதிவேட்டிலே வந்திருக்கிறது. அப்படி சமஸ்கிருத வார்த்தைகளைக் கொண்ட அந்த 60 ஆண்டு முறையை ஒழித்து, திருவள்ளுவர் ஆண்டைக் கணக்கில் கொண்டு, தை முதல் நாளைத் தமிழ்ப் புத்தாண்டாக அறிவிக்கின்ற அந்த அறிவிப்பினை நான் இங்கே வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது குறித்து சில பத்திரிகைகள் சர்ச்சைகளை எழுப்பியிருக்கின்றன. வணக்கத்திற்குரிய தமிழ் அறிஞர்கள், மறைமலையடிகள் அவர்கள், திரு.வி.க. அவர்கள், க. நமச்சிவாய முதலியார் அவர்கள், நாவலர் நா.மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள், நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்கள், கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள், சச்சிதானந்தம் பிள்ளை போன்றவர்கள் எல்லாம் கூடி இந்த முடிவினை எடுத்து அறிவித்திருக்கிறார்கள் என்பது. இன்றைக்கு நமது தமிழக அரசு எடுத்திருக்கின்ற முடிவுக்கு வலுச் சேர்ப்பதாக இருக்கிறது என்பதை நான் இங்கே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, 1971 ஆம் ஆண்டு என்று வருகின்றபோது, நான் இங்கே நம்முடைய முதலமைச்சரைப்பற்றி எனக்குக் கிடைத்த ஒரு குறிப்பினை—கிடைத்த குறிப்பல்ல; என் மனதிலே இருக்கிற குறிப்பினை—நான் சொல்ல விரும்புகின்றேன். 1971–லே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கடுமையாக எதிர்த்தவரும், முழுமையாக ஆதரித்தவருமான கவியரசு கண்ணதாசன் அவர்கள் எழுதிய ஒரு கட்டுரையிலிருந்து சில வரிகளை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். "ஜாதகத்திலே சில பேருக்கு நம்பிக்கை இருக்கலாம்; ஒருவர் பிறந்த தேதியைக் கொண்டு ஒரே குணாதிசயங்கள் கொண்ட தலைவர்கள் உருவாவதுண்டு" என்று ஜூன் 3 ஆம் தேதி பிறந்த ஐந்தாம் ஜார்ஜ் மன்னனுடைய குணாதிசயங்களை தன்னுடைய பத்திரிகையின் வாயிலாகக் கவியரசு கண்ணதாசன் அவர்கள் தெரிவிக்கின்றார்கள். அவர்கள் விவரிக்கின்ற விவரத்தை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்: "ஜூன் 3 ஆம் தேதியில் பிறந்தவர்கள் எப்படி இருப்பார்கள் என்று சொன்னால், கவர்ச்சிகரமாகப் பேசக்கூடியவர்கள்; பழகிய நண்பர்களைப் பற்றுவிடாமல் அணைத்துக்கொள்ளக்கூடியவர்கள்; காரியங்களில் வெற்றி பெறுவதற்காக எவ்வளவு காலம் வேண்டுமானாலும் காத்திருக்கக்கூடியவர்கள்; நடக்காத விஷயங்களைப்பற்றிச் சிந்திக்காதவர்கள்; தொலைநோக்கு உடையவர்கள்; வெற்றியை அடக்கத்தோடு கொண்டாடவும், தோல்வியை நிதானமாகத் தாங்கிக்கொள்ளவும் சக்தி உள்ளவர்களாக அவர்கள் இருப்பார்கள்; குடும்பத்திலே பாசம் மிக்கவர்கள்" என்று ஜூன் 3 ஆம் தேதி பிறந்த ஐந்தாம் ஜார்ஜ் மன்னனுடைய குணாதிசயங்களைக் கவியரசர் குறிப்பிட்டிருக்கின்றார். பிறகு அவர் சொல்கின்றார்: "ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் வாழ்க்கையோடு கலைஞருடைய வாழ்க்கையை ஒப்பிட்டுப் பார்த்தால், கலைஞர் அவர்கள் மன்னர் அல்லவே தவிர, ஜனநாயகத்தில் மன்னருக்குச் சமமான இடத்திலே இருக்கிறார்" (மேசையைத் தட்டும் ஒலி) என்று வாயார அவர்கள் வாழ்த்தியிருக்கின்றார்கள். அப்படியிருக்கின்ற கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே தமிழ்ப் புத்தாண்டினைத் தைத் திருநாளான முதல் நாளன்று வழக்கப்படுத்தி, தமிழ்கூறும் நல்லுலகுக்கு அறிவித்ததிலே நாங்களும் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறோம்.

*பிற்பகல் 12–10*

அதேபோல, தமிழ் ஈழப் பிரச்சினை என்று வருகின்றபோது, காங்கிரஸ்காரர்கள், தேசிய இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் தமிழ் ஈழத்து





மக்கள்மேல் பற்றில்லாதவர்கள், பாசம் இல்லாதவர்கள் என்பதுபோன்ற ஒரு பிரமை அல்லது ஒரு மாயை, ஒரு தவறான அபிப்பிராயம் உருவாகிவிடக் கூடாது என்பதற்காகச் சில கருத்துகளை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

இலங்கையிலேயிருந்து புறப்பட்டு வருகின்ற, அகதிகளாக வருகின்ற தமிழ் மக்கள் பாடுவதாக எழுந்த இந்தப் பாடலை நான் இங்கே சொல்லிக் காட்ட விரும்புகிறேன்.

*"விடைகொடு எங்கள் தாயே, நாடே,*
*கடல் வாசல் தெளிக்கும் வீடே,*
*பனிமலர்க் காடே, பறவைகள் கூடே,*
*மறுமுறை ஒருமுறை பார்ப்போமா?"*

என்று ஏக்கத்தோடு அந்த இலங்கைத் தீவிலேயிருந்து தமிழகத்தை நோக்கி வருகின்ற அகதிகளினுடைய கண்ணீர் நிலைமையை விவரிக்கின்ற இந்தப் பாடலின் ஊடாக இருக்கின்ற உணர்ச்சிகளை, அதிலிருக்கின்ற துக்கத்தை, துயரத்தை, தமிழ்நாடு காங்கிரஸ், நம்முடைய தமிழக காங்கிரஸ் பேரியக்கம் முழுமையாக உணர்ந்திருக்கிறது. தமிழக காங்கிரஸ் பேரியக்கம் முழுமையாக — மக்களினுடைய, உலகளாவி இருக்கின்ற தமிழர்களினுடைய பாதுகாப்பினைப் பலப்படுத்திடவும், காக்கவும் காங்கிரஸ் பேரியக்கம் கடமைப்பட்டிருக்கிறது என்ற விதத்தில்தான் நம்முடைய, எங்களுடைய அருமைத் தலைவர் ராஜீவ் காந்தி அவர்கள், அந்தத் தமிழ் மக்களுக்காகப் பாடுபட்ட அவர்கள், இரக்கப்பட்டதன் விளைவாகத்தான், தன்னுடைய உயிரையே இந்தத் தமிழ் மண்ணிலே நீத்தார் என்ற செய்தியையும் நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

பொதுவாக, மலேசியாவிலே தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டபோது பாராளுமன்றத்தில் முதன்முதலாகக் குரல் கொடுத்தவர்கள், எங்களுடைய அன்புத் தலைவர் திரு. ஜி.கே. வாசன் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, பாராளுமன்ற உறுப்பினர்கள் திரு. எஸ்.கே. கார்வேந்தன் அவர்களும், திரு. ஞானதேசிகன் அவர்களும்தான் என்பதனை நான் இங்கே கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஏனென்று சொன்னால், உலகளாவியிருக்கின்ற தமிழ் மக்களுடைய நலனைப் பாதுகாப்பதிலே எந்தவொரு இயக்கத்திற்கும் குறையாமல் காங்கிரஸ் பேரியக்கம் தனி அக்கறை கொண்டிருக்கிறது என்பதற்குச் சான்றாகத்தான் இதை நான் கூற விரும்புகிறேன். அதற்காக கவன ஈர்ப்புத் தீர்மானத்தை நமது பாராளுமன்றத்தில் கொண்டு வந்தவர்கள்,

[டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்] [2008 ஜனவரி 29

தமிழக காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் என்பதனை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

*"முன்னை யிட்டதீ முப்புரத் திலே,*
*பின்னை யிட்டதீ தென்னிலங் கையில்"*

என்று அன்று பட்டினத்தார் பாடிய பாடல், இன்றைக்கும் உண்மையாக இருப்பது எங்களுக்கெல்லாம் வேதனையாக இருக்கிறது. அந்த வேதனையிலே இருக்கும் உண்மை என்ன என்று சொன்னால், அங்கே இருக்கிற தமிழ் மக்கள் துயரப்படுவதற்கு ஈழத்து அரசு ஒரு காரணமாக இருந்தாலும்கூட, சிங்கள அரசு காரணமாக இருந்தாலும்கூட, அந்தத் துக்கத்திற்கும், துயரத்திற்கும் காரணமாக விடுதலைப் புலிகளும் இருக்கிறார்கள் என்பதுதான் உண்மை என்பதனை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

கடந்த 30 ஆண்டுகளில் 70,000 பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அந்த 70,000 பேர்களும் யாரால் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னால், சிங்கள அரசின் இராணுவத்தின் மூலமாக மட்டுமல்ல; விடுதலை வேட்கை என்ற பெயரிலே விடுதலைப் புலிகள் நடத்துகின்ற அந்தப் போராட்டத்தின் விளைவாகவும் அல்லது போரின் விளைவாகவும்தான் அந்த 70,000 பேரும் உயிரிழந்திருக்கிறார்கள் என்பதனை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். அப்படிக் கூறுவதனுடைய நோக்கம் என்னவென்று சொன்னால், 'அமைதியான, சுமுகமான பேச்சுவார்த்தையின் மூலமாக இலங்கையில் ஓர் அரசியல் தீர்வு ஏற்படுவதற்கு நம்முடைய தமிழ்நாடு அரசு மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தும்' என்று நீங்கள் ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருக்கிறீர்களே, அந்த வழிமுறைதான் இன்றைக்கும் உகந்ததாக இருக்க முடியும். வேறு வழியிலே சென்றால் நிச்சயமாக நாச வேலையாகத்தான் இருக்கும்.

என்னுடைய கையிலே இருக்கின்ற குறிப்பின் பிரகாரம், நம்முடைய ஈழத் தமிழ் மக்கள் ஏறக்குறைய பாதி பேர், ஈழத்திலே வாழ்கின்ற, வாழ்ந்துகொண்டிருந்த மக்களிலே பாதி பேர், தனி ஈழம் காண வேண்டுமென்ற தாகத்தின் காரணமாக எழுந்த போரின் விளைவாகப் பாதி பேர், அந்த நாட்டை விட்டு வெளியேறியிருக்கிறார்கள். இது எதைக் காட்டுகிறது என்று சொன்னால், அந்த நாட்டிலே ஒரு தீர்வு ஏற்படக்கூடிய நிலைமை நிச்சயமாக அண்மைக் காலத்தில் இல்லை என்பதை உணர்த்துகிறது. ஆகவேதான், மத்திய அரசை, ஒரு சுமுகமான



2008 ஜனவரி 29] [டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்]

பேச்சுவார்த்தையின் மூலமாக, ராஜ ரீதியான அணுகுமுறையின் மூலமாக, அங்கே ஓர் அமைதி நிலை ஏற்படுவதற்கு நீங்கள் வலியுறுத்த வேண்டும். நம்முடைய தமிழ்நாடு அரசு மத்திய அரசாங்கத்துடன் இணக்கமான சூழ்நிலையைக் கொண்டிருக்கிறது. 'தியாகத் திருவிளக்கு' என்று எங்கள் அன்னை சோனியா காந்தி அவர்களை, நம்முடைய கலைஞர் அவர்கள் மனமாரப் பாராட்டியதனுடைய அந்த உளப் பாங்கினுடைய பெருந்தன்மையை நாங்கள் பாராட்டுகிறோம். ஆகவே, அந்த வலிமையைப் பயன்படுத்திக்கொண்டு, அந்தப் பாசப் பிணைப்பைப் பயன்படுத்திக்கொண்டு, அங்கே வாழ்கின்ற தமிழ் மக்களுடைய தீர்வுக்கு, நலமான வாழ்வுக்கு வழிகோல வேண்டுமென்று நான் இங்கே கூறுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிக் கூறுவதன் மூலமாக, தமிழ் ஈழ மக்களினுடைய நலனிலே காங்கிரஸ் பேரியக்கம் நம்பிக்கை கொண்டிருக்கிறது; தீவிரவாத அமைப்பான, நாசகார வேலைகளிலே ஈடுபடுகின்ற பாசிச இயக்கமான விடுதலைப் புலிகளை ஆதரிக்கிறவர்களையும் தடை செய்ய வேண்டுமென்று காங்கிரஸ் பேரியக்கம் வலிமையாகக் கேட்டுக்கொள்கிறது என்பதனை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

*பிற்பகல் 12–15*

ஏனென்று சொன்னால், விடுதலைப் புலிகள் என்பவர்கள் பாசிச இயக்கத்திலே இருப்பவர்கள். பாசிசக் கொள்கைகளை உடன்பாடாகக் கொண்டிருப்பவர்கள். மிதவாதியாக இருக்கின்ற அமிர்தலிங்கம் முதற்கொண்டு, இன்றைக்கு இருக்கின்ற அத்தனை பேரையும் அழிக்கக்கூடிய, சகோதரர்களையே கொல்லக்கூடிய மனப் பாங்கு உடையவர்களாக அவர்கள் இருக்கின்றார்கள். ஆகவே, அவர்கள் விஷயத்திலே, அவர்கள் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளில் தமிழக அரசு எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய கவர்னர் உரையிலே குறிப்பிட்டு இருக்கக்கூடிய இன்னொரு முக்கியமான அம்சத்தை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். "நம்முடைய நாட்டின் பிற மாநிலங்களோடு ஒப்பிடுகையிலே, தமிழ்நாடு அமைதி தவழும் மாநிலமாக விளங்கி வருகிறது; மாநிலத்தில் தீவிரவாதம் போன்ற நடவடிக்கைகள் எவையும் நடைபெறாவண்ணம், இந்த அரசு விழிப்புடன் கண்காணித்து வருகிறது; அண்டை மாநிலங்களிலிருந்து நம்முடைய மாநிலத்திற்குள் தீவிரவாதம் ஊடுருவுவதற்கான முயற்சிகள் முறியடிக்கப்பட்டுள்ளன; மேலும், குற்றச்

செயல்களில் ஈடுபடும் கூலிப் படையினருக்கு எதிராக இந்த அரசு கடும் நடவடிக்கைகளை எடுத்து இருக்கிறது" என்று நீங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதை நான் வரவேற்கிறேன். அதற்காகத் தனியாக ஒரு சிறப்புக் காவல் படையினை—Special Task Force என்று சொல்லப்படுகின்ற அந்தச் சிறப்புக் காவல் படையினை விரைவில் நிறுவி இன்னும் பலப்படுத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால், குற்றஞ்சாட்டுவதற்குக்கூட ஒரு நிகழ்வு இல்லாதவண்ணம், Zero Error என்று சொல்லப்படுகின்ற அந்த நிலையைத் தமிழ்நாடு எட்ட வேண்டும். அதற்காகக் காவல் துறையின் சார்பாக Special Task Force என்று சொல்லப்படுகின்ற ஒரு சிறப்புக் கண்காணிப்புப் படையினை நம்முடைய தமிழ்நாடு அரசு நிறுவவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்ததாக, மணலைப் பொறுத்தவரையிலே, கட்டுமானப் பணிகளைப் பொறுத்தவரையிலே, மணல் வாரியம் என்ற ஒன்றை அமைத்து, மணல் எடுப்பதற்கான அந்த வழிமுறைகளை நெறிப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தனியார் துறையில் இட ஒதுக்கீட்டுக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கான சட்டத்தை இந்த ஆண்டே நம்முடைய அரசு இயற்ற வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சார், இன்னும் இரண்டு நிமிடங்கள்தான்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் :** அப்படி அரசு ஏற்று நடத்தினால், சமூக நீதிக்குத் துணை போகின்ற, சமூக நீதிக்குப் பாதுகாவலராக இருக்கின்ற டாக்டர் கலைஞர் அவர்களுடைய புகழ் மகுடத்திலே இன்னொரு வைரக் கல் பதிக்கப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, இந்தத் திட்டத்தை நிச்சயமாகச் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழகத்திலே ஓடுகின்ற ஆறுகளை இணைக்கின்ற திட்டம், இந்த ஆண்டே மேற்கொள்ளப்பட வேண்டும். குறிப்பாக surplus water, அதிகமாகப் பெய்கின்ற மழையின் காரணமாகக் கடலில் வீணாகின்ற நீரைத் தடுத்து, அதைப் பயன்படுத்துகின்ற விதத்தால் நம்முடைய சென்னையிலும், சென்னைக்கு அருகிலும் இருக்கின்ற ஏரிகளை



ஆழப்படுத்தி, மேலும் கொள்ளளவு கொள்ளக்கூடிய அளவிற்கு அவை பலப்படுத்தப்படவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல, நம்முடைய சென்னை மாநகரத்திலே போக்குவரத்து வசதி மிகவும் குறைவாக இருக்கிறது என்பதை நான் இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் வாங்கி வைத்திருக்கின்ற குறிப்பிலுள்ள எண்ணிக்கையின் அடிப்படையில் பார்த்தால், நாளுக்கு நாள் பெருகி வருகின்ற நெரிசல் என்பது, மிக அதிகமாக இருக்கிறது. ஆகவே, பெங்களூர் போன்ற மாநகரில் இருப்பதைப்போன்ற ஒரு வட்டச் சாலை, அதிவேக வட்டச் சாலை—Circular Road என்று சொல்லப்படுகின்ற அந்தச் சாலையை நம்முடைய மாநகரிலே அமைக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சாலைப் பாதுகாப்பைப் பொறுத்தவரையிலே, இன்னும் விழிப்போடு நம்முடைய அரசு செயல்படவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால், இந்த நாள் எப்படி என்று சொல்கிறபோது, "இந்த நாள், இந்த விபத்துக்கள்" என்று தலைப்பிட்டு, அதையே ஒரு column–ஆகப் போடுகிற ஒரு நிலைமை இருக்கிறது. ஆகவே, சாலை விபத்துக்கள் நேராதவண்ணம் இங்கே நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, நம்முடைய கூட்டுறவுத் துறையிலும், பொதுத் துறையிலும் Co-generation என்ற முறையிலே, 925 கோடி ரூபாயிலே 185 மெகா வாட்டில் புதிய மின் உற்பத்தி நிலையங்கள் 18 மாதங்களிலே நிறுவப்படும் என்று நம்முடைய மின் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அந்த அறிவிப்புக்கு நான் பாராட்டுத் தெரிவிக்கிறேன். குறிப்பிட்ட அந்தக் காலக்கட்டத்திலே அவற்றை முடிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய தொகுதியான பள்ளிப்பட்டுத் தொகுதியிலேகூட. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர், please conclude. 15 நிமிடம் முடிந்துவிட்டது.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இரண்டு நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். பள்ளிப்பட்டுத் தொகுதியிலே ஒரு புதிய மின்

[டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்] [2008 ஜனவரி 29

நிலையத்தை அமைக்க அரசு முன்வருமானால், அதற்குரிய நிலத்தை அடையாளம் காட்டவும், கூட இருந்து ஒத்துழைக்கவும் நான் தயாராக இருக்கிறேன் என்ற கருத்தைக் கூற விரும்புகிறேன்.

அதேபோல, என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற பள்ளிப்பட்டுத் தாலுகா, மிகப் பெரிய பரப்பளவு கொண்டிருக்கின்ற வட்டம் ஆகும். அதை இரண்டாகப் பிரித்து, ஆர்.கே. பேட்டை இப்போது ஊராட்சி ஒன்றிய மையமாக இருக்கிறது; அதைத் தலைநகராகக் கொண்டு, ஒரு தனித் தாலுகாவை, புதிய வட்டத்தை உருவாக்க வேண்டும் என்று நம்முடைய அரசை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், நம்முடைய உயர் நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்தையும் தமிழை வழக்கு மொழியாகக் கொண்டு. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** இந்தக் கடைக்கும், அந்தக் கடைக்கும் எவ்வளவு தூரம் இடைவெளி இருக்கிறது என்பதையும், அதோடுகூட அங்கு என்ன விற்பனை ஆகிறது, இங்கு என்ன விற்பனை ஆகும் என்பதையும், ஒரு தனி ஆள் போட்டால் அது சரிப்பட்டுவருமா என்பதையும் விளக்கமாக எழுதி என்னிடத்தில் கொடுத்தால், அதுபற்றிப் பரிசீலிக்கலாம்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். நான் கேட்டது வருவாய்த் துறை சம்பந்தப்பட்ட கோரிக்கை. ஆர்.கே. பேட்டை, பள்ளிப்பட்டு வட்டம் என்பது பள்ளிப்பட்டு ஒன்றியத்தையும், ஆர்.கே. பேட்டை ஒன்றியத்தையும் ஒருங்கே இணைத்து இருக்கக்கூடிய வட்டமாகும்/தாலுகாவாகும். அதை இரண்டாகப் பிரித்து, ஆர்.கே. பேட்டையை மையமாகக் கொண்டு புதிய வட்டத்தை/தாலுகாவை அமைக்கவேண்டும் என்று நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடம் ஏற்கெனவே நான் கோரியிருக்கிறேன். அந்தக் கோரிக்கையினைப் பரிவோடு பரிசீலித்து, புதிய வட்டத்தை அமைக்கவேண்டும் என்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய உயர் நீதிமன்ற. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள், please.



2008 ஜனவரி 29]

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** புதிய தொழில் கொள்கையைத் தமிழக அரசு கையாள்வதன் மூலமாக 20 இலட்சம் பேர்கள் பயன்பெறுவார்கள் என்ற குறிப்பினை வரவேற்கிறேன்.

பிற்பகல் 12–20

அதேபோல, நம்முடைய நடுநிலைப் பள்ளிகளுக்கெல்லாம் இப்போது கணினி வழங்கக்கூடிய நிலைமை வந்திருக்கிறது. ஏறக்குறைய 6,650 கணினிகள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த அறிவிப்பினை நான் முழுமையாக வரவேற்கிறேன்.

அதேபோல, சிமென்டைப் பொறுத்தவரையிலே, நேற்றையதினம் டான்செம் சார்பிலே 160 ரூபாய்க்கு சிமென்ட்டைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற அறிவிப்பு வந்திருக்கிறது. அதை முழுமையாகப் பயன்படுத்தி, பொதுமக்கள், சாதாரண மக்கள் பயன்படும் வகையிலே அதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய தமிழ் அறிஞர் வாரியார் சுவாமி அவர்களுக்குச் சிலை வைப்பதற்கு, ஏற்கெனவே சிலை தயாராக இருக்கிறது. நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் மாண்புமிகு துரைமுருகன் அவர்கள்கூட நன்றாக அறிவார்கள். அவருடைய சிலையினை, தமிழ்க் கடலாக விளங்கிய திருமுருகக் கிருபானந்த வாரியார் அவர்களின் சிலையினை, அவர் வாழ்ந்த சென்னையிலே ஒரு மைய இடத்திலே அமைப்பதற்கு இடம் ஒதுக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, சிறந்த வாய்ப்பிற்கு நன்றி கூறி, உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம். உங்களுக்கு 10 நிமிடங்கள்.

**திரு. கி. ஆறுமுகம்:** துணைத் தலைவர் அவர்களே, எப்படிப் பேசுவது? கொஞ்ச நேரம் கூடுதலாகத் தர தயவு பண்ணுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏதோ முடிந்த வரையில் பேசுங்கள்.

**திரு. கி. ஆறுமுகம்:** கொஞ்சம் தயவு பண்ணுங்கள். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

உறுப்பினர்கள் அதன்மீது கருத்துகளைச் சொல்கிற அந்த வேளையிலே, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே, தொடர்ந்து கடந்த 7 ஆண்டுகளாக எனக்குப் பேச வாய்ப்பளித்துக்கொண்டிருக்கின்ற எங்களுடைய தமிழ்க் குடிதாங்கி மருத்துவர் அய்யா அவர்களுக்கும், சின்னய்யா அவர்களுக்கும், எங்களுடைய தலைவர் அண்ணன் கோ.க. மணி அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து, இங்கே என்னைப் பேச அழைத்த தங்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய ஆளுநர் உரை என்பது, வரவிருக்கிற நிதிநிலை அறிக்கையை முன்கூட்டியே அறிவிக்கிற ஒரு அறிவிப்பாக, முன் அச்சாரமாக இருந்துகொண்டிருக்கிறது என்பதில் இரு வேறுபட்ட கருத்திற்கிடமில்லை. அதிலே நம்முடைய தமிழக அரசாங்கம் நல்ல செய்திகளை இங்கே சொல்லியிருக்கிறது. அதிலே சற்று நேரத்திற்கு முன்பாக, நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், நம்முடைய தமிழ் ஆண்டின் முதல் நாள், தை முதல் நாள் என்பதை மிகப் பெருமையோடு அறிவித்து, அதை இங்கே சட்டமாக்க வேண்டுமென அறிவிப்பை வெளியிட்டார்கள். அதைப் பாட்டாளி மக்கள் கட்சி முழு மனதோடு வரவேற்கிறது.

அதேபோன்று, உள்ளாட்சிகளுக்கு வெகு விரைவிலே அதிக அதிகாரங்களைக் கொடுக்க இருக்கிற செய்தி இனிப்பாக இருந்துகொண்டிருக்கிறது. நம்முடைய பள்ளிகளுக்கு, குறிப்பாக நடுநிலைப் பள்ளிகளுக்குக் கணினிகள், 6,650 பள்ளிகளுக்குக் கணினிகள் வழங்கவிருக்கிற செய்தி மகிழ்ச்சியூட்டுகிற செய்தியாக இருந்துகொண்டிருக்கிறது.

அது மட்டுமல்ல, சிறு தொழில்களுக்கெனத் தனியாகக் கொள்கைத் திட்டம் அறிவிக்கிறோம் என்கிற அறிவிப்பும் பாராட்டிற்குரிய ஒன்றாக இருந்துகொண்டிருக்கிறது. அதைவிட முத்தாய்ப்பு வைத்தாற்போன்று, திருவாரூர் மாவட்டத்திலே புதிய மத்திய பல்கலைக்கழகம் முதலாவதாகத் துவங்கப்படும் என்ற அறிவிப்பு நமக்கு இனிப்பான செய்தியாக இருந்துகொண்டிருக்கிறது.

அதேபோன்று, பட்டியலினத்து மக்களாக இருக்கின்ற, ஒரு பகுதி மக்களாக இருக்கின்ற அருந்ததியர் மக்களுக்கு உள் ஒதுக்கீடு வழங்கப்படும் என்ற அறிவிப்பும் நல்ல ஒரு செய்தியாக இருக்கிறது. அதேபோன்று, இப்போது தமிழகத்திலே இருக்கிற மக்களுடைய



ஆதங்கம், அடித்தளத்திலே இருக்கிற மக்களுடைய ஆதங்கம், தமிழிலே அனைத்துத் துறைகளும் முன்னேற வேண்டும். குறிப்பாக, கல்வித் துறையிலே வளம் பெற வேண்டும் என்று தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு உதாரணம் சொல்ல வேண்டும் என்று சொன்னால், உலக நாடுகளிலே, குறிப்பாகக் குட்டி நாடாக இருக்கின்ற ஜப்பானிலும், வளர்ந்துகொண்டிருக்கிற சீனாவிலும் அந்த மக்கள் படிக்கிற படிப்பு, ஆரம்பக் கல்வி முதல் உயர் கல்வி வரையிலே, ஆராய்ச்சிப் படிப்பு வரையிலே, அத்தனையும் அவர்களுடைய சொந்த மொழியிலே இருந்துகொண்டிருக்கின்றது. அதனாலேதான், இன்றைக்கு அந்த நாடுகள் உலக வல்லரசு நாடுகளாக வளர்ந்து கொண்டிருக்கின்றன என்று சொன்னால், அதற்கு அடித்தளமிடுவது அந்தத் தாய் மொழிக் கல்விதான் என்பதை இங்கே நான் பதித்தாக வேண்டும். அதனாலேதான் இன்றைக்கு நாம் இதைச் சுட்டிக்காட்ட வேண்டிய கடமையிலே இருந்துகொண்டிருக்கின்றோம்.

தமிழ்நாட்டிலே இப்போது பார்த்தால், ஆரம்பக் கல்வியிலே இருந்து உயர் கல்வி வரையிலே, வேற்று மொழியே படித்துப் பட்டம் பெறலாம் என்கிற நிலை இருந்துகொண்டிருக்கிறது. இதை மாற்ற வேண்டுமென்று எங்கள் அய்யா, மக்கள் காவலர் டாக்டர் அய்யா அவர்கள் தொடர்ந்து சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டினுடைய அந்த இழிநிலைமையை மாற்ற வேண்டும் என்பதற்காகத்தான், ஆட்சிப் பொறுப்பேற்றுக்கொண்டவுடன், உடனடியாக கட்டாயத் தமிழ்ப் பாட மொழித் திட்டத்தைச் சட்டமாகக் கொண்டு வந்த ஆட்சி, நம்முடைய முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சி. தமிழ்நாட்டிலே படிக்கக்கூடிய matriculation பள்ளியாக இருந்தாலும், எந்தப் பள்ளியாக இருந்தாலும், தமிழைக் கண்டிப்பாகப் படிக்காமல் இனி வரக்கூடிய வருங்காலச் சந்ததியினர் இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் தலைவர் கலைஞர் அவர்கள் அந்தச் சட்டத்தின்மூலமாக ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

பிற்பகல் 12–25

**திரு. கி. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள், ஓர் அறிவிப்பைச் சொன்னார்கள். இந்த அறிவிப்புபற்றி, 1956-லே, நான் பிறப்பதற்கு முன்பாகவே, இந்தச் சட்டப் பேரவையிலேயே அன்றைய கல்வித் துறை அமைச்சராக இருந்த காங்கிரஸ் கட்சியினுடைய மாண்புமிகு பெரியவர் சி. சுப்பிரமணியம் அவர்கள் உரையாற்றி இருக்கிறார்கள். அதிலே ஒரு பகுதியை நான் இங்கே படிக்கிறேன்: "ஒரு பூ மலர்கின்றது. அது மலர்கின்ற நிகழ்ச்சி நம் எல்லோருக்கும் மகிழ்ச்சியைக் கொடுக்கிறது". எப்போது இவ்வாறு பேசினார்கள் என்று கேட்டால், 27–12–1956–லே இதே பேரவையிலே பேசியிருக்கிறார்கள்: "அம்மலர்ச்சி ஒரு தனிப்பட்ட நிகழ்ச்சி அல்ல. செடி வளர்ந்து, பிறகு அரும்புவிட்டு, போதாகி அது மலர்கிறது; அது மலர்வதோடு நின்றுவிடுவதில்லை; அதில் காய் ஏற்பட்டு, பழுத்து. மக்களுக்கும் உதவுகிறது; அதே மாதிரிதான் தமிழ் மலர்கிறது என்றால், அது ஒரு தனிப்பட்ட நிகழ்ச்சி அல்ல; நம் நாட்டிலே இந்த 50 ஆண்டு காலமாக நடந்த நிகழ்ச்சிகளின் ஒரு பலனாக, இன்றைக்கு ஒரு செடியிலே ஒரு பூ மலர்கிறது; இதிலும் நல்ல காயும், கனியும் ஏற்பட்டு, மக்களுக்குப் பயனளிக்கக்கூடிய முறையிலே இது இன்னும் நன்றாக வளர்ச்சியடையும் என்பதில் எனக்கு எந்தவிதமான சந்தேகமும் கிடையாது; ஆகையினால் நம்முடைய அரசாங்க மொழி தமிழாக இருக்க வேண்டும் என்று பிரகடனம் செய்வதிலே நாம் பெரிய முன்னேற்றப் பாதையிலே ஒரு அடியை எடுத்து வைக்கிறோம்" என்று அன்றைய கல்வித் துறை அமைச்சர் பெரியவர் சுப்பிரமணியம் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

இந்த நிகழ்வு, அந்த ஆட்சியிலேயிருந்து தொடர்ந்து பின்பற்றப்படவேண்டும் என்று சொன்னால், கடந்த ஆண்டிலேயிருந்துதான் ஒன்றாம் வகுப்பிலிருந்து தொடங்க வேண்டிய அவசியம் இல்லை. 1956–லே இருந்து இந்த நிகழ்வு படிப்படியாக முன்னேறி இருந்தால், இன்றைக்கு 'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என்ற நிகழ்வு. நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் கண்ட கனவு மலர்ந்திருக்கும். இங்கே தமிழ் மக்கள், 'எங்கே தமிழ்? எதிலே தமிழ்?' என்று கேட்கிற நிலைக்குச் சென்றுகொண்டிருக்கிறது. அதைத்தான் சுட்டிக்காட்டுகிறது பாட்டாளி மக்கள் கட்சி.

இன்றைக்கு விளம்பரங்கள்—அரசு விளம்பரங்கள் வந்துகொண்டிருக்கின்றன. இன்றைக்குக்கூட பத்திரிகையிலே



வந்திருக்கிற விளம்பரம் அத்தனையையும் பார்த்தால் ஆங்கிலத்திலே இருந்துகொண்டிருக்கிறது. இப்படித் தொடர்ந்து அரசு அதிகாரிகள் விளம்பரங்களை ஆங்கிலத்திலே கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே தமிழ்ப் பத்திரிகையிலே இதுபோன்ற விளம்பரம் வந்தால், தமிழை மட்டும் தெரிந்திருக்கிற அந்தக் குடியானவன் எப்படி இதைத் தெரிந்துகொள்ள முடியும்? இதைத்தான் எங்களுடைய தமிழ்க் குடிதாங்கி மருத்துவர் அய்யா அவர்கள் தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டிருக்கிறார்கள். தமிழ்ப் பற்றாளர்களிடமும் தொடர்ந்து சொல்லி வருகிறார்கள்.

நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், தமிழ் மொழியை, தமிழை, தமிழ்ச் சாதியை, தமிழ் இனத்தைப் பாதுகாப்பதிலே மிகவும் முக்கியமான அக்கறை கொண்டவர். அவர் ஆட்சியிலே இதை எல்லாம் விரிவுபடுத்த வேண்டும். அத்தனை துறைகளிலும் இது வளரவேண்டும் என்பதற்காகவேதான் இதை எல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிறோம். கடந்த ஆட்சிக் காலத்திலே—திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே—அய்யா அவர்கள் சொன்னார்கள்; தமிழ்நாட்டுத் தெருக்களிலே எங்கேயும் தமிழைக் காணோம். இந்த நாட்டிலே விளம்பரப் பலகைகளிலே தமிழே இல்லை; வணிக நிறுவனங்களிலே தமிழே இல்லை என்பதற்காகத் தார் பூசி அழிக்கிற போராட்டம் நடத்துகிறபோது அன்றைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் சொன்னார்கள்: "டாக்டர் அய்யா அவர்களே, நீங்கள் ஆளை அனுப்ப வேண்டாம், நாங்கள் ஆணை அனுப்புகிறோம்" என்று சொன்னார்கள். அய்யா அவர்கள் அதை விட்டுவிட்டார்கள்; இதுவரை அந்த ஆணை என்ன ஆகிவிட்டது என்று தெரியவில்லை. அதனை நான் மீண்டும் இங்கே கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதேபோன்று, இன்றைக்கு சென்னை, அண்ணா சாலை போன்ற பகுதிகளிலே பார்த்தால், இரவு நேரங்களிலே பாருங்கள், ஜொலித்துக்கொண்டிருக்கிறது பல்வேறு விளம்பரப் பலகைகள். அத்தனையும் அன்னிய மொழியிலே ஜொலித்துக்கொண்டிருக்கின்றன; மிளிர்ந்து கொண்டிருக்கின்றன. அங்கே போய்ப் பார்த்தால் இது இந்தியத் திருநாடா அல்லது வேறு நாடா என்று சொல்லுகிற அளவுக்கு, இன்றைக்கு இலண்டன் மாநகரைப் போன்ற ஒரு பெரிய நகரமாகக் காட்சி அளித்துக்கொண்டிருக்கிறது. எப்போதுதான் இந்தப் பகுதிகளிலே தமிழ் எழுத்து வரும், ஆங்கில எழுத்து மறையும் என்கிற

[திரு. கி. ஆறுமுகம்] [2008 ஜனவரி 29

தாக்கம், தமிழ் மக்கள் மத்தியிலே இருந்து கொண்டிருக்கின்றது. அதற்கு உடனடியாக நம்முடைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இதைச் சொல்லுகிறபோது, ஒரு கவிதை வரிகள்—புரட்சிக் கவிஞரின் கவிதை வரிகள்—எனக்கு ஞாபகம் வருகிறது:

*"மணக்கவரும் தென்றலிலே குளிரா இல்லை?*
*தோப்பில் நிழலா இல்லை?*
*தணிப்பரிதாம் துன்பமிது தமிழகத்தின்*
*தெருக்களிலே தமிழ்தா னில்லை"*

என்கிற அந்த புரட்சிக் கவிஞருடைய வரிகள்தான் ஞாபகம் வருகிறது. இப்படி எங்கே தமிழ் என்கிற நிலை, எப்போது தமிழ் வரும் என்கிற தாக்கம், ஆட்சி மொழியிலே இருக்கிறதா என்று கேட்டால், 'இல்லை'; அலுவல் மொழியிலே இருக்கிறதா என்று கேட்டால், 'இல்லை'. இங்கே நம்முடைய அலுவலகப் பெருமக்கள் பெரும்பாலான குறிப்புகளை ஆங்கிலத்திலே எழுதிக்கொண்டிருக்கிறார்கள். அதற்குக்கூட பல்வேறு காரணங்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு ஒரு காரணம் சொல்கிறார்கள். தமிழகத்திலே பெரும்பாலும் வட இந்தியர்கள்தான், ஆட்சிப் பணித் துறையிலே பணியாற்றுபவர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள்; அதனாலேதான் இங்கே பெரும்பாலும் ஆங்கிலம் பயன்படுத்தப்படுகிறது என்கிற ஒரு கூற்று இருந்துகொண்டிருக்கிறது. கடந்த 7 ஆண்டுகளாகத் தொடர்ந்து நாங்கள்கூட வலியுறுத்திக்கொண்டு வருகிறோம். தமிழ்நாட்டிலே, பிரிவு ஒன்றுக்கு அதிகமாக நம்முடைய அலுவலர்களைத் தேர்ந்தெடுங்கள்; இவர்கள் நேரடியாக I.A.S., I.P.S.–ஆக வரவில்லையென்றாலும்கூட, 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள் இங்கேயிருந்து அவர்கள் பணி செய்த பிறகு, இந்திய ஆட்சிப் பணிக்கு வர முடியும்; காவல் துறைப் பணிக்கு வர முடியும் என்கிற கருத்தை நாங்கள் வலியுறுத்தி வருகிறோம். இதையெல்லாம் நம்முடைய அரசாங்கம் சற்றுச் சிந்திக்க வேண்டுமென்பதற்காகத்தான் சொல்கிறோம். எதிராகச் சொல்ல வேண்டுமென்பதற்காக நாங்கள் இதைச் சொல்லவில்லை. அதேபோன்று உயர் நீதிமன்றத்திலே—இன்றைக்குக்கூட அறிவித்திருக்கிறார்கள்; உயர் நீதிமன்றத்திலே—வழக்காடுகிற மொழி, அதனுடைய தீர்ப்புகள் எல்லாம் தமிழிலே வரும் என்கிற கருத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. வெகு விரைவிலே அதைக் கொண்டு வருவதற்கான முயற்சியை எடுக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) பேச்சை முடித்துவிடுகிறேன்.



2008 ஜனவரி 29] [திரு. கி. ஆறுமுகம்]

பிற்பகல் *12–30*

அதேபோன்று, நம்முடைய திருக்கோயில்கள். திருக்கோயில்களிலே பார்த்தால், அங்கே நடைபெறுகிற ஆராதனைகள், அர்ச்சனைகள் எல்லாம் வடமொழியிலே இருந்துகொண்டிருக்கின்றன. அங்கே வைக்கப்பட்ட பெயர்ப் பலகை குறித்துகூட நம்முடைய முதல்வர் அவர்கள் சொன்னார்கள். 'இங்கு தமிழிலும் அர்ச்சனை செய்யப்படும்' என்கிற வாக்கியம் இருந்துகொண்டிருக்கிறது. அதை உடனடியாக நீக்குவதற்கும், எல்லா இடங்களிலும் 'தமிழிலே அர்ச்சனை நடைபெறும்' என்ற நிலையும் வர வேண்டும்.

நம்முடைய திருமண முறையிலேகூட தமிழ் இல்லை. அங்கும் வடமொழிதான் இருந்துகொண்டிருக்கிறது.

அடுத்துப் பார்த்தால் திரைப்படங்கள். 'பெயரை வைத்தாலே போதும்; வரி விலக்கு' என்று நம்முடைய அரசு அறிவித்திருக்கிறது. அவர்கள் பெயரை மட்டும் தமிழிலே வைத்துவிடுகிறார்கள்; அதிலே வருகிற வார்த்தைகள் ஆங்கிலமாகத்தான் இருக்கின்றன. முழுமையாக, 100 சதவிகிதமும் அவர்கள் தமிழிலே படம் எடுத்தால்தான் அவர்களுக்கு வரி விலக்கு என்கிற ஒரு கட்டாயத்தை, நிர்ப்பந்தத்தை நம்முடைய அரசாங்கம் கொண்டு வர வேண்டும். ஏனென்று சொன்னால், 'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என்பதைப் புகுத்துகிற நிலையிலே, இதையெல்லாம் நாம் கண்டிப்பாகக் கொண்டு வர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் பார்த்தால், ஊடகங்களிலே இது மிகவும் மோசமாக இருந்துகொண்டிருக்கின்றது. இதையும் தடுப்பதற்கான ஒரு குழுவை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நாட்டிலே 'இலக்கணம்' என்ற ஒரு படம், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள்கூட பார்த்தார்கள். அந்தப் படத்தைப் பார்த்துவிட்டுச் சொன்னார்கள். நன்றாகச் சொன்னார்கள். Simple and best என்று சொன்னார்கள். மிக எளிமையாக, நல்ல படமாக எடுத்திருக்கிற படம் என்று சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேற்றைக்கு வேல்முருகன் விட்டதை நீங்கள் தொடர்கிறீர்கள்!

**திரு. கி. ஆறுமுகம்:** அப்படியில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர்கள் டான்ஸ், நீங்கள் சினிமா.

**திரு. கி. ஆறுமுகம்:** இல்லை, இல்லை. அந்தக் கருத்தில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. கி. ஆறுமுகம்:** அவரும் மாற்றிவிட்டார். இன்றைக்குக்கூட பாருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவரும் மாற்றிவிட்டாரா?

**திரு. கி. ஆறுமுகம்:** நேற்றைக்குக்கூட கால் சட்டையோடு வந்தார் என்று நம்முடைய மூத்த அமைச்சர் சொன்னார்; இன்றைக்கு வேட்டியோடு வரச் சொன்னார்; வந்துவிட்டார். தமிழை ஆட்சி மொழியாக அதே மாதிரி கொண்டு வர வேண்டுமென்று நானும் இன்றைக்கு வலியுறுத்துகிறேன். ஏனென்றால், இது முக்கியம். நாங்கள் திருத்திக்கொள்கிறோம். இதுபோன்று நம்முடைய அரசும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதற்காக இந்தக் கருத்தை இங்கே சொன்னேன்.

அது மட்டுமல்லாமல், நம்முடைய மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். செய்யூர் பகுதியிலே அனல் மின் நிலையம் வருவது குறித்து, அங்கே நிலத்தினுடைய விலை அதிகம் என்று சொன்னார்கள். இந்த அறிவிப்பு வந்தவுடனே என் தலைமையிலே ஒரு குழுவை எங்களுடைய அய்யா அவர்கள் நியமித்து, அந்தப் பகுதியிலே இதுபற்றி விசாரிக்கச் சொன்னார்கள். நாங்கள் எல்லாம் போய் விசாரித்தோம். அங்கே ஒரு ஏக்கர் நிலம்—நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்வது கிழக்குக் கடற்கரைச் சாலையிலே ஓரமாக இருக்கிற நிலத்தின் விலை. ஆனால் நாம் எடுத்திருப்பது, அங்கேயிருந்து இரண்டு கிலோ மீட்டருக்கு உள்ளே. அங்கே உப்பங்கழிவெளி. அதையடுத்துக் கருவேல மரங்கள் அதிகமாக இருக்கின்றன. கொஞ்சம்தான் பயிர்கள் இருக்கின்றன. அதிலும் குறிப்பாக, சவுக்கு மரங்கள் அதிகமாக இருக்கின்றன. வேறு எந்தப் பயிரும் இல்லை. நெல் பயிர் குறைவாக இருக்கிறது. அங்கே ஒரு ஏக்கர் நிலம் 3 இலட்சத்திலிருந்து, அதிகமாகப் போனால் 7 இலட்சம் ரூபாய். நாம் இந்தத் திட்டத்திற்காக நில ஆர்ஜிதம் செய்ய வேண்டுமென்றால்கூட, நில உரிமையாளர் கொஞ்சம் அடாவடி செய்கிறார் என்றால்கூட, ரூபாய் 10 இலட்சத்தை ஒரு ஏக்கர் தாண்டாது.



மத்திய அரசாங்கம் அதற்கு விதித்திருக்கிற ஓட்டுமொத்த நிதியிலே, நாங்கள் கணக்குப் பார்த்தோம். அப்படி 7 இலட்சம் ரூபாய் என்றுகூட ஒரு ஏக்கர் நிலம் வாங்கினால், அதில் அந்த ஓட்டுமொத்த மதிப்பிலே $2\frac{1}{2}$ சதவிகிதம்தான் வருகிறது; அல்லது 10 இலட்சம் ரூபாய் என்று கொடுத்து வாங்கினால், $3\frac{1}{2}$ சதவிகிதத்திற்குள்ளேதான் ஓட்டுமொத்த நில மதிப்பே வருகிறது. அப்படியிருக்கிறபொழுது இதை வேறு இடத்திற்கு மாற்றக்கூடாது. செய்யூரிலேயே அந்த அனல் மின் நிலையம் வருவதற்கான முயற்சியை எடுக்க வேண்டும். அதற்கான கருத்துகள்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம் அவர்கள் மலிவாக, 3 இலட்சம், 5 இலட்சத்திற்கு எல்லாம் நிலம் வாங்கித் தருவதாகச் சொல்கிறார். அங்கே மத்திய அரசாங்கம், N.T.P.C., ஒரு ultra mega power project போடுவதற்குத் தயாராக இருக்கிறது. நீங்கள் 5 இலட்சம் ரூபாய்க்குச் சராசரியாக 3,000 அல்லது 4,000 ஏக்கர் நிலம் வாங்கித் தந்தால், நிச்சயமாக செய்யூரிலே நாங்கள் அந்த மின்சாரத் திட்டத்தினை அனுமதிக்கிறோம். ஒன்று; இரண்டாவது, அங்கே ஒரு துறைமுகம் கட்ட வேண்டும். துறைமுகம் கட்டுவதற்குக் கடற்கரை ஓரத்திலேதான் நிலம் வேண்டும். இரண்டு, மூன்று கிலோ மீட்டர் தாண்டிப்போய், துறைமுகம் கட்ட முடியாது. ஆகவே, துறைமுகப் பகுதியிலே ஒரு துறைமுகம் கட்ட முடியாது. அதையும் 5 இலட்சம் ரூபாய்க்கு ஆயிரம் ஏக்கர் நிலம் வேண்டும். அதையும் 5 இலட்சம் ரூபாய்க்கு வாங்கிக் கொடுத்தால், ஒரு துறைமுகமும், 4000 மெகா வாட் மின்சாரமும் உற்பத்தி செய்யக்கூடிய திட்டத்தை நிச்சயமாக அந்தப் பகுதியிலே கொண்டு வருவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–35*

நீங்கள் நிறைய தமிழைப் பற்றிப் பேசிக்கொண்டே இருந்தீர்கள். இந்த ஆட்சியினுடைய தலையிட வேண்டாம் என்று நினைத்தேன். ஆளுநர் உணர்வுகளை நீங்கள் புரிந்துகொண்டிருப்பீர்கள். ஆளுநர் உரையிலேகூட மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மத்தியிலேயே நாம் தமிழை ஆட்சி மொழியாகக் கொண்டு வர வேண்டும் என்று விரும்புகின்றோம். தமிழைச் செம்மொழியாக நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் ஆக்கியிருக்கிறார்கள். உயர் நீதிமன்றத்திலே அதை வாதாடக்கூடிய மொழியாகவும் நாம்

அமல்படுத்த வேண்டும் என்று மத்திய அரசாங்கத்தை வலியுறுத்திக்கொண்டிருக்கின்றோம். இப்படி 'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என்ற பேரறிஞர் அண்ணாவினுடைய கனவை நிறைவேற்றுவதுதான் இந்த அரசாங்கத்தினுடைய நோக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல, நாம் எத்தனைதான் சட்டங்கள் போட்டாலும், எத்தனை அறிவுரைகள் சொன்னாலும், தனிப்பட்ட வியாபாரிகள் தங்களுடைய விளம்பரப் பலகைகளிலே ஆங்கிலத்தைதான் எழுதுகிறார்கள். இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலே, ஆங்கிலத்திலேயும் எழுதுங்கள், மேலே தமிழிலும் எழுதுங்கள் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதை வேண்டுமானால் இன்னமும் வலியுறுத்தி, தமிழிலே எழுதாதவர்களுடைய அந்த விளம்பரப் பலகையை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்க முடியுமா என்பதைப்பற்றி சட்ட ஆலோசகர்களோடு கலந்து பேசி முடிவு செய்வோம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தமிழ் விளம்பரப் பலகைபற்றிச் சென்னார்கள். ஏற்கெனவே அரசாணை இருக்கிறது. இன்றைக்கு ஒரு குற்றம் செய்துவிட்டால், அங்கே அவர்கள்மீது இன்றைக்குக் குற்றம் சுமத்தப்படுகிறது. அதற்கான தண்டனை வழங்கப்படுகிறது. அதுபோன்று, இந்த அரசாணை இருக்கிறபோது...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, நிலம் வாங்குவதைப்பற்றிச் சொன்னாரே?

**திரு. கி. ஆறுமுகம்:** ஒன்றுமில்லை. நான் அதன் உள்ளே போகவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நிலம் வாங்குவதைப்பற்றிப் பேசுங்கள்.

**திரு. கி. ஆறுமுகம்:** நம்முடைய அரசு விளம்பரங்கள்கூட தமிழிலே வரவில்லையே! இதுதான் எங்கள் ஆதங்கம். அதாவது, அரசைச் குறை சொல்வதற்கோ, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சியைக் குறை சொல்வதற்கோ இதைச் சொல்லவில்லை ஏனென்றால், இதையெல்லாம் நாம் நடைமுறைப்படுத்துகிறோம். தமிழ் மக்கள், தமிழ் உணர்வு, தமிழ்ச் சாதி, தமிழ்க் கலை, பண்பாடு இவையெல்லாம் சீரழிகிறதே என்பதற்காகத்தான் இங்கே வேண்டுகோள்





காட்டுகிறோம். ஆகவே, அரசு இதைத் தொடர்ந்து சரிசெய்ய வேண்டும் என்றுதான் சொல்கிறோம். அது மட்டுமல்லாமல், ஒன்றே ஒன்று, எங்கள் பிரச்சினை. செய்யூர் அனல் மின் நிலையம் சம்பந்தமாகச் சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, பேசுங்கள்.

**திரு. கி. ஆறுமுகம்:** அந்தப் பகுதியிலே ஒரு கப்பல் துறைமுகம் அமைவதற்கான இடங்கள் எல்லாம் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன. ஒட்டுமொத்தமான ஆய்வு செய்திருக்கிறோம், நாங்கள் குழுவாகச் சென்று. நாளையதினம் நம்முடைய முதல்வர் அவர்களுக்கும், நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் அந்த ஆய்வு அறிக்கையை நாங்கள் சமர்ப்பிக்க இருக்கிறோம். அதைப் பார்த்து, செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். விலை கண்டிப்பாகக் குறைவாக இருக்கிறது. அதை ஆதாரமாகச் சொல்வோம் என்று சொல்லிக்கொண்டு, இங்கே பார்த்தீர்கள் என்றால், என்னுடைய தொகுதியிலே, வங்கக் கடலோரம், முகத்துவாரத்திலே, பாலாற்றின் குறுக்கே ஒரு அணை, 145 கோடி ரூபாயிலே கட்டப்பட வேண்டிய அணை, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, அப்படியே நிலுவையில் இருக்கிறது. அது உடனடியாகக் கட்டப்பட வேண்டும். ஏனென்றால்..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திருமதி ரா. லீமா றோஸ். (குறுக்கீடு)

**திரு. கி. ஆறுமுகம்:** துணைத் தலைவர் அவர்களே, அமைச்சரே ஐந்து நிமிடம் பேசினார்கள். ஐந்து நிமிடங்கள் எனக்குக் கொடுத்துவிடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை. திருமதி ரா. லீமா றோஸ். 10 நிமிடங்கள். நீங்கள் நல்ல கட்டுப்பாடான கட்சி. 10 நிமிடங்களிலேயே முடித்துவிடுவீர்கள். ஆரம்பியுங்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. சொல்லிவிட்டேன்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்கள் தலைவர் 31 ஆம் தேதி பேசுவார். (குறுக்கீடு) சரி, ஒரே நிமிடம் பேசுங்கள்.

[2008 ஜனவரி 29

**திரு. கி. ஆறுமுகம்:** இந்த அணையை உடனடியாகக் கட்டுவதற்கு நீங்கள் உடனடியாகப் பரிந்துரை செய்ய வேண்டுமென்று அமைச்சரைக் கேட்டுக்கொண்டு, இன்றைக்கு எங்களுடைய பகுதியிலே செங்கல்பட்டு நகரத்திற்கு அதிகமாக சென்னை மாநகரப் பேருந்துகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. இன்னும் அதிகமாக வேண்டும். அது மட்டுமல்லாமல், அந்தப் பகுதியிலே இருக்கிற திருக்கழுக்குன்றம், பொன் விளைந்த களத்தூருக்கும் மாநகரப் பேருந்துகளை இயக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, உரையை முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி ரா. லீமா றோஸ்.

***திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சியின் கட்டுப்பாட்டை இங்கே உணர்த்திய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேதகு ஆளுநர் அவர்கள் உரையின்மீதான விவாதத்தில் பங்கெடுக்கத் தந்த வாய்ப்புக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

மேதகு ஆளுநர் உரையில் வந்திருக்கக்கூடிய, அரவாணிகளின் நலனில் அக்கறை காட்டிப் புதிய நல வாரியம் அமைத்தல், தமிழ்நாட்டிலிருந்து வெளி நாடுகளுக்குச் சென்று பணி புரிபவர்களுக்கு ஏற்படும் இன்னல்களைக் களைய, மாண்புமிகு முதல்வர் தலைமையில் உயர்நிலை ஆலோசனைக் குழு, அருந்ததியர் வகுப்பினர் முன்னேற்றத்திற்குச் சிறப்புச் சலுகைகள் அளிப்பது, சமத்துவபுரங்களை அதிகப்படுத்துவதுபோன்ற நல்ல திட்டங்களை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்கிறோம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதே நேரத்தில், உலகமயமாக்கல் என்பது சர்வதேச நுகர்பொருள் வணிகத்தை மட்டுமல்லாமல், மேற்கத்திய கலாச்சாரச் சீரழிவுகளையும், நம்முடைய சமுதாயத்தின் பாரம்பரியத்தைப் பாழடிக்கும்வகையில் இன்றைய சினிமாக்கள் மூலமாகவும், ஊடகங்கள் மூலமாகவும் வேகமாகப் பரவிக் கொண்டிருக்கிறது. ஆகவே, இந்தக் குற்றத்தைச் செய்யக்கூடிய நிதி மூலதனத்தினுடைய நுகர்பொருள், கலாச்சாரம் என்கிற கிரிமினல் குற்றவாளியைப் புரிந்துகொண்டு போராடாமல் நாம் வெற்றிபெற முடியாது. நமது நிகழ்கால இளைஞர்கள் எதிர்காலச்



2008 ஜனவரி 29] [திருமதி ரா. லீமா றோஸ்]

சந்ததிகளைப் பாதுகாக்கமுடியாது. மத்தியில் இருக்கக்கூடிய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு, இந்தக் கலாச்சாரச் சீரழிவை அறிந்தே முழுமையாக ஏற்றுக்கொண்டு, அமலாக்கிக்கொண்டிருக்கிறது. இந்துத்துவா, இந்து கலாச்சாரம், இராமர் பாலம் என்றும் பேசக்கூடிய பி.ஜே.பி., ஆர்.எஸ்.எஸ். அமைப்புகள் எந்தவிதத்திலும் விதிவிலக்கு அல்ல என்பது மட்டுமல்லாமல், தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியில் இதையே அவர்களும் அமல்படுத்தினார்கள். ஆகவேதான், உலக வங்கியினுடையதும் உலக வர்த்தக அமைப்புகளுடையதுமான கொடுமைகளை எதிர்க்கக்கூடிய மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சியும், இடதுசாரி ஜனநாயக இயக்கங்களும் இந்தக் கொள்கைகளை எதிர்க்கிறபோது, இது பண்பாட்டிலும், கலாச்சாரத்திலும் மிகப் பெரிய சீரழிவை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்துதான் நாங்கள் எதிர்க்கிறோம்.

பிற்பகல் 12–40

மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நேற்றையதினம் இம்மாமன்றத்தில் ஊடகங்களுடைய கலாச்சாரச் சீரழிவினைப்பற்றியெல்லாம் பேசப்பட்டது; பெண்களுடைய உடைகளைப்பற்றியெல்லாம், தொலைக்காட்சிகளுடைய நிலைப்பாடுகளைப்பற்றியெல்லாம் விவாதிக்கப்பட்டது. இதற்கு அடிப்படைக் காரணம், உலகமயமாக்குதல், தாராளமயமாக்குதல், தனியார்மயமாக்குதல் போன்ற கொள்கைகளேயாகும். ஆகவே, ஐக்கிய முற்போக்குக் கூட்டணி, தேசிய ஜனநாயக முன்னணி அல்லாத, இந்தப் பண்பாட்டுத் தளத்தில் ஏற்படக்கூடிய சீரழிவுக் கொள்கைகளை எதிர்த்துதான், மூன்றாவது மாற்று தேவை என்ற கொள்கையை முன்மொழிந்திருக்கிறோம் என்பதை இந்த மாமன்றத்தில் பதியவைக்க விரும்புகிறேன்.

சிறு தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளன. ஒரு வாரத்திற்குமுன் குமரி மாவட்டத்தில் மண்பாண்டத் தொழிலாளர்கள் போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். மேலும், பாய் முடைதல், மெழுகுவர்த்தி செய்தல், உள்நாட்டு மீன் பிடித்தல் போன்ற கைவினைப் பொருட்கள், சிறு தொழில்கள்மூலம், சுய உதவிக் குழுக்கள் மற்றும் மக்களால் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களை விற்பனை செய்ய அரசு சார்பில் சந்தைகளை உருவாக்கி சிறு தொழில்களைப் பாதுகாக்க வேண்டுகிறோம்.

[திருமதி ரா. லீமா றோஸ்] [2008 ஜனவரி 29

ரேஷன் கடைகளில் பருப்பு, சமையல் எண்ணெய் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படும் என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டு, ஓரிரு மாதங்கள் விநியோகம் நடந்தது. ஆனால், தற்போது அது நிறுத்தப்பட்டுவிட்டதாகத் தெரிகிறது. எனது தொகுதியிலும் தற்பொழுது எந்தக் கடைகளிலும் விநியோகிக்கப்படவில்லை. எனவே, விநியோகத்தைத் தொடர வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்காகத்தான், இந்தச் சிறப்புப் பொது விநியோகத் திட்டம் என்கிற திட்டத்தின்மூலம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையை ஏற்று, ஏப்ரல் மாதம் 14 ஆம் தேதியிலிருந்து தமிழ்நாடு முழுவதும் பொருட்கள் கொடுக்கப்படுகின்றன. இதிலேயிருக்கிற சங்கடம் என்னவென்று சொன்னால், ஒவ்வொரு மாவட்டத்தினுடைய கூட்டுறவு இணைப் பதிவாளர்கள், அந்தந்தப் பகுதியிலே என்னென்ன பொருட்கள் வேண்டுமென்பதை எல்லாம் குறிப்பு எடுத்துத் தந்த பின்புதான், அதற்கு வேண்டிய tender–ஐ call for செய்யமுடியும். ஒரு மாவட்டத்திலே பார்த்தால், உளுந்து அதிகமாக விற்பனை இருக்கிறது; இன்னொரு மாவட்டத்திலே பார்த்தால், துவரம் பருப்பின் விற்பனை அதிகமாக இருக்கும். ஆகவே, ஒட்டுமொத்தமாக வாங்கி, 30 மாவட்டங்களுக்கும் அனுப்ப முடிவதில்லை. அந்தந்த மாவட்டத்தினுடைய தேவைகளை அறிந்து, அதற்குப் பின்னால் tender–களை நாங்கள் கோருகிறோம். அப்படிப் பார்க்கிறபோது, இந்த tender கோருகிற இடைப்பட்ட காலங்களிலேதான் தாமதம் ஏற்படுகிறது. அதைக்கூட தவிர்ப்பதற்காக இப்போது இணைப் பதிவாளர்களையெல்லாம் கூப்பிட்டு, 2 மாதங்களாகக் கூட்டங்கள் நடத்திக்கொண்டிருக்கிறோம். இந்தப் பொது விநியோகத் திட்டம் என்பது தொடர்ந்து நடைபெறும். அனைத்துக் கடைகளுக்கும், கன்னியாகுமரி மாவட்டத்திலும் உள்ள அனைத்துக் கடைகளுக்கும் அந்தப் பொருட்கள் எல்லாம் வந்து சேரும்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** புதிய குடும்ப அட்டைகளுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படவேண்டும். அரிசியைப் போன்று மண்ணெண்ணெய் கடத்தப்படுவதாகப் புகார்கள் வருகின்றன; அது தடுக்கப்படவேண்டும். மலைப் பகுதிகளில் மின்சாரமில்லாத



2008 ஜனவரி 29] [திருமதி ரா. லீமா றோஸ்]

மலைவாழ் மக்களுக்கு மண்ணெண்ணெயின் அளவை அதிகப்படுத்த வேண்டுகிறோம். மின்னணுத் தராசுகளை எல்லா ரேஷன் கடைகளுக்கும் வழங்கி, பொது விநியோக முறையைச் சீர்படுத்த வேண்டுகிறோம்.

நெல்லுக்கான கொள்முதல் விலையை ரூபாய் ஆயிரமாக உயர்த்த வேண்டுகிறோம். புறம்போக்கில் 10 ஆண்டுகள் குடியிருந்தால் பட்டா வழங்கப்படும் என்பது, தற்போது 5 ஆண்டுகள் என்று குறைக்கப்பட்டுள்ளது. இதை வரவேற்கும் அதே நேரத்தில், முறையாக அமலாக்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டுகிறோம். திட்டத்தினை நிறைவேற்ற வருவாய்த் துறையில் ஊழியர் பற்றாக்குறையைத் தவிர்க்கவேண்டும்.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர், மின்சாரத் துறை அமைச்சர், மாவட்ட அமைச்சர் ஆகியோர் எங்கள் மாவட்டத்தில் 5 கட்டமாகப் பட்டா நிலம் வழங்கும் விழாவில் கலந்துகொண்ட பொழுது, தனியார் தோட்ட முதலாளிகள், தனியார் நிறுவனங்கள் ஆக்கிரமித்து வைத்திருக்கும் அரசுப் புறம்போக்கு நிலங்களை எடுத்து, நிலமற்ற ஏழைகளுக்கு வழங்கவேண்டும் என்பது தொடர்பாக நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். இதே சட்டமன்றத்திலும் பல முறை வலியுறுத்தியுள்ளோம். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே, தனியார்த் தோட்ட முதலாளிகளிடமும், தனியார்களிடமும் சுமார் 4,000 ஏக்கருக்கும் மேலான நிலங்கள் அந்த வகையில் இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. அப்படிப்பட்ட நிலங்களை எடுத்து நிலமற்ற ஏழை மக்களுக்கு வழங்க வழிவகை செய்ய வேண்டுகிறோம்.

தற்போது கொசுக்களின் தொல்லை தமிழகத்தின் எல்லாப் பகுதிகளிலும் ஏற்பட்டிருக்கிறது. எந்தப் பாகுபாடுமில்லாமல், எல்லோரையும் சமமாகப் பாவித்துக் கொசுக்கள் கடிக்கின்றன. எம்.எல்.ஏ.க்களைக் கடிக்கிற கொசுக்கள், பயமே இல்லாமல் அமைச்சர்களையும் கடித்துச் செல்கின்றன. மாடியில் இருக்கிற பணக்காரரையும் கடிக்கிறது; குடிசையில் இருக்கிற ஏழையையும் கடிக்கிறது. இதனால், சிக்–குன்–குன்யாவிலிருந்து மர்மக் காய்ச்சல் வரை பரவ வழிவகை செய்யுமோ என்று அஞ்சப்படுகிறது. சுகாதாரக் கேடுகளை உருவாக்காமல் தடுப்பதற்காக, மாநகராட்சி, நகராட்சி, உள்ளாட்சி அமைப்புகள்மூலமாக சரியான மருந்தைக் கண்டுபிடித்துத் தெளிக்க வேண்டுகிறோம். கொசுத் தொல்லையிலிருந்து மக்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறோம்.

[திருமதி ரா. லீமா றோஸ்] [2008 ஜனவரி 29

பிற்பகல் 12-45

வீட்டு வசதி வாரியம், குடிசை மாற்று வாரியம்மூலமாக வீடு பெற்றவர்களுக்கு முழு வட்டியையும் தள்ளுபடி செய்து உத்தரவிட்டால்தான் பத்திரம் பெற இயலும். பல ஆண்டுகளாக உள்ள இப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுகிறோம்.

புதிய விமான நிலையங்கள் நிறுவ சேலம், வேலூர் மாவட்டங்களுக்கு முன்னுரிமை வழங்க மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்ததாக மேதகு ஆளுநர் உரையில் உள்ளது. கன்னியாகுமரியில் விமான நிலையம் அமையும் என ஒரு வாரத்திற்கு முன்னால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது தவறா? குமரி மக்களின் பெரிய எதிர்பார்ப்பான விமான நிலையம் அமைவதைப் பட்டியலில் இணைக்க வேண்டுகிறோம்.

தமிழ் மொழி வளர்ச்சிக்குப் போராடியவர்கள் பெற்று வந்த ஓய்வூதியத் தொகை நிறுத்தப்பட்டுள்ளது. அது உடனடியாக வழங்கப்பட வேண்டும். மனு செய்து பல்லாண்டுகளாகக் காத்திருப்போருக்கு ஓய்வூதியம் வழங்க அரசு முன்வர வேண்டுகிறோம்.

மகளிர் ஆணையத்திற்கு அதிகாரம் தரக்கூடிய வகையில் சட்டம் இயற்றித் தர வேண்டுகிறோம்.

தென் மாவட்டங்களின் பொருளாதார வளர்ச்சிக்குத் திட்டங்கள் அறிவித்தும் அமலாகவில்லை. அரசு சார்பில் அமல்படுத்த வேண்டுகிறோம். காவிரிப் படுகை மற்றும் கிருஷ்ணா நதிகளில் குழாய்மூலம் எரிபொருளைப் பயன்படுத்தி, புதிய தொழில்கள் உருவாக்க அரசு கவனம் செலுத்த வேண்டுகிறோம்.

அமைப்பு சாராத் தொழில்கள் பட்டியலில், தோட்டத் தொழிலாளர் நலச் சட்டம் பொருந்தாத இரப்பர், காபி, தேயிலை, ஏலம் போன்ற தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களையும், தேன் சேகரிக்கும் தொழிலாளர்களையும், புளி குத்தும் தொழிலாளர்களையும் சேர்த்து நல வாரியப் பதிவுக்கு ஆவன செய்ய வேண்டுகிறோம்.

மத்திய அரசால் குமரி மாவட்டத்திற்கு அளித்துள்ள விளையாட்டுத் துணை மையம், தற்பொழுது மாவட்ட நிருவாகத்தால் கண்டறியப்பட்டுள்ள ஆனையடி எஸ்டேட்டில் நிறுவப்பட வேண்டுகிறோம்.



2008 ஜனவரி 29] [திருமதி ரா. லீமா றோஸ்]

மேதகு ஆளுநர் உரையின் பாரா 21–ல், மக்கள் நல்வாழ்வுத் துறையின் மேம்பாட்டிற்காக அரசு எடுத்த பல நடவடிக்கைகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதை வரவேற்கிறோம்; பாராட்டுகிறோம். எனினும், குடும்ப நலத் துறை, கடந்த ஆட்சிக் காலத்தில் இரண்டு அரசாணைகள்மூலம் ஆட்குறைப்பு செய்யப்பட்டு முடமாக்கப்பட்டது. இதனால் கடந்த நான்கு வருடங்களாக, குடும்பக் கட்டுப்பாட்டு விகிதம் இறங்குமுகமாகவே உள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை அடிக்கடி வலியுறுத்தி வருகிறார். எனவே, மேற்சொன்ன காலியிடங்களை நிரப்பி, இத்துறைக்குப் புத்துயிரூட்ட அரசு நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்துகிறோம்.

மேலும், ஆசாரிப்பள்ளம் மருத்துவக் கல்லூரியில் சுமார் 1,000 ஊழியர்கள் இருந்தும், கோட்டாறு தலைமை மருத்துவமனைமூலம் முன்னர் மக்களுக்குக் கிடைத்து வந்த சேவைகூட கிடைக்கப்பெறவில்லை என்பதை வருத்தத்தோடு இந்த மாமன்றத்தில் பதிய வைக்க விரும்புகிறேன். மருத்துவர்களின் ஒருங்கிணைந்த செயல்பாடில்லாமையால் நிருவாகம் சீர்கெட்டு, கவனக் குறைவினால் உயிர்ப் பலிகள் அதிகரிக்கின்றன. மாணவர்களுக்குத் தேவையான குறிப்புகள் வழங்கப்படுவதில்லை. மாணவர்கள் வெற்றி பெறுவதும், தோல்வி அடைவதும் அவரவர் தலைவிதியாகவே மாறியுள்ளது. ஆகவே, சிறந்த மருத்துவக் கல்லூரியாகத் திகழ அரசு கண்காணிக்க வேண்டுகிறோம்.

செயல்வழிக் கற்றலுக்கான மாணவர்களுக்கு வழங்கும் அட்டை, கருவிகள், உபகரணங்களை மலையாளம், உருது, தெலுங்கு போன்ற மொழிகளைப் பேசக்கூடிய மாவட்டங்களில் பயிலும் மாணவர்களுக்கும் வழங்கி, சிறுபான்மை மொழிகளையும் பாதுகாக்க வேண்டுகிறோம்.

திருநெல்வேலி கோட்டம், கோதையாறு மின் திட்டம், அணையிலிருந்து உபரியாகும் நீரைப் பயன்படுத்தி கூடுதலான மெகா வாட் மின் திறன் கொண்ட மின் திட்டம் தயாரிக்க ஆய்வு செய்து, கிடப்பில் போடப்பட்டுள்ளது. அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுகிறோம்.

அண்மையில் ஏற்பட்ட பெருமழையால் குமரி மாவட்டத்தில் இரப்பர், வாழை, தென்னை போன்ற பயிர்கள் சேதமடைந்துள்ளன.

உரிய நிவாரணம் வழங்க வேண்டுகிறோம். குளங்கள், கால்வாய்கள் உடைப்பு ஏற்பட்டு பாசனத்திற்குப் பயனற்று உள்ளன. ஆகவே, பாசனத்திற்கு ஏற்றாற்போல் உடைப்புகளைச் சரி செய்து தடுப்பணைகள் கட்டிப் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுகிறோம்.

பேச்சிப்பாறை அணை மற்றும் சிற்றாறு, பட்டணங்கால் தண்ணீர் திறந்துவிடப்படுகின்றபொழுது ஆண்டுதோறும் உயிர்ப் பலியாகும் திருவட்டாறு தொகுதியின், திருவட்டாறு மூன்றுமடை sub-path–ஐ- மூழ்கு பாலத்தை உயர்மட்ட பாலமாக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுகிறோம்.

ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் 1968 ஆம் ஆண்டிலிருந்தே பேசப்பட்டு வருகிறது. வேலூர் மாவட்டத்தையும் இணைத்து அமல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுகிறோம்.

தனியார் கல்வி நிறுவனங்களில் கட்டணம் அதிகமாக வசூலிக்கப்படுகிறது. அரசும் நடவடிக்கை எடுத்து வருவதைப் பாராட்டுகிறோம். 32 கல்லூரிகளில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பத்திரிகைகளில் செய்தி வந்துள்ளது. மீண்டும் இந்த நிலை தொடர்கிறது. இதனைக் கட்டுப்படுத்தத் தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டுகிறோம்.

மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி நல்ல அறிவிப்பாக இருந்தது. அதனை அமல்படுத்த என்ன முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதைத் தெரியப்படுத்த வேண்டுகிறோம்.

விவசாயிகளைப் பாதுகாக்கும்பொருட்டு, ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் இரண்டு ஏரிகளைத் தூர் வாரி, சீரமைத்து, மேம்படுத்தும் பணிகளைப் பொதுப் பணித் துறை மேற்கொள்ளும் எனக் கடந்த சட்டமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரில் அறிவிக்கப்பட்டது. அரசாணை நிலை எண் 7, நாள் 22–1–2008–இன்படி பார்த்தால், விவசாயத்தை நம்பி வாழும் ஏழை விவசாயிகளைக் கொண்ட குமரி மாவட்டத்தின் விளவங்கோடு, திருவட்டாறு தொகுதிகள் புறக்கணிக்கப்பட்டதற்கான காரணம் விளக்கப்பட வேண்டும். நாங்களும் அந்தப் பட்டியலை அமைச்சரிடம் கொடுத்து, எங்கள் பகுதியிலும் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டன. இரண்டு ஏக்கருக்குமேல் பரப்பளவு கொண்ட மற்றும் 100–க்கும் மேலான ஆயக்கட்டுகளைக்



கொண்ட ஆற்றூர்–தேமானூர் குளம், பாகோடு–குறக்குடி குளம் தூர் வாரி மேம்படுத்தப்பட நிதி ஒதுக்க வேண்டுகிறோம்.

வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கியும் மின்சாரம் வழங்கப்படாமல் இருக்கும் மக்களுக்கு மின்சாரம் கிடைக்கவும், எல்லோருக்கும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கிடைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுகிறோம்.

*பிற்பகல் 12-50*

கடந்த ஆண்டு நாட்டுப்புறக் கலைஞர்களை அணி திரட்டி, தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் சங்கம் சென்னையில் கோரிக்கை சங்கமப் பேரணியை நடத்தியது. இந்தப் பேரணி நடத்தி முடிக்கப்பட்ட சில தினங்களிலேயே நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு நல வாரியம் அறிவிக்கப்பட்டுள்ளது. மீனவர் நல வாரியம் அறிவிக்கப்பட்டு ஒரு வருடமாகியும், அமலுக்கு வரவில்லை. ஆகவே, அறிவிக்கப்படும் நல வாரியத்திற்குத் தேவையான நிதியை ஒதுக்குவதோடு தேவையான ஊழியர்களைப் போட்டால் மட்டுமே, அது மக்களுக்குப் பயன்பெறும். அதைப்போன்று, யானைக்கால் நோயாளிகளை ஊனமுற்றோர் பட்டியலில் இணைத்து, அப்படிப்பட்ட அந்த மக்களுக்கும் ஓய்வூதியம் வழங்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை நிறைவு செய்யுங்கள். 13 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிப்பதற்கு முன்பாக, 'தமிழ்' என்றால் கலைஞர்; 'தத்துவம்' என்றால் கார்ல் மார்க்ஸ்; 'புரட்சி' என்றால் மாமேதை லெனின்; 'இலக்கியம்' என்றால் பேராசான் ப. ஜீவானந்தம்; அதேபோல, 'எளிமை' என்றால் தோழர் நல்லக்கண்ணு; தோழர் நல்லக்கண்ணு அவர்களுக்கு இந்தப் புத்தாண்டிலே அண்ணல் அம்பேத்கர் விருது வழங்கிய தலைவருக்கு நன்றியைக் கூறியும், அதைப் பெற்றுக்கொண்ட தலைவர் நல்லக்கண்ணுவை வணங்கியும் உரையைத் தொடங்குகிறேன்.

வழங்கப்பட்டிருக்கின்ற விருது என்பது, தமிழகத்தில் தென்கோடியிலிருந்து வடகோடி வரை மக்களுடைய ஒற்றுமையை, குறிப்பாக தலித் மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட

மக்களுக்கும் இடையிலான ஓர் ஒற்றுமையை மேலும் வளர்ப்பதற்கான முறையில் ஒரு சிறப்பான விருதை நமது தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக மீண்டும் அவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

கவர்னர் உரையில் பல தொலைநோக்கான திட்டங்கள் வந்திருக்கின்றன. சமுதாயத்தில் இருக்கின்ற சீரழிவுகளுக்கு எது சரியான வழிகாட்டி என்பதையும் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக, தீவிரவாதம் தலைதூக்குவதும், நக்சலைட்டுகள் உருவாவதும், ஜாதிகளிடையே பூசல்கள் ஏற்படுவதும், சமச்சீரற்ற வளர்ச்சியும், பொருளாதார ஸ்திரத் தன்மையற்ற போக்கும் ஆகிய இவையே வறுமை நிலை தொடர்வதற்குக் காரணம் என்று சுட்டிக்காட்டப்பட்டிருப்பதே ஒரு தொலைநோக்குப் பார்வை. தொடர்ச்சியாக அனைவரும் சேர்ந்து முயன்று தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை. அது அறிக்கையிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது வரவேற்புக்குரிய ஒன்று.

இன்றைக்குத் தமிழகம் இந்திய மாநிலங்களிலிருந்தே வேறுபட்டிருக்கிறது. நகரமயமாதல் என்பது தமிழகத்தில் அதிகரித்துக்கொண்டிருக்கிறது. நாங்களும்கூட அரசுக் கொறடா அண்ணன் சக்கரபாணி அவர்களோடு சேர்ந்து வெளி மாநிலங்களைச் சுற்றிப் பார்க்கின்ற ஒரு வாய்ப்புக் கிடைத்தது, அந்தக் குழுவின் சார்பாக. அப்படிச் சுற்றிச் செல்லும்போது மற்ற மாநிலங்களில் இருக்கின்ற சாலைகள், தெருவினுடைய அமைப்புக்கள், அங்கு இருக்கின்ற வீடுகளை எல்லாம் பார்க்கும்போதே நான் அண்ணன் சக்கரபாணி அவர்களிடம் சொல்லிக்கொண்டே வந்தேன். தமிழகம் எங்கோ இருக்கிறது; முதல் நிலையில் இன்றைக்கு இந்தியாவில் இருக்கின்ற அத்தனை மாநிலங்களிலும் உலகத் தரத்தோடு போட்டியிடுகின்ற அளவுக்குத் தமிழகம் இன்றைக்கு முன்னேறிக்கொண்டிருக்கிறது என்பதை அவர்களிடத்தில் சொல்லிக் கொண்டு வந்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) காரணம், ஏறுகின்ற மக்கள் தொகை, மக்கள் நகரத்தில் சென்று குடியேறுவது, அதையொட்டி அந்த மக்களுடைய வாழ்க்கை நிலையைச் சீரமைப்பதற்கான போக்குவரத்து வசதி, சாலை வசதி, சுகாதார வசதி, அவர்களை நல்ல முறையில் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளோடு, தொலைநோக்கான திட்டங்களும் வந்திருக்கின்றன. அதுதான் இன்றைக்கு நான்கு முனைச் சாலைகளை ஒருங்கிணைப்பது, சென்னை நகரத்தில்.



*பிற்பகல் 12-55*

அதேபோல, இன்றைக்கு இரயில் திட்டம்—பாதாள இரயில் திட்டம். இவையெல்லாம் சென்னை நகரத்திற்கு வந்திருக்கின்றன. நிரம்ப வெளிச்சமாகத் தெரிகிறது; மன நிறைவைத் தருகிறது. ஆனால், ஒரு பக்கம் எனக்கு அச்சம். வெளிச்சம் எல்லாப் பக்கங்களுக்கும் தெரிய வேண்டும். கிராமப்புறங்கள் விடுபட்டுவிடக்கூடாது. நகர்ப்புறங்களில் இருக்கின்ற வெளிச்சம் கிராமப்புறங்களிலும் இருக்க வேண்டும். நகரத்தில் வாழ்கின்ற மக்களுக்குத் தேவையான அனைத்து உணவுகளும் வருகின்ற இடம் கிராமம். கிராமத்தில் இருப்பவர்களெல்லாம் நகரத்தைத் தேடி வந்துவிட்டால், அங்கேயிருந்து விவசாயம் செய்வதற்கு ஆள் வேண்டும். இன்றைக்கு விவசாயத்தில் என்னதான் நவீனங்கள் வந்தாலும், அங்கே ஆள் இருந்து செய்ய வேண்டிய வேலைகள் உள்ளன. கதிர் அறுப்பதற்கு மெஷின் வந்தாலும், அந்த மெஷின் வயல்களில் இறங்குவதற்கு முன்னாலே, பக்கத்துக் கதிர்களை அறுத்துப் போடுவதற்கு ஆள் தேவை இருக்கிறது. டிராக்டர் வைத்து உழுதாலும், உழுததைச் சரியாகச் சமப்படுத்துவதற்கு, மரமடிப்பதற்கு உழவு மாடுகளும் தேவைப்படுகின்றன. அந்த மரமடிப்பதற்கான மரமும் தேவைப்படுகிறது. எனவே, கிராமப்புறம் என்பது, பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்றாக இருக்கிறது. நகர்ப்புறத்திற்கு இணையான சாலை வசதி, நகர்ப்புறத்திற்கு இணையான கல்வி வசதி, நகர்ப்புறத்தில் இருக்கின்ற மருத்துவ வசதி, அத்தனையும் கிராமங்களை நோக்கிச் செல்லும்போது நகரங்களில் வந்து குவிகின்ற மக்களுடைய எண்ணிக்கையையும் குறைக்கலாம்; கிராமத்தை மேலும் வளப்படுத்துவதற்கான வாய்ப்புகளும் வரும் என்பதை இந்த நேரத்தில் நான் பணிவோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, புதிய புதிய தொழில்கள். பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய்கள் தமிழ்நாட்டிற்கு வருகின்றன. தரமணி பகுதிக்குச் செல்லும்போது, மிகப் பெரிய கூட்டம். ஆனால், அதில் ஒன்றைக் கவனிக்க வேண்டியது. பெரும்பாலும் பீகார்காரர்கள், அஸ்ஸாமைச் சேர்ந்தவர்கள், அதிகமாகக் குவிந்திருக்கிறார்கள். தொடங்கப்படுகின்ற அந்தத் தொழில்களில், இங்கே பீகார்காரர்கள் அதிகமாக வந்துவிட்டதாகச் சொல்கிறார்கள். நேற்று முன்தினம் பத்திரிகையைப் பார்த்தேன். இந்தியாவிலேயே அதிகமான வருமானம் வருகின்ற

மாநிலம் என்று சொல்லி, பீகார்—அதாவது மணியார்டர் வருகின்ற மாநிலம் பீகார்—என்று பத்திரிகையிலே செய்தி வந்திருந்தது. அப்படியானால், பீகார் மக்கள் பல்வேறு இடங்களுக்குச் சென்று வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். நமது தமிழனுக்கு அங்கே வேலை வேண்டும். இப்போது புதிய தொழில்களுக்குப் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடும்போது, இடஒதுக்கீடு கேட்பது போன்று, தமிழ்நாட்டினுடைய பங்கு, தமிழர்களுடைய பங்கு, இத்தனை சதவிகிதம், அவர்களுடைய தொழிற்சாலையில் வேலைக்கு அமர்த்தப்பட வேண்டும் என்பதையும் சேர்த்து அதில் ஒரு நிபந்தனையாக, அந்தக் கோரிக்கையில் கொண்டு வந்தால், அந்த ஒப்பந்தத்தில் கொண்டு வந்தால் நன்றாக இருக்கும். அப்படிச் செய்ய வேண்டும் என்பது எங்களுடைய கருத்து.

நாங்கள் மின்வெட்டைப்பற்றிச் சொல்லவில்லை. மின்சார உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கான முயற்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன. ஆனால், சுவிட்சைப் போட்டவுடனே ட்யூப் லைட் எரிய வேண்டும், கரன்ட் வருகின்ற நேரத்திலாவது. கரன்ட் வருகின்ற நேரத்திலாவது, சுவிட்சைப் போட்டவுடனே ட்யூப் லைட் எரிய வேண்டுமென்பது, எங்களுடைய கோரிக்கை. ஏனென்று சொன்னால், பெரும்பாலும் கிராமப்புறங்களில் ட்யூப் லைட் எரிவதில்லை; இரவு 10 மணி, 11 மணிக்குப் பிறகுதான் எரிகிறது. அதற்கிடையில் இருளில் மூழ்கிக் கிடக்கின்ற நிலைதான் தொடர்கிறது. அதிலும், என்னுடைய தொகுதியிலேயே பல கிராமங்கள் அப்படிப்பட்ட நிலையில் இருந்துகொண்டிருக்கின்றன. எனவே, மின்சார உற்பத்தியை அதிகப்படுத்தவேண்டும். சொன்னார்கள், மின்சார உற்பத்தி செய்வதற்காக, கூடங்குளத்திற்குப் புதிதாக நான்கு அணு உலைகளைத் தருகிறேன் என்று சோவியத் யூனியன் சொன்னதை, மத்திய அரசு வேண்டாமென்று பாரதப் பிரதமர் மறுத்துவிட்டு வந்துவிட்டதாக. அதாவது, அமெரிக்காவைக் கேட்டுக்கொண்டு வாங்கிக்கொள்கிறேன் என்று வந்துவிட்டதாகச் சொன்னார்கள். நாங்கள் அமெரிக்காவுடனான ஒப்பந்தத்தை எதிர்க்கிறோம். ரஷ்யா ஒப்பந்தத்தை வரவேற்கிறோம். காரணம், ரஷ்யா எந்த உடன்பாட்டையும் போடவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.





*பிற்பகல் 1–00*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரஷ்ய அதிபர் திரு. புதின் அவர்கள் ஆறு மாதத்திற்கு முன்னால் டெல்லிக்கு வந்தபோது, கூடங்குளத்தில் ஏற்கெனவே உருவாகிக்கொண்டு வருகின்ற 2,000 மெகா வாட் மின்சாரத்தோடு மேலும் 4,000 மெகா வாட் மின்சாரத்தை ரஷ்யாவிலிருந்து உற்பத்தி செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறோம் என்று சொன்னார்கள். அதற்கு நம்முடைய பிரதமர் ஒப்புதல் தந்திருக்கிறார். அமெரிக்காவோடு அவர்கள் ஒத்துக்கொள்ளவில்லை.

**திரு. தி. இராமசாமி:** நன்றி. அதேபோல, மின் உற்பத்தியை அதிகப்படுத்தி, தொழில்களை மேம்படுத்த வேண்டும். விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டு தொழில்கள் உருவாக்கப்படும் என்று அறிக்கையிலே வந்திருக்கிறது, மகிழ்ச்சி. ஆனால், விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டு தொடங்கக்கூடிய அந்தத் தொழில்கள் கிராமப்புறத்திலே இருக்கவேண்டும். அவை நகரத்திற்கு வந்து விடக்கூடாது. அதேபோல, அந்த விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டு தொடங்கக்கூடிய தொழில்களை மகளிர் குழுக்களுக்குச் சிறப்பு அனுமதி கொடுத்து, அதை மேம்படுத்த வேண்டும். அதேபோல, விழுப்புரம்–திண்டுக்கல் இரட்டை இரயில் பாதை என்பதை விழுப்புரம்–மதுரை என நீட்டிக்க வேண்டும்.

அமைப்பு சாராத் தொழிலாளர்களுடைய நல வாரியங்கள் என்பவை தனித் தன்மையோடு தொடர்ச்சியாகச் செயல்பட வேண்டும்.

நேற்று, நமது வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் பேசினார்கள். ஆறரை இலட்சம் பேர் அரசுப் புறம்போக்கு நிலங்களில் குடியிருக்கிறார்கள்; அவர்களில் இரண்டரை இலட்சம் பேருக்குப் பட்டா கொடுக்கப்பட்டுள்ளதாகச் சொன்னார்கள். மிக்க மகிழ்ச்சி. ஆனால், பட்டா வழங்குவதற்கு மதுரை உயர் நீதிமன்றத்திலே சில நபர்கள் பெற்றிருக்கக்கூடிய தடையை நீக்குவதற்கான முயற்சியை அரசாங்கம் எடுக்க வேண்டும். ஆறரை இலட்சம் பேர், புறம்போக்கில் குடியிருப்பவர்கள், வீடே இல்லாதவர்கள் பட்டியல் 24 இலட்சம், ஆக மொத்தம் ஏறத்தாழ 30 இலட்சம் பேருக்கு மேற்பட்டவர்களுக்குப் பட்டா வேண்டுமென்ற கோரிக்கையைத்தான் இன்றைக்கு நாங்கள் சொல்லிக்கொண்டிருக்கிறோமே தவிர, ஏற்கெனவே அரசு விரைவாகப் பட்டா வழங்கிக் கொண்டிருக்கிறது; அதிலே எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை.

அந்த சமயத்தில், கடைசியாக ஒன்று தமிழ்நாட்டில், தென் தமிழ்நாட்டில் பஞ்சாலைத் தொழில் பெரிய வேலைவாய்ப்பினைக் கொடுத்துக்கொண்டிருக்கிறது. இன்றைக்குப் பஞ்சாலைத் தொழில்கள் நசிந்துவிடக்கூடிய ஓர் ஆபத்து வந்துகொண்டிருக்கிறது. பஞ்சு விலையேற்றம்—இங்கே இருக்கின்ற தொழிற்சாலைகளுக்குப் பஞ்சு இல்லாமல், வெளிநாடுகளுக்குப் போகக்கூடிய அளவில் ஒன்றரைக் கோடி பேல் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. அதன் விளைவாக இங்கே பஞ்சு விலை தாறுமாறாக உயர்வு, நூல் பூராவும் தேக்கம், தொழில்கள் நடக்கவில்லை; ஒரு நெருக்கடிக்கு உள்ளாகிக்கொண்டிருக்கிறது. அதைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டும். புதிய தொழில்களைத் தொடங்கியிருப்பதை வரவேற்கின்ற அதே நேரத்தில், மூடிக் கிடக்கின்ற தொழில்கள், குறிப்பாக எனது தொகுதியில் ஸ்ரீவில்லிப்புத்தூர் கூட்டுறவு நூற்பாலை; அதேபோல, எங்கள் மாவட்டத்தில் அரசின் சார்பில் செயல்படுகின்ற ஆலங்குளம் சிமெண்ட் ஆலையை மேம்படுத்துவது போன்றவற்றில் அரசு கவனம் செலுத்த வேண்டும்.

அதேபோல, இ.எஸ்.ஐ. வசதி இருக்கின்ற தொழிலாளர்களுக்குப் போதுமான இ.எஸ்.ஐ. வசதி இன்றைக்குச் சரியாகக் கிடைப்பதில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராமசாமி, போதும், உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. தி. இராமசாமி:** அருகில் இருக்கின்ற தனியார் மருத்துவமனைகளில், இ.எஸ்.ஐ. வசதியுள்ள தொழிலாளர்கள், அங்கு வைத்திய வசதி பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாட்டை அரசு செய்து கொடுக்க முன்வர வேண்டும் என்பதை இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, விடைபெற்றுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ஞானதாஸ், பத்து நிமிடத்தில் பேசி முடித்து விடுங்கள்.

***திரு. ஆர். ஞானதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைமீது நடைபெறுகின்ற இந்த விவாதத்தில் பங்கெடுக்க வாய்ப்பளித்த தங்களுக்கும், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர், மக்கள் தலைவர் அண்ணன்





வைகோ அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். உரையிலே, விவசாயிகளின் வருவாயைப் பெருக்க இவ்வரசு முனைப்பான நடவடிக்கைகள் எடுத்து வருகிறதென்று கூறப்பட்டிருக்கிறது. நெல்லுக்கும், கோதுமைக்கும் உற்பத்திச் செலவு ஏறக்குறைய ஒரே அளவில் இருக்கும்பொழுது, நெல்லுக்கு மட்டும் விலையைக் குறைத்து நிர்ணயிப்பது எந்த வகையிலும் நியாயம் இல்லை. வேளாண்மை, உணவு ஆகிய துறைகள் அரசியல் அமைப்புச் சட்டப்படி மாநில அரசின் அதிகாரத்திற்கு உட்பட்டவை. வாழ்விற்கு ஆதாரமாய் இருக்கும் உணவு உற்பத்தியில் ஈடுபட்டு வரும் தமிழக விவசாயிகளுக்கு நெல் விலையை, குவிண்டாலுக்கு ரூ.1,000 முதல் ரூ.1,500 வரை தமிழக அரசு உயர்த்த வேண்டும்.

அடுத்ததாக, மீனவர் நலன். இலங்கை கடற்படையினரால் இந்திய மீனவர்கள் தாக்கப்பட்டது குறித்து, இந்திய அரசே நாடாளுமன்றத்தில் பல முறை ஒப்புக்கொண்ட நிலையில், இலங்கை கடற்படையினர் இந்திய மீனவர்கள்மீது துப்பாக்கிச் சூடு நடத்தவில்லை என்று நமது இந்திய கடற்படை அதிகாரிகள் கருத்துத் தெரிவிப்பது இலங்கை கடற்படைக்கு உதவும் விதமாகத் தெரிகிறது. இந்திய கடற்படை அதிகாரிகள் தங்கள் எல்லையை மீறிக் கருத்துகளைத் தெரிவிப்பதும், இலங்கையை ஆதரிப்பதும் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைக்கு எதிராக உள்ளது. எனவே, இந்திய கடற்படை அதிகாரிகளை உரிய முறையில் எச்சரிக்கை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1-05

அடுத்து, தொகுதிப் பிரச்சினைகள். சிவகாசி தொகுதியில் ஆலங்குளம் அரசு சிமெண்ட் தொழிற்சாலையை நவீனப்படுத்தி, சிமெண்ட் உற்பத்தியை அதிகரிக்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஏழாயிரம் பண்ணை–குகன்பாறை, வெம்பக்கோட்டை–ஆலங்குளம், சிவகாசி–கழுகுமலை சாலைகள் மற்றும் சிவகாசி நகரின் மேற்கேயுள்ள பை-பாஸ் சாலை, வெம்பக்கோட்டை ஒன்றியத்தில் வல்லம்பட்டி–கோட்டைப்பட்டி, கோட்டைப்பட்டி–தாயில்பட்டி, மடத்துப்பட்டி–எதிர்கோட்டை, அச்சங்குளம்–கண்டியாபுரம் சாலைகள், ஸ்ரீவில்லிப்புத்தூர் ஒன்றியத்தில் சாமிநாதபுரம்–கன்னித்தேவன்பட்டி, சாமிநாதபுரம் காலனி–அனத்தப்ப நாயக்கன்பட்டி சாலைகள் மோசமாக

உள்ளன. இவற்றை விரைந்து சீரமைக்க வேண்டும். ஸ்ரீவில்லிப்புத்தூர், சுக்கிரவாரப்பட்டி-பார்த்திபனூர் சாலையை அகலப்படுத்த வேண்டும்.

கிராமங்களில் மயானப் பாதைகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளன. குறிப்பாக, வெம்பக்கோட்டை, பேயம்பட்டி போன்ற கிராமங்களில் மயானப் பாதைகளில்லாமல் மக்கள் மிகவும் சிரமப்படுகின்றார்கள். அனைத்து கிராமங்களிலும் உள்ள மயானப் பாதைகளைச் சீர் செய்ய சிறப்புத் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்த வேண்டும்.

அதேபோன்று, சிவகாசி தொகுதி மட்டுமல்ல; அனைத்துத் தொகுதிகளிலுமுள்ள அரசுத் தொகுப்பு வீடுகள் மிகவும் பாழடைந்துள்ளன. இந்தத் தொகுப்பு வீடுகள் அனைத்தையும் சீர் செய்ய, சீரமைக்க, ஒரு சிறப்புத் திட்டம்மூலம் சீரமைத்து ஏழை மக்களுக்கு உதவிட வேண்டும்.

அடுத்ததாக, மலேசியாவில், பல மொழிகள் பேசுகின்ற மக்களுக்குச் சம உரிமை வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்து அறவழியில் நின்று போராடிய தமிழ் பேசும் ஐந்து தமிழர்களை, தேசப் பாதுகாப்புச் சட்டத்தில் மலேசிய அரசு சிறைப் பிடித்து வைத்திருப்பது வேதனைக்குரியதாக உள்ளது. மத்திய அரசை வலியுறுத்தி, சிறையிலிருக்கும் தமிழர்களை விடுவிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து, தமிழகத்திலே மோட்டரோலா, டெல் கம்ப்யூட்டர்ஸ், சாம்சங் போன்ற மின்னணுத் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கியுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. நாட்டில் 95 சதவீத இத்தகைய நிறுவனங்கள், ஆயுள் முடிவடைந்த தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் மற்றும் கம்ப்யூட்டர் சாதனங்கள் குறித்து இன்னும் முறையான கொள்கையினை வகுக்கவில்லை. e-Waste Management என்று சொல்கிறார்களே, அந்த e-Waste Management-ல், சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படாதவகையில் மின்னணு கழிவுப் பொருட்களை மறு சுழற்சி செய்வதற்கு அரசு என்ன திட்டம் வகுத்துள்ளது? என்.ஓ.சி. வழங்கும்பொழுது நிறுவனங்களின் கழிவுப் பொருட்கள் மேலாண்மைத் திட்டத்தைப் பரிசீலித்து என்.ஓ.சி. வழங்கிட வேண்டும்.





சிமெண்ட் மூட்டை ரூ.140, ரூ.180 ஆக இருந்த விலை, கடந்த ஓராண்டில் மட்டும் ரூ.260 என உயர்ந்துள்ளது என்பது அதிர்ச்சியைத் தருகிறது. சில்லறை விலையில் ரூ.270 வரை போய்விட்டது. சிமெண்ட் விலை அதிகரிப்பால் வீடு கட்டும் சராசரி மனிதர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

பொது விநியோகம்மூலம் மூட்டை ரூ.200-க்கு விற்பது என்றும், அதை அரசு அதிகாரிகள் பர்மிட் மூலமாக வழங்குவது என்றும், 1,000 சதுர அடிக்குள் வீடு கட்டுபவர்களுக்குச் சலுகை விலையில் வழங்குவது என்றும் அறிவித்திருப்பது, சிலர் இலாபம் அடையவும், சிமெண்டிற்கு விண்ணப்பித்தவர்கள் அலைக்கழிக்கப்படுவதற்கும், கட்டுமானப் பணிகள் தாமதமாவதற்கும், ஊழலுக்கும் நிச்சயம் வழிவகுக்கும்.

அடுத்ததாக, சென்னை மெட்ரோ இரயில். இந்தியாவில் முதல் முறையாக டெல்லி மெட்ரோ இரயிலுக்கு இரும்பு சக்கரங்களுக்குப் பதிலாக, ஒலி மாசு ஏற்படாமல் தடுக்கவும், வேகமாகச் செல்லவும் இரப்பர் டயர்கள் பயன்படுத்தப்பட உள்ளன. அதேபோன்று, சென்னை மெட்ரோ இரயிலுக்கும் இதைப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நியாய விலைக் கடைகளில் அரிசிக் கடத்தல் தொடர்ந்து நடைபெற்று வருவதைத் தடுக்க உரிய நடவடிக்கைகள் தேவை. நியாய விலைக் கடைகளில் உள்ள அரிசியில் 40 சதவிகிதத்தை மட்டுமே அட்டைதாரர்களுக்கு வழங்க வேண்டும் என்று நியாய விலைக் கடை ஊழியர்களுக்கு வாய்மொழி உத்தரவு இருப்பதாகத் தகவல்கள் உள்ளன. இதைச் சரி செய்ய விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். உணவுப் பொருட்களின் விலை கட்டுப்படுத்தப்பட்டுள்ளது சாதனை என்று ஆளுநர் உரையில் கூறப்பட்டுள்ளது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** இந்த நியாய விலைக் கடைகளில் உள்ள அரிசியில் 40 சதவிகிதத்தை மட்டுமே அட்டைதாரர்களுக்கு வழங்க வேண்டும் என்று நியாய விலைக் கடை ஊழியர்களுக்கு வாய்மொழி உத்தரவு என்றெல்லாம் எதுவும் இல்லை. இங்கே பொது விநியோகம் சம்பந்தப்பட்ட ஆணையாளர் அவர்களிடமிருந்து நேரிடையாக மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குக் கடிதம் போடப்பட்டுள்ளது.

*1* ஆம் தேதியிலிருந்து தர *30* ஆம் தேதியே அவர்களுக்கு உரிய அரிசியைக் கொடுக்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்திருக்கிறோம். கட்டுப்பாட்டு அறை என்ற ஒரு அறை அமைக்கப்பட்டு, நம்பர் எல்லாம் கொடுத்திருக்கிறோம். இது குறித்து எல்லாப் பத்திரிகைகளிலும் போட்டிருக்கிறோம். பொது மக்கள் ஏதாவது புகார் சொல்ல வேண்டுமென்றால், அவர்களுக்கு fax பண்ணலாம். நேரடியாக அந்தக் கட்டுப்பாட்டு அறைக்குத் தொலைபேசியிலே தொடர்புகொண்டால், உடனே அந்த salesman மீது நடவடிக்கை எடுக்க முடியும். அரசைப் பொறுத்த அளவிற்கு *100*-க்கு *100* சதவிகிதம் பயனாளிகளுக்கு அரிசி போட வேண்டும் என்பது அரசினுடைய திட்டம். தவறு செய்கிற salesman குறித்து கவனத்திற்குக் கொண்டு வந்தால், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும். *(குறுக்கீடுகள்)*

*பிற்பகல் 1–10*

♣

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Point of order எல்லாம் ஒன்றும் இல்லை. உட்காருங்கள். திரு. ஞானதாஸ், நீங்கள் பேசி முடியுங்கள். *(குறுக்கீடு)* என்ன? *(குறுக்கீடு)* உட்காருங்கள். *(குறுக்கீடு)* No. *(குறுக்கீடுகள்)* திரு. சாமி, சொல்லுங்கள்.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் *100%* அரிசி allotment கொடுப்பதாக அவையில் கூறி இருக்கின்றார். எந்த மாவட்டத்திலேயும் *100%* allotment கொடுப்பது கிடையாது. *70, 80%* அரிசிதான். *60%* அரிசிதான் மாவட்டத்திற்கு allotment வழங்கப்படுகிறது. அது உண்மை. நம்முடைய அமைச்சர் தவறாக *100%* கொடுப்பதாகச் சொல்கிறார். அது கிடையாது. அப்படி இருந்தால், மாவட்ட ஆட்சித் தலைவரிடம் நீங்களே தொடர்புகொண்டு, *100%* அரிசி அனைத்து மாவட்டத்திற்கும் allotment உண்டா என்பதை அமைச்சர் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** இல்லை, இல்லை. நான் சொன்னதன் அர்த்தத்தை அவர் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. *(குறுக்கீடுகள்)* சொல்வதைக் கேளுங்கள். இப்பொழுது சாதாரணமாக கோயம்புத்தூர்



மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், *53* சதவிகிதம்தான் அங்கு பயனாளிகளே பயன்படுத்துகிறார்கள் என்றால், அந்த *53* சதவிகிதம்தான் அரிசி அனுப்ப முடியும். *100* சதவிகிதம் அங்கே அனுப்ப முடியாது. தஞ்சாவூர் மாவட்டம், நெல் உற்பத்தி செய்கின்ற மாவட்டத்திலே *93%, 94%, 96%* அங்கே பயனாளிகள் இருக்கிறார்கள். அந்த *94* சதவிகிதம்தான் அரிசி அனுப்ப முடியும். நாமக்கல் மாவட்டத்திலே *60* சதவிகிதம் பேர் பயனாளிகள் என்றால், அந்த *60* சதவிகிதம்தான்; அங்கே பயன்படுத்துவதைப் பொறுத்துதான் *100* சதவிகிதம். *100* சதவிகிதம் என்று சொன்னால், மொத்த கார்டுகளில் சில கார்டுகள் அரிசி வாங்காத கார்டுகள் இருக்கின்றன. சர்க்கரைக்குரிய கார்டுகள் பல இருக்கின்றன. ஆனால், அந்தந்த மாவட்டத்துப் பயனாளிகள் யாராவது கடைக்குப் போய் *20* கிலோ அரிசி இல்லை என்று சொன்னால், அந்த salesman மீது நடவடிக்கை எடுக்கப்படும். ஆகவே, பயனாளிகளுக்கு அரிசி கொடுப்பது இந்த அரசாங்கத்தினுடைய நோக்கம். அதுதான் *100* சதவிகிதம் கணக்கேயொழிய, பயனில்லாத இடத்திலே போய் *100* சதவிகிதத்தை இறக்கி வைத்தால் என்ன பிரயோஜனம்? அதனாலே, *30* மாவட்டங்களிலே பயனாளிகளிலே அரிசியைப் பயன்படுத்துவதிலே வித்தியாசம் இருக்கிறது. சில மாவட்டங்களிலே *97* சதவிகிதம், *93* சதவிகிதம் *94* சதவிகிதம். சில மாவட்டங்களிலே பார்த்தீர்களென்றால், *48* சதவிகிதம், *53* சதவிகிதம். அதைத்தான் குறிப்பாகச் சொன்னேன். கோயம்புத்தூர் மாவட்டம் என்றால், *53* சதவிகிதத்திற்கு மேலே அரிசியை யாரும் பயன்படுத்துவதே இல்லை. அப்படித்தான், பயனுக்குத் தகுந்தபடிதான் அனுப்பிக்கொண்டு இருக்கிறோமே தவிர, *100* சதவிகிதம் என்பது பயனாளிகளில் *100* சதவிகிதம். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, சில பகுதிகளுக்குக் கூடுதலாகவும், சில பகுதிகளுக்குக் குறைவாகவும், தேவைக்கேற்ப அரிசி வழங்கப்படுகிறது என்று சொன்னார்கள். தேவைக்கேற்ப அரிசி வழங்குகிறபோது, ஒரு முறை ரேஷன் கடைக்குச் செல்கிறபோது. *20* கிலோ அரிசி கேட்பவர்கள் அனைவருக்கும் வழங்கப்படுகிறதா என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவித்தால் நன்றாக இருக்கும். *(குறுக்கீடுகள்)*

[2008 ஜனவரி 29

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அதைத்தான் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். ஒவ்வொரு மாவட்டத்திலேயும், எந்த இடத்திலேயாவது 20 கிலோ அரிசி போய்க் கேட்டு, இல்லை என்று சொன்னால், அதை நீங்கள் சொன்னீர்களென்றால், நடவடிக்கை எடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம். எல்லா இடத்திலும் கொடுக்கிறோம். அதுதான் அவர் சொல்வது. எங்கேயாவது, மாண்புமிகு உறுப்பினர்கள் எந்தக் கடைக்காவது போய், 20 கிலோ அரிசி இல்லை என்கிற complaint இருக்குமேயானால், அதைச் சொன்னீர்களென்றால், அதற்குரிய நடவடிக்கை எடுப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது. அதைத்தான், அவர் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானதாஸ். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். திரு. செங்கோட்டையன், உங்கள் உறுப்பினரின் நேரம்தான் வீணாகும். உங்கள் உறுப்பினரின் நேரம் வீணாகும், சொல்லிவிட்டேன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோபிசெட்டிப்பாளையம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்டிருக்கிற கெட்டிசேயூர் பகுதியிலேகூட 10 கிலோ அரிசி மட்டும்தான் வழங்கிக்கொண்டிருந்தார்களேதவிர, 20 கிலோ அரிசி கேட்டு வழங்கப்படவில்லை என்பதை இந்த மாமன்றத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** இல்லை, இல்லை. நான் திரும்பத் திரும்பச் சொல்லிவிட்டேன். எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும்—இதில் எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள், ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற பாகுபாடு எல்லாம் இல்லை. அரசைப் பொறுத்த அளவிற்கு அனைத்து கார்டுகளுக்கும் 20 கிலோ அரிசி வழங்க வேண்டும் என்பது அரசினுடைய ஆணை. அதைப் பொறுத்த அளவிற்கு அரசு இடத்திலேயே, எஸ்.ஆர்.எம். godown-லே அரிசி இருக்கிறது. எல்லாக் கடைகளிலும் அரிசி இறக்கப்படுகிறது. தேவையான அளவிற்கு அரிசி இறக்கப்படுகிறது. அங்கு யாராவது வந்து . . . (குறுக்கீடுகள்)

*பிற்பகல் 1–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார். (குறுக்கீடு) No.



2008 ஜனவரி 29]

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** விற்பனையாளர்கள் யாராவது தவறு செய்தால், அது குறித்து நேரடியாகப் புகார் செய்யலாம்; அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும். அரசாங்கத்தைப் பொறுத்தவரை முழுமையாக அரிசி வழங்கப்படுகிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. து. ரவிக்குமார். (குறுக்கீடுகள்) நேரம் என்ன ஆகிறது? இன்னும் இரண்டு உறுப்பினர்கள் பேச வேண்டும். அவர் இஷ்டப்படி பேசிக்கொண்டேயிருப்பார். (குறுக்கீடுகள்) நேரம் இல்லை. திரு. ரவிக்குமார், பேசுங்கள். (குறுக்கீடுகள்)

***திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைமீது. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரவிக்குமார், பேசுகிறீர்களா, இல்லையா?

**திரு. து. ரவிக்குமார்:** ஆளுநர் உரைமீது கருத்துத் தெரிவிப்பதற்கு என்னை அனுமதித்ததற்காக உங்களுக்கு முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த உரை மீதான என்னுடைய கருத்துகளைத் தெரிவிப்பதற்கு முன்னாலே, என்றும் உதயசூரியனாய் விளங்கிக்கொண்டிருக்கின்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களைச் சுற்றியே (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ் இனத்தின் இயக்கம் என்பது இருப்பதைப்போலவே, சூரியனை மையப்படுத்தித்தான் மனித குலம் தன்னுடைய காலக் கணக்கைக் கணித்து வந்துகொண்டிருக்கிறது. அதன் அடிப்படையிலே, தமிழ் ஆண்டையும், சூரியன் தட்சிணாயணத்திலிருந்து உத்தராயணத்திற்குச் செல்கின்ற அந்தக் காலத்தைத் தொடக்கமாகக் கொண்டு, தை முதல் நாளிலிருந்து தமிழ் ஆண்டு தொடங்கும் என்ற அறிவிப்பை ஆளுநர் உரையின்மூலமாக வெளியிட்டிருக்கின்ற, (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு பண்பாட்டுப் புரட்சிக்கே வித்திட்டிருக்கின்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுடைய அந்த அறிவிப்பை நான் போற்றி, வணங்குகின்றேன்.

அயல் நாடுகளில் பணியாற்றுகின்ற நம்முடைய தமிழ்ச் சகோதரர்கள், அவர்கள் பல்வேறுவிதமான அல்லல்களுக்கு ஆளாகி வந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய நலன்களைக் காக்கின்ற விதத்திலே, அதற்காக முதலமைச்சர் அவர்கள் தலைமையிலே ஓர் உயர்நிலைக் குழு அமைக்கப்படும் என்ற அறிவிப்பு இங்கே செய்யப்பட்டிருக்கிறது. இது வரவேற்கப்பட வேண்டிய ஓர் அறிவிப்பாகும். ஏனென்று சொன்னால், இப்போது இந்தியாவிலேயே

அயல் நாடுகளுக்குப் பணியாளர்களை அனுப்புவதில் முதல் மாநிலமாக இருப்பது தமிழகம். ஆண்டுக்கு ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் தமிழ்நாட்டிலிருந்து அயல் நாடுகளுக்குச் சென்றுகொண்டிருக்கிறார்கள். இப்படி உயர்நிலைக் குழு அமைத்ததோடு மட்டுமின்றி, முதலமைச்சர் அவர்கள் தலைமையிலேயே ஒரு அமைச்சகத்தையும் இதற்காக ஏற்படுத்தி, அந்தத் தொழிலாளர்களுடைய அல்லல்களைப் போக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதுபோல, இந்தச் சமூகத்திலே புறக்கணிக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டுக் கிடக்கின்ற அரவாணிகளுடைய நலனைக் கருத்தில்கொண்டு, அவர்களுக்காக நல வாரியம் ஒன்றை அமைக்கப் போவதாக ஆளுநர் உரை மூலமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இது வாழ்த்தி, வரவேற்கப்பட வேண்டிய ஓர் அறிவிப்பாகும். அவர்களைப்போலவே சமூகத்தால் புறக்கணிக்கப்பட்டுக் கிடக்கின்ற நரிக்குறவ மக்கள் தங்களைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்து, அந்தக் கோரிக்கை மத்திய அரசாலே 1964 ஆம் ஆண்டிலேயே கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனாலும்கூட, இன்னும் அவர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலேதான் வைக்கப்பட்டிருக்கிறார்கள். 40 ஆண்டுகளுக்கு மேலாகக் கிடப்பில் கிடக்கும் அந்தக் கோரிக்கையை நிறைவேற்றி, அவர்களைப் பழங்குடியினர் பட்டியலிலே சேர்ப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு முன்னாலே அவர்களுக்கும் ஒரு நல வாரியத்தை உருவாக்கித் தர வேண்டுமென்று உங்கள் வாயிலாக நான் வேண்டிக்கொள்கின்றேன்.

இப்போது, ஒவ்வோர் ஆண்டும் தமிழ்நாட்டிலே, மாவட்டத் தலைநகரங்களிலே மருத்துவக் கல்லூரிகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. எங்கள் கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்று இருக்கிற நேரத்திலே, கடலூர் மாவட்டத்திலே ஒரு மருத்துவக் கல்லூரியை உருவாக்குவதற்கு இந்த அரசு முன்வரவேண்டுமென்கின்ற கோரிக்கையை இந்த இடத்திலே நான் பதிவு செய்துகொள்ள விரும்புகிறேன்.

எல்லோரும் போற்றுகின்ற, எளிமைக்குச் சொந்தக்காரராய் விளங்குகின்ற இந்திய கம்யூனிஸ்டு பேரியக்கத்தினுடைய தலைவர்களில் ஒருவரான திரு. நல்லக்கண்ணு அவர்களுக்கு அம்பேத்கர் விருது



வழங்கி கௌரவித்த இந்த அரசை நான் பாராட்டுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஆண்டு அந்த விருதை எங்களுடைய தலைவர் திருமாவளவன் அவர்களுக்கு அளித்தபோது, "இதை ஆதி திராவிடர் சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும் அளிக்காதீர்கள், அந்தச் சமூகத்திற்காகப் பாடுபடுகின்ற தலைவர்களுக்கும் அளித்து, இந்த மக்களுக்கு உதவுவதற்கு அவர்களை ஊக்குவியுங்கள்" என்கின்ற கோரிக்கையை எங்கள் தலைவர் அவர்கள் விடுத்தார்கள். அந்தக் கோரிக்கையை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஏற்றுக்கொண்டு, இன்றைக்கு யாரும் குறை சொல்ல முடியாத அளவிற்கு, அந்த விருதுக்கே பெருமை அளிக்கக்கூடிய வகையில் திரு. நல்லக்கண்ணு அவர்களுக்கு அந்த விருதை அளித்திருப்பது வாழ்த்தி, வரவேற்கக்கூடிய விஷயமாகும்.

*பிற்பகல் 1–20*

அடுத்ததாக, நாம் சில நாட்களுக்கு முன்னால்தான் மொழிப் போர்த் தியாகிகளை நினைவுகூரும் விதமாக வீர வணக்க நாளைக் கொண்டாடி முடித்திருக்கின்றோம். 1965 ஆம் ஆண்டிலே இந்தி வல்லாண்மையை எதிர்த்து நடத்தப்பட்ட போரிலே களப் பலியானவர்களில் ஒருவர்தான் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே இருந்த ராசேந்திரன் என்பவர். 27–1–1965–லே பலியான அவருடைய நினைவைப் போற்றும்விதமாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றவுடனேயே, 1969 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் அங்கே சென்று, அந்த ராசேந்திரனுக்கு ஒரு சிலையை எழுப்பினார்கள். இன்றைக்கு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தையும், சிதம்பரம் நகரத்தையும் இணைக்கின்ற ஒரு இரயில்வே மேம்பாலம் கட்டப்பட்டுக்கொண்டிருக்கின்றது. அந்தப் பணி முடிவடையும் தருவாயில் இருக்கின்றது. அந்த இரயில்வே மேம்பாலத்திற்கு மொழிப் போர்த் தியாகி ராசேந்திரன் பெயரைச் சூட்டுவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் உங்களிடத்திலே கோருகின்றேன்.

ஆளுநர் உரையிலே முக்கியமாக எடுத்துச் சொல்லப்பட வேண்டிய விஷயம், மத்திய, மாநில உறவுகள் பற்றிய குறிப்பு. அந்த மத்திய, மாநில உறவுகளை மறு ஆய்வு செய்வதற்காக நீதியரசர் மதன்மோகன் பூஞ்சி அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டிருக்கின்ற அந்தக் குழுவை வரவேற்று, அதிலே சொல்லப்பட்டிருக்கின்றது. மத்திய, மாநில

[திரு. து. ரவிக்குமார்] [2008 ஜனவரி 29

உறவுகளைப் பற்றி இந்தியாவிலேயே முதலில் குரல் கொடுத்த மாநிலம் தமிழகம். நம்முடைய நினைவில் வாழ்கின்ற, என்றும் நம்முடைய மரியாதைக்குரிய, மறைந்த முரசொலி மாறன் அவர்கள் எழுதி வைத்த மாநில சுயாட்சி என்கின்ற அந்த நூல், இந்த மத்திய, மாநில உறவுகள் பற்றிய அந்த அணுகுமுறைக்கு என்றும் ஆதார நூலாக விளங்கிக்கொண்டிருக்கின்றது. அந்த நூலிலே சொல்லப்பட்ட கோரிக்கைகள் பல, இன்னும் பொருந்தக்கூடியவையாக இருந்துகொண்டிருக்கின்றன. அந்த விதத்திலே இன்றைக்கு நம்முடைய மாநிலப் பட்டியலிலே இருந்து பொதுப் பட்டியலுக்கு மாற்றப்பட்ட கல்வி ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ரவிக்குமார், உரையை முடியுங்கள்.

**திரு. து. ரவிக்குமார்:** அதை மீண்டும் மாநிலப் பட்டியலுக்குக் கொண்டு வருவதற்கு நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். அதேபோன்று, 13-வது நிதிக் குழுவிலே செய்யப்பட்ட சீர்திருத்தங்களில் ஒன்றான, மத்திய வரிகளிலே மாநிலங்களின் பங்கை 50 விழுக்காடாக உயர்த்தித் தரவேண்டுமென்ற கோரிக்கையையும் நாம் முன்வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். கல்விக்காக நம்முடைய அரசு மேற்கொண்டிருக்கின்ற பணிகளிலே முக்கியமானது, அதிலும் குறிப்பாக, தமிழ் வழிக் கல்விக்கு ஊக்கம் தருகின்ற விதத்திலே, தமிழ் வழிக் கல்வி பயில்கின்ற மாணவர்கள் 10 ஆம் வகுப்பு தேர்ச்சி அடையும்போது, அவர்களில் 1,000 பேருக்குக் கணினி வழங்கப்படும் என்ற ஓர் அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கின்றது. அவ்வாறு 1,000 மாணவர்களைத் தேர்வு செய்யும்போது, மாநிலத்தை அடிப்படையாகக் கொண்டு செய்யாமல், மாவட்ட அளவிலே முதலில் வருகின்ற ஒரு 50 மாணவர்கள் என்று தேர்ந்தெடுத்தால், பரவலாகத் தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற மாணவர்கள் பயன்பெறுவதற்கு ஏதுவாக இருக்கும். அதேபோல, இப்போது உயர் கல்வியிலே ஒரு புரட்சி நடந்துகொண்டிருக்கின்றது. 11-வது ஐந்தாண்டுத் திட்டத்தையே உயர் கல்விக்கான ஐந்தாண்டுத் திட்டம் என்று நம்முடைய மாண்புமிகு பிரதமர் அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரவிக்குமார், இன்னும் ஓர் உறுப்பினர் பேசவேண்டும். சீக்கிரம் உரையை முடியுங்கள்.



2008 ஜனவரி 29]

**திரு. து. ரவிக்குமார்:** அதன் அடிப்படையில் இன்றைக்கு மத்திய பல்கலைக்கழகம் ஒன்று நம்முடைய மாநிலத்திற்கு வருவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கின்றார்கள். அவ்வாறு மத்திய பல்கலைக்கழகம் மட்டுமல்லாமல், மேலும் I.I.T., I.I.Sc., என்கின்ற Indian Institute of Science போன்ற நிறுவனங்களையும் தமிழகத்திற்குக் கொண்டு வருவதற்கு நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

சென்னை சங்கமம் நிகழ்ச்சியை இனி மாவட்டந்தோறும் நடத்துவதற்கு அரசு ஆதரவு அளிக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நாட்டுப்புறக் கலைஞர்களுக்கெல்லாம் ஓர் ஊக்கம் தருகின்ற நிகழ்ச்சியாக சென்னை சங்கமம் நிகழ்ச்சி அமைந்திருக்கிறது. அதனையொட்டி அந்த நிகழ்ச்சிகளைத் தமிழகம் தழுவி நடத்தும்போது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ல. ராதாகிருஷ்ணன். (குறுக்கீடு) திரு. ரவிக்குமார், உட்காருங்கள்.

பிற்பகல் 1–25

**திரு. ல. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பேரவையில் ஆளுநர் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது பேசும் நிலைக்கு என்னை உருவாக்கிய கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், ஏழை மக்களுக்கெல்லாம் பூப்பந்தலாய், எதிரிகளுக்கெல்லாம் தீப் பந்தமாய், அஞ்சாத நெஞ்சுரத்தோடு அயராது உழைத்து, எய்த அம்புகளையெல்லாம் எதிர்த்து நின்று பொடிப் பொடியாக்கி, சூழ்ச்சி என்னும் சிலந்தி வலையை சூறாவளியாய் வென்று, வாகை சூடி, எதிர்க்கட்சித் தலைமைப் பொறுப்பிலும், தமிழக மக்களின் நலன் காக்கவே ஓயாது போராடும் வீர மாமங்கை, வெற்றித் தாரகை, இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்கி, எனது உரையைத் தொடங்குகிறேன்.

குறைந்த செலவு செய்து, கோதுமை பயிரிடும் விவசாயிகளுக்கு ஆயிரம் ரூபாய் கொடுத்து அதிக இலாபம் பெறும் வகையில் மானியம் தரும் மைய அரசிடம், அதிகச் செலவு செய்து, நீர் இன்றியோ அல்லது அதிக வெள்ளத்தாலோ பலவித இன்னல்களை மீறி அறுவடை செய்யும் நெல் சாகுபடி செய்யும் விவசாயத் தொழிலாளிக்கு மைய அரசின் மானியமும் சேர்த்து, சன்ன ரக நெல்லுக்குக் குவிண்டால் ஒன்றுக்கு

850 ரூபாய் என்று மேதகு ஆளுநர் உரையில் பக்கம் 10, பத்தி 14–ல் குறிப்பிட்டுள்ளது நெல் விவசாயிகளைப் பெரிதும் ஏமாற்றம் அடையச் செய்துள்ளது.

மேதகு ஆளுநர் உரையில் பக்கம் 7–ல் பத்தி 9–ல், அறுவடை செய்யப்பட வேண்டிய நேரத்தில், கடும் மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கிட மத்திய அரசு நிதியுதவியை மாநில அரசு எதிர்நோக்கியுள்ள நிலையைக் குறிப்பிட்டுள்ளது. தமிழகத்தில், அம்மாவின் பொற்கால ஆட்சியில் விவசாயிகளுக்குப் பயிர் செய்கின்ற காலங்களில், யூரியாவோ, டி.ஏ.பி.யோ, காம்ப்ளக்ஸ் உரமோ தங்குதடையின்றிக் கிடைத்தது. ஆனால், இந்த ஒன்றரை ஆண்டுக் காலங்களில், விவசாயிகள் பயிர் செய்கின்ற காலங்களில் உரம் கிடைக்காமல் திண்டாடுகின்ற நிலைமை உருவாகியிருக்கின்றது. கஷ்டப்படும் விவசாயிகளின் குறைகளைப் போக்குவதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றி ஆளுநர் உரையில் இடம்பெறாதது தமிழக விவசாயிகளை ஏமாற்றம் அடையச் செய்துள்ளது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

உங்களது அரசு, புதிதாக 95 சமத்துவபுரங்களை அமைக்கப் போவதாக ஆளுநர் உரையில் அறிவித்துள்ளீர்கள். நான் இந்த அரசுக்குச் சொல்லிக்கொள்கிறேன். நீங்கள் ஏற்கெனவே ஆரம்பித்த சமத்துவபுரங்களில் வாழ்கின்ற மக்கள் அங்கே குடியிருக்க முடியாத சூழ்நிலையை நீங்கள் ஏற்படுத்தியுள்ளீர்கள். காரணம், நீங்கள் அவர்கள் ஒவ்வொருவர் பெயரிலும் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம்மூலமாக 10 ஆயிரம் ரூபாய் கடனை ஏற்படுத்தியதன் விளைவு, இன்று வட்டியும், முதலுமாக 20 ஆயிரம் ரூபாய்க்குக் கடனாளியாக்கியுள்ளீர்கள். அந்தக் கடனை உடனடியாகச் செலுத்த வேண்டுமென்று கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் அந்த மக்களைத் தொந்தரவு கொடுத்து வருகிறது. ஆகவே, நீங்கள் புதிதாக சமத்துவபுரங்கள் தொடங்குவதற்கு முன்பு, ஏற்கெனவே கடனில் அல்லல்படும் அந்த மக்களைக் காப்பாற்றுவதற்கு அந்தக் கடன் முழுவதையும் தள்ளுபடி செய்யவேண்டுமென்று நான் சார்ந்திருக்கும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் உங்களை இந்த மாமன்றம் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

வெள்ள நிவாரணப் பணி, நதிகள் இணைப்பு, தமிழகத்தின் உரிமை பாதுகாக்கப்பட, அண்டை மாநிலங்களுடன் சுமுகமான தீர்வு ஏற்பட, இதுபோல் எத்தனையோ பணிகளைச் செய்திட ஆளுநர் உரையில்





மைய அரசு, மாநில அரசால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால், இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆட்சியில் இருந்த நிம்மதியான வாழ்க்கை, சீரழியும் வகையில், தற்போது தமிழகத்தில் நடைபெற்று வரும் வெடிகுண்டுக் கலாச்சாரம், அரசியல் கட்சிகளின் தலைவர்களைக் கொலை செய்ய முயற்சிக்கும் கூலிப் படையினரின் அட்டகாசம், ரிமோட் குண்டு க்லாச்சாரம், தீவிரவாதிகளின் ஊடுருவல், அம்மா அவர்களின் ஆட்சியில் முழுமையாகக் கட்டுப்படுத்தப்பட்ட விடுதலைப் புலிகளின் ஊடுருவல் என மக்களை அச்சுறுத்தும் நிலை நீங்குவதற்கு மத்திய அரசின் உதவியைத் தமிழக அரசு கேட்காதது மட்டுமல்ல, ஆளுநர் உரையில் இடம்பெறாதது தமிழக மக்களை வேதனையடையச் செய்திருக்கிறது.

மேதகு ஆளுநர் உரையில் பக்கம் 16, பத்தி 21–ல், சாமானிய மக்கள் மருத்துவ சிகிச்சை பெறுவதற்கு, அரசு மருத்துவமனைகளில் காலியாக உள்ள பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால், தூத்துக்குடி மாவட்டத்தில் கோவில்பட்டி மற்றும் திருச்செந்தூர் அரசு மருத்துவமனைகள், மாவட்ட அரசு மருத்துவமனைகள் . . .

பிற்பகல் 1–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ல. ராதாகிருஷ்ணன்:** கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக மாவட்ட அரசுத் தலைமை மருத்துவமனைக்குத் தேவையான சி.டி. ஸ்கேன் வசதி கோவில்பட்டி பிரிவில் இல்லை. அவசர சிகிச்சைப் பிரிவில் நியமிக்கப்பட வேண்டிய 6 பணியிடங்கள் காலியாக உள்ளன. எலும்பு முறிவு சிறப்பு டாக்டர் பணியிடம் காலியாக உள்ளது. தோல் வியாதி சிறப்பு மருத்துவர் இல்லை. பால்வினைநோய்த் தடுப்பு சிறப்பு மருத்துவர் இல்லை. அமரர் ஊர்தி இல்லை. இவை அனைத்திற்கும் தேவையான போதிய கட்டடப் பிரிவுகளும் இல்லை. மேற்கண்ட குறைபாடுகள் உள்ளதால், விபத்தினால் அனுமதிக்கப்படுபவர்கள் 93 சதவிகிதம் பேர் பாளையங்கோட்டை மருத்துவமனைக்கு அனுப்பப்படுகின்றனர். அரசு தனிக் கவனம் செலுத்தி, குறைகள் அனைத்தும் சரி செய்யப்பட்டால், சுற்று வட்டார மக்கள், விபத்துக்கு ஆளாகுபவர்கள் பயனடைவார்கள் என்பதை அரசுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. ல. ராதாகிருஷ்ணன்] [2008 ஜனவரி 29

தமிழகத்திலுள்ள பேரூராட்சிகள் அனைத்திற்கும், சாமானிய மக்கள் பயன்பெறும் அளவில் அரசு மருத்துவமனைகள் அமைக்கப்பட வேண்டிய கட்டாயமான காலச் சூழ்நிலையில், அதுபற்றிய அறிவிப்பு இல்லாத ஆளுநர் உரை, கிராமப்புற மக்களை ஏமாற்றம் அடையச் செய்துள்ளது.. அரசு மருத்துவமனை இல்லாத பேரூராட்சிகள் தமிழகத்தில் அதிகமாக உள்ளன. உதாரணமாக, கோவில்பட்டி தொகுதியிலுள்ள திருவேங்கடம் பேரூராட்சியாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்வதுடன், திருவேங்கடத்தில் அரசு மருத்துவமனை அமைந்திட அரசு விரைவான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், இளையரசனேந்தல், திருவேங்கடம் குறு வட்டங்களிலுள்ள 13 வருவாய் கிராமங்களையும் மிகவும் அருகிலுள்ள கோவில்பட்டி தாலுகாவுடன் இணைக்க வேண்டும் என்று தூத்துக்குடி மாவட்டம் பிரிக்கப்பட்டது முதலாக அரசுக்குப் பல வருடங்களாகப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்து வந்துள்ளார்கள். இவைபற்றிய முழு விவரத்தையும் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த பேரவைத் தலைவர் அவர்கள் நன்கு அறிவீர்கள். மேற்கண்ட 13 வருவாய் கிராமங்களை கோவில்பட்டி தாலுகாவுடன் சேர்த்து, மேற்கண்ட கிராம மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றிட வேண்டுமென அரசுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழக மீனவர்களின் நலனைக் காப்பதற்காக, மானிய விலையில் டீசல், மண்ணெண்ணெய் வழங்கிப் பாதுகாத்தது அம்மா அவர்களின் அரசு என்பதைத் தமிழக மீனவர்கள் மறக்கவில்லை. ஆளுநர் உரையில் பக்கம் 35, பத்தி 51–ல், மீனவர்கள் இன்னல் போக்க நடவடிக்கை தொடரும் என்று கூறப்பட்டுள்ளது. தமிழகக் கடற்கரைப் பகுதிகளில் விடுதலைப் புலிகளின் ஊடுருவல் தற்போது அதிகரித்துள்ளதால், மீனவர்களின் அன்றாடத் தொழிலுக்கு இடையூறு ஏற்படுவதுடன், இலங்கை அரசின் கண்ணி வெடிப் பதுக்கலால், கடலுக்குச் செல்லும் மீனவர்களுக்கு உயிர்ப் பாதுகாப்பு தற்போது இல்லை.

தற்போதைய அரசு 1974–ல் பொறுப்பில் இருந்தபோது, நெருக்கடியான சூழ்நிலையில் மீனவர்களின் நலனை மறந்து, மத்திய அரசின் நிபந்தனைக்குட்பட்டுக் கச்சத் தீவை இலங்கைக்குத் தாரை வார்த்தது. இன்றைய சூழ்நிலையில், மத்திய அரசு தனக்குள்ள



2008 ஜனவரி 29] [திரு. ல. ராதாகிருஷ்ணன்]

நெருக்கமான சூழ்நிலையைப் பயன்படுத்தி, இலங்கை அரசிடமிருந்து கச்சத் தீவை மீட்டுத் தரத் தவறிய தமிழக அரசுக்குத் தக்க நேரத்தில் தகுந்த பாடம் புகட்ட மீனவப் பெருமக்கள் தயாராகிவிட்டார்கள்.

மேதகு ஆளுநர் உரையில் பக்கம் 20, பத்தி 27–ல், இந்தியாவிலேயே அனைத்து வீடுகளிலும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் உள்ள ஒரே மாநிலம் தமிழகம் என்ற சாதனையை விரைவில் எட்டும் எனக் கூறப்பட்டுள்ளது. ஆனால், ஒவ்வொரு வீட்டிலும் வேதனைப்பட்டு, அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் இருந்ததைவிட இரண்டு மடங்கு அதிகமான விலைவாசி உயர்வினால் மாதந்தோறும் அதிகப்படியான செலவுகளால் கஷ்டப்பட்டு வரும் சூழ்நிலையைத் தவிர்ப்பதற்கு இந்த அரசு முயற்சிக்காததை எண்ணி, தமிழகத்தின் அனைத்துத் தரப்பு மக்களும், அத்தியாவசியப் பொருட்களின் விலையை ஒரே சீரான நிலையில் வைத்து, சட்டம்–ஒழுங்கு சீர்கெடாமல் தமிழகத்தை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் சென்ற இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்ல அரசு அமையும் நாளை ஆவலுடன் எதிர்நோக்கி உள்ளனர்.

இந்த அரசு, தேர்தல் வாக்குறுதியில், நிலமற்ற ஏழை விவசாயிக்கு 2 ஏக்கர் நிலம் இலவசமாகத் தரப்படும் என்று கூறியது. ஆனால் மேதகு ஆளுநர் உரையில் பக்கம் 12, பத்தி 16-ல், ஒரு இலட்சத்து 38 ஆயிரம் ஏழை விவசாயிகளுக்கு ஒரு இலட்சத்து 61 ஆயிரம் ஏக்கர் நிலம் இலவசமாக அரசு வழங்கியுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. எனவே, தேர்தல் வாக்குறுதியில், ஏழை விவசாயிகளுக்கு 2 ஏக்கர் நிலம் இலவசம் என்று கூறியது கண் துடைப்பு மட்டுமல்லாது, மோசடியான தேர்தல் வாக்குறுதி என்றும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியம், பாண்டவர்மங்கலம் ஊராட்சியைச் சேர்ந்த ராஜீவ் நகர், சண்முகசிகாமணி நகர், இ.பி. காலனி, காமராஜ் நகர், அன்னை தெரசா நகர், மேலும் இலுப்பையூரணி ஊராட்சியைச் சேர்ந்த சண்முகசிகாமணி நகர் விரிவடைந்த பகுதி மக்களின் குடி தண்ணீர்த் தேவையை நிவர்த்தி செய்யும் வகையில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளைப் புதிதாக அமைத்து, குடி தண்ணீர் விநியோகம் செய்திட அவசரமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

[2008 ஜனவரி 29

பிற்பகல் 1–35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை, மீண்டும் நாளை (30–1–2008) புதன்கிழமை காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–35 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

22. 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி விதிகள் இயற்றியது குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவுத் துறையின் 1–1–2007 ஆம் நாளிட்ட 1 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

24. சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தொகுதியில் பொதுப் பணித் துறையின் பராமரிப்பிலுள்ள ஏரிகள்/நீர்நிலைகளை நபார்டு நிதியுதவியுடன் சீரமைத்தல் குறித்து பொதுப் பணித் (டபிள்யூ.1) துறையின் 22–1–2008 ஆம் நாளிட்ட 17 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட நிர்வாக ஒப்புதல் ஆணைகள்.

25. பொதுக் கணக்குக் குழுவின் எழுபத்து நான்காவது அறிக்கை. (2007–2008)

26. பொதுக் கணக்குக் குழுவின் எழுபத்தைந்தாவது அறிக்கை. (2007–2008)

27. பொதுக் கணக்குக் குழுவின் எழுபத்தாறாவது அறிக்கை. (2007–2008)

28. பொதுக் கணக்குக் குழுவின் எழுபத்தேழாவது அறிக்கை. (2007–2008)

29. பொதுக் கணக்குக் குழுவின் எழுபத்தெட்டாவது அறிக்கை. (2007–2008)



2008 ஜனவரி 29]

30. பொதுக் கணக்குக் குழுவின் எழுபத்தொன்பதாவது அறிக்கை. (2007–2008)

31. பொது நிறுவனங்கள் குழுவின் அறுபத்தெட்டாவது அறிக்கை. (2007–2008)

32. பொது நிறுவனங்கள் குழுவின் அறுபத்தொன்பதாவது அறிக்கை. (2007–2008)

33. பொது நிறுவனங்கள் குழுவின் எழுபதாவது அறிக்கை. (2007–2008)

34. பொது நிறுவனங்கள் குழுவின் எழுபத்தொன்றாவது அறிக்கை. (2007–2008)

35. பொது நிறுவனங்கள் குழுவின் எழுபத்திரண்டாவது அறிக்கை. (2007–2008)

36. பொது நிறுவனங்கள் குழுவின் எழுபத்து மூன்றாவது அறிக்கை. (2007–2008)

37. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல் (ஏழாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

38. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல் (எட்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

— — —

V211, 3/P08
P08.40.1
228096

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Commissioner of Stationery and Printing,
Chennai-600 002.